# பஞ்சகோணங்கள்

கே. டானியல்

விடியல் பதிப்பகம்
கோவை-641 015.

முதற் பதிப்பு : ஆகஸ்ட் 1993.
ஆசிரியர் : கே. டானியல்
உரிமை : விடியல் பதிப்பகம்
**விலை** : ரூ. **45-00**
முகப்போவியம் : வீரசந்தானம்
வெளியீடு : விடியல் பதிப்பகம்
3, மாரியம்மன் கோயில் வீதி,
உப்பிலி பாளையம்,
கோவை-641 015.
அச்சாக்கம் : அலைகள் அச்சகம்,
36, தெற்குச் சிவன் கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை-24.

**சாதி ஒழிப்பு, சாதி ஆதிக்கம் என அனைத்து ஒடுக்குமுறைகளையும் எதிர்த்துப் போரிட்டு வீர மரணமடைந்த தோழர்களின் நினைவாக!**

# மதிப்புரை

தோழர் டானியல் அவர்கள் தனது எழுத்துக்களைப் ‘பஞ்சமர் வரிசை நூல்கள்’ எனவும் பிற எழுத்துக்கள் எனவும் இரண்டாகப் பிரித்துச் சொல்வது வழக்கம். பஞ்சமர், கோவிந்தன், அடிமைகள், கானல், பஞ்சகோணங்கள், தண்ணீர் என்று பஞ்சமர் வரிசையில் ஆறு நூல்களைக் குறிப்பிடுகிறார். இவை ஆறும் யாழ்ப்பாணக் குடா நாட்டிலுள்ள தமிழ் பேசும் மக்கள் மத்தியில் நிலவும் சாதிக் கொடுமைகள், அவற்றிற்கெதிரான போராட்டங்கள் ஆகியவற்றைச் சித்திரிக்கும் எதார்த்த வகைப்பட்ட எழுத்தாக்கங்கள். இந்தக் கோணத்தில் கடந்த இருநூறு ஆண்டுக் கால யாழ்குடா நாட்டு மக்களின் வரலாற்றை இவை படம் பிடிக்கின்றன. ‘பஞ்சமர்’ தொடங்கி ‘தண்ணீர்’ வரை இந்த வரிசை என்பது டானியல் அவர்கள் இவற்றை எழுதி முடித்த கால வரிசையின்படி குறிப்பிடப்படுகின்றனவேயொழிய, இந்த இருநூறு ஆண்டு கால வரலாறும் இந்த வரிசையில் தொகுக்கப்படவில்லை என்பதையும், இவை நூலாக அச்சில் வெளிவந்த தேதிகளின் அடிப்படையிலும் இந்த வரிசை சொல்லப்படவில்லை என்பதையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தம். ‘பஞ்ச கோணங்க’ளுக்குப் பின் அவரால் எழுதப்பட்ட ‘தண்ணீர்’, ஈழத்திலிருந்து ‘வராவொல்லை’ வெளியீடாக ஏற்கெனவே வெளிவந்து விட்டது.

‘பஞ்ச கோணங்கள்’ நாவலை டானியல் எழுதி முடித்து முன்னுரையை நவம்பர் 15, 1984-இல் எழுதியுள்ளார். தமிழ் ஈழ இயக்கங்கள் தோன்றி அய்ந்தாண்



டுகள் ஆகின்றன என இம் முன்னுரையில் குறிப்பிடுகிறார். ‘பஞ்சமரி’ல் காட்டப்பட்ட காலத் தொடர்ச்சியிலிருந்து ஈழ இயக்கங்கள் தோன்றிய காலம் வரையிலான வரலாற்றைப் பஞ்ச கோணங்கள் சொல்லுகிறது என்றும் குறிப்பிடுகிறார். நந்தாவில் கந்தசாமி கோயில் ஆலயப் பிரவேசம், தேர் எரிப்பு ஆகியவற்றோடு பஞ்சமர் முடிகிறது. 1968-ஆம் ஆண்டு ஏப்ரல் 14-ஆம் தேதியன்று கந்தசாமி கோவில் ஆலயப் பிரவேசம் நடைபெறுகிறது. எனவே இந் நாவலில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் 1968—1979 ஆகிய காலகட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் எனலாம். நூலுக்குள் உள்ள இன்னொரு குறிப்பின்படி (கிட்டிணர் வாத்தியார் உரையாடல்) பஞ்ச கோணங்களில் நடைபெறும் மையச் சம்பவங்கள் 1974 வாக்கில் நடைபெற்றன எனவும் அனுமானிக்க முடிகிறது. ‘கோவிந்த’னுக்குப்பிந்திய நாவல்கள் அனைத்தும்டானியல் அவர்களது நோய் முற்றிய இறுதிக் காலத்தில் எழுதப் பட்டவை தனது நினைவுகளின் முழுமையான கட்டுப் பாட்டை அவர் கொஞ்சம் இழந்திருந்த காலகட்டமிது. எனவே இந்தக் கணக்குகளில் ஓரிரண்டு ஆண்டுகள் வித்தியாசப்படலாம். எனினும் தனி ஈழ இயக்கங்களின் தொடக்கக் காலகட்டத்தில் யாழ்குடா நாட்டிலுள்ள சுன்னாகம் பகுதியின் வரலாற்றுப் பின்னணியில் டானியல் ‘பஞ்ச கோணங்களை’ உருவாக்கியுள்ளார் எனலாம்.

ஃ ஃ ஃ

தனது ‘பஞ்சமர்’ நாவலை அச்சிடுவதற்காக டானியல் தஞ்சை வந்திருந்த சமயம் (1982) அவர் எங்களுக்குப் பழக்கமானார். முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலும் தொடர்புடைய அமைப்புக்களிலுமிருந்தும் நாங்கள் பணியாற்றிக் கொண்டிருந்தோம். சிங்கள ராணுவக் கொடுமைகளால் ஈழத்தில் அமைதி குலைந்து கொண்டிருந்த காலம் அது. 1983-இல் இலங்கை த்தீவிலுள்ள தமிழ் மக்கள் மீது ஏவி விடப்பட்ட அந்த மகத்தான கொடு

மையை அடுத்து ஈழப் பிரச்சினையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளின் காரணமாக நாங்கள் சார்ந்திருந்த இயக்கங்களிலிருந்துவெளியேற்றப்பட்டோம். தொடர்ந்து தனி ஈழக் கோரிக்கையை ஆதரித்து தமிழகமெங்கும் — எங்கள் சாத்தியத்திற்குட்பட்ட வகையில் — கருத்துப் பிரச்சாரம் செய்து வந்தோம். ஈழப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் எங்கள் கருத்துக்களிலிருந்து டானியல் பெரிதும் வேறுபட்டிருந்தார். இந்தக்காலகட்டத்திலிருந்து அவர் இறக்கும் வரை (மார்ச் 23, 1986)யிலான எங்கள் கடிதத் தொடர்புகள், விவாதங்கள் அனைத்தும் இந்தப் பிரச்சினையைச் சுற்றியே அமைந்தன. எனினும் இந்தியத் துணைக் கண்டத்தில் சனநாயகப் புரட்சியின் வடிவம் சாதியத்திற்கெதிராக இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை நாங்கள் உணரத் தொடங்கியிருந்த காலகட்டமிது. எனவே ஈழப் பிரச்சினையிலிருந்த கருத்து வேறுபாட்டையும் மீறி சாதீய எதிர்ப்பு, தீண்டாமை ஒழிப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்தவர்கள் என்கிற வகையில் டானியலுக்கும் எங்களுக்குமான நட்பு இறுகிக் கொண்டே வந்தது.

தேசிய இனப் பிரச்சினை தொடர்பான எங்கள் விவாதம் சனாதன மார்க்சியச் சட்டகத்திற்குள் நடத்தப்பட்டது. 'தேசியம் என்பது ஒரு கற்பிதம்' என்கிற சிந்தனையையெல்லாம் நாங்கள் அப்போது அடைந்திருக்கவில்லை. தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக வரதராஜப் பெருமாள் எழுதிய கட்டுரை ஒன்றை நாங்கள் படியெடுத்துச் சுற்றுக்கு விட்டோம். சோசலிசத் தமிழ் ஈழம் பற்றி இன்று உயிருடன் இருக்கிற, மறைந்துபோன பல ஈழ இயக்கங்களின் தலைவர்களின் பேட்டிக் கட்டுரையையெல்லாம் விதந்து போற்றியும், மேற்கோள் காட்டியும் டானியலுக்கு எழுதுவோம். மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின், ஸ்டாலின், மேற்கோள்களைக் கொத்தி எடுத்துத் தயாரித்த சிறு வெளியீடுகளை அனுப்புவோம் சலிக்காமல்.



பதில் எழுதுவார் டானியல். சில நபர்களைப் பற்றி, "இவர்களெல்லாம் கடந்த காலங்களில் இங்கே நடந்த வர்க்கப் போராட்டங்களில் ஒடுக்கப்பட்டவர்களுக்கு எதிராக நின்றவர்கள். மிக விரைவில் இவர்களைப் பற்றிப் புரிந்து கொள்வீர்கள். ஒன்றை மிகத் தெளிவாக இப்போதே என்னால் சொல்ல முடியும். உங்கள் நாட்டில் நடைபெறும் வர்க்கப் போராட்டங்களில் இவர்கள் உங்களது எதிரிகளோடு கை கோர்த்து நிற்கப் போவதை மிக விரைவில் எதிர்கொள்வீர்கள்" என்கிற ரீதியில் பதில் எழுதுவார்.

ஈழப் பிரச்சினை மற்றும் இயக்கத்திற்குள்ளான சில நெறிமுறைகள் தொடர்பான கருத்து வேறுபாடினடியாக முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாங்கள் புரட்சிப் பண்பாட்டு இயக்கத்தில் சேர்ந்து செயலாற்றத் தொடங்குவதற்கு முன்பாக 'தோழமை' என்கிற பதிப்பு முயற்சியைத் தொடங்கினோம். சாதியம் உட்பட இந்தியச் சூழலுக்கே உரித்தான சமூகப் பிரச்சினைகளை விளக்கிக் கொள்ள உதவும் நூல்களை இலாப நோக்கின்றி வெளியிடுவது எங்கள் நோக்கமாக இருந்தது. கோ. கேசவன், பழமலய் ஆகியோரது நூல்களோடு டானியல் அவர்களின் 'அடிமைகள்', 'கானல்' ஆகிய பஞ்சமர் வரிசை நூற்கள் இரண்டையும் தோழமை மூலம் வெளியிட்டோம். ஈழத்திற்குத் தேவையான பிரதிகளுக்கான தொகையை முன் பணமாக டானியல் எங்களுக்குத் தருவார். 'அடிமைகள்' முதலில் வந்தது. காலாவதியாகிப் போன சாதிப் பிரச்சினையை டானியல் தூக்கிப் பிடிக்கிறார் என்கிற குற்றச் சாட்டு ஈழத்திலும் இங்கும் தொடர்ந்து முன் வைக்கப்பட்டது. தேசிய இன முரண் முன்னுக்கு வந்துவிட்ட சூழலில் சாதி முரண் யாழ்குடா நாட்டில் தீர்க்கப்பட்டுவிட்டது என்கிற ரீதியில் ஈழ ஆதரவாளர்கள் கதைத்தனர். சாதிப் பிரச்சினை காலாவதியாகிவிட்டது என்கிற கருத்தில் எங்களுக்கு சிறிதும்

உடன்பாடில்லை எனினும் இன்றைய பிரதான முரணாக விளங்குகின்ற தேசிய இனப்பிரச்சினையை விட்டொதுங்குவது டானியல் போன்ற சமூகப் பொறுப்பு வாய்ந்த ஒரு எழுத்தாளருக்குப் பொருத்தமான ஒன்றல்ல என்கிற கருத்தை நாங்கள் கொண்டிருந்தோம். வேல்சாமியும் நானும் அவருக்குக் கடிதம் எழுதும்போதெல்லாம் இதனை வலியுறுத்தி வந்தோம். இன்றைய தேசிய இன முரணை உள்ளடக்கி தோழமைக்காக ஒரு நாவல் எழுதித் தர வேண்டுமென அவரைக் கேட்டுக் கொண்டோம்.

இந்தச்சூழலில் (1984) ஈழத்திலிருந்து வெளிவந்த ஒரு சஞ்சிகைக்காகவோ என்னவோ டானியல் ஒரு கட்டுரை கேட்டிருந்தார். ''டானியலின் நாவல்களில் வெளிப்படும் அடிப்படை வர்க்க உளவியல்'' என்றொரு கட்டுரை அனுப்பினேன். அப்போது ஒரு சஞ்சிகையில் தொடராக வெளிவந்த குறுநாவலொன்றில் டானியல் பாத்திர உருவாக்கத்தில் கோட்டை விடுகிறார் என்று அக்கட்டுரையில் நான்குற்றம் சாட்டியிருந்தேன். ''தேசிய இன உணர்வுக்கும் மேலாக சாதியுணர்வு மிகுந்துள்ளது என்கிற கருத்தை வலியுறுத்தும் முயற்சியில் இது நிகழ்ந்து விடுகிறது'' என்று ஒரு காரணத்தையும் கண்டு பிடித்துச் சொல்லிபிருந்தேன். 'பஞ்சம'ருக்குப் பின்னால் எழுதிய நாவல்களில் மேலும்மேலும் கால அடிப்படையில் பின் நோக்கி டானியல் நகர்ந்துகொண்டிருப்பதற்குக் காரணம் நிகழ்கால வரலாற்றைக் கண்டொதுங்கும் மனப்பான்மையின் விளைவுதான் என்றும் அதிரடியாக அடித்திருந்தேன்.''நிகழ்கால வரலாற்றைவிட்டு நான் ஒதுங்கவில்லை. எல்லாவற்றையும் கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருக்கிறேன். பஞ்சமருக்குப் பிந்திய கால கட்டத்தில்—அதாவது ஈழப்போராட்டத்தின்தொடக்ககாலகட்டத்தின் சூழலைப் பின்னணியாகக் கொண்டு ஒரு நாவலை எழுதிக் கொண்டுள்ளேன். கிட்டத்தட்ட முடியும் தறுவாயிலுள்ளது'' என்பதாக டானியல் பதில் எழுதியிருந்தார்.



தீவிர சிகிச்சைக்காகவும், 'கானலை' அச்சிடுவதற்காகவும் இரு கண்பார்வைகளையும் இழந்த நிலையில் ஜனவரி 86இல் தஞ்சை வந்தபோது டானியல் 'பஞ்ச கோணங்கள்' கையெழுத்துப் பிரதியையும் கொண்டு வந்திருந்தார். 'கானலை' மட்டும் முதலில் அச்சிட்டுக் கொடுப்பது என முடிவாயிற்று. அன்றைய சூழலில் இத்தகைய விமர்சனங்களின் பால் ஈழ இயக்கங்களின் எதிர்வினைகள் குறித்த நியாயமான கவலை டானியலுக்கு இருந்த போதிலும் 'கானலை' மட்டும் முதலில் அச்சிடுவது என அன்று நாங்கள் எடுத்த முடிவிற்கு நிதிநிலைதான் முக்கிய காரணம். வசதிகுறைந்த எனது பழைய வீட்டிலிருந்தபடி அவரது உடற் சிகிச்சை தொடங்கியது. என் மனைவி ஜெயாவின் அன்பிற்குரிய கவனிப்பையும் வேல்சாமி சகோதரர்களின் பொறுப்புமிகுந்த சிகிச்சைகளையும் மீறி மார்ச் 23,'86 அன்று டானியலின் உயிர் இந்திய மண்ணில் பிரிந்தது. தமிழகமெங்கிலுமிருந்தும் வந்து குவிந்த மா-லெ இயக்கத் தோழர்கள் அணிவகுக்க அவருக்கு இறுதி அஞ்சலி அளிக்கப்பட்டது. தஞ்சை வடவாற்றங்கரையில் ஒரு சிறிய நினைவுச் சின்னத்தையும் 'தோழமை' சார்பில் நிறுவினோம்.

ஃ ஃ ஃ

கொட்டாங்கச்சியில் காப்பி, சட்டியில் சோறு, ஆலய நுழைவு மறுப்பு போன்ற தீண்டாமை ஒதுக்கல்களுக்கு எதிராகச் சுன்னாகம் பகுதி தாழ்த்தப்பட்ட பஞ்சம மக்கள் வாத்தியார், கந்தையர் போன்ற வேற்றுச் சாதி சனநாயக சக்திகளையும் இணைத்துக் கொண்டு போராடுகிற வரலாற்றைப் பஞ்சகோணங்கள் சித்திரிக்கிறது. ஈழ விடுதலை இயக்கங்கள் உருப்பெற்றுக் கொண்டிருந்த காலகட்டம் அது என்று குறிப்பிட்டோம். எனவே தீண்டாமை ஒதுக்கங்களுக்கெதிரான இப்போராட்டத்தில் ஈழ விடுதலை இயக்கப் போராளிகள் குறுக்கும் நெடுக்கு

மாக வந்து போகிறார்கள். அவர்கள் வரும்போதெல்லாம் சொல்வது ஒன்றைத்தான். ''தமிழர்கள் ஒண்டா இருக்கணும்.''

போராளிகளின் கருத்துக்களில் நமக்கு எந்த மாற்றமுமில்லை. ஈழப் போராட்டத்தில் மட்டுமல்ல இங்கும்கூட தமிழர்கள் ஒன்றாக இருக்க வேண்டும்தான். தமிழர்கள் மட்டுமல்ல. தேசிய இன ரீதியான ஒருமைப்பாடு என்பது அடிப்படையில் ஒரு சனநாயகக் கோரிக்கை எனவே பிரிந்து போகும் உரிமை உள்ளிட்ட சுயநிர்ணய உரிமை அல்லது தன்னுரிமை என்கிற கோரிக்கையை ஏற்றுக் கொள்ளாத எவனும் மார்க்சிஸ்டாக மட்டுமல்ல சனநாயக வாதியாகவே கூட இருக்க முடியாது. ஆனால் இந்தியா; இலங்கை போன்ற நிலப் பகுதிகளில் ஒவ்வொரு மனித உயிரும் அடிப்படையில் தன்னை ஒரு சாதியாக அடையாளம் கண்டுகொள்ளக்கூடிய ஒரு சூழலில் இந்த ஒன்றிணைவு என்பது மிகவும் தூலமாக வரையறுக்கப்பட வேண்டி இருக்கிறது. நமது சூழலில் சொல்ல வேண்டுமானால் தமிழர்கள் ஒன்றிணைவது என்பது தாழ்த்தப்பட்டோர் + பிற்படுத்தப்பட்டோர் + பிற சனநாயக சக்திகள் ஆகியோரின் ஒன்றிணைவாக மட்டுமே இருக்க முடியும். எனவே இந்த ஒன்றிணைவு என்பது இவர்களைப் பிரித்து வைத்திருக்கக் கூடிய தீண்டாமை மற்றும் இதர சாதீய ஒதுக்கங்களை ஒழிப்பது என்பதிலிருந்துதான் தொடங்க வேண்டும். இந்த எதார்த்தங்களை ஒத்துக் கொண்டு இந்த அடிப்படையில் இயக்கத்தையும், நோக்கந்தையும் வரையறுத்து அதற்குரிய வகையில் கட்டமைக்கும் போதே இது சாத்தியமாகும். இதை விட்டுவிட்டு சிங்கள ஏகாதிபத்தியத்திற்கெதிராகவும், இனக் கொடுமைகளுக்கெதிராகவும் தமிழர்களெல்லாம் ஒன்றாய்ச் சேர வேண்டுமெனப் பொத்தாம் பொதுவாய்ச் சொல்லிவிட்டு இந்தச் சாதீய ஒதுக்கல் என்கிற எதார்த்தங்களை மறந்து மறைத்து தமிழர் ஒற்றுமை பேசுவது எங்கு கொண்டு



போய்விடும் என்பது இந்நாவலினூடாக நமக்கு விளங்குகிறது.

சிரட்டையில் காப்பி கொடுத்தால் நாங்கள் வேலைக்குப் போகமாட்டோம்; ஆலயக் கதவுகளை எங்களுக்குத் திறந்துவிட வேண்டும் — என்று கோரிக்கை வைப்பவர்களைப் பார்த்து — தமிழர் ஒற்றுமையைச் சிதைக்கிறீர்கள்; ஒருமுனைப் போராட்டமாக நடக்க வேண்டியதை இருமுனைப் போராட்டமாக மாற்றிக் குழப்ப முயற்சிக்கிறீர்கள்; இந்த நேரத்தில் இந்தப் பிரச்சினையை எடுத்தால் தமிழர் ஒற்றுமை சாத்தியமில்லாமல் போய்விடும். இதை நாங்கள் அனுமதிக்க முடியாது — என்று போராளிகள் எச்சரிக்கிறார்கள் — இந்த நெருக்கடியில் கூட ஒரு அலுமினிய தம்ளரில் காப்பி கொடுக்க மறுக்கும் நீங்கள், ஆலயக்கதவுகளை அடைத்தே வைத்திருக்கும் நீங்கள் தனிநாடு வந்த மறுகணம் இவற்றை நீங்கள் செய்து தருவீர்கள் என எங்களால் எப்படி நம்ப முடியும்?— எனப் பஞ்சமர்கள் கேட்கும் போது அந்தக் குரலின் நியாயத்தை நம்மால் மறுக்க முடியவில்லை.

அப்படியானால்இனப்போராட்டம், போராளிகளிடம் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லையா? ஏற்படுத்தியிருக்கிறது. பட்டாளக்காரர்களுக்கு அஞ்சி ஒரே மண்டபத்தில் நெருக்கியடித்துக்கொண்டு மறைந்திருக்கிறார்கள். ஆலயத்தைத் திறந்துவிட மறுக்கும் ராசரத்தினத்தாரின் மகன் சந்திரன், பஞ்சம மார்க்கண்டனின் குடும்பத்திடம் சாதி வித்தியாசமில்லாமல் பழகுகிறான். இயக்க வாழ்க்கையில் சாதி ஒதுக்கல்கள் நிலைத்திருக்க முடிவதில்லை, பின் எங்கேதான் பிரச்சினை? இயக்கத்திற்கு வெளியே — எதார்த்த வாழ்க்கையில் — சாதிய ஒதுக்கங்கள் நீங்கவில்லை. ஒதுக்கல்களை மீறி உரிமைக் குரல்கள்

எழும்பாத வரை பிரச்சினையில்லை. எழும்பும்போது இயக்கம் யார் பக்கம் சாய்கிறது?

யார் பக்கம் சாயும் என்பது இயக்கத்தில் எந்த அடிப்படையில் தேசியம் கட்டமைக்கப்படுகிறது என்பதைப் பொறுத்துத்தான். எங்களது வழிகாட்டும் தத்துவம் மார்க்சியம் தான்; நாங்கள் அமைக்கப் போவது சோசலிசத் தனிநாடு தான் என்றெல்லாம் அறிக்கைகளில் அச்சிட்டு வைத்திருந்தாலும் தேசியம் இங்கே எவ்வாறு கட்டமைக்கப்படுகிறது? இதற்குரிய வகையில் இங்கே பொருளியல் அடிப்படையிலும் கலாச்சார அடிப்படையிலும் தேசியம் வரையறுக்கப்படுகிறதா? பொருளியல் அடிப்படை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதே இல்லை. ஏனெனில் பொருளியல் அடிப்படையும்கூட இவர்கள் பார்வையில் தேசிய ஒற்றுமைக்கு எதிரானது தான். எனவே கலாச்சார அடிப்படையில் மட்டுமே இவர்கள் தமிழனை வரையறுப்பார்கள். தமிழின் பெருமை, தமிழ் இலக்கியங்களின் மாண்பு, தமிழ்ப் பாரம்பரியம், தமிழ்க் கலாச்சாரம், தமிழச்சியின் கற்பு, பெரிய கோயில், இராசராசன்,... என்கிற ரீதியில் தமிழ்த்தேசியம் கட்டமைக்கப் படுவதை மிகச் சரியாகவும் வன்மையாகவும் மறுத்தவர் **பெரியார் ஈ.வே.ரா.** அவர்கள். நமது மொழி, நமது இலக்கியம், நமது மரபு, நமது கலாச்சாரம் அனைத்தும் பார்ப்பனியத்தால் கறைப்பட்டவை என்று அடித்துச் சொன்னவர் அவர். இவை அனைத்தும் தாழ்த்தப்பட்டவர்களையும், மலையின மக்களையும், பிற்படுத்தப்பட்டவர்களையும் இன்றைய சூழலில் சிறுபான்மையினரையும், பார்ப்பனர் இதர உயர் சாதியினரைக் கையகப்படுத்திக் கொண்டு அடிமைகளாக்கப் பயன்பட்ட கருவிகள் என்றார் அவர். தனித்தமிழும் சைவமும் இதற்கு விதி விலக்கல்ல, **செந்தமிழ் கொடுந்தமிழ்** எனப் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட காலம் முதலே இது தொடங்கி விடுகிறது. ஆற்றங்கரைப் பார்ப்பன-வேளாளர் பேசியது செந்தமிழ். விளிம்பிலிருந்தோர் பேசியது கொடுந்தமிழ். அப்படியானால் நமக்கென்று கலாச்சாரம், மரபு இவைகளெல்லாம் கிடையாதா? அவை பதிவு செய்யப்பட்டதில்லை; தொகுக்கப்பட்டதில்லை. பதிவு செய்தவையும் தொகுக்கப்பட்டவையும் நமக்கு எதிரானவை மட்டுமே. எனில் தமிழ் மரபு என்கிற பெயரில் இவற்றை மீண்டும் முன் வைப்பது என்பது யாரை மடக்கிப் போட? நாம் செய்ய வேண்டியதென்ன? இந்த கலாச்சாரத்தை ஏற்றுக் கொள்வதா? இல்லை ஒரு எதிர் கலாச்சாரத்தைக் கட்டமைப்பதா? இந்தக் கேள்விகள் தமிழ்ச் சூழலில் உக்கிரம் பெற்றுக் கொண்டுள்ள ஒரு சூழலில் பஞ்சகோணங்கள் வெளி வருவது மிகவும் பொருத்தம்.



உலகெங்கும் பாசிசம் தலைதூக்கிக் கொண்டிருக்கும் காலம் இது. இதன் இந்திய வடிவம் இந்துத்துவம். வருணாசிரமத்தையும் பார்ப்பனீயத்தையும் நிலை நாட்டுவதே இதன் நோக்கம். எனவே இன்றைய சூழலில் தாழ்த்தப்பட்டோர் + பிற்படுத்தப்பட்டோர் + சிறுபான்மையோர் ஒன்றிணைப்பு என்கிற முழக்கத்தை முன் வைத்து நாம் இந்துத்தவத்திற்கு எதிராக அணிதிரட்ட வேண்டியிருக்கிறது. இதன் முன் நிபந்தனை தீண்டாமை ஒழிப்பு என்பது தான். இந்தப் பரந்த அணி திரட்டலின்

அடிப்படையில் நின்று கொண்டுதான் நாம் ஏகாதிபத்தியத்தையும் முதலாளியத்தையும் எதிர்க்க முடியும். தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையோர் இவர்களில் பெரு முதலாளிகள் அதிகமில்லை என்பது குறிப்பிடத் தக்கது. நமது இரு பெரும் எதிரிகள் பார்ப்பனியமும் முதலாளியமுமே என **அம்பேத்கர்** சொன்னதன் பொருள் இதுதான்.

ஒரு நாவலின் முன்னுரைக்குள் எல்லா விசயங்களையும் பேசி விடுவது இயலாத ஒன்று. மொத்தத்திற் இப்படிச் சொல்லலாம். இந்தியச் சூழலில் தேசியத்தில்கான வரையறையைக் கற்பிக்கும்போது சாதியைப் புறக்கணித்துவிட முடியாது.

சாதியை மட்டும் உள்ளடக்கி விட்டால் போதுமா? தந்தை வழிச் சமூக ஆணாதிக்க மதிப்பீடுகளைத் துடைத்தெறிய வேண்டாமா? நிச்சயமாக. அந்தப் புரிதல் டானியலுக்கு இருந்ததா? நிச்சயமாக இல்லை. பெண்ணிய நோக்கில்மட்டுமல்ல, கதையின் முடிவு, மொழிநடை என விவாதிக்க எத்தனையோ அம்சங்கள் இந்நாவலுக்குள் உண்டு. பஞ்சமர் வரிசையின் இதர நாவல்கள் தமிழகத்தில் வெளிவந்த சூழலுக்கும் 'பஞ்ச கோணங்கள்' வெளிவரும் இன்றைய சூழலுக்குமிடையே எண்ணற்ற வேறுபாடுகள் உள்ளன. தலித் மக்கள் மத்தியில் மகத்தான விழிப்புணர்வு ஏற்பட்டு வரும் கால கட்டமிது. எந்த மக்களின் விடுதலைக்காக டானியல் தனது இயக்க மற்றும் இலக்கிய வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டாரோ அந்த மக்களால் 'பஞ்ச கோணங்கள்' பெரிய அளவில் வரவேற்கப்படுவதற்கும், விவாதிக்கப்பவதற்கும், விமர்சிக்கப்படுவதற்கும் இன்று வாய்ப்பிருக்கிறது.



'பஞ்சகோணங்களின்' கையெழுத்துப் படியை டானியில் எங்களிடம் கொடுத்து ஏழாண்டுகள் ஆகின்றன. 'தோழமை' யின் பணி முடங்கிய சூழலில் எங்களால் இதனை வெளியிட முடியவில்லை. நாங்கள் அணுகிய பெரிய பதிப்பகங்கள் எதுவும் இதில் ஆர்வங்காட்டவுமில்லை. இன்றைய சூழலில் இந்த நாவலின் முக்கியத்துவம் கருதி **விடியல்** பதிப்பகம் இதனை வெளியிட முன் வந்துள்ளது. டானியல் தஞ்சையில் தங்கியிருந்தபோது சாவதற்குச் சில நாட்கள் முன்பு எழுதி முடித்த 'சாதிமல்' என்கிற குருநாவலையும் **விடியல்** பதிப்பகமே அடுத்து வெளியிட இருக்கிறது. தோழர்கள் **சிவா, கோவிந்தசாமி, தட்சிணமூர்த்தி** ஆகியோருடன் மீண்டும் ஒரு முறை இணைந்து பணியாற்றும் பெரு வாய்ப்புக் கிடைத்தது மட்டற்ற உற்சாகத்தை அளிக்கிறது.

செப்டம்பர் 23, 1993,
31, சேவியர் நகர்,
தொம்பன் குடிசை,
தஞ்சாவூர் - 613 001.

**அ. மார்க்ஸ்**

# பதிப்புரை

தோழர் டானியல்...... இதைக் கேட்கும்பொழுதே கறுஞ் சிறுத்தைகளின் உரிமைக்குரல் செவிகளை எட்டத் துவங்கி விடுகிறது. தனது வாழ்க்கையை முழுவதும் பஞ்சமரின் விடுதலைக்காக இணைத்துக் கொண்ட அம் மாமனிதன் நம்மிடம் இருந்து மறைந்து போய்விட்டார். ஆனால் அவரது படைப்புகளோ தோழர் டானியலை நம்மிடம் வாழவைத்து விட்டது.

பஞ்சமர் வரிசையில் எழுந்த பஞ்சகோணங்கள் 1984-இல் எழுதப்பட்டு இன்றுதான் அச்சேறுகிறது. வணிகத்தையே நோக்கமாகக் கொண்ட பதிப்புலகில் டானியலை ஒதுக்கிவிடலாம் எனக் கருதினாலும் பஞ்சமரின் உரிமைக்குரல் எழத்துவங்கிய இந்தக் காலத்தில் டானியலை எந்த சக்தியாலும் ஒதுக்கிவிட முடியாது.

தனக்கான விடுதலை தலித்துகளோடுதான் என தொடர்ந்து பணியாற்றி வரும் தோழர் அ. மார்க்ஸ் அவர்கள் ''பஞ்சகோணத்தைக் கொண்டு வருகிறேன்'' என்று சொன்னவுடன் மிகப்பெரும் மகிழ்ச்சியடைந்தார். அனைத்துப் பணிகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு இரவு முழுவதும் படித்துச் சுவைத்து அச்சேற்றுவதற்கு எமக்கு ஊக்கமளித்தார்! அவருக்கு எமது நன்றி!

முகப்போவியம் வழங்கிய வீர. சந்தானம் அவர் களுக்கும், அச்சாக்கம் செய்து கொடுத்த அலைகள் அச்சகப் பணியாளர்களுக்கும் எமது நன்றிகள்!!

**விடியல் பதிப்பகம்.**

# முன்னுரை

என்னுடைய ''பஞ்சமர்'' நாவல் வரிசையில் ஐந்தாவது படைப்பாக இந்த ''பஞ்சகோணங்கள்'' பிறந்திருக்கிறது. 1972ஆம் ஆண்டு ''பஞ்சமர்'' முதல் பகுதி வெளிவந்தபோது ''டானியலின் இலக்கியப் பணியில் இது ஒரு தற்கொலை முயற்சி'' என்று மெத்தப் படித்தவர்கள் பலர் விமர்சனம் செய்தனர். ஆனால் பின் தள்ளப் பட்ட மக்களும்— வஞ்சிக்கப்பட்ட மக்களும், நிதானமான புத்திஜீவிகளும் பஞ்சமரை வரவேற்றனர்.

பஞ்சமரின் இரண்டாம் பாகமும் சேர்த்து முழுமை பெற்ற பஞ்சமராக 81ஆம் ஆண்டு தமிழகத்திலிருந்து வெளிவந்தபோது— அதன் இரண்டாம் பகுதியில் உள்ளடங்கி இருந்த அரசியல், அதன் அந்தஸ்தை தமிழ் நாட்டிலும் இங்கும் மேல் உயர்த்தியது.

பஞ்சமர் முழுமை பெற்ற நூலைத் தொடர்ந்து ''கோவிந்தன்'' என்ற நாவல அதன் வரிசையில் இரண்டாவதாக இடம் பெற்றது. அதுவும் (தமிழகத்திலிருந்து வெளிவந்ததால்) பெருமளவு பஞ்சமருக்கிருந்தளவு வரவேற்பைத் தமிழகத்திலும் இங்கும் பெற்றது.

இந்தப் 'பஞ்சகோணங்கள்' பஞ்சமர் வரிசையில் ஐந்தாவதாகும்.

சமீபத்தில் சென்னையில் நடந்த ஒரு இலக்கியக் கூட்டத்தில் ''இலங்கையில் இத்தனை கொடுமைகளும், காட்டுமிராண்டித்தனங்களும் நடந்துகொண்டிருக்கும் இந்தவேளையில் டானியல் காலம்போன பிரச்சனைகளை மட்டும் எழுதிக் கொண்டிருக்கிறாரே!'' என்று சில

இலக்கியக்காரர்கள் வருத்தம் தெரிவித்தபோது என் சம்பந்தப்பட்ட பல கருத்துகள் விவாதங்களாகப் பரிண மித்தன என்றும் அறியக்கூடியதாக இருந்தது. இதை அறிந்தபோது இந்தப் பிரச்சனையைக் கிளப்பிய தமிழக இலக்கியக்காரர்கள் மேல் எனக்கு வெறுப்பு வரவில்லை; அனுதாபந்தான் வந்தது.

தமிழ்நாட்டுச் செய்திகளைத் தரும் புதினத் தாள்களி லிருந்து சாதிசம்பந்தமான படுகொலைகள், தீ வைப்புகள், உயிரோடு குளங்களில் தூக்கி வீசுதல் ஆகியவைகளைப் பற்றி நாம் படிக்கும் புதினங்கள் பொய்யானவையா? என்ற கேள்வியும், தமிழ்நாட்டுக்கும் நான் வந்திருந்த காலங்களில் கிராமப்புறங்களில் நான் கண்ணால் பார்த்த சீரழிவு வாழ்க்கையும், பரிதாபக் கோலங்களும், சாதி சம்பந்தமான, நண்பர்களுக்கூடாக நான் அறிந்து கொண்ட தகவல்களும் பொய்யானவைதானா? என்ற கேள்வியும் இப்போது ஒன்று சேர்ந்து எழுகின்றன.

''காந்தியார் கனவு கண்ட ராம ராஜ்யம் பாரத மெங்கும் நடக்கிறது'' என்று இங்குள்ள தமிழர்கள் எண்ணிக் கொண்டிருப்பது புதினமல்ல. தமிழ் நாட்டில் உள்ள தமிழர்கள்— அதுவும் சமுதாய வாழ்க்கையையே அவதானிக்க வேண்டிய இலக்கியக்காரர்களே எண்ணிக் கொண்டிருப்பதுதான் புதினமானதாகும்.

81ஆம் ஆண்டு நான் தமிழகம் வந்தபோது தமிழகத் தின் சரித்திரப் பிரசித்தி பெற்ற 'கீழ்வெண்மணி'யைப் பார்த்தேன். பெருமளவு எல்லோராலுமே வஞ்சிக்கப் பட்ட அந்த மக்களுடன் பேசினேன். இன்னும் ஆயிர மாண்டு காலத்திற்கு அந்த மனிதர்களின் மனதில் நிற்கக் கூடியதான அந்தச் சோகச் சம்பவம் தமிழக இலக்கியக் காரர்களால் மறக்கப்பட்டுவிட்டதை என்னால் நம்ப முடியவில்லை. 44 மனித உடல்கள் ஒரே தசைக்கோளமாக அக்கினியில் உருகி மலையாக நின்ற அந்தக் காட்சியை



நேரில் கண்டறிந்த இலக்கியக்காரர்கள் தமிழகத்தில் இல்லாமல் போய்விட்டார்களா?'' என்று கேட்கத்தான் தோன்றுகிறது. அத்துடன் இத்தனை ஆண்டுகளுக்குப் பின்பு இன்று வரையில் தமிழகத்தில் உள்ள ஜாதிவெறிக் கொடுமைகள் நிலைத்திருப்பதற்கான காரண காரியங் களைத் தானும் சொல்லி வைக்கக் கூடாதா? என்றுதான் கேட்கத் தோன்றுகிறது. ஆயினும் நான் அப்படிக் கேட்கக் கூடாது. ஏனெனில் இங்குள்ள நிலைமையை வைத்து அங்குள்ள நடைமுறைகளை நான் கணிப்பது சரியான தல்ல என்பதனால்!

எனக்குத் தெரிந்த இதே ரீதியில் என்மீது பழிசுமத்தும் இலக்கியக்காரர்களை நான் ஒன்று கேட்டேயாக வேண்டும்.

''இலங்கையிலுள்ள தமிழர் கோரிக்கைகளுக்கும், இங்குள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சனைகளுக்கும் இருக்கும் ஒட்டுறவு பற்றிய கணிப்பை எந்த அளவு கோலைக் கொண்டு முடிவெடுத்திருக்கிறீர்கள்?'' என்பது தான்.

''நிலம் பறிக்கப்படுகிறது; உயர் கல்வி வசதி பறிக்கப் படுகிறது; தமிழர் உயர்பதவிகள் ஒழிக்கப்படுகிறது; அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படுகிறது; தமிழன் தீண்டப்படாதவன் ஆக்கப்படுகிறான்'' என்பவைகள் இங்குள்ளவர்களின் கூக்குரல் ஆகும். அரசின் மிலேச்சத் தனத்தை எதிர்த்து அதற்காகவே நாட்டுப் பிரிவினை கோரப்படுகிறது.

இங்குள்ள தாழ்த்தப்பட்டவர்களும் மற்றையவர் களால் இதே ஐந்து மிலேச்சத்தனங்களுக்கு உட்படுத்தப் படுகின்றனர்.

இங்கு வாழும் தமிழர்களும் ஐந்து விதக் கருத்துடைய வர்களாகவே இருக்கின்றனர்.

''பரம்பரை பரம்பரையாக அடிமை வைத்து ஆண்டு அநுபவித்து வநத சுகம்போகங்களை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லாதவர்கள்.''

''இன்று இளைஞர்களால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் கைகூடக்கூடும் என்ற நம்பிக்கையில் அவர்களோடு சேர்ந்து ஓடுவது போலப் பாவனை செய்து கொண்டு, நாளைக்கு அவர்களால் கிடைக்கப் போகும் அரசின் அதிகாரத்தில் பங்கெடுத்து தங்களையும் தங்கள் உடமைகளையும் காப்பாற்றி விடலாம்'' என்று எண்ணுபவர்கள்.

''விடாப்பிடியான ஆயுதப் பிரயோகங்களில் அரச அதிகாரத்தைப் பிடித்துவிட இளைஞர்களின் சக்தி மட்டும் போதுமானது என்று நம்புபவர்கள்.''

''பல நூறு வருடங்களாக இவர்கள் காலடியில் கிடந்த இவர்களின் அடிமை குடிமைகளாகச் சேவகஞ் செய்து, இவர்களால் இன்றுவரை ஆடாய்க்கட்டித் தோலாய் உரிக்கப்படும் எமக்கு வாழ்வு கிடைக்க இன்றைய அரசியல் கிளர்ச்சி வழிகாட்டுமா? என்று ஏங்குபவர்கள்.''

''நிலச் சொந்தக்காரனையும், நிலமில்லாதவனையும், எஜமானனையும், அடிமையையும் இனப்பிரச்சனைச் சுலோகத்தின் கீழ் ஒன்றிணைத்து இறுதியில் தமிழருக்கென மட்டுமே ஒரு தமிழ்ச் சோஷலிச தமிழ் ஈழத்தை உருவாக்கிவிடலாம் என்று முடிவு கட்டுபவர்கள்'' ஆகியோர்களே இந்த ஐந்து வகையினராவர்.

இந்த உண்மையைக கண்டறிவது இலேசுப்பட்ட ஒன்றல்ல. அதிலும் கடலுக்கப்பால் இருந்து ஊகிப்பால் உணரக்கூடியதுமல்ல. எனவேதான் தமிழகத்திலிருந்து இலங்கை சம்பந்தமான அரசியல் இலக்கியக் கருத்துகளைச் சொல்பவர்கள் நிதானப்பட வேண்டியவர்களாகின்றனர்.



சமகாலப் பிரச்சனையிலிருந்து விலகி நான் மிகவும் முற்பட்ட காலக் காரியங்களில் எனது பேனாவைப் பிரயோகிக்கிறேன் என்று சொல்பவர்கள் ஒன்றை மறந்துவிடுகின்றனர். சமகாலப் பிரச்சனை என்று தமிழர்களுக்குள்ளேயே இன்றுவரை நடைமுறையில் இருப்பவைகளைச் சமகாலப் பிரச்சனை தான் என்பதை வெளிக்கொண்டுவர இந்தப் பஞ்சகோணங்களுடன் பஞ்சமர் வரிசையில் ஐந்து நாவல்கள் பிறந்துவிட்டன. ஒரு அடிக்கருத்தை வைத்து இதுவரை இப்படிப் பிறப்பிக்கும் என்னிடம் இன்றையத் தமிழர் பிரச்சனையை வைத்து எழுதும்படி, இங்கு வற்புறுத்துபவர்கள் இலங்கையில் உள்ள மற்றைய படைப்பாளிகளைப் பார்த்து இப்படிக் கேட்காதது விந்தையானதல்ல. ஏனெனில் இவர்கள் விரும்புவதெல்லாம், தாழ்ந்தவர்களின்— வஞ்சிக்கப்பட்டவர்களின்— அன்றாடங்காய்ச்சிகளின்—அடிமைப்பட்டவர்களின் — வயிற்றுச் சோற்றுக்காக ஆலாய்ப்பறப்பவர்களின் பக்கம் நின்று எழுதுவதிலிருந்து என்னைத் தடுத்து நிறுத்திவிட வேண்டும் என்பதுதான்.

இவர்கள் சொல்வதுபோல, இன்று காண்பவைகளை இன்றே எழுத்தில் கொடுப்பதற்கு நான் ஒரு பத்திரிகை நிருபர் அல்ல. சரியும், பிழையும் நடைமுறையிலும் தீர்க்கமான பார்வையிலும் தான் தெளிவாகப் புலனாகும்.

இங்குள்ள தமிழர்களுக்கான தீவிர இயக்கம் தோற்றமளிக்கத் தொடங்கி ஏறக்குறைய ஐந்தாண்டுகள் ஆகின்றது. பஞ்சமர் வரிசை நாவல்களில் காட்டப்பட்ட காலத் தொடர்ச்சியிலிருந்து இந்தத் தீவிர இயக்கத் தொடக்க காலம் வரையிலான காலத்தை இந்த நாவல் உள்ளடக்கி நிற்கின்றது. மேலே கூறப்பட்ட பஞ்சகோணக் கொள்கைகளை இது வெளிக்கொண்டு வருகிறது. இன்றைய தமிழர் இயக்கங்களுக்கு கணிசமான அளவு ஒரு பிரிவு மக்கள் அந்நியப்பட்டு நிற்பதற்கான காரண காரியங்களை உண்மை நிகழ்வுகளுடன் சித்தரிப்பது எனது

கடமையாகப் பட்டதால் அதையும் பிசகின்றிச் செய்து, இதில் உலவி வரும் பாத்திரங்களுக்கூடாக— அவ்வப் பாத்திரங்களின் இயல்பான செயல்பாடுகளுக் கூடாக நடைமுறையையும் கொள்கையையும் ஒருமைப் படுத்தி, சமூக மாற்றத்தை வருவிக்க விரும்பும் ஒரு இலக்கியக்காரனின் பங்கினை இந்த நாவலுக்கூடாகச் செய்திருப்பதாகவே நான் கருதுகிறேன்.

விரும்பப்படாத ஒரு வர்க்க அரசுக்கெதிராக ஆயுதம் தாங்கிய போராட்டம் என்பது மிகச் சரியானதே. ஆனால் தூக்கப்படும் அந்த ஆயுதத்தின் எஜமானர்களாக யார் இருக்க வேண்டும் என்பதுதான் கேள்வி? ''சந்தர்ப்பவசத் தால் இந்த ஆயுதம் பின் தள்ளப்பட்ட மக்களின் கை களில் இருக்கவில்லை'' என்பது ஒப்புக்கொள்ளப்பட வேண்டியது. அதனால். ஆயுதம் தாங்கி நிற்பவர்களை எடுத்த எடுப்பிலேயே பிற்போக்காளர் என்றோ, அரசியல் அநுபவமற்றவர்கள் என்றோ ஒதுக்க நினைப்பது தவறான தாகும். இந்த வேளையிலுங்கூட தூக்கப்பட்ட அந்த ஆயுதங்களுக்கு உரிமையாளர்களாகவும், அதைத் தங்கள் கரத்தில் தூக்கவேண்டியவர்களாகவும் பின் தள்ளப்பட்ட வர்க்கத்து மக்களை ஆக்கும் பணியில் இளைஞர்களைத் திசை காட்டுவதற்காகவுமே, மாதிரிக்கான சில இளைஞர் பாத்திரங்கள் இதில் வருகின்றன.

இதில் 'வாத்தியார்' பாத்திரம் ஒன்று வருகிறது. ஆசிரியத் தொழில் பார்த்த காலத்தில் அவரது மனப் போக்கு, ஓய்வு பெற்றதன் மேல் அவரது மனப்போக்கு, தமிழ் உணர்வு பெற்றெழுந்த கிராமச் சூழ்நிலையில் அவரது மனப்போக்கு, பின்பு வர்க்க அரசியல் உணர்வு பெற்றபோது அவரது மனப்போக்கு, இறுதியில் இளைஞர் இயக்கத்துக்கு மாறாக ஆயுதப் படைகள் முஸ்தீபுச்செய்தபோது அவரது மனப்போக்கு ஆகிய ஐந்து விதங்களில் அவர் மனம் தியாகத்தை நோக்கி வளர்த் தெடுக்கப் பட்டதைக் காண்பீர்கள்.



பூதி, செல்லி என்ற இரண்டு விவசாயக் கூலிப் பாத் திரங்கள் வருகின்றன. 'உலக வியாபகமான வர்க்க உணர் வுகள் அவர்களுக்குத் தெரியாமலே அவர்களை ஊடுருவி நிற்பது, எந்த நிலையிலும் அந்த வர்க்க உணர்வு அவர் களை உந்தித் தள்ளுதல், தொடக்கத்திலிருந்து முடிவுவரை விவசாயக்கூலிகளிடையே அவர்கள் பெற்றுக் கொண்ட அனுபவ அறிவு, மென்மையான பெண்மை உணர்வு களுக்கு உட்படுதல், எந்தத் தியாகத்திற்கும் தங்களை உட்படுத்தத் தயாராக இருத்தல்' ஆகிய ஐந்து வகை களுக்கு அவர்கள் உட்படுவதைக் காண்பீர்கள்.

கிட்டினண்ணர் என்ற ஒரு பாத்திரம்!

மிகக்குறுகிய கல்வி அறிவு பெற்ற பாத்திரம்.

பஞ்சமரில் இறுதிக் கட்டமான ஆலயப் பிரவேசத்தில் நர வேள்வியில் உயிர் தப்பிய ஒருவர். பஞ்சமர் நாவல் நாயகனான ஐயாண்ணரிடம் பெற்றுக்கொண்ட அனுப வங்களைச்சுமந்துகொண்டு அவர் மிகப் பக்குவமாகப் பின் தங்கிய மக்களுடன் வைத்துக் கொள்ளும் அரசியல் உறவு முறைகள் — வழிகாட்டல்கள் — பேச்சுவார்த்தைகள், வர்க்க ஒருமைப்பாட்டை ஏற்படுத்துதல், அனுபவத் தீர்க்க தரிசனங்கள் ஆகிய ஐங்குணங்களுடன் இங்கு அவரைக் காண்பீர்கள்.

ஒவ்வொரு பருவ காலத்திலும் ஒவ்வொரு பொலிவும் உதிர்வும் பெற்றுக் கிடக்கும் விவசாயப் பிரதேசத்துக் கூலிகள் காலத்துக்குக் காலம் படிப்படியான கோரிக்கை களைச் சமர்ப்பித்து முன்னேறிச் செல்லும் வழியில் வரும் பின் வாங்கல்களும், அவைகளைப் பின்வாங்கல் களாகக் கொண்டு சோர்வடையாமல் இருப்பதையும் காண பீர்கள்.

'புரட்சி' என்ற சொல் இப்போது மிகவும் மலிவாகி விட்டது. அதிதீவிர வாதத்தையும், அரச பயங்கரவாதத்

த்தையும், தனிநபர் குழு வீரதீர வாதத்தையும் சேர்த்துக் கொட்டிக் கலந்து எல்லாவற்றையுமே பின்பு தனித்தனியாக்கி, ஒவ்வொன்றுக்கும் 'புரட்சி' என்றே பெயரிடுவது சகசமாகிவிட்டது.

கேடுகெட்ட, சீரழிந்த முதலாளித்துவ சமூக அமைப்புக்கு மாறாக தொழிலாளிய—விவசாயிய வர்க்கங்கள் ஒன்றிணைந்து, தனக்குப் பின்னால் ஏனைய பின்தள்ளப்பட்ட வர்க்கங்களையும் இணைத்துக் கொண்டு செய்யும் போரினைத்தான் புரட்சி எனக் கொள்ளலாம். இந்தப் புரட்சியை வருவிப்பதற்கு ஒவ்வொரு இலக்கியக்காரனும் தனது பங்கினைச் செய்ய எழுதுவதுதான் புரட்சிக்கான இலக்கியமாகும். இதைவிடுத்து, வெறும் அதிதீவிர வாதத்திற்கும், தனிநபர் குழு வீரதிர வாதத்திற்கும் பரிந்து எழுதுவதென்பது புரட்சிக்கே துரோகம் செய்யும் எழுத்து வரிசைக்கே அவனைத் தள்ளிவிடும். இதில் நான் மிகவும் அவதானமானவனாகவே இருந்தேன்; இருக்கிறேன்; இருப்பேன்.

இந்த முன்னுரை 12. 11. 84இல் எழுதப்படுகிறது. இன்று எனது அனுமானத்தின்படி இங்கு நடக்கும் தமிழர் இயக்கங்கள் பெருமளவில் அதிதீவிர வாதத்திலும், தனிநபர் குழு வீரதீர வாதத்திலுமே தங்கிநிற்கின்றன. இந்த நூல் எப்போது அச்சேறும் என்று எனக்கு நிச்சயப்படுத்த முடியவில்லை. இது அச்சேறும் காலத்திலும் இந்தப் செயற்பாடுகளில் தங்கி நிற்கும் நிலையில் தான் தமிழர் இயக்கங்கள் இருக்குமெனில் இந்த நூலை எழுதியதற்காக இவர்களின் ஆத்திரம் என்னை நோக்கித் திரும்பலாம் என்பதும் எனக்குத் தெரியும். ஆயினும் எனது இலக்கிய நெறிப்பாட்டில் நான் உண்மையை எழுதித்தான் ஆக வேண்டியதாக இருக்கிறது. அதேவேளை ஒன்று என் கண்களுக்குத் தெரிகிறது. இந்தவித அரசியல் நடவடிக்கையிலிருந்து பின்வாங்கி, 'இந்த வாலிபர்கள், தாங்கள் தூக்கிய இந்த ஆயுதங்களை உயர்த்திக் கொண்டு புரட்சியை நோக்கிச் செல்லும் வர்க்கங்களுக்குப் பின்னால் அணிவகுத்துச் செல்லும் காட்சியும், இலங்கைத் தீவின் இனங்கள் கைகோத்துக் கொண்டு குதூகலித்துக் கொண்டாடும் காட்சியும்'......



இந்தவிதமான வர்க்க உணர்வு பற்றிச் சொல்லும் நான் இலக்கியங்களில் சாதிச் சிருட்டிப்புக்களைத்தான் தருகிறேன் என்று பலர் வைக்கும் குரல் தொடர்ந்து எனக்குக் கேட்கிறது.

இலங்கை வாழ் தமிழர்கள் மத்தியில், நிலமில்லாத சொத்தில்லாத, உரிமைகள் இல்லாத, பெரும் படிப்பறிவில்லாத, இழப்பதற்கெதுவும் இல்லாதவர்களாகக் கணக்கெடுப்பின், அது பெரும்பாலும் இந்த மக்கள் கூட்டத்தினரையே சுட்டும். அதனால், நான் இவர்களுக்காக எழுதுவதென்பது வர்க்கத்துக்காகத்தான் எழுதுவதாகிறது. இவர்களோடு ஒத்த வாழ்வுடையவர்களை இந்த வர்க்கத்துடன் சேர்த்துக் கொண்டு செல்ல மறுத்துள்ளதை எனது படைப்புக்களிலிருந்து உதாரணங்காட்ட யாராலும் முடியாதென்பதனை நான் திடமாகக் கூறுவேன். எனவே, நான் வர்க்க சார்பற்ற இலக்கியக்காரன் என்று சொல்லப்படுவதெல்லாவற்றையும் நான் மறுக்கிறேன்.

நிலமானிய சமுதாய அமைப்பு முறையின் பிரதான வர்க்க முரண்பாடு படிப்படியாகக் கட்டப்பட்டுள்ள சாதி அமைப்பு முறைக்குள்ளேயே அடங்கி நிற்கிறது. முதலாளி அமைப்புக்கும் நிலமானிய அமைப்புக்குமிடையே உள்ள வாழ்க்கை முறை சித்தரிக்கப்படும்போது ''சாதி முறையை அகற்றிவிட்டுச் செய்யலாம்'' என்று கூறுவதெல்லாம் மிகவும் பிழையானதும், சிறுபிள்ளைத்தனமானதுமாகும். கீழ்மட்டத்திற்குத் தள்ளப்பட்டுள்ள அந்த அடிமைப்பட்ட வர்க்கத்தை முழுமையான ஒரு வர்க்கப்போருக்கு மேலெடுத்துக் கொண்டு

வருவதென்பது இலேசுப்பட்ட காரியமல்ல. அவர்களின் வாழ்க்கையோடு சேர்ந்து, மலைப்பாம்பு போல அவர்களைச் சுற்றிக்கிடக்கும் சாதி முறையிலிருந்து விடுவிக்கும் பயிற்சியை அங்கு வைத்து அளிப்பதன் மூலந்தான் அந்த மலைப்பாம்பை அழிக்கும் உறுதியையும், அதற்கு மேலான பெரும் வர்க்கப்போருக்கு அவர்களைப் போக வைக்கும் நம்பிக்கையையும் அவர்களுக்குக் கொடுக்க முடியும்.

வர்க்கங்களுக்கிடையே உள்ள போர் இன்றோ நாளையோ முடிந்து விடும் என்பது பலரின் நம்பிக்கை. இலக்கியக்காரர்களில் பலரும் இதை நம்புகின்றனர். ஒன்றிலிருந்து அடுத்த ஒன்றுக்கும், அதிலிருந்து அதன் தொடர்ச்சியான வேறொன்றுக்குமாகப் புரட்சிகர வர்க்கங்களை வழிநடத்தி, வழிநடத்தி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான பெரும் புரட்சியை ஏற்படுத்துவதென்பது இன்றோ, நாளையோ, அல்லது மறுநாளோ, மறுநாளைக்கு மறுநாளோ செய்து முடிக்கக் கூடிய ஒன்றல்ல. இதில் இலக்கியக்காரனின் பங்கு அந்தந்தக் காலகட்டங்களுக்கு உட்பட்டதாகவே அமைய வேண்டும். அதற்குமேல் அவன் தன்னிச்சைக்குப் போவானாகில் அவன் புரட்சிக்கு உதவியவனாகமாட்டான் பதிலுககு எதிரிக்கு உதவுபவனாகவே ஆவான். அவன் வெறும் கற்பனாவாதியே!

''சமூகத்தின் அன்றாட நிகழ்வுகளை அவதானித்தல், அந்த அவதானிப்புகளை மறுநாளைய அவதானங்களோடு ஒப்பிடுதல், சமூகத்தின் பொதுவான நடைமுறைகளோடு இந்த அவதானங்களைச் சேர்த்துப் பார்த்தல், அறியப்பட்ட நீண்ட இறந்த கால நிகழ்வுகளோடு சரியான வேறுபாடு காணுதல், முடிவில் எதிர்காலத்தை நினைவில் வைத்துப் பேனாவில் வடித்தல்.''

ஒரு இலக்கியக்காரனுக்கு இந்தப் பொறுப்புகள் இருக்க வேண்டும். இதை விடுத்து, அன்றாட சம்பவங்களினால் உந்தப்பட்டு நிற்கும் மனிதக்கூட்டத்தின் உணர்ச்சிகளைத் தனது தலைமேல் சுமத்திக் கொண்டு— அதன் வயப்பட்டு எழுத முற்படும் இலக்கியக்காரனால் நிதானமான, சரியானவைகளை எழுதவே முடியாது என்று ஒரு இலக்கணம் வைத்துக் கொண்டு எழுதுபவனாகிய என்னால், என்மேல் பழி சுமத்துபவர்களின் அபிப்பிராயங்களை ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறது.



எந்தக் காரியங்களையும் மேலோட்டமாகப் பார்ப்பது ஒரு வகை; அதே காரியத்தை அடியிலிருந்து நுனிவரை ஆய்ந்து பார்ப்பது வேறோர் வகை; மேலோட்டமாகப் பார்க்கும்போது சரியெனப்படும் ஒன்று இரண்டாவது வகையான ஆய்வு முறையில் பார்க்கும்போது தவறாகத் தெரிந்துவிடும்; அல்லது மேலோட்டமாகப் பார்க்கும் போது பிழையாகத் தெரியும் ஒன்று ஆய்ந்து பார்க்கும் போது சரியாகப்படுவதும் உண்மைகளாகும். ஆயினும் இரண்டும் உண்மைகளே. இந்த உண்மைகள் உடனுக்குடன் புரிந்துவிடக் கூடியவை அல்ல என்பது இரண்டுக்கும் மேற்பட்ட பிறிதோர் மேலதிக உண்மையாகும். இந்த மேலதிக உண்மை பிறக்கும்வரை காத்திருந்து அதற்கு எழுத்துருவம் கொடுக்கும்போதுதான் அது உண்மைக்கு விசுவாசமான இலக்கியமாகிறது. இப்படிப்பட்ட இலக்கியங்களைப் பிறப்பிக்கவே முடிந்தவரை நான் முயல்கிறேன்.

இலக்கியங்களின் உருவ அமைப்புகள் பற்றிய நீண்ட சர்ச்சை ஒன்று நடந்து வருகிறது. இதைப்பற்றி நான் அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. ஏனெனில் சராசரி மக்களுக்கு — குறிப்பாகப் — பின்தள்ளப்பட்ட மக்களுக்கு எனது படைப்புகள் இலகுவில் விளங்க வேண்டுமென்பதால், நான் பார்த்துப் பேசிப் பழகிய பாத்திரங்களை ஒரு கருப் பொருளுக்காகச் சேர்த்து விடுகிறேன்; அவை சுதந்திரமாக உலவி, என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருப்பொருளுக்கு ஏற்ற விதத்தில் உலாவி வரும்போது

முடிவில் இயல்பான ஒரு உருவத்தைத் தாங்களாக அமைத்துக் கொள்கின்றன. அந்த விவகாரத்தில் நான் அதிகம் தலையீடு செய்வதில்லை. அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட உருவத்தையே ஏற்றுக் கொள்கிறேன்.

எனது படைப்புகளுக்குட்பட்ட மொழி ஆளுமை விடயத்தில் நான் அதிகம் சிரமப்படுத்துவதில்லை. என்னால் ஒன்று சேர்க்கப்பட்ட ஒவ்வொரு பாத்திரங்களும், தாங்களாகவே பேசுவதற்கான தங்கள் தங்களுக்கு இயல்பான விதிகளை வரையறுத்துக் கொள்கின்றன. எங்கேயாவது அவைகள் இயல்புக்கப்பால் வழிவிலகிச் செல்லாமல் சற்றுக் கண்காணித்துக் கொள்வது மட்டுந்தான் எனது வேலையே தவிர அதற்குமேல் ஒன்றுமில்லை.

படைப்புக்கான மூலவித்தான கருப்பொருட்களை நான் ஓரிடத்தில் குந்தி இருந்து சிந்தனையைச் சுழலவிட்டு அதன் மூலமாகச் சேகரித்துக் கொண்டதில்லை. படைப்புகளில் சித்தரிக்கப்படும் களங்களில் நின்று, படுத்து, எழுந்து பெற்றுக்கொண்ட நடைமுறை அனுபவங்களுக்கூடாகவே சேகரித்துக் கொள்கிறேன். மேலே காட்டப்பட்ட பஞ்சமர் வரிசையில் வந்த படைப்புகளிலெல்லாம் ஏதோ ஒரு பாத்திரத்தில் நான் நிற்கிறேன் அதனால்தான் இந்தப் பஞ்சகோணங்களுக்குள்ளும் நான் ஒரு பாத்திரமாக நின்றுகொண்டு குறிப்பிடப்படவேண்டிய கருப்பொருளின் புறப்பாட்டினைப் புலப்படுத்துவதில் கண்ணும் கருத்துமாக இருக்க முடிந்திருக்கிறது.

பஞ்சமர் வரிசையின் மூன்றாவதான 'அடிமை'களை நான் எழுதி முடிக்கும் தறுவாயில் இருந்தபோது. மிகவும் சிரமத்தில் சேகரிக்கப்பட்ட அந்த நாவலுக்குரிய விவகாரங்கள் பயனற்றுப்போகக்கூடாது என்பதனால் அந்தவேளை எனக்கு ஏற்பட்ட சுகயீனத்தின் காரணமாக எழுந்த நினைவினால் அந்த அடிமைகளை முடித்துவைக்க



அந்த வழியில் வரக்கூடிய இரு எழுத்தாளர்களை இனங்காட்டி, இடையிலேயே அதன் முன்னுரையையும் எழுத நேர்ந்தது. அதன்பின்பு என்னை நோக்கி வந்த மரணம் பின்நோக்கிப் போய்விட்டதால் அதை அடுத்து மேலதிக அறுவடையாக 'கானல்' என்ற நாவலையும் எழுதி முடித்துவிட்டு, மேலதிகத்திற்கு மேலதிக அறுவடையாக இந்தப் பஞ்சகோணங்களை எழுதியிருக்கிறேன். இந்தப் பஞ்சமர்மக்களின் பிரச்சனை தீர்க்கப்படும்வரை — ஒரு வர்க்கப் போருக்கு அவர்களைத் தயாராக்கி, அவர்களையும், அவர்களோடொத்த வாழ்வு வாழும் மக்களையும் அரசியல் அதிகாரத்திற்குக் கொண்டு வரும்வரை எழுதுவதற்குப் பலர் தோன்றிவிட்டனர் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

கே. டானியல்.

15-11-1984.

# பஞ்சகோணங்கள்

## 1

காா் காலம் தொடங்கப் போகிறது.

வெப்பம் கலந்த குளிராக இருந்தது.

சுமார் பதினைந்துக்கு மேற்பட்டவர்கள் அந்தக் கிறிஸ்த்தவ தேவாலய விறாந்தையில் கூடி இருந்தனர். அவர்களுள் பத்துக்கு மேற்பட்டவர்கள் வாலிபர்களாக இருந்தனர்.

பேணி விளக்கு ஒன்று அவர்களுக்கு நட்டுக்கு நடுவாக கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது.

தேவாலயத்தின் திருந்தாதி மணி அடித்தும் நீண்ட நேரம் ஆகிவிட்டது. ஆனாலும் வந்த காரியத்தைப் பற்றி எதுவுமே பேசாமல் அவர்கள் இன்னும் சிலருக்காகக் காத்திருந்தனர்.

வெளியே மசிய நிலவு. சுற்றுப்புறங்களின் பனைகளுக் கூடாக அதன் ஒளிக் கீறல்கள் இலேசாகத் தெரிந்தன. அந்த ஒளிக் கீறல்கள் யாராவது புதியவர்கள் வந்து விட்டால் பட்டென்று காட்டிக் கொடுத்துவிடும் அளவுக்கு வெளிச்சமாகத் தெரிந்தன.

யாரோ நான்கைந்து பேர்கள் வருகிறார்கள் என்பது தெரிந்தது.

''ஆரது எங்கடை பொடியளோ வேறை ஆக்களோ பாருங்கோ தம்பியவை!'' என்று கூட்டத்தில் இருந்த நடுவயதைத் தாண்டிய ஒருவன் கூறினான்.

''அது செல்லத்துரையும், மிக்கேலும் வேறை ஆக்களையும் கூட்டிக்கொண்டு வருகினம்போலை!'' என்று ஒரு இளைஞனின் குரல் கூட்டத்தில் இருந்து எழுந்தது.

''வா தம்பி செல்லத்துரை!, தம்பி மிக்கல், நீ இப்பிடிச் சுணங்கி வந்தா மற்றவை என்னெண்டு நேரத்துக்கு வரப் போகினம்! தம்பி செல்லத்துரை உம்மைத்தான் காத்துக் கொண்டிருக்கிறம்! பின்னைத் துவங்குவம் வாறவை வரட்டுக்கன்; வருவினந்தானை!'' என்று சொல்லிக் கொண்டே குணசிங்கன் தகர விளக்கைச் சற்று அகற்றி வைத்துவிட்டு, வந்தவர்களுக்கு இடமளித்தான்.

''ஓமோம், துவங்கலாந்தான், எண்டாலும் கொஞ்சம் பொறுப்பம்! உதிலை நாங்கள் வாறவழியிலை தோட்டத்துக்காலை முருகையன் போறான். அங்கை மயிலங்காட்டுக்கை ஐஞ்சாறுபேர் வெளிக்கிட்டு நிக்கினமாம் வாறதுக்கு, கூட்டிக்கொண்டோடி வந்திடுகிறன் எண்டிட்டுப் போறான்; வந்திடுவான் கொஞ்சம் பொறுப்பம்!'' என்றான் செல்லத்துரையன்.

பனைவெளிக்கூடாக ஒரு சயிக்கிள் வருவது தெரிந்தது. அதில் இருவர் வந்து சேர்ந்தனர். ஒருவன் லோகேஸ்வரன். மற்றவன் பெயரோ ஊரோ யாருக்கும் தெரியவில்லை; சற்று நடுவயதைத் தாண்டியவன்.

''ஆர் தம்பி லோகு உது?'' என்ற ஒரு கேள்வியை மிக்கேல் கேட்டான்.

குணசிங்கன் மிக்கேலின் காதுக்குள் எதையோ முணுமுணுத்தான். இதற்கு மேல் லோகேஸ்வரனுடன் வந்தவனைப் பற்றி மிக்கேல் எதுவும் கேட்கவில்லை.



முன்னைய கேள்விகளுக்கு லோகேஸ்வரன் பதில் சொல்லவுமில்லை.

குணசிங்கன் எழுந்து புதிதாக லோகேஸ்வரனுடன் வந்த புதிய மனிதனுக்கு சற்று வசதியான இடத்தைக் கொடுத்தான். வந்தவனும் சாவகாசமாக உட்கார்ந்து கொண்டான்.

சற்றுவேளை யாரும் பேசவில்லை.

''முருகையா இன்னும் வரேல்லையே?'' என்ற லோகேஸ்வரனின் கேள்விக்கு ''காணேல்லை; உதிலை வரேக்கை செல்லத்துரை கண்டதாம்; வந்திடுவான்!'' என்று பதில் கூறினான் குணசிங்கம்.

''தம்பியவை நாங்க செய்யிற காரியங்களை அடக்கமாக செய்ய வேணுங் கண்டியோ? நேரத்தைக் கடத்தாதையுங்கோ; துவங்குங்கோ! கோயில் விறாந்தையிலை வெளிச்சத்திலை கூடிறம்!'' இப்படி ஒரு குரல் எழுந்தது.

''எப்பவும் சின்னப்பொடி அண்ணைக்கு பயந்தான். ஏன் பயப்படுவான்? நாங்கள் என்ன ஆரெட்டையும் களவு கிளவு எடுக்கக்கூடுறோமோ? இல்லாட்டி ஆரையும் கொலை செய்யக் கூடுறோமோ? எங்கடை அலுவலுக்குக் கூடிறம், அவை என்ன செய்யிறது?''

இப்படி ஒருவன் சின்னப்பொடியனின் பேச்சுக்கு மறுத்தான் தெரிவித்தான். அவன் மார்க்கண்டன், அப்போதுதான் அவசர அவசரமாகச் சேர்வையை முடித்துவிட்டுக் குளிக்காமல் வந்தவன்.

''நீ சொல்லுறது சரிதான் தம்பி மார்க்கண்டு; எண்டாலும் ஏன் வீண் சலசலப்பை?''

சின்னப்பொடியர் தனது பேச்சுக்கு பக்க நியாயம் சொன்னார்.

''சும்மா ஏன் இப்பவே வில்லங்கப்படுகிறியள்? விடுங்கோ!'' என்று தருணம் பார்த்து பேச்சை முடிவுக்குக் கொண்டு வந்தான் லோகேஸ்வரன்.

வேண்டிய வேளைகளில் வேண்டியதைச் சரியாகக் கணக்கிட்டுச் சொல்வதில் அவனுக்கு அவன்தான் ஒப்பு! இது அவன் இதுகாலவரை தேடிக்கொண்ட சொத்து களில் ஒன்றென்றுதான் கூறலாம். சின்ன வயதில் அவன் ஒரு முரடன். ''எடுத்ததற்கெல்லாம் கை நீட்டுவது; எடுத்த படி எல்லாம் பேசுவது; பட்டென்று கோப வயப்படுவது; சீறிச் சினப்பது'' இப்படிப் பல பழக்கத்திற்கு உட் பட்டவன் இப்போது முற்றுமுழுதாகவே தன்னை மாற்றிக் கொண்டுவிட்டான். அவனின் இந்த மாற்றத்திற்கான காரண காரியங்களைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியாத கிராமம், ''பொடியன் இப்ப சரியான திருத்தம்!'' என்று மட்டும் மொட்டையாகச் சொல்லி அவனுக்குக் கௌரவமளிக்கிறது.

அவனுக்கு இப்போது வயது ஏறக்குறைய முப்பத்தி ரெண்டு வரையில் ஆகிறது.

நெடுத்த — சற்றுக் கறுத்த உடல் கட்டு.

சுருண்ட முடி; நட்டுக்கு நடுவகிடு;

சற்று வெண்ணிறச் சொண்டு;

இமை விரிந்த பார்வை — தீட்சண்யமான நோக்கு;

மொத்தத்தில் அவனின் உடல் வாகைப் பார்த்தாலே எவருக்கும் ஆசை பிறக்கும்.

முருகையன் நான்கு ஐந்து பேர்களுடன் வந்து சேர்ந்தான்.

கூட்டத்தோடு கூட்டமாக அவன் வருவதைச் சற்றுக் கண்களைப் பதித்துப் பார்த்தால் தான் புலப்படும்.



அவன் மிகவும் குள்ளமானவன். ஆனால் மிகவும் இறுகிய உடற்கட்டு. எப்போதும் அவன் முன்பற்கள் இரண்டு பளிச்சிட்டு மின்னிக்கொண்டே இருக்கும். அதற்கு அழகு செய்வது போன்ற ஒரு குட்டிப் பல்லு!

குப்பி விளக்கின் வெளிச்சம் போதவில்லை. செல்லத் துரையன் எழுந்து சென்று பக்கத்துக்குடிலுக்குள் எரிந்து கொண்டிருந்த இன்னோர் குப்பி விளக்கினையும் எடுத்து வந்து கூட்டத்தின் மறு கரையோடு வைத்தான்.

''ஏன் தம்பி கனக்க வெளிச்சத்தை?''

இப்படிச் சின்னப்பொடியன் தனது பயத்தை மேலும் ஊர்ஜிதம் செய்துகொண்டான்.

''இப்பிடிப் பயந்து பயந்து நாளிலும் பொழுதிலும் செத்துச் செத்து என்னத்தைக் கண்டம்!''

இப்படி மார்க்கண்டன் குரல் வைத்தான்.

''ஓமோம் எண்ணிறன்?''

இப்படிச் சற்று வயதாகிய வேறொருவன் அந்த இளைஞன் மார்க்கண்டனின் பாட்டுக்குப் பக்கப்பாட்டுப் பாடினான்.

''சரி சரி விடுங்கோ கதையை! இனித் துவங்குவம்; செல்லத்துரை அண்ணன் நீங்கள்தான் தலைவராக இருந்து துவக்க வேணும்; ம் துவக்குங்கோ!''

லோகேஸ்வரன் பேசி முடித்துவிட்டான். எல்லோரும் அமைதியாகி விட்டனர்.

''நான் இதுக்கு முந்தி ஒண்டுக்கும் தலைமை இருக்கேல்லை; எண்டாலும் தம்பி லோகேசு சொல்லிப் போட்டான்; இதனால் சகலரும் அறியவேண்டியது என்னவென்றால் எங்கடை ஊருக்கை எங்களுக்குத் தெரியாத காலந்தொட்டு தோட்டந்துரவுக்குப் போற

பொண்டுகளுக்கும், ஆம்பிளையளுக்கும் தேங்காய்ச் சிரட்டையள்ளை தண்ணியும், தட்டுவத்திலை சோறும் தருகினம். இதை நிப்பாட்ட வேணும் எண்டதுக்காகத் தான் கூட்டம் கூடியிருக்கு. இப்ப இதுகளைப் பற்றித் தம்பி லோகேசுவும், லோகேசுவோடை வந்த மற்றவரும் சொல்லுவினம்!''

செல்லத்துரையன் விநயமாக எழுந்து நின்று பேசி முடித்துவிட்டு உட்கார்ந்து கொண்டான்.

''ஏன் தம்பியவை எழும்பிப் பிலனாக் கதைப்பான்; எல்லாரும் இருந்து மெல்லமாகக் கதைச்சா என்ன?''

சின்னப்பொடியன் மறுபடியும் தனது அச்சத்தைத் தெரிவித்துக கொண்டான்.

''சின்னப்பொடி அண்ணன் சொல்லுறதும் சரிதான்; எல்லாரும் இருந்து கதைப்பம்; இப்ப நாங்கள் கதைக்க வந்தது என்னவென்றால்... முதலில் தலைவருக்கு வணக்கம்......''

லோகேஸ்வரன் முன்பு பல கூட்டங்களைக் கண்டு அனுபவப்பட்டவன் என்ற முறையில் தலைவருக்கு வணக்கம் செலுத்திவிட்டுப் பேசத் தொடங்கி விட்டான்.

கடைச் சோளகக் காற்றுச் சற்றுப் பலமாக வீசியதால் சிதறி வந்த செம்பாட்டுப் புழுதி எல்லோர் உடல்களையும் மேவிச் சென்றது.

ஒதுக்குப்புறங்களில் வைக்கப்பட்டிருந்த விளக்குகள் அணைந்து போயின.

மிக்கேல் தனது மடிக்குள்ளிருந்த நெருப்புப் பெட்டியைத் தட்டி விளக்குகளை ஏற்றினான்.

விளக்குகள் நூரவும் இடை நிறுத்தப்பட்ட லோகேஸ்வரனின் பேச்சு மீண்டும் தொடர்ந்தது.



அவன் சற்று நீண்ட நேரம் பேசினான்.

ஊருக்குள் இருக்கும் நடைமுறைகளைப் பற்றிப் பேசினான்.

அதனால் பாதிப்புக்குட்பட்ட மக்களைப் பற்றிப் பேசினான்.

தனது பேச்சு முடிவில் தன்னுடன் வந்த ஊருக்குப் புதிதான மனிதரை 'கிட்டிணண்ணன்' என்று அறிமுகப் படுத்தி வைத்து இது பற்றியும், பொதுவான விவகாரங்கள் பற்றியும் அவர் பேசும் பேச்சைக் கேட்கும்படி கூறிவிட்டுப் பேச்சை முடித்துக் கொண்டான்.

பின்பு கிட்டிணண்ணர் பேசினார்.

கூட்டம் முடிய மசிய நிலவு உச்சிக்கு வந்துவிட்டது.

கார்மேகங்கள் வந்து மூடமிட்டு மூடமிட்டுக் கலைந்தன.

## 2

இரண்டு நாள்கள் கழிந்தபோது ஊருக்குள் பலவிதமாக பேச்சுக்கள் அடிபட்டன.

''என்ன காணும், பள்ளர் வேதக் கோயிலுக்குள்ளை கூட்டம் வச்சுச் சங்கம் ஏதோ உண்டாக்கிப் போட்டாங்களாம் கேள்விப்பட்டியளே?''

''ஓமெண்டுதானப்பா கதையள் புகையுது! சிலவேளை இருந்தாலும் இருக்கும்! அவங்களும் இப்ப முந்தியைப் போலை இல்லைக்கண்டியோ! மாவிட்டபுரக் கோயிலைத் திறந்தாப் பிறகு எல்லா இடத்துப் பள்ளரும் இப்பிடித் தான்!''

''அந்த நேரத்திலை மாவிட்டபுரம் திறந்துவிடேக்கை நான் நினைச்சனான் ஊருக்கை உதுகளும் எக்கணம் வருமெண்டு! வந்திட்டுது பாத்தியளே?''

''ஏனப்பா சும்மா பயந்து சாகிறியள்? இப்ப என்ன வந்திட்டுது? அவங்கள் சங்கம் வைச்சிட்டாங்களெண்டால் இப்ப என்ன? உங்கடை வீடு வளிய பூருறாங்களே? ஏன் உப்ப எங்கடை பொடியளாச் சேந்து ஏதோ ஏதோ பேருகள் ளை சங்கம் வைச்சுக் கூடிக் கீடிக் கதைக்கிறாங்கள். அது போலை அவங்களும் வைக்கிறாங்களாக்கும்!''

இளைய தம்பியரின் கல்லுக் கிறேசருக்குள் இருந்து, கிறேசர் வேலை முடிந்து இருட்டி விட்டதன் மேல், இளைய தம்பியரும், அருணாசலத்தாரும், இராசரத்தினத்தாரும், சுப்பையா வாத்தியாரும் பேசிக் கொண்டிருந்தனர்.

சுப்பையா வாத்தியார் கடைசியில் பேசியதன் மேல் அதற்குப் பதில் சொல்வது மற்றவர்களுக்குக் கஷ்டமாகி விட்டதனால் சற்று வேளை ஓய்வாக இருந்தது.

பட்டப் பகல் போல எரிந்து கொண்டிருந்த இருநூறு கன்றில் பவர் பல்பு திடீரென்று அணைந்துவிட்டு மறுகணம் எரியத் தொடங்கியது. சொல்லி வைத்தாற் போன்று தெற்குப் புறத்தே இருந்து பல்லி ஒன்று சொல்லியது. சுடலைக் குருவி ஒன்று அவலக்குரல் வைத்துக் கொண்டு கிறேசர் மண்டபத்துக்கு மேலால் ஊடுருவிப் பறந்து சென்றது.

''து! சனியன்!'' என்று அருணாசலத்தார் வெளியே காறித் துப்பினார்.

''மைமல் பொழுதுக்கை தெற்கே பல்லியுஞ்சொல்லுது, சுடலைக் குருவியும் வடக்கே பறக்குது! போதாக் குறைக்கு உந்தக் கதையை எடுத்தோண்ணை அக்கினி தேவதையும் துக்குறி காட்டுது. உதுகள் அவளவு நல்லாயில்லை! பள்ளர்



ஊருக்கை நாசத்தைக் கொண்டு வரப் போறாங்கள் போலைதான் கிடக்கு'' இப்படி அருணாசலத்தார் வழமையான தனது சுபசகுன நம்பிக்கையை முதன்மைப் படுத்தினார்.

''என்ன காணும், எல்லாரும் பள்ளருக்குப் பயந்து சீவனை விடுகிறியள்? அவர் ஒருதர் ஏங்குறார், இவர் ஒருதர் பல்லிச் சாத்திரம் பாக்கிறார்! அவங்கள் சங்கம் வைச்சால் வைக்கட்டுக்கன்! சும்மா நான் கதையைத் துவக்கிவிட இப்ப எல்லாரும் அதை வைச்சுக்கொண்டு கூத்தாடுறியள்! என்னைப் பயப்பிடுத்தவும் பாக்கிறியள் என்ன? இந்தப் புன்னாலைக் கட்டுவன் இளைய தம்பியை ஒருதனும் ஒண்டும் புடுங்கேலாது! முப்பது பள்ளருக்கு மேலை என்னெட்டை வேலை செய்யுறாங்கள் கிறசரிலை. என்ரை தோட்டத் துறவுகளுக்கை குமரியளுங் கிழவியளுமா இருவது பேர் மட்டிலை வேலை செய்து வாறாளவை! இத்தைவரையிலை ஒரு மூச்சு! மூச்சு விட்டாக் கொண்டெல்லோ போடுவன்! என்ரை குணம் அவங்களுக்கும் அவளவைக்குந் தெரியும்!''

இளைய தம்பி மூச்சைப் பிடித்துக் கொண்டு பேசி முடித்துவிட்டார்.

இளைய தம்பியரின் பேச்சு சுப்பையா வாத்தியாரை உள்மனதுள் சிரிக்க வைத்துவிட்டது. 'இவரும் தனக்குள்ளை பெரும் எண்ணம்!'' இப்படி அவர் மனது உள் குரல் வைத்தது. அதனால்தான் அவர் சிரித்தார்.

சற்று வேளை அமைதி நிலவியது.

''என்ன இளைய தம்பியரின்ரை கதைக்குப் பிறகு ஒருதரும் வாய் திறக்கிறியளில்லை!''

இப்படிச் சுப்பையா வாத்தியாரே பேசினார்.

''இவர் சொல்லுற கதையைப் பாத்தா நாங்கள் எல்லாரும் பள்ளருக்கு பயப்பிடுகிறதாயும், தனக்குப் பள்ளரெல்லாம் பீச்சல் பயம் எண்டுயெல்லோ தெரியுது.''

இப்படி இராசரத்தினத்தார் தனது வாயைத் திறந்தார்.

''ஓமோம் இளையதம்பியர் சொல்லுறது மெத்தச் சரிதானை! ஊரிலை இருக்கிற வால் ஒடியல் தின்னிற நயினார்மார் எல்லாம் பள்ளன் நளவனைப் பேர் சொல்லிக் கூப்பிடத துவங்கிபிட்டினம், இண்டை வரையிலை ஆரெண்டாலும் நளவன் பள்ளனை அந்தாள் பேர் சொல்லிக் கூப்பிட்டதை நீங்கள் ஒருக்காக் கண்டதோண்டு சொல்லுங்கோ பாப்பம்! பள்ளரை எல்லாம் சின்னப் பள்ளன், பெரிய பள்ளன் எண்டு கூப்பிடும். இல்லாட்டி கறுவல், கட்டையன் எண்டு கூப்பிடும். ஏன் பள்ளியளைத்தன்னும் பொண்டுகள் எண்டதுக்காகவும், குறுக்குக் கட்டுகளோடை குலுக்கி நடந்து வாறாளவை எண்டதுக்காகவெண்டாலும், எப்பேண்டலும் பேர் சொல்லிக் கூப்பிட்டிருக்குமோ? பெரிய பள்ளி, சின்னப் பள்ளியெண்டு; இல்லாட்டி பெரிய கறுப்பி, சின்னக் கறுப்பி எண்டு கூப்பிடும், அதுதான் அந்தாள் நெஞ்சை நிமித்திக் கொண்டு சொல்லுது! ஆமான வெள்ளாளர் எண்டிருக்கிறவை ஆருக்கெண்டாலும் இப்பிடித் துணிவு வருமே?''

சுப்பையா வாத்தியாரின் இந்தப் பேச்சின் பிற்பகுதி தனக்குக் குறி வைத்துத்தான் சொல்லப்பட்டதென்பது இளைய தம்பியருக்கு இலேசாகப் புரிந்துவிட்டது.

''என்ன வாத்தி என்னையும் சாடையாக் கடிக்குது போலை கிடக்கு! ஆமான வெள்ளாளர் எண்டு கருகல் விடுகுது! இல்லை வாத்தியை நான் கேட்கிறன்; தெரியாமல் கேட்கிறன்; இந்தப் புன்னாலைக்கட்டுவனுக்கை ஆமான வெள்ளாளன் எண்டு ஆரிருக்கினம் சொல்லட்டுக்குப் பாப்பம்! நான் ஒவ்வொண்டாச் சொல்லுறன். ஏன் ராசரெட்டினத்தார் உம்மைத்தான் கேக்கிறன் காணும்; உங்கடை பரம்பரை நீர்வேலிக் கேளம்பி பகுதியிலை கலக்கேல்லையோ கேட்கிறன்; ஏன் அருணாசலத்தாரைக் கேட்கிறன். அவையின்ரை அடிகொடியிலை சுளிபுரத்துத் தவசிப் பரம்பரை கலக்கேல்லை எண்டு சொல்லெலட்டுக்குப் பாப்பம்! ஏன் வாத்தியார்; உம்மையுந்தான் கேட்கிறன்; உங்கடை பகுதி கல்வயல் கல்கொத்திப் பகுதியிலை சம்மந்தம் கலக்கேல்லையோ சொல்லும் பாப்பம்? தானத்தார் பகுதியோடையும், தனக்காற பகுதியோடையும் ச்ம்மந்தங் கலக்காதவையை மருந்துக்கும் எடுக்கேலுமோ; எல்லாரும் சொல்லுங்கோ பாப்பம்!''



இளைய தம்பியர் சற்று ஆவேசமாகவே பேசினார்.

''அது சரியப்பா; நான் சும்மா கதைக்குக் கதைச்ச கதையைத் தூக்கி வைச்சுக் கொண்டு ஏன் பெரிசாக்கிறீர்? நான் கேக்கிறன், உமக்கேன் இப்படிக் கோபம் வருவான் கேக்கிறன்?''

சுப்பையா வாத்தியார் சற்று அருத்தியே கேள்விகளாகக் கேட்டார்.

''சும்மா விடுங்கோப்பா வீண் கதையளை! எதிலையோ துவக்கி எதுக்கோ கொண்டு வாறியள், எனக்கு இப்ப ஒண்டு நல்லாத் தெரியுது; பல்பு தூந்ததும் சுடலைக் குருவி தெற்கிலைக் கத்திக்கொண்டோடினதும்? தெற்கிலை பல்லி அறைஞ்சதும் அருணாசலத்தார் சொன்ன மாதிரி துக்குறியள் எண்டு! உடனடியாகவே உள்ளுக்குச் சிறிசு பெரிசு பேசிச் சண்டை பிடிக்கத் துடங்கிவிட்டியள். துக்குறி காட்டினதின்படி இனிப் பள்ளருக்கு வெற்றிதான் எண்டதும் நல்லாத் தெரியுது!''

இராஜரத்தினத்தார் இந்தத் தந்திரத்தைப் பாவித்து எல்லேரரையும் ஒருநிலைப் படுத்த முயன்றார்.

''இஞ்சை பார் இந்தாளின்ரை பேய்க் கதையை? பள்ளராவது வெல்லுறதாவது! எங்களுக்கை நாங்கள் சண்டை பிடிப்பம். தருணம் வந்திட்டா எங்கடை சண்டை நிக்க மாட்டுதோ கேக்கிறன்! ஏன் கனக்க வேண்டாம்! உந்த மாவிட்டபுரச் சங்கதியள்ளை கோவியப் பொடியன் எங்களோடை எல்லாம் சேந்து நிக்கேல்லையே? அவங்கள் சேந்து நிண்டதினாலைதான் அந்தப் பிரச்சனை துவங்கி இரண்டு மூண்டு வரிசமெண்டாலும் நிண்டு பிடிச்சம்! இல்லாட்டி தொடக்கத்திலேயே நாணைய சீலட்பட்டிருப்பம்! இல்லையோ சொல்லுங்கோ பாப்பம்?''

இளைய தம்பியரின் இந்தப் பேச்சு சுப்பையா வாத்தியாரை மறுபடியும் மனதுக்குள் சிரிக்க வைத்தது. ''இஞ்சை பார் இந்த முழுக் கோவியன் முக்கால் கோவியரைப் பார்த்துக் கோவியர் எண்டு சொல்லுறதை?'' இப்படி அவரின் உள் மனதுக்குள் ஓசை ஒன்று கேட்டது. மறுபடியும் மறுபடியும் கேட்டது.

நேரம் ஒன்பதுக்கு மேல் இருக்கும்.

கிறேசருக்கு மருவியது போலிருந்த இளைய தம்பியரின் வீட்டில் உட்புறமிருந்து ரேடியோச் செய்திக்கான வாத்திய ஓசை முடிந்து சொன்ன செய்தி காற்றில் இலேசாகக் கலந்து வந்தது.

சோளகப் பெருங் காற்றொன்று குளிரோடு சுழன்று வந்தது. அந்தக் காற்றோடு பறந்து வந்த கிறேசர் புழுதி கூரையின் தகரங்களில் உரசிச் சென்று ஓசைகேட்டுக் கொண்டிருந்தது. போதாதென்று பக்கத் தகர அடைப்புகளிலும் அடித்துக் கிலுகிலுத்தது.

அந்தக் கிலுகிலுப்போடு சேர்ந்து கொண்டாற் போல வானத்தில இடி இடித்து மின்னியது.



''கடைச் சோளகம், மழை வந்தாவிடாது'' என்று கூறிக்கொண்டே சுப்பையா வாத்தியார் எழுந்தார்; எல்லோரும் எழுந்து விட்டனர்.

## 3

பல பலவென்று விடிவதற்கிடையில் கிறேசர் வேலை தொடங்கிவிட வேண்டும். தவறினால் இளையதம்பியருக்குக் கெட்ட கோபம்!

வழக்கப்படி எல்லோரும் நேரத்தோடு வந்து சேர இளைய தம்பியரின் கிறேசர் கங்காணி சண்முகம் வந்தவர்களுக்கு வேலைகளைப் பகிர்ந்து கொடுக்கத் தொடங்கி விட்டான்.

பெருங்கற்களை கிறேசர் மேடைக்கருகே இட்டுவர ஆறு பேர், அவைகளை கிறேசர் மேடை ஏற்ற நான்கு பேர், கல்லுக் குவியலடியிலிருந்து முறைப்படி கண்ட கல்லுகளை இனங்காண மூன்று பேர், கிறேசர் மிசினை இயக்குவதற்கான முயற்சியில் ஒருவன், இப்படியாக சண்முகத்தால் பகிர்ந்து கொடுக்கப்பட்டபடி எல்லோரும் இயங்கத் தொடங்கி விட்டனர்.

முதலாளி இளையதம்பியர் சரியாக எட்டரை மணிக்குத்தான் வருவார். அவர் வருவதற்கிடையில் ஒரு தடவை மூச்சாக வேலை செய்த களைப்பில் எல்லோர் உடம்புகளும் வியர்வையால் நனைந்திருக்க வேண்டும். அப்போதுதான் அவருடைய மனம் ஒருவாறாகக் குளிர்மை அடையும்.

மேடையில் ஏற்றப்பட்ட கற்கள் 'ஜோ'வுக்குள் இறங்க, தனது அசுரக் குரலை மேலுயர்த்திக் கொண்டே கிறேசர் இயந்திரம் செயல்படத் தொடங்கிவிட்டது.

''ஒரு இஞ்சிக் கனம், முக்கால் இஞ்சி, ஐந்து நூல், அரை இஞ்சி, மூன்று நூல், பொளி தூள்,'' இப்படிக் கிறேசர் சுழன்று கற்களை இனங்கண்டு கக்கத் தொடங்கி விட்டது.

இன்று வெள்ளிக்கிழமை! இளைய தம்பியருக்கு விரத நாள்! அதுவும் மாதத்து முதல் வெள்ளி என்றால் அவர் எல்லாவற்றிலுமே விலக்கு. முதல் நாள் மாலையிலிருந்தே ''மச்சம், மாமிசம், தண்ணி, வெண்ணி, இல்லற சுகம் உட்படச் சகலதிலுமே பரிபூரணமான விலக்கு நாள் மாதத்து முதல் வெள்ளிதான். இந்த முதல் வெள்ளி மனைவியானவளின் ஒத்துழையாமையினால் அசிங்கப்பட்டு விடக்கூடாது என்பதன் முன்னெச்சரிக்கையாக மனைவி விசாலாச்சி அம்மாவையும் மாதத்து முதல் வெள்ளி விரதகாரியாகவே பழக்கி எடுத்துவிட்டார்.

விடியப்புறம் ஐந்து மணிக்கெல்லாம் விசாலாச்சி அம்மா சகிதமாக சுண்ணாகத்து ஐயனார் கோவிலுக்கு உதயப் பூசை கட்டுவித்து, வெள்ளை வேட்டி, வெள்ளைத் துண்டு கட்டி கழுத்தில் அச்சரக் கூட்டுச் சங்கிலி தொங்க, உடம்பையெல்லாம் சந்தனக் குழம்பாலும், திருநீற்றுப் பூச்சாலும் அபிஷேகம் செய்து ஆசார சீலராக அவர் ஐயனாரை வலம் வர, விசாலாச்சி அம்மாள் அவரின் அடியை அழித்து கொடிக் கம்பத்தடிக்கு வந்து அரோகராச் சொல்லவும், ஐயர் நெய்வேத்தியப் பஞ்சாமிர்தத் தீர்த்தத்தைக் கையில் வார்க்கவும் நேரம் சரியாக இருக்கும். அப்புறம் இளையதம்பியர் தம்பதியரை அவர்களின் கார் ஏற்றி வந்து வீட்டுக்குச் சேர்க்க மணி சரியாக எட்டேகால் ஆகிவிடும். வீட்டிலிருந்து அவர் வேலைத் தலத்துக்கு வந்து சேரும் ஐம்பது யார் தூரத்தையும் தாண்டும் நேரத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால் அது எட்டரைக்கு மேல் ஒரு நிமிடமும் பிந்தாமல்தான் இருக்கும்.



திருக்கோலத்துடன் இளைய தம்பியரை அந்த வெள்ளிக்கிழமைகளிலதான் வேலைத்தலத்தில் காணலாம். மற்றும் வேளைகளிலெல்லாம் அகன்ற பச்சை நிற மட்டக் கரை போட்ட சேலம் நூல் வெள்ளை வேட்டி, அரைக் கையுடன், வட்டக் கழுத்துள்ள அதிகம் கீழிறங்காமல் நாரியின் கீழ் விளிம்புவரை மட்டும் இறங்கிய வெள்ளை நேசனல், அதன் மேல் அநாயாசமாகத் தூங்கும் மட்டக் கரைச் சால்வை ஆகியவற்றுடன்தான் அவரைக் காணலாம். யாழ்ப்பாணத்தில் மிகவும் பிரபலமான மாதனையில் ஆசாரிமாரின் உரல் போன்ற ஒருவகை அமைப்பு அவர் உடல். முகத்தில் இடக்காதடியில் இருந்து வலக் காது வரை நாடா பிடித்துப் பார்த்தால் பதினெட்டு அங்குலத்திற்கு மேல் வரக்கூடிய முக விஸ்தீரணம்; முக்கி முக்கி அளந்தாலும் கழுத்தின் நீளம் இரண்டு அங்குலத்திற்கு மேல் தேறாது.

விசாலாச்சி அம்மாள் அதிகம் உயரமான பெண் அல்ல. பொதுவில் கட்டைச்சி என்றே கூறலாம். அவளை விட இவர் உயரம் ஓரங்குலம் வரையிலாவது கட்டையாகத்தான் இருக்கும். விசாலாச்சி அம்மாள் கறுப்பி அல்ல. ''நல்லெண்ணைக் கறுப்பி'' என்று வேண்டுமானால் சொல்லலாம். இவரை அவளோடு ஒப்பிடும் போது ''கழுவின நெருப்புத் தணல் போல'' என்று கூறிவிடலாம்.

விசாலாச்சி அம்மாள் ஒல்லியானவள், மொத்தமானவள் என்றோ எடுத்த எடுப்பில் சொல்லிவிட முடியாது. ஆனால் இவர் பார்வைக்கு அம்மாளைவிட மொத்தத்தில் சரி ஒரு மடங்கு அதிகமானவர் என்று பட்டென்று கூறிவிடலாம்.

விசாலாச்சி அம்மாளின் குரல் தடிப்பானது என்று சொல்லிவிடலாம். ஆனால் இவரின் குரலோடு ஒப்பிடும் போது அவள் குரலில் 'குயில்' என்றுதான் சொல்ல வரும்.

விசாலாச்சி அம்மாள் நீண்ட கூந்தல் உடையவள் என்று சொல்லிவிட முடியாது. ஆனால் இவரின் முள்ளம் பன்றி முடியோடு ஒப்பிடும்போது அவள் நிச்சயமாகக் கூந்தல் அழகிதான்!

இளைய தம்பியர் கிறேசருக்கு வந்து சேர்ந்தார்.

"என்ன சண்முகம், சில பள்ளர் வேலைக்கு வரேல்லைப் போலை கிடக்கு?" என்று கேட்டுக்கொண்டே அவர் வந்தார். வேலைத் தளத்திற்கு வருகை தரும்போது முதல் வார்த்தையிலேயே "பள்ளர்" என்ற பிரயோகத்தைக் கலக்காவிட்டால் அவருக்கு மனது நிறைவதில்லை.

"எல்லாரும் வந்திட்டாங்கள்; முருகன் இண்டைக்கு பெண்டிலின்ரை துடக்குக் கழிவு; வரமாட்டான் எண்டு சொல்லிப் போட்டுப் போனவன். இண்டைக்கு அவன் வரான்!" என்று கங்காணி சண்முகம் விளங்கப் படுத்தும் தோறணையில் சொன்னான்.

"ஓமோம் இண்டைக்குத் துடக்குக் கழிவெண்டால் அவன் பின்னை வருவானே? நாளைக்கும் அவன் வரான்; நீ இருந்து பார்! இண்டைய ராவு உடம்பு அலுப்புத் தீர வேண்டாமே?" என்று இளைய தம்பியர் வாயில் ரசம் ஊறக் கூறினார். அத்துடன் அவர் நிறுத்திக் கொள்ள வில்லை. "அவளும் ஒரு மாதமாகக் கெடுவிலை கிடக்கிறவள் இவனை விடுவாளே?" என்று முந்திய தனது நக்கலுக்கு மேலும் மெருகு வைத்தார்.

அவருடைய இந்த நக்கலுக்குச் சண்முகம் மட்டுந்தான் பெரிதாகச் சிரித்தான்! அவன் அப்படித்தான் சிரித்திருக்க வேண்டும்! இல்லாவிட்டால் ஐயாவுக்கு மனதுக்குள் ஒரு மாதிரியாகப் பட்டாலும் படும்!

ஐயா அலுவல் அறைக்குப் போய்விட்டார். போனதும் போகாததுமாக "சண்முகம்! உவன் கட்டையன் பள்ளனை இஞ்சை வரச் சொல்லு!" என்று குரல் கொடுத்தார்.



கட்டையன் அலுவல் அறை வாசல் பக்கம் வந்து, கொடுக்குக் கட்டைத் தளர்த்தி விட்டுக் கொண்டு ஐயாவின் பேச்சுக்காகக் காத்திருந்தான்.

"இஞ்சேரெடா கட்டையன், உன்னோடை கதைக்க வேணும்; கிறேசர் சத்தத்துக்கை ஒண்டும் கேளாது; இப்பிடிக் கிட்டவா!"

கட்டையன் தளர்ந்த கொடுக்கை முற்றாகவே தளர்த்தி, அரையில் இறுகக் கட்டியிருந்த நலமுட்டுத் துண்டையும் அவிழ்த்துக் கையில் பிடித்துக் கொண்டே அலுவல் அறை உள்பக்கத் தகர அடைப்போடு சார்ந்து நின்றான்.

"கட்டையன், என்னெட்டை உள்ளதைச் சொல்லிப் போடு! நான் எல்லாங் கேள்விப்பட்டனான்! முந்த நாள் இராப்போலை உன்ரை வீட்டுக்குப் பக்கத்து கோயில் விறாந்தையிலை கூட்டம் ஒண்டு வைச்சுப் பேசினியளாம்; என்னடா பேசினீங்கள்?"

இப்படி அவர் கேட்டுவிட்டுச் சிறிது நேரம் அவன் முகத்தையே உற்றுப் பார்த்தபடி இருந்தார்.

கட்டையனுக்கு ஒன்றும் பேச வரவில்லை. அவன் முகமெல்லாம் வியர்த்துக் கொட்டியது. கைத்துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டிருந்தான்.

"கட்டையன், பேந்து என்னெட்டைப் பொய் சொல்லிப் போட்டு வாங்கிக் கட்டாதை! சொல்லிப் போட்டன் கண்டியோ!"

இளைய தம்பியார்தான் மீண்டும் பேசினார்.

"நம்மாணை ஆக்கும்! நான் பிரளி பேசமாட்டனாக்கும்! நம்மாணை எனக்கு ஒண்டுந் தெரியாதாக்கும்!

அவங்கள் பொடியள் அதிலை கூடினவங்கள், நான் அதிலை போகேல்லையாக்கும்!...''

கட்டையன் ஒரு மாதிரிப் பேசி முடித்து விட்டான்.

''கட்டையன் எனக்கு விடப்பாக்கிறாய் என்ன? உன்ரை மூத்தவன் வடலிக்காலை ஆக்களைக் கூட்டிக் கொண்டு போகேக்கை கண்டவங்கள் எனக்குச் சொன்னவங்கள்!''

ஐயாவின் இந்தப் பேச்சுக்குக் கட்டையன் வாய் திறக்கவில்லை. இதற்கு மேல் அவருக்கு ஒளிக்க முடியாதென்று அவன் நினைத்துக் கொண்டான்.

## 4

மழைக்காலம் சரியாகத் தொடங்குவதற் கிடையில் வெங்காயம் கிளறிவிட வேண்டும்.

நிலம் வேண்டிய அளவு வலிக்க விடப்பட்டுவிட்டது.

வெங்காயம் கிளறுவதற்குப் பஞ்சாங்கத்தில் நாள் பார்த்தபோது அது சனிக்கிழமையைத்தான் சுட்டி நின்றது.

ஒரு குறிப்பிட்ட நாளைத் தீர்மானித்து விட்டால் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னதாகவே வலித்த வெங்காயப் பாத்திகளுக்குத் தண்ணீர் காட்டிப் பாத்திகளைக் கிண்டுவதற்கான பதத்தில் வைத்திருக்கவேண்டும்- இதன்படிக்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே இளையதம்பியரும் குறிப்பிடக்கூடிய மற்றும் பலரும் எங்கள் நிலங்களைப் பதப்படுத்தி வைத்திருந்தனர்.



சனிக்கிழமை வந்தது.

வழமைப்படி அவரவர் தறைகளுக்குள் அவரவர்களுக்காக நியமிக்கப்பட்ட கூலிகள் நிலந் தெளிவதற்கு முன்பே வந்து சேர்ந்துவிட வேண்டும்.

இளையதம்பியரும், மற்றவர்களும் தங்கள் தங்கள் தறைகளுக்கு வந்து சேர்ந்துவிட்டபோது குறிப்பிடப்பட்ட தறைகளில் அவரவர் கூலிப் பெண்கள் வந்து சேர்ந்து விட்டனர். ஆயினும் அவர்கள் எண்ணிக்கையில் குறைவாகவே இருந்தனர்.

தனது தறையின் கூலிப் பெண்களை இளையதம்பியர் நோட்டமிட்டபோது சற்று வயதான வாடிக்கைக் காரிகள் தவிர்ந்த இளம் பெண்கள்தான் வந்திருந்தனர். வழமையாகப் போகத்துக்குப் போகம் வரும் பதினைந்து பேர்கள் இல்லை. அந்த எண்ணிக்கை எட்டாகக் குறைந்திருந்தது.

நான்கு நாட்களுக்கு முன் கட்டையனிடம் கறந்த வாய்ப் பிறப்பை அந்த எண்ணிக்கைக் குறைவு உண்மைப் படுத்துவது போலவும் இருந்தது. கட்டையனின் வாய்ப் பிறப்பிலிருந்து ஏனைய தறைகளுக்கு இப்படி ஒரு கெதி ஏற்படக்கூடும் என்று நினைத்துக் கொண்டு, ஏனைய தறைக்காரர் மேல் கொண்ட 'காய்ச்சலி'னால் இடையே இருந்த நேரத்தில் வாய் திறவாமல் இருந்த இளையதம்பியருக்கு இப்போது தன் மேலும் இந்தத் தாக்குதல் இடம் பெற்றதை ஊகிப்பால் உணர்ந்தபோது மனது ஒரு மாதிரிப் பரபரத்தது.

''என்னெடி தலைச்சிப் பள்ளி, ஏனெடி மற்றவளவை வரேல்லை? எங்கையெடி அவளவை? ஆக எட்டுப் பள்ளியள்தான் வந்திருக்கிறாளவை! இவளவை கிளறி முடிக்கிறதுக்கிடையிலை தறை வலிச்செல்லையெடி போம்!''

எதையும் அறிந்ததாகக் காட்டிக் கொள்ளாமல் இளையதம்பியர், ஆள் சேர்த்துக் கொண்டுவரும் தலைச்சி யாகிய பூதியைப் பார்த்துக் கேட்டார்.

''ஓமாக்கும் அவளவை ஒரு வியளத்தை நயினாரெட் டைக் கேட்டு முடிவெடுத்துப் போட்டுத்தான் வரவேணு மெண்ணிறாளவை! அதுதானாக்கும்.........''

பூதி இழுத்தாற்போலப் பேசினாள்.

''என்னடி அது? பள்ளியள் என்னெட்டை வியளங் கேட்டுப் போட்டுத்தான் வருவம் எண்ணிறாளவையோ? ஓகோ அப்பிடியோ சங்கதி? என்ன வியளமெடி கேக்கப் போறாளவையாம்?''

இளையதம்பியர் பேசி முடித்து மொட்டையாக விட்டார்.

''எடி ஏனெடி பேசாமல் நிக்கிறியள்; நீங்கள் கேளுங் கோவனடி!'' என்று பூதி மற்றப் பெண்களை உசிப்பி னாள்.

''ஊரிலை தமிழரெல்லாம் ஒண்டாச் சேரவேணு மெண்டு எல்லாருங் கதைக்கினம்! அதுதான் இனிமேல் எங்களுக்குச் சிரட்டையிலை தண்ணியும், தட்டுவத்திலை சோறும் தராமல பக்குவமா வேறை ஏதனங்களிலை தரச் சொல்லிக் கேக்கிறம். அதுதான் உதைக் கேட்கிறத்துக் கெண்டு வயது சென்டவையை விட்டுட்டு நாங்கள் வந்த நாங்கள்?''

கூட்டத்திலிருந்து சற்று இளவயதான ஒருத்தி மேல் சட்டைக்கு மேலான குறுக்குக் கட்டை இறுக்கி முடிந்து கொண்டு இப்படிக் கேட்டு முடித்துக் கொண்டாள்.

''கெட்டிக்காறி! அப்பிடித்தான் இருக்க வேணும். தமிழ்ப் பொம்பிளை எண்டால்! அரசியலும் அறிஞ்சு வைச்சிருக்கிறாள்! பூதி! ஆரெடி இவள். வலு கெட்டிக் காறியாக் கிடக்கு!''



யாரும் எதிர்பார்க்காத விதத்தில் இளையதம்பியர் படியிறங்கி இப்படிக் கேட்டுவிட்டார்.

''அது எங்கடை பேத்தை வைத்தியின்ரை பெட்டை யாக்கும்! செல்வி எண்டு பேர். வேதப் பள்ளிக் கூடத்திலை மூண்டாந்தரம் படிச்சவள்!''

இப்படி செல்லியை அறிமுகப்படுத்தினாள் பூதி.

செல்லி தலையை நிமிர்த்திக் கொண்டு நின்றாள்!

இளையதம்பியர் சிறிது நேரம் தலையில் விரலை வைத்து ஆழமாக யோசித்துவிட்டு, ''அவள் பிளாச் சுப்பன்ரை பேத்தி! சுது மலைப் பேத்தை வைத்தியன்ரை மோள்! அதுதானை கேட்டன்! பாவக் கொட்டை போடச் சுரைக் கொடியோ முளைக்குமெண்டு!'' என்று ஒருவகைக் கருகல் பேச்சுப் பேசினார்.

இந்தக் கருகலின் அர்த்தம் பூதிக்கு விளங்கிவிட்டது. ''நயினார் தொடக்கூடாத இடத்தில் தொட்டுப் பேசு கிறார்!'' என்று மனதுக்குள் கறுவிக் கொண்டாள். நயினார் நினைக்க பூதி தொடுகுறிச் சாத்திரம் போல நயினாரின் நினைப்பின் அடிவேரைக் கண்டு விடுவாள். நயினாரை நன்றாகக் கரைத்துக் குடித்தவள் அவள். இளையதம்பியரின் கங்காணிப் பள்ளியாக அவள் கடமை புரியத் தொடங்கி கிட்டத்தட்ட பன்னிரெண்டு ஆண்டுகள் வரை இருக்கும்!

இளையதம்பியர் பூதியை கங்காணிப் பள்ளியாக்கிய கதை ஒரு பெருங்கதை!

நீண்ட பதினைந்து ஆண்டுகளின் குடும்ப வாழ்க்கை யில் ஒரு பிள்ளை பூச்சிகூடக் கிடையாமல் அலுத்துப் போன வேளையில் அவள் கணவன் மரஞ் சறுக்கி விழுந்து இரண்டு வருட காலம் ஒட்டகப்புலத்தானின் புக்கைக் கட்டும், பத்துக்கள் மாறிப் பத்தும், எண்ணெய் மாறி எண்ணெயும் போட்டுக் கொண்டிருந்த காலம்.

இளையதம்பியரின் பனை வளவில்தான் அவன் சேர்வை செய்து வந்தான். அந்தச் சந்தர்ப்பத்தில் இளையதம்பியரின் மனைவி விசாலாச்சி அம்மாள் பிள்ளைப் பெற்று, பிறந்த வீட்டுக்குள்ளேயே பச்சைக்குழந்தையைப் பறிகொடுத்துவிட்டு, அதன் தாக்கத்தால காயாசுவாதம் வந்து நடக்க முடியாமல் நடு வீட்டுக்குள் கிடந்தாள்.

பல வைத்தியர்களும் பார்த்துக் களைத்துப்போக கடைசியாக வந்த சுண்ணாகம் சுப்பிரமணியப் பரியாரியார்— விசாலாச்சி அம்மாள் அவருக்கு இரத்தவழி மைத்துனி முறையானதால் மிகவும் அக்கறையோடு வைத்தியம் பார்க்கத் தொடங்கினார்.

முதன் முதலாகப் பாளை வந்த ஒரு கன்னி ஆண் பனைப் பாளையில் ஒன்றே ஒன்றைச் சேர்வையாக்கி, பொழுது உதயத்திற்கு முன் இறக்கப்பட்ட கள்ளை சுப்பிரமணியத்தார் அனுமானமாக்கி மருந்தொன்றைக் கொடுத்திருந்ததால் இந்த விடியப்புறக் கள்ளிறக்குச் சேவையைப் பொறுப்பேற்றிருந்த பூதியின் கணவன் ஒரு நாள் பொழுது புலர்வதற்கு முன் மரஞ்சறுக்கி விழுந்து இரண்டாண்டுகள் படுக்கையில் கிடந்தமையால் பெரிய மனது பண்ணி இளையதம்பியரே அவள் வீட்டுச் செலவு சித்தாயங்களைச் செய்து வந்தார். இந்தச் செலவு சித்தாயத்துடன் இளையதம்பியருக்கு ஏற்பட்ட தொடர்பு அந்த எலும்பு முறிந்தவன் செத்துப்போன பின்பும் பூதியுடன் இருந்த்த வந்தது.

இளையதம்பியர் ஓரளவு புத்திசாலித்தனமாகவே இந்தத் தொடர்பை நீடித்து வந்தார். அதற்காக ஊருக்குள் உள்ள தோட்டக் கூலிகளுக்குள் அவர் சிருஷ்டித்த இந்தத் தலைச்சி வேலைதான் பூதியுடன் இன்றுவரை நீடிக்கிறது. விரும்பியோ விரும்பாமலோ ஒவ்வொரு த்றைக்காரரும் தங்கள் தங்களுக்கே ஒவ்வொரு தலைச்சியையும் வைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஆகிவிட்டாலும்.



இளையதம்பியரின் தலைச்சிக்கு இருந்த இரகசிய அந்தஸ்து வேறு விதமானது.

அது உடலோடும், உள்ளத்தோடும், தசையோடும் நார், நரம்பு, இரத்தம் ஆகியவைகளோடும் இரண்டறக் கலந்த அந்தஸ்து!

இது ஊருக்கெல்லாம் தெரிந்த சேதி!

பாரிசவாதத்திலிருந்து தேறிவிட்ட விசாலாச்சி அம்மாள் இடையே ஏற்பட்ட இரண்டாண்டு இடைவெளிக் காலத் தேவைக்காக பூதி கணவனுக்குத் தேவைப் பட்டதில் ஆத்திரம் அடையவில்லை. ஆனால் தான் தேறிவிட்டதன் மேல் அவர் தொடர்ந்தும் பள்ளியுடன் வைத்துக் கொண்டிருந்த தொடர்பை இட்டு அருவருப்படைந்தாள்.

பல நாட்கள் அவருடன் சயனிக்க அவள் மறுத்தாள்.

பின்பு படிப்படியாக அவளுடன் சயனிப்பதற்குமுன் அவர் தன் உடம்பைக் குளிப்பாட்ட வேண்டியதாக இருந்தது. அப்படி அப்படி நிபந்தனைகள் வைத்து வைத்து, தளர்ந்து தளர்ந்து கடைசியில் அது இயல்பு நிலைக்கு வந்து விட்டது. ஆனால் அந்தந்த மாதத்தில் வரும் முதல் வெள்ளியை கணவன் பூதியுடன் சேர்ந்து களங்கப்படுத்தாமல் பாதுகாப்பாக இருப்பதில் அவளுக்கு மிகவும் அக்கறை!

## 5

தோட்டத்தறைக்குள்ளிருந்து இளையதம்பியர் கிறேசரடிக்கு வந்த கையோடு உள்ளூர்த் தறைக்காறர் சேர்ந்து கொண்டு கிறேசருக்குள் நின்றனர். அவர்களுள் இராசரத்தினத்தாரும், அருணாசலத்தாரும் இருந்தனர்.

''என்னவும் இளையதம்பியர், பள்ளர் என்னெட்டை அது செய்யேலுமோ இது செய்யேலுமோ எண்டு அண்டைக்குக் 'கெப்போர்' விட்டீர். இப்ப நீர் மற்றப் பக்கத்துக்குப் போட்டீர்? இது சாயோ சொல்லும் பாப்பம்?'' இப்படி இராசரத்தினத்தாரே முதலில் ஆத்திரத்துடன் பேசினார்.

''ராசரெத்தினத்தார் ஆறுதலாய்ப் பேசும்; ஆத்திரப் படாதையும்! இப்ப என்ன நடந்து போச்சு?''

இளையதம்பியர் வந்தவர்களைச் சாந்தப்படுத்தும் விதத்தில் பேசினார். தோட்டத் தறைகளுக்குள் இப்போது என்ன நடந்ததென்பது அவருக்குத் தெரிந்திருக்கவில்லை.

''என்ன நடந்ததோ, தறையளுக்கை வெங்காயம் கிளறவந்த பள்ளியள் எல்லாந் திரும்பிப் போட்டாளவை! ஆக உங்கடை தறைக்கைதான் கிண்டு நடக்குது! பள்ளியள் எல்லாஞ் சிரட்டையிலை தண்ணியும், தட்டுவத்திலை சோறும் திண்ணமாட்டம்; அப்பிடியெண்டாத்தான் வேலை செய்வம் எண்டாளவை! நாங்கள் எல்லாரும் அப்பிடி ஏலாது எண்டு மறுத்தோண்ணை அவளவை நனைச்ச தறையையும் விட்டிட்டுப் போட்டாளவை! நீர் அவளவை கேட்டதுக்கு ஓமெண்டிட்டீர். அதுதான் அவளவை உம்மடை தறைக்கை கிண்டிறாளவை! அது தான் கேக்க வந்தனாங்கள்!''

இப்படிக் கூட்டத்தில் வந்தவர்களில் ஒருவன் பேசினான்.

''ஓமோம் அவளவை கேட்டதுக்கு நான் ஓமெண்டு சொன்னனான்தான்; இப்ப என்ன பிழை கேக்கிறன்?''

இளையதம்பியர் சற்று அழுத்தமாகக் கேட்டார்.

''ஓமோம் பிழை ஒண்டுமில்லைத்தான்! அவள பூதியெல்லே கேட்டிருப்பாள்! அவர் என்னெண்டு மறுக்கிறது?''



இப்படி ஒரு கருகல் குரல் எழுந்தது.

''இஞ்சை என்னோடை பேய்க்கதை கதைக்கப்படாது கண்டியளோ! பூதி என்ரை கங்காணிப் பள்ளிதான்; அவளோடை நான் படுப்பன், எழும்புவன். அதை ஆர் கேக்கிறது!''

இளையதம்பியரின் அதட்டல் குரல் சற்றுத் தூரம் வரை கேட்டது.

''எடை ஏன்ராப்பா கடிபடுகிறியள்? எப்பன் பொறுங்கோ டாப்பா!'' என்று குரல் கொடுத்துக் கொண்டே சுப்பையா வாத்தியார் வந்து கொண்டிருந் தார்.

சற்றுவேளை அமைதி!

வாத்தியார் வந்து சேர்ந்து விட்டார்.

''உப்ப நீங்கள் என்ன கதைச்சிருப்பியள் எண்டது எனக்கு விளங்குது. பூதிப் பள்ளியின்ரை ருசியிலை இளையதம்பியர் தட்டுவத்தையும், சிரட்டையும் விட்டிட்டு வேறை ஏதனங்கள்ளை பூதிக்கும் மற்றப் பள்ளி யளுக்கும் தாறன் எண்டு சொல்லிப் போட்டார், எண்டு அவரோடை சண்டை பிடிக்கிறியள் எண்டது விளங்குது! அதுக்கேன் எங்களுக்கை சண்டை சச்சரவை! இளைய தம்பியரை விஷயத்தை ஆறுதலாய்க் கேப்பம்! கேட்டுப் போட்டு யோசிப்பம்!''

சுப்பையா வாத்தியார் தனது சாதுரியத்தால் கூட்டத் தாரின் கொதிப்பைச் சிறிது அடக்கிவிட்டார்.

சற்று வேளைக்குள் ஆத்திரத்திற்கு அடிமையாகி இருந்த இளையதம்பியர் இப்போது சற்று நிதானத்துக்கு வந்திருந்தார்.

''வாத்தியார் நான் உண்மையைச் சொல்லுறன் தான் ஏன் ஒழிப்பான்! சுண்ணாகத்தையனாராணை, பூதி!

இதைப்பற்றி ஒண்டுங் கேக்கேல்லை! அவள் பேத்தை வைத்தியின்ரை மோள் தான் கேட்டவள்! ''தமிழரெல் லாம் ஒண்டா நிக்க வேணுமெண்டு எல்லா இடமும் கதை யாக்கிடக்கு, அதுதான் தங்களையும் பிறத்தி காட்டாமல் நடத்தவேணுமெண்டு கேட்டவள்! நான் தெரியாமைக் கேக்கிறன் வாத்தியார், அவள் கேட்டதிலை என்ன பிழை கிடக்கு? போனமுறை எலச்சன் கூட்டத்திலை தமிழரெல் லாம் ஒண்டாச் சேரவேணுமெண்ணிற கட்சிக் கூட்டத் திலை ராசரத்தினத்தார் பேசினனீர்! இஞ்சை வந்திருக் கிறவை எல்லாரும் கை தட்டினவை! அப்ப நான் உது களுக்கு மாறானவனோடைதான் நிண்டனான். தமிழ ரெல்லாம் ஒண்டாகிறது சரிவராதெண்டு சொன்னனான். அதுக்காக என்ரை வீட்டுக் குந்திலை கறுத்த மையாலை எழுதி வைச்சவங்கள் உங்கடை பொடியள்! உப்ப நான் திருந்தியிட்டன். பேத்தை வைத்தியன்ரை மோள் கேட்ட கேள்விக்கு என்னாலை மறுமொழி சொல்லேலாமப் போச்சு! ஐயனாராணைப் பேந்தும் சொல்லுறன்; பூதிக் காக நான் பாக்கேல்லை!''

இளையதம்பியர் தனது வாய்முறைப்பாட்டைச் சொல்லி முடித்து விட்டார்.

இதற்கு மேல் கூட்டத்தவர்களில் யாருக்குமே பேச வரவில்லை. அவர்கள் எல்லோரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு நின்றனர்.

சற்று வேளை ஆயிற்று.

''ஏன்? ஏன் எல்லாரும் பேசாமல் இருக்கிறியள்? பேசிறியளில்லை!'' வாத்தியார்தான் இப்படிக் கேட்டார். ஒரு தடவை அல்ல இரண்டு தடவைகள் கேட்டார்.

''இளையதம்பியர் சொல்லுறதும் சரிதான்! எண்டாலும்...''

இப்படி ஒருவன் இழுத்தான்.



''ஏன் தம்பி இழுக்கிறீர்? சொல்ல வந்ததைச் சொல்லுமன்! இப்ப நாங்கதானே இருக்கிறம்; ஏன் பயப்பிடுறீர் சொல்லுமன்!''

வாத்தியார் அவனைப் பேசச் செய்ய முற்பட்டார்.

''அவள் பேத்தை வைத்தியின்ரை மோள் கேட்ட கேள்வி சரியெண்டாலும் ஊருக்கை இருக்கிற மற்றத் தறைக்காறரோடை கலந்து பேசாமல் இவர் தன்ரை எண்ணத்துக்கு ஓம்படுறது சரியோ எண்டுதான் கேக்க யோசிக்கிறன். இஞ்சை பாருங்கோ; நாங்கள் எல்லாரும் ஒத்தபடியே 'அப்பிடியெண்டால் வெங்காயம் கிண்ட வேண்டாமெண்டு' சொல்லியிருக்கிறம்!''

முன்னையவனே பேசி முடித்தான்.

''என்னை ஒரு சொல்லுக் கேட்டுப் போட்டு அப்பிடிச் சொன்னியளோ; நான் தெரியாமல் கேக்கிறன்?''

இளையதம்பியர் படக்கென ஒரு கேள்வியைக் கேட்டார்.

''நீர் ஒரு தனியாள்; எங்கள் எல்லாரையும் கேக்க வேண்டியனீர்! நீர் எங்களை மேவாமல் எழுந்தமானத் திலை சொல்லிப் போட்டு இப்ப எங்களைக் கேக்கிறீரோ? நீர் புதுப் பணக்காறனெண்டா உம்முக்கை வைச்சுக் கொள்ளும்! எங்களைக் கட்டி அவுக்கப் பாக்கிறீர் என்ன? வெறுங்காலுக்கு வெள்ளி பூட்டின கால் நயினார் எண்டு நினைச்சுப் போடாதையும்!''

இதுவரை பேசாமல் இருந்த மருதப்புச் சுமக்காரன் சற்று ஓங்கிய குரலில் பேசினார்.

இளையதம்பியர் சற்று வெலவெலத்துப் போய் விட்டார். மருதப்பர் இப்படி தன்னைத் தாக்கியும், அதே வேளை தன்னைத் தாழ்த்தியும் பேசுவார் என்று இளைய தம்பியர் எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் அவர் தன்னைச் சுதாகரித்துக் கொண்டுவிட்டார்.

''நான் பள்ளியருக்கு ஓமெண்டு சொல்லிப் போட்டன் எண்டு உங்களுக்கு ஆர் சொன்னது; கேக்கிறன்?

''அதெல்லாம் நான் யோசிக்கிறன், இப்ப நீங்கள் கிளறுங்கோ எண்டுதான் சொல்லிப்போட்டு வந்தனான். நீங்கள் மோட்டுத்தனமா கதைச்சு அவளவையைக் கலைச்சுதுக்கு நான்பாடே? யோசிக்கிறன் எண்டு நான் சொன்னது உங்களோடை யோசிக்கத்தான்! அது பிழையோ சொல்லுங்கோ பாப்பம்?''

இளைய தம்பியர் மறுபடியும் கேள்வி ஒன்றைக் கேட்டு நிறுத்திக்கொண்டார்.

## 6

தான் மிகவும் பிழையான விதத்தில் இளைய தம்பியரைப் பேசி விட்டதான உணர்வு மருதப்பனாருக்கு வர நேரம் அதிகம் ஆகவில்லை.

மருதப்பருக்கும் இளைய தம்பியருக்கும் இருந்த இறுக்கம் ஊருக்கெல்லாம் பிரசித்தமானது.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்......சுண்ணாகம் பெரு மின்சார நிலையத்திற்குப் பக்கமா இருந்த கலடு, மருதப்பருக்குத்தான் இருந்தது. அந்தப் பிரதேசத்திலேயே நிலத்தரகுகாரன் என்றால் அது மருதப்பர்தான். அப்போது இளைய தம்பியர் மருதப்பருக்குச் சேவகம் செய்து பிழைப்பு நடத்தினார். மருதப்பருக்கிருந்த கண்ணுக்கெட்டாத தூரத்திலான கலட்டுப் பூமிகளில் கல்லுக கிளறுவித்து, அதை விற்றேதான் இளைய தம்பியர் சீவியம் நடத்தினார். ''கல்லுத் தறையளும் பதப்படட்டுக்கன்'' என்ற சிந்தனையில் பெயருக்கு மிகக் குறைந்த காசுக்கே கல்லுப் பூமிகளை இளையவனாக அன்று இருந்த இளைய தம்பியருக்கு மருதப்பர் விட்டிருந்தார்.



இடையே ஓய்ந்த போதெல்லாம் இளைய தம்பியர் மருதப்பர் வீட்டுக்குப் போகவேண்டும்; வீட்டுக்கு வேண்டிய கறிபுளிகளை வாங்கிக் கொடுக்க வேண்டும்; ''இளையவன்'' என்று மருதப்பர் அழைத்த போதெல்லாம் அறையில் சால்வையைக் கழற்றிக் கெண்டைக் கையில் போட்டுக் கொண்டு பணிந்து நிற்க வேண்டும்! இவை வரையறுக்கப்பட்ட சட்டமில்லை; ஆயினும் நடைமுறை அப்படி ஆகிவிட்டது.

கட்டுவன் சந்திக்குப் பக்கமாக மருதப்பர் தனது முதல் தாரத்து மூத்த மகளுக்குக் கட்டித் தருவதாக ஏற்கெனவே ஒப்புக் கொண்டிருந்த வீடு கட்ட ஆரம்பித்த போது அத்திவாரத்திலிருந்து முடிவு வரை அதற்கான கல்லுகளை இளையதம்பியரே கொடுத்து வந்தார். மருதப்பர் இளையதம்பியருக்குக் கொடுத்த பணத்தை ''எல்லாம் வைச்சுக்கொள்ளுங்கோ கடைசியிலை கணக்குப் பாப்பம்!'' என்று இளையதம்பியர் சாட்டுச் சொல்லி விட்டார்.

வீட்டு வேலைகள் முடிந்து விட்டன.

வீடு குடிபுகுதல் வந்தது!

உறவினர்களின் சபை சந்தி நடந்தபோது உள் பக்கத் தட்டுப் பந்தலில் இளையதம்பியருக்கும், மரவேலை செய்த ஆசாரி, இரும்பு வேலை செய்தவன், உட்பட நான்கைந்து பேர்களுக்குப் பிரத்தியேகமான சபை ஒன்று நடந்தது.

''இளையவன்ரை கல்லுப் பிசகுகள் தீத்தாச்சோ? சரியில்லைக் கணக்கைப் பாத்துக் குடுத்துப் போடுங்கோ; பேந்து ஊரிலை வேறை விதமாக கதையள் வந்தாலும் வரும்.''

இப்படி மருதப்பரின் இரண்டாந்தாரமான கனகம்மா மருதப்பரிடம் சொல்னாள்.

''எடி விசரி, மெல்லமாக் கதையெடி! ஆற்றையுங் காதிலை விழுந்தா என்னென்டெடி நினைப்பினம்!'' என்று சினந்து கொண்டே படுக்கைக்குப் போய்விட்டார் மருதப்பர்.

அன்றிரவெல்லாம் அவருக்கு நித்திரை வரவில்லை. ''ஊரிலை வேறை விதமாக் கதைப்பினம்!'' என்ற மனைவியின் வாக்கியம் அவரை நித்திரை செய்ய விடவில்லை.

''இளையவன், உன்ரை கணக்கைச் சொல்லு, மனிசியும் பேசினாள் குடுக்கச் சொல்லி, கணக்கைச் சொல்லிப் போட்டு பின்னேரம் போலை வந்து வாங்கிக் கொண்டு போ!'' என்று மறு நாட் காலையிலேயே இளையதம்பியரைத் தேடி கல்லுக் கலட்டிக்கே சென்று சொல்லி விட்டார் மருதப்பர். இப்போதுதான் அவருக்கு மனம் நிம்மதி அடைந்தது.

சாயந்தரம்போல இளையதம்பியர் மருதப்பர் வீட்டுக்கு வந்தார்.

''என்ன இளையவி கணக்குக் கொண்டு வந்தியே?'' என்றார் மருதப்பர்.

''இல்லைப் பாருங்கோ, நான் ஒரு கிறேசர் எடுக்கலாமெண்டு யோசிக்கிறன்! அதுதான்......''

இளையதம்பியர் இழுத்தார்.

''நல்ல யோசினை இளையவி, எங்கையெண்டாலும் பாத்து வைச்சிருக்கிறியே? என்ன விலை வருமெண்டு தெரியுமே?'' என்ற மருதப்பரின் கேள்விக்கு ''பாத்து வைச்சிருக்கிறேன், ஒரு எட்டு மட்டிலை சொல்லுறாங்கள். ஏழுக்கு எடுக்கலாமெண்டு நினைக்கிறேன்'' என்று இளையதம்பியர் பதில் சொன்னார்.

''அப்போதை மேசன் வந்தவன்; கல்லுக் கணக்குக் கிட்டத்தட்ட எவ்வளவு வருமெண்டு கேட்டனான்; ஐஞ்சு மட்டிலை வருமெண்டு சொன்னவன்!''



இப்படி உள்ளே இருந்து அம்மாளின் குரல் கேட்டது.

''இளையவி, மேசன் கல்லுக் கணக்கு ஐஞ்சு மட்டிலை வருமெண்டு சொன்னவனாம்; சரியெடாப்பா கூடிச்சுது குறைஞ்சுது! நான் ஒரு ஐஞ்சுதாறன்; மிச்சத்தைப் போட்டுக் கிறேசரை வேண்டு!''

மருதப்பர் பேசி முடித்துவிட்டார். இளையதம்பியர் வந்து விட்டார்.

''இளையவன்'' என்ற பெயர் மாறி ''இளையவி''யாகி, பின்பு ''கிறேசர் இளையவி''யாகப் பெருத்து அதற்குமப்பால் இளையதம்பியாகவும் ஆகிவிட்டது.

இளையதம்பியர் தன் தணலாக் கட்டை உடம்பை அரைக்கை வட்டக் கழுத்து நைசனலால் மறைக்கத் தொடங்கிவிட்டார்.

''உவன் என்ரை இளையவன் கட்டாக்காலி மாடாய் ஊரிலை மேயத் துவங்கிவிட்டான் தம்பி, அவனை ஒரு கட்டையிலை கட்டி விடுங்கோவன்! தேப்பனும் இல்லாத வன்; தேப்பனுக்குத் தேப்பனா நீங்க தானை செய்ய வேணும்!''

இப்படி இளையதம்பியரின் தாய் கண்ணாத்தைப் பெட்டை மருதப்பரிடம் சொன்ன போதுதான் மருதப்பர் தனக்கிருக்கும் இன்னொரு பொறுப்பையும் உணர்ந்தார். கடைசியில் ஒருநாள் 'விசாலாச்சி' என்ற ஆமான ஒரு கட்டையில் இளையதம்பியரைக் கட்டியும் விட்டார்.

மருதப்பரின் அக்காளின் மகளுக்கு ஒருநாள் கல்யாணம் நடந்தது. புதுத் தம்பதிகளாக இளையதம்பியரும் மனைவியும் வந்திருந்தனர்.

சபை சந்தி நேரம்!

எல்லோரும் சபைக்காக உட்கார்ந்து விட்டனர்.

மருதப்பருக்கு ஒரு யோசனை வந்தது.

இளையதம்பியரைக் கையில் பிடித்தார். இழுத்துச் சென்றார்.

சபையில் இருத்தி விட்டார்.

இளையதம்பியரோ, மற்றவர்களோ இதை எதிர் பார்க்க வில்லை.

மற்றவர்களின் முகங்களில் எள்ளுங்கொள்ளும் வெடித்ததே தவிர யாரும் வாய் திறக்கவில்லை.

இளையதம்பியரைச் சபையில் இழுத்து வந்து இருத் தியவர் மருதப்பர்!

மருதப்பர் ஊரில் செல்வாக்கு மிக்கவர்.

ஊரில் அவர் பேச்சுக்கு மறு பேச்சு இருப்பதில்லை!

அதுவும் அந்த வீட்டுக்கு அவர் அதிகாரியுங்கூட!

தலைப் பந்தியில் இருந்த கட்டாடியைத்தான் எல் லோரும் பார்த்தனர்.

சபையில் யாராவது இருக்கக்கூடாதவர்கள் இருந் தால் கட்டாடிதான் அதை ஆட்சேபிக்க வேண்டும். இது ஊரில் நடைமுறை.

குடிமைக்காரக் கட்டாடியானவனும் வாய் திறக்க வில்லை.

''என்ன குடிமோன் வாய நனைக்கலாமோ?''

இப்படி எங்கோ ஒரு தொங்கலிலிருந்து ஒரு கிழவன் கேட்டான்.

மருதப்பரால் இளையதம்பியரை இழுத்து வந்து சபையில் இருத்தியது அந்தக் கிழவனுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் சந்தர்ப்பத்துக்கொவ்வாத இந்தக் கேள்வியை அவன் கேட்டிருக்க மாட்டான்.

''என்ன குடிமோன் வாய் நனைக்கலாமோ?'' என்ற இந்தக் கேள்வி வழக்கமானது.



இதைத்தான் கிழவன் கேட்டிருக்கிறான்!

குடிமகன் கட்டாடிக்கும் எதுவும் தெரியாது.

அவனுக்கு நிறை தண்ணி!

அந்தத் தண்ணிக்குள்ளும் அவன் கவனமெல்லாம், மாப் பிள்ளை வீட்டுக் கட்டாடியானவன் தன்னுடன் சபையில் இருக்கிறானா என்பதில்தான்.

மாப்பிள்ளை வீட்டான் இவன் பக்கத்தில்தான் இருந் தான்.

பெண்பிள்ளை வீட்டானுக்கு அது போதும்! மற்றப் படி இப்படிக் கேள்வி சம்பிரதாய பூர்வமானதுதான்!

சபையில் இருக்கக் கூடாத இளையதம்பியரைப் பற்றி முன்பின் யாராவது சொல்லி வைத்திருந்தால் தனக் கிருக்கும் கௌரவ அடிமைச் சாசனத்தைப் பிரயோகித்து அவன் இளையதம்பியரைச் சபையை விட்டு எழுப்பி இருப்பான்! அப்படி யாரும் முன்பு சொன்னதாக அவனுக்கு நினைப்பில்லை.

''குடிமோன் வாய் நனைக்கலாமோ?'' என்ற குரலுக்கு ''மெத்தச் சரி; நனைக்கலாம்'' என்ற சம்பிரதாய பூர்வமான குரலை அவன் கொடுத்தான்.

இளையதம்பியர் சபை ஏறிவிட்டார்.

# 7

வாத்தியாருக்கு மருதப்பரின் பேச்சு உள்ளூர மிகவும் பிடித்திருந்தது. ஆனால் மருதப்பரின் பேச்சுக்குப் பின்பு இளையதம்பியர்'' ''எல்லாம் யோசிச்சுச் சொல்லுறன்'' என்று சொல்லிவிட்டு வந்ததாகச் சொன்னதுந்தான் மருதப்பர் பேசிய பேச்சுச் சரியாக இருந்தாலும் இந்த

இடத்திற்குப் பொருத்தமானதல்ல என்று மனதுக்குப் பட்டது.

''சரி சரி, இளையதம்பியர் தான் நிலைமையைச் சமாளிச்சிருக்கிறார்; நீங்கள் அவசரப்பட்டியள் எண்டு தான் எனக்குப் படுகுது. இப்ப நிலைமையளை எல்லாரும் மனம் திறந்து பேசுவம்; பேசி ஒரு முடிவுக்கு வருவம்! இளையதம்பியர் சொல்லிறது மாதிரி தமிழ்ச் சாதியை ஒண்டாகச் சேர்க்க வேணும் எண்டு சொன்னவங்களுகுத் தான் யாழ்ப்பாணத்திலை எல்லாரும் துண்டு போட்டிருக்கிறம்...... துண்டு போட்டும் ஐஞ்சு வரிசம் வருகுது...''

வாத்தியார் தனது பேச்சை முடிப்பதற்கு முன்னமே, ''அது வேறை வாத்தியார்; இது வேறை! இரண்டையும் ஒண்டாச் சேர்த்துக் குழப்பாதையங்கோ!'' இப்படி ஒரு குரல் எழுந்தது.

''ஏன் வாத்தியார், நான் ஒண்டு கேக்கிறன்; ஆரெண்டாலும் ஒரு பள்ளனை, இல்லாட்டி ஒரு பள்ளியை உங்களுக்குத் துண்டு போடிற உரிமை இல்லையெண்டு நாங்கள் ஆரெண்டாலும் சொல்லியிருக்கிறமோ? இல்லாட்டி நாங்கள் துண்டு போடிற பொட்டியுக்கை போட வேண்டாம், புறம்பாய்ப் போடுங்கோ எண்டு சொல்லியிருக்கிறமோ? இல்லாட்டி இன்னாருக்குத்தான் போட வேணும் எண்டு தெண்டிச்சிருக்கிறமோ, சொல்லுங்கோ பாப்பம்!''

இது வேறோர் குரல்.

''இஞ்சை! முழுப் பூசனிக்காயைச் சோத்துக்கை புதைக்கப் பாக்காதையுங்கோ! இந்த முறை எல்லாரும் தமிழுக்குப் போட வேணும், இல்லாட்டி வளவுகளுக் காலை குடி எழுப்பிப் போடவேணுமெண்டு சொல்லேல்லை எண்டு ஆரெண்டாலும் ஒரு ஆள் கையுயத்திச் சொல்லுங்கோ பாப்பம்!''



வாத்தியார் இப்படி ஒரு கேள்வியைப் பொதுவில் கேட்டார்.

''ஓம் சொன்னனாங்கள் தான்! அது தமிழனாப் பிறந்தவன் ஒவ்வொருத்தனும் செய்ய வேண்டிய வேலை! அதுக்காகச் சொன்னனாங்கள் தான்!''

நீண்டநேரமாகப் பேசாமல் இருந்த இராசரத்தினத்தார் இப்படிக் கூறினார்.

''அதுதான் பேத்தை வைத்தியின்ரை செல்லி கேக்கிறாள் · தங்களையும் தமிழராச் சேருங்கோ எண்டு! அதிலை என்ன பிழை?''

படக்கென்று சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு இளையதம்பியர் குறுக்கிட்டார்.

''என்ன ஆள் நெடுக நெடுகப் பேத்தை வயித்தியின்ரை செல்லியைத்தான் தூக்கிப் பிடிச்சுப் பேசுது! காரியம் ஏதோ இருக்குப்பாலை கிடக்கு!'' இப்படி ஒருத்தன் பக்கத்தே நின்றவனின் காதுக்குள் சொல்ல, ''ஓமோம் ஆள் உதிலை புலி; அப்பிடித்தான் இருக்க வேணும்!'' என்று அவனும் இவன் இரகசியத்தை இரகசியமாகவே அங்கீகரித்தான்.

''சரி சரி கதையளை விடுவம்! இப்ப செய்யிறதைப் பற்றி யோசிப்பம்!'' என்று விஷயத்தை நெறிப்படுத்தத் தொடங்கிவிட்டார் வாத்தியார்.

''சரி வாத்தியார், உங்களுக்குத்தான் எல்லா நெளிவு சுழிவுகளும் தெரியும். நீங்கள்தான் ஒரு வழியைச் சொல்லுங்கோவன்!''

இப்படி அருணாசலத்தார் விஷயத்தை மெதுவாக வாத்தியாரின் தலைமேல் சுமத்திவிட்டார்.

வாத்தியார் ஒரு தடவை கூட்டத்தைச் சுதாகரித்துக் கொண்டு, மருதப்பரின் மூஞ்சிக்கு நேராகப் பார்வையை நிறுத்திக் கொண்டார்.

வேப்பமரப் பெருவேரோடு சாவகாசமாகச் சார்ந்திருந்த மருதப்பருக்கு முடிவான ஆலோசனையைச் சொல்வதற்காக சுப்பையா வாத்தியார் தன் அனுமதியைத் தான் கோருகிறார் என்று பட்டென்று புரிந்து விட்டது. அவர் வாத்தியாரைப் பார்த்து தனது சம்மதத்தைத் தெரிவிககும் தோரணையில் தலை அசைத்துவிட்டார்.

''நான் இப்ப சொல்றப்போற யோசினை என்ன வெண்டால், தமிழரெல்லாம் ஒண்டு சேரவேணும் எண்டு நாலு அரசியல் ஞானம் தெரிஞ்ச பெரியவை சொல்லுகினம்! 'உங்களுக்கை எல்லாம் சரியோ' எண்டு சிங்களவனும் கேக்கிறான்; எண்ணுகினம். ஆகையினாலை நாங்கள் கொஞ்சம் விட்டுக் குடுக்க வேணும் பள்ளியள் சிரட்டையும், தட்டுவமும் வேண்டாமெண்டுதானே சொல்லுறாளவை. சிரட்டையை விடுவம்; அலுமினியச் சிமழுகள் தானே மலிவு; ஒவ்வொரு தறைக்காறரும் ஐஞ்சு பத்தெண்டு வாங்கி தைச்சுக் கொண்டா ஐஞ்சாறு வரிசம் செண்டாலும் அவளவைக்காகவே அதுகளை வைச்சுக் கொள்ளலாம். இடைநேரத் தேத்தண்ணியையும் அதிலை குடுத்திடலாம்; மத்தியானந் தட்டுவத்திலை குடுக்கிற சோத்தையும் அலுமினியத்தட்டிலை குடுத்துப் போட்டு பத்திரமா அதுகளையும் வைச்சமெண்டா நாலைஞ்சு வரிசத்துக்குச் சமாளிக்கலாம்! இதுக்கு ஓம்பட்டோண்ணை அவளவையும் சந்தோசத்திலை எப்பன் கூடவும் வேலை செய்வாளவை! அவளவை எங்கடை வீடு வழியவே வந்து தின்னப் போறாளவை! தோட்டத்துக்கை தானே வைச்சுக் குடுக்கப்போறம்!''

வாத்தியார் பேசி முடித்துவிட்டார். தனது பேச்சுக்கு மறுப்பு இருக்காதென்பது அவரின் நினைப்பு!

''அப்ப வாத்தியார் இனி நாங்கள் போய் ''நாங்கள் தோல்வி'' எண்டு பள்ளருக்குச் சொல்லி அவளவையை வரச் சொல்லிக் கேட்டுக் கூட்டியரோணும் எண்டு சொல்லுறியள் போலைகிடக்கு!''



கூட்டத்தில் ஒரு குரல் இப்படிக் கேட்டது.

''ஓமோம் எண்ணிறன்!''

இப்படி ஒரு குரல் முந்திய குரலுக்குப் பக்கராகம் பாடியது.

''ஏன் இப்பிடிச் செய்தா என்ன? நாங்க சிரட்டையிலையுந் தரேல்லைத் தட்டுவத்திலைந் தரேல்லை! உங்கடை உங்கடை வீடுகளிலை போய்த் திண்டுபோட்டு வாருங்கோடி என்டா என்ன?''

இப்படி ஒரு புதுக்குரல்!

''என்னது, அவளவையை வீடுகளிலை போய்த் திண்டிட்டு வரச் சொல்லுறதோ? ஓ...ஓ... மதியந் திருப்பக்குமுன்னம் போனாளவை! பேந்து பொழுது கருகிற நேரத்திலைதான் வருவாளவை! ஆருக்கு நட்டம் எண்டு கேக்கிறன்? உது பிழையான யோசினை; உதை விடுங்கோ.''

இது இன்னொரு குரல்!

''எல்லாத்துக்கும் பொதுவிலை இப்படிச் செய்தாலென்ன? கட்டுவன் சந்திபிலை இருக்கிற கடையள்ளை சொல்லிவிட்டா அவனவை முறை வைச்சு தோட்டத்துக்கை வாழைத் தடல் வைச்சுக் கட்டிக் கொண்டந்து குடுப்பானவை! எங்களுக்கும் கரைச்சலில்லை! குடிக்கிறதுக்கு ஒரு வாளியோடை தண்ணியையும் வைச்சு ஒரு ஏதனத்தையும் குடுத்துவிட்டால் முடிஞ்சுது விஷயம்!''

இது இன்னொரு குரல்.

''உது ஆகவும் பேய் வேலை சந்திக் கடைக்காறங்கள் எங்கடை ஆக்களாக இருந்தாலும், ஒரு சோத்துக்கு ஆறு ரூவாய்க்குக் குறைய எடுக்கப் போறாங்களே? பதினைஞ்சு பள்ளியளை வைச்சு வேலை செய்விக்கிறவைக்கு ஒரு பெரிய தாள் முடியும் மத்தியானச் சாப்பாட்டுக்கு! வீட்டிலை எண்டா ஒரு சோறும், ஒரு சாம்பாரும், ஒரு

பூசனிக்காய்க் குழப்போடையும் விஷயம் முடியும்; முக்கி முக்கிப் பாத்தாலும் தலைக்கு இரண்டு ரூவாய்க்கு மேலை வராது! உப்பிடி எத்தினை நாளைக்குக் கடைச்சோறு குடுக்கிறது கேக்கிறன்?''

இப்படி ஒரு கிழக்குரல்!

''கடைசியாய் வாத்தியார் சொல்லுறதுதான் சரி போலை எனக்குத் தெரியுது! கரைச்சலுந் தீருது; எங்கடை காரியமும் நடக்குது!''

தருணத்தைப் பார்த்து இளையதம்பியர் வாத்தியாரின் பிரேரணையை ஆமோதிக்கும் விதத்தில் பேசிவிட்டார்.

சற்று வேளை யாரும் பேசவில்லை.

''அப்ப வாத்தியார் சொல்லுறபடிதான் செய்வம்!''

மருதப்பரும் வாய் திறந்து தனது சம்மதத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

இளையதம்பியர் தனது கையில் பவுண் சங்கிலி போட்டுக் கட்டியிருந்த பெருவட்டக் கடிகாரத்தைப் பார்த்தார்.

மணி பதினொன்றுக்கு மேலாகிவிட்டது.

வழமைப்படி தோட்டத் தறைக்கு உணவு அனுப்பும் நேரம் சமீபித்து விட்டது.

''இப்ப நான் இன்னுமொண்டு சொல்லுறன்! ஆரும் பள்ளர் பள்ளியளெட்டைப் போகத் தேவையில்லை, இளையதம்பியர் ஆளைவிட்டு எல்லாருக்கும் சொல்லிவிப்பார். இஞ்சை எடுத்த முடிவுப்படி எல்லாரும் செய்து போடவேணும்'' இப்படி வாத்தியார் முடிவுரை கூறிவிட்டார்.

''அதெல்லாம் பூதியைக் கொண்டு அவன் செய்து வைப்பான்!'' என்று கூறிக்கொண்டே மருதப்பர் எழக் கூட்டம் கலைந்துவிட்டது.



# 8

சனிக்கிழமை விடுமுறை நாள் என்பதனால் கிறேசர் செத்துப் போய்க் கிடந்தது.

பேத்தை வைத்தியனின் செல்லி கேட்ட கோரிக்கையைத்தானும், தன் மூலமாக ஊரில் உள்ள கமக்காரர்களும் அங்கீகரித்துவிட்டதைப் பழையவளான பூதிக்கும், இன்று அறிமுகமான செல்லிக்கும் சொல்லி அவர்களை—குறிப்பாகச் செல்லியைச் சந்தோஷப் படுத்த வேண்டும் என்ற அவசரத்தோடு இளையதம்பியர் தோட்டத் தறையை நோக்கி விரைந்தார்.

தோட்டத்தறை 'மனுசமாஞ்சாதி' இல்லாமல் வெறிச் சோடிக் கிடந்தது.

கிளறிய வெங்காயப்பிடிகள், வெயிலுக்குக் கதிர் மடிந்து ஆங்காங்கே கிடந்தன.

''இவளவை எங்கை போட்டாளவை? வெய்யிலுக்குக் களைச்சு நிழலுக்குப் போட்டாளவையாக்கும்!'' என்று மனதுள்ளேயே கேள்வியும் கேட்டுப் பதிலும் சொல்லிக் கொண்டு தெற்குப்புற எல்லையோடுள்ள பனங்கந்தைப் பார்த்தார் அவர். அங்கு யாரும் அவர் கண்களுக்குப் படவில்லை.

சற்றுத் தொலைவுவரை கண்களை வீசினார். அங்கும் அவர்கள் இல்லை.

மணி பன்னிரெண்டுக்கு மேல் வந்துவிட்டது.

பத்துமணிக்கெல்லாம் அனுப்பும் தேநீரும் சிரட்டைகளும் இன்று அனுப்பப்படாதது அவர் நினைவுக்கு வந்தது. ஆனாலும் அது வரப்பிந்தியதால் அவளவை போயிருக்க நியாயம் இல்லை என்றது அவர் மனம்!

''என்னதான் இருந்தாலும் பூதி தனக்கு இப்படி ஒரு வேலையைச் செய்திருக்காள்'' என்பது அவர் அனுமானம்!

எதையும் தீர்மானிக்க முடியாதவராகச் சற்று வேளை உச்சி வெய்யிலுக்குள் நின்றுவிட்டு திரும்பவும் கிறேசர் பக்கமாக பெருவரம்பில் நடந்து கொண்டிருந்தார். வரம்பு தாண்டி வந்தபோது கல்லுக் கங்காணி சண்முகம் தற்செயலாகக் குறுக்கே வந்தான்.

''சண்முகம், ஒருக்காப் பூதி வீட்டை போய், அவள் அங்கை நிண்டால் 'நான் ஒருக்காக் கிறேசருக்கு வந்திட்டுப் போகட்டாம்! உடனே வரட்டாம்!' எண்டு சொல்லிவிடு!''

இப்படி ஒரு வேலையைச் சண்முகத்திற்கு அவர் கொடுப்பது புதிதல்ல.

கிறேசர் விடுமுறை நாளான பல சனிக்கிழமைகளில் மத்தியான நேரத்தில் பூதியை வரும்படி அவர் சொல்ல, சண்முகம் அதைப் பக்குவமாகச் செய்திருக்கிறான். அதனால் அவன் உள்மனதுள் சிரித்துக் கொண்டே பூதியிடம் தூது போக ஒப்புக் கொண்டுவிட்டான்.

பூதியின் குடிசை ஊர்க்கோடியில் ஒதுக்குப்புறமாகத் தன்னந்தனியாகத்தான் இருக்கிறது. அதனால் எந்தப் பயமும் இன்றி சண்முகம் பூதியின் குடிசைக்குப் போய் விட்டான்.

தனது மற்றைய சக வெங்காயக் கிளறல்காரிகளை ஆங்காங்கே விட்டுவிட்டு அப்போதுதான் பூதி வந்திருந் தாள்.

சண்முகத்திற்கு அதிகம் வயதில்லை!

''என்ன தம்பி அவசரமா வருகுது போலை கிடக்கு?' என்று பூதி கேட்டாள்.

''எனக்கென்ன அவசரம்; ஐயாவுக்குத்தான் அவசர மாக் கிடக்காம்; அதுதான் என்னை அவசரமாப் போகச்



சொல்லி வரக்காட்டினவர்!'' என்று சண்முகம் கருகல் விட்டான்.

பூதிக்குக் கோபம் வந்தது. ஆனாலும் அவள் அதைக் காட்டிக் கொள்ளவில்லை.

''என்ன ஐயாவுக்கு அவசரமாக் கிடக்காமோ? வீட்டிலை அம்மா இல்லையோ?'' என்று அவளும் சண்முகத்திற்குக் கருகல் விட்டாள்.

இக்கருகலை வேறுவிதமாகத் தப்பர்த்தம் செய்து கொண்ட சண்முகம், ''கிறேசருக்கைதானாம் இருக் கிறாராம்; அங்கை வரட்டாம்!'' என்று அவளுக்குத் திசை காட்டினான்.

பூதி எதுவும் பேசவில்லை.

''அப்ப நான் வாறன்!'' என்று கூறிக்கொண்டே வெளியே வந்த சண்முகம், ''ஐயா உடனே வரட்டாமாம், இவள் இனிக்குளிச்சுக்கிளிச்சிட்டு வெளிக்கிடுமட்டும் ஐயா கிறேசருக்கை காவல்தான்!'' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டே நடந்தான்.

பூதி எழுந்து குறுக்குக் கட்டை அவிழ்த்து, கொய்ய கத்தைச் சரிப்படுத்தி, மறுபடியும் குறுக்குக் கட்டைக் இறுக்கிவிட்டுக் கொண்டே கிறேசர் பக்கமாக நடந்தாள்.

சண்முகம் சற்றுத் தொலைவுக்குச் சென்று திரும்பிப் பார்த்தான். பூதி கிறேசர் பக்கம் போவது அவன் கண் களுக்குப் பட்டது.

''அங்கை பார் அவளின்ரை அந்தரத்தை?'' என்று சண்முகம் மனதுக்குள் வெந்து கொண்டான்.

இளையதம்பியர் மேல் இந்த விஷயத்தில் அவனுக்குப் பொறாமையுமிருந்தது.

பூதி கிறேசரின் பக்கச் சிறு தகரக் கதவைத் தள்ளிக் கொண்டு வந்தாள்.

சனிக்கிழமை ஓய்வு நாட்களில்— அதுவும் மத்தியானத் தோடு வருவதானால் உள்ளே வந்ததும் அந்தக் கதவின் உட்புறத் திறாங்கை மறக்காமல் போடுவதுதான் வழக்கம். இன்றும் அந்த வழக்கத்தை அவள் செய்தாள்.

தகர அறையின் உள்ளே அவள் வந்தாள்.

இளையதம்பியர் கதிரையில் இருந்தார்.

அவள் வந்து பேசாமல் நின்றாள்.

''பூதி! ஏனெடி கிளறினபடி விட்டிட்டு அவளவையைக் கூட்டிக் கொண்டு போனனீ?''

''..............''

''என்னெடி நான் கேக்கிறன் பேசாமல் நிக்கிறாய் சொல்லனடி!''

''மற்ற மற்றத் தோட்டத் தறையள்ளை நிண்டவளவை எல்லாரும் வெளிக்கிட்டுப் போட்டாளவை, அதுதான் அவளவை எல்லாரும் போகேக்கை நாங்க போகாமை இருக்கிறது பிழை எண்டிட்டுக் கூட்டிக் கொண்டு போட்டன்.''

இளையதம்பியர் எப்படித்தான் பூதியை நோக்கி 'இவ்வளவு விரைவில் இப்படிப் பாய்ந்தார்' என்று ஆச்சரியப்படக்கூடிய விரைவில் அவள் மேல் பாய்ந்தார். கைகளைப் பொத்திக் கொண்டு அவளை மொத்தினார்.

எட்டி உதைத்தார்.

அவளின் தலைமயிரைச் சுற்றிப் பிடித்துக் கொண்டு அவளை அறைக்குள் சுழற்றினார்.

காறி அவள் முஞ்சியில் துப்பினார்.

ஆனால் இத்தனைக்கும் அவர் வாயிலிருந்து உதிர்ந்த வார்த்தை ''நன்றி மறந்த நாயே!'' என்பது தான்.

அவருக்குக் களை வந்துவிட்டது.



மறுபடியும் இருக்கைக்கு வந்து விட்டார்.

பூதி களைக்கவில்லை.

கலைந்துவிட்ட கூந்தலையும் சேர்த்து இரு கைகளாலும் முகத்தைப் பொத்திக் கொண்டு அவள் நிலத்தில் இருந்தாள்.

அவள் அழவில்லை.

வாய் திறந்து ஒரு வார்த்தை பேசவில்லை.

ஏதோ ஒன்று அவளை ஊமையாக்கிவிட்டது.

கிறேசர் வளவின் பெரிய தகரக் கதவில் யாரோ தட்டிக் கொண்டிருந்தனர்.

இளையதம்பியர் எழுந்து சென்று கதவைத் திறந்தார்.

இளையதம்பியின் வாடிக்கைக்காரக் கட்டிடக் குத்தகைக்காரன் ஒருவன் அவசரமாக ஒரு லொறி கல்லுக்காக கூலியாட்களுடனும், லொறியுடனும் வந்திருந்தான்.

நெருக்கடியான இந்த வேளையில் அந்த லொறிக்குக் கல்லுக் கொடுக்க அவர் துளியும் விரும்பவில்லை. ஆயினும் வந்திருந்த அந்த வாடிக்கைக்காரனைத் திருப்பி அனுப்ப அவருக்கு முடியவில்லை. அரை மனதுடன் ஒப்புக் கொண்டுவிட்டு, அறைப்பக்கம் வந்து, அறைக் கதவை மூடிப் பூட்டைப் பூட்டிவிட்டு வெளியேறி நின்றார்.

லொறியில் பாரம் சுமத்தி முடிய ஒருமணி நேரத்திற்கு மேல் ஆகிவிட்டது. அந்த ஒரு மணி நேரமும் இளையதம்பியர் சம்பந்தா சம்பந்தமில்லாமல் வந்தவனோடு எதை எதை எல்லாமோ பேசினார்.

ஒரு மாதிரி லொறி புறப்பட்டு விட்டது.

கதவை மூடிவிட்டு அவர் மறுபடியும் உள்ளே வர முயன்றபோது வீட்டின் வேலைக்காரப் பொடியன் கறுப்பையன் வந்தான்.

''தோட்டத்துக் கை நிண்ட பள்ளியள் எல்லாம் போட்டாளவை யாமுங்க. அதுதான் சமைச்ச சாப்பாட்டை என்னா செய்யிறதெண்டு அம்மா கேட்டுக் கிட்டு வரட்டுக்காமுங்க'' என்று கறுப்பையன் கூறினான்.

''அதுகள் கிடக்கட்டுக்கு; எல்லாத்துக்கும் 'நான் வாறனாம்' எண்டு சொல்லடா!'' என்று கூறி வேலைக் காரனை அனுப்பிவிட்டு ஐயா அறைக் கதவைத் திறந் தார்.

பூதி குந்தியபடியே இருந்தாள்.

அவள் உடலெல்லாம் வியர்வையால் தோய்ந் திருந்தது.

இளையதம்பியருக்கு அவள் மீது இரக்கம் வந்து விட்டது.

''பூதி சொல்லிப் போட்டாளெண்டு, நான் ஊருக் கமக்காறங்களோடை யோசிச்சு நாளையிலையிருந்து அலுமினியப் பாத்திரங்கள்ளை தாறதெண்டு முடிவெடித் துப் போட்டு தறையக்கை சொல்லவாறதுக்கிடையிலை விட்டிட்டிப் போனா ஆத்திரம் வராமை என்ன வரும்?''

இளையதம்பியர் தார்ப்பரியத்தைச் சொன்னார்.

இப்போதுதான் பூதிச்கு அழுகை வந்தது.

தகரக் கதவைச் சாத்திவிட்டு இளையதம்பியர் பூதி யின் கண்ணீரைச் சால்வையால் ஒற்றினார்.

## 9

''தோட்டத் தறைக்காரர் தட்டுவத்திற்கும் சிரட்டைக்கும் பதிலாக அலுமினியப் பாத்திரங்கள் தரச் சம்மதித்துவிட்டார்களாம்'' என்ற செய்தி பொழுது கருகுவதற்கிடையில் கிராமத்துள் பரவிவிட்டது.



கிறேசர் வளவிலிருந்து பூதி ஊருக்குள் திரும்பிய போது இச் செய்தியையும் சுமந்து வந்தாள்; ஒருவர் இருவருக்குச் சொன்னாள்; அந்த ஒருவர் இருவர் ஐந்துப் பத்துப் பேர்களுக்குச் சொல்ல, அந்த ஐந்து பத்துப் பேர் களும் அதைச் சுமந்து வந்து கிராமம் முற்றாகவுமே பரவி விட்டனர்.

இப்படிப் பரவிய செய்தி தறைக்காரர் செவிகளில் விழுந்தபோது அவர்களே ஆச்சரியப்பட்டு விட்டனர். ''இளையதம்பியரிடம் தாங்கள் கொடுத்த பொறுப்பை இவ்வளவு விரைவில் எப்படித்தான் அவரால் செய்ய முடிந்தது?'' என்ற கேள்விதான் அவர்களுச்குள் ஆச்சரிய மாக விரிந்திருந்தது. இன்னொரு புறத்தில் ''பள்ளருக்கு இப்படி ஒரு வெற்றிக்கு இத்தனை விரைவில் தாங்கள் இடங் கொடுத்திருக்கக்கூடாது'' என்ற எண்ணமும் அவர் களில் சிலரிடையே முளைத்தது.

''உங்களுக்கென்ன பள்ளியளின்ரை எண்ணத்துக்கு விட்டுப்போட்டியள்; எங்களுக்கெல்லோ வில்லங்கம்! இனிமேல் எங்கடை தலைவளியவெல்லோ ஏறிச் செவி யைக் கடிக்கப் போறாளவை!'' என்ற விதத்தில் பேசிக் கொள்ளாத நயினாத்திமார்களே ஊருக்குள் இல்லை என்று மொத்தத்தில் சொல்லிவிடலாம்.

''என்ன அந்தக் குறுக்குக் கொய்யகக்காறி— அவள் தான் உம்மடை பூதி! அவளுகக்காக எல்லாப் பள்ளியளுக் கும் இப்பிடி இடங் குடுக்கிறதோ?''

இப்படி இளையதம்பியரின் மனைவி விசாலாட்சி அம்மாள் அவரைக் கேட்டாள்.

இளையதம்பியர் மூன்று மணிக்குமேல் சாப்பிட வந்த போது குறிப்பறிந்து கொண்டு அவசர அவசரமாகக்

கிணற்றடிக்குப் போய்ப் பார்த்துவிட்டு, தொட்டிக்குள் தண்ணீர் இல்லாமல் இருக்கக் கண்டு, மோட்டரைப் போட்டுத் தொட்டியைத் தண்ணீரால் நிரப்பினாள் அவள்.

அவள் அப்படிச் செய்ததும் அசடு வழியக் கிணற்றடிக்குச் சென்று தொட்டிக்குள் விழுந்து ஸ்நானம் செய்துவிட்டு வந்தார் அவர். அதனால் மனைவி அன்றைய மத்தியான நிகழ்வைக் கணக்கிட்டுவிட்டாள் என்பதைப் புரிந்து கொண்டு ''உமக்கு நெடுக அவளை இழுக்காட்டிச் சரிவராது!'' என்று நைசாகப் பேசினார்.

''ஓமோம், எனக்குப் பூதியைச் சனிக்கிழமையில் தவறாமை இழுக்கத்தான் மனமாக் கிடக்கு, சும்மா கதையைச் சமாளிக்காமை நான் கேக்கிறதுக்கு மறுமொழி சொல்லுங்கோ! சரி பூதியை விடுவம். எக்கணம் குத்த இடிக்க வீட்டுத் தொண்டு துரவு செய்ய வாற மற்றப் பள்ளியள் என்னை இனி ''நயினாத்தி'' எண்டு மதிப்பாளவையோ; நான் கேக்கிறன்!''

விசாலாட்சி அம்மாள் பேசி முடித்தபோது இளைய தம்பியருக்கும் உள்ளூரச் சிரிப்புத்தான் வந்தது. ''எண்டாலும் அவள் என்ரை பெண்டில், எனக்கு நயினாராகும் ஆசை வந்தது போலை அவளுக்கும் வந்திருக்கவேணும்'' என்றுதான் அவர் மனது எண்ணியிருக்க வேண்டும்!

குனிந்து இரகசியமாக மனைவியின் காதுக்குள் ''நீர் நயினாத்திதான், நான் அதை இல்லையெண்டனானே?'' என்று செல்லங் கொஞ்சினார் இளைய தம்பியர்.

இளைய தம்பியரின் இந்தக் குத்தல் பேச்சுக்கு மேல் விசாலாட்சி அம்மாளுக்கு எதுவும் பேசவரவில்லை. தாவணிச் சேலையை வரிந்து கட்டிக் கொண்டு அவள் குசினிப் பக்கம் போய்விட்டாள். இப்படித் திக்குமுக்காடும் சந்தர்ப்பங்களில் அவள் தாவணிச் சேலையை வரிந்து கட்டுவதுதான் வழக்கமானது. இப்படி அவள் தாவணிச் சேலையை வரிந்து கட்டுவாளாக இருந்தால் ஆகக் குறைந்தது நான்கைந்து நாட்களுக்குத் தன்னும் அவளை அண்ட அணுக முடியாது என்பதும் இளைய தம்பியரின் அனுபவத்திற்குத் தெரிந்திருந்தது. அதனால் அப்படிச் சந்தர்ப்பங்கள் வரும்போதே அவர் குழந்தையாகி, உடனடியாகவே அசடுவழிய அவளின் நாடியைத் தடவி விடுவார். இப்படி ஏதாவது பிராயச்சித்தம் நடந்தால் அம்மாளின் 'பிகு' ஆகக்கூடியது சூரிய அஸ்தமனமாகி அதன் பின்பும் நான்கைந்து மணி நேரந்தான் நீடிக்கும்.



இன்று இளைய தம்பியருக்கு மனைவியின் நாடியைத் தடவவும் மனது வரவில்லை.

பூதி வந்து போய் இன்னும் நான்கு மணி நேரங்கூட ஆகவில்லை.

அடுத்த சனிக்கிழமை வர இன்னும் எட்டு நாட்கள் இனுப்பினும், இதற்கிடையே உள்ள நான்கு நாட்களை யாவது அவரால் சமாளிக்க முடியும்! நான்கு நாட்கள் கழிந்து விட்டால் மனைவி தனது தாவணி வரிச்சலைத் தானாகவே தளர்த்திக் கொள்வாள் என்ற நம்பிக்கையும் இருந்தது.

இளைய தம்பியர் சற்றுத் தயங்கி நின்றபோது அவரின் மூத்தவன் சிவசோதி பிள்ளையார் கோவில் முன்றலில் கைப்பந்தாடிவிட்டு வியர்வை வழிய வந்து கொண்டிருந்தான்.

இளைய தம்பியர் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு புறப்பட்டுவிட்டார்.

அந்த வேளை அவர் எங்கே போகிறார் என்று யாரும் கேட்க வேண்டியதில்லை.

நேராக கிறேசரடிக்குத்தான் போவார்.

பெருங்கதவையும், கிறேசர் அறையின் சிறு கதவையும் திறந்து கொண்டு உள்ளே போவார்.

வரிசைக்கு வைத்திருக்கும் சாமிப் படங்களுக்கு விளக் கேற்றுவார்; சந்தனக் குச்சி குத்துவார். நட்டுக்கு நடுவாக வைக்கப்பட்டிருக்கும் பிள்ளையார் படத்துக்கு முன்னால் நின்று தோப்புக்கண்டம் போடும் விதத்தில் இரு செவி களையும் இரு கரங்களால் மாறிப் பிடித்துக் கொண்டு முழங்காலைச் சற்று மடக்கி, கால் பங்கு மூன்று தடவைகள் தோப்புக்கண்டம் போடுவார்; மாற்றிக் கொண்ட அதே கரத்தால் காதுக்கு மேலான கன்னப் பகுதியில் மும்மூன்று தடவைகள் குட்டிக் கொள்வார். பிள்ளையாருக்கு முன்னால் காத்திருக்கும் திருநீற்றையும் தொட்டு நெற்றியிலும் பூசி, மிகுதியை வாய்க்குள் தூவி உமிழ்ந்து கொண்டு நெற்றித் திருநீற்றுக்கு மேல் சந்தனப் பொட்டிடுவார். மறுபடியும் வெளியே வந்து விடுவார்.

இது இளைய தம்பியருக்குச் சனிக்கிழமை வழக்கங் களில் ஒன்று.

மற்றைய நாட்கள் எல்லாமே வேலை நாட்கள்!

இந்த மற்றைய நாட்களில் கிறேசர் வேலைகள் முடிய நேரம் இரவு எட்டுக்கு மேலாகி விடும்.

இளைய தம்பியர் வெளியே வந்தபோது வேலைக் காரப் பையன் கறுப்பையன் வந்தான்.

''என்னடா அது?''

''மில்லு வைச்சீக்க, ராசரெத்தினம் ஐயாவு ரெண்டு கொடலை ஆட்டிறைச்சி அனுப்பிக்காராம்; நேரம் கெட்டிக்க நேரத்திலை வாங்கிறதா வேண்டாமான்னு அம்மா கேட்டுக்கிட்டு வரச் சொன்னாவுங்க!''

''அவன் பாவி வீடு தேடி அனுப்பியிருக்கிறான் வாங்கச் சொல்லடா!''

கறுப்பையன் போய்விட்டான்.

அப்போதுதான் கிறேசர் வளவு வழுப்பனை சீவுவதற் காக கறுவல் வந்திருந்தான்.



''கறுவல் வீட்டை வைக்கிறதை வைச்சிட்டு இஞ்சை இண்டைக்கு ஒண்டுகூட வைச்சிட்டுப் போடா; ராசரெத் தினம் ரெண்டு குடலை ஆட்டிறைச்சியும் அனுப்பியிருக் கிறான்!'' என்று சொல்லிவிட்டு, காரை எடுத்துக் கொண்டு வெளியே போய்விட்டார் இளைய தம்பியர்.

இரவு மணி எட்டுக்கு மேல்தான் இளைய தம்பியர் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்.

அவருடன் புதிதாக இன்னொருவன் வந்திருந்தான்.

அவன் பார்ப்பதற்கு மிக வாட்டசாட்டமாக இருந் தான்.

வந்தவனைக் கிறேசர் அறைக்குள் இருக்க வைத்து விட்டு வீட்டுக்குப் போனவர் ஒரு வெள்ளித்தட்டு இறைச் சியுடன் வந்து சேர்ந்தார்.

கிறேசர் அலமாரிக்குள்ளிருந்து ஒரு சீல்டே பாத்தலை எடுத்துக் கோர்க்கைத் திறந்துவிட்டு அவன் முன்னே வைத்தார். கறுவல் வழமையாக வைக்கும் மறைவுக்குச் சென்று தூணமுட்டி ஒன்றினையும் எடுத்து வந்து அவனுக்கு முன்னால் வைத்தார்.

வந்தவன் சுன்னாகம் போலீஸ் அதிகாரி.

இரவு பன்னிரெண்டு வரை இருவரும் பேசுவதும் குடிப்பதும் உண்பதுமாக இருந்தனர்.

பின்பு...

அந்த நிலையிலும், அந்த நேரத்திலும் அந்தப் புதிய விருந்தாளியை ஏற்றிக் கொண்டு கார் புறப்பட்டுப் போய்த் திரும்பி வர நேரம் அதிகம் செல்லவில்லை.

வீட்டுக்கு வந்து விட்டவருக்கு முன்பு குடித்தது போதாது போல இருந்தது.

வழமையாக கறுவல் வீட்டில் முட்டி வைக்குமிடத்தில் சென்று முட்டியைத் தூக்கினார். அது வெறுமையாகக் கிடந்தது.

# 10

காலை ஆனபோது தோட்டத் தறைகள் எங்கும் கூலிப் பெண்கள் கூட்டங் கூட்டமாக இருந்து வெங்காயக் கிளறலைத் தொடங்கி விட்டனர்.

பூதி மட்டும் ஒரு இடத்திலும் நிலைத்து நிற்காமல் அங்குமிங்குமாகத் திரிந்து ஒரு கூட்டம் மாறி மறு கூட்டத்துடன் பேசிக் கொண்டே இருந்தாள்.

அறிவறிந்து தோட்டத் தறைகளுக்குள் கால் எடுத்து வைத்ததிலிருந்து இன்று வரை அனுபவித்திராத ஒரு புதுச் சுகத்தை அனுபவிக்கப் போவதாக எல்லோர் மனதிலும் முளைவிட்டு நின்ற எண்ணத்தை எக்களிப்பாகக் காணத்தான் பூதி அங்குமிங்குமாகத் திரிகிறாள்!

''எண்டாலும் பூதி அக்கை இல்லையெண்டா நயினாரவை இதுக்குத் தொட்டுப் போனாலுஞ் சம்மதிச்சிருக்க மாட்டினம்!''

இப்படிக் கூட்டத்தில் ஒருத்தி பக்கத்தில் இருப்பவர்களுக்கு கீழ்க் குரலில் கூறினாள்.

''ஓமோம், பூதி அக்கை இளைய தம்பிக் கமக்காறனைக் கொண்டு கெட்டித்தனமாச் செய்து போட்டுது! சில காரியங்களுக்கு உதுகும் தேவைப்படுகுது தான்!''

இப்படி வேறோர் குரல் கேட்டது.

''ஓமோம், உந்தப் பெரிய விசுவாமித்திரனாலை நிண்டு பிடிக்க முடியேல்லையாம்! இளையதம்பியர் ஒரு சரக்கே?''

இப்படி வேறோர் குரல் எழ எல்லோரும் களுக்கென்று சிரித்தனர்.



''எடி எடி மெல்லமாக் கதையுங்கோடி; பூதியக்கா எங்கடை பாத்திப் பக்கம் வாறாபோலை கிடக்கு!''

இப்படி இன்னொருத்தி எச்சரித்தாள்.

''என்னெடி எல்லாரும் கெக்கட்டமிட்டுச் சிரிக்கிறியள்?'' என்று கேட்டுக் கொண்டே பூதி வந்தாள்.

ஒருவரும் பூதியின் கேள்விக்குப் பதில் பேசவில்லை.

''என்னெடி எல்லாரும் ஒண்டும் பேசிறியளில்லை. அப்ப என்னைப் பற்றித்தான் கதைச்சிருக்கிறியள்?''

பூதி ஒரு குற்றச்சாட்டை எல்லாரிடமும் சுமத்தினாள்.

''இல்லைப் பூதி அக்கை...!''

என்று ஒருத்தி இழுத்தாள்.

''எடி எடி எனக்கு மறைக்காதையுங்கோடி! பூதி அக்கை இளையதம்பியருக்கு முன்தானை விரிச்சதிலை தான் இது நடந்திருக்கெண்டு கதைச்சிருக்கிறியள்? அதை ஏனெடி மறைக்கிறியள்? நான் இல்லையெண்டனானை யெடி?''

பூதியின் மற்றக் கேள்வி எல்லோர் நெஞ்சிலும் படக்கென்று அடித்தது. எல்லோரும் பேசாமல் இருந்தனர்.

ஏறக்குறைய மணி பத்து!

தொலைவில் அங்குமிங்குமாக தோட்டக் கூலிகளுக்காகப் பெருங் கேற்றில்களில், அலுமினியப் பானைகளில் தேநீரைச் சுமந்துகொண்டு பல தோட்டக்காரர்கள் வந்து கொண்டிருந்தனர்.

வேலைக்காரப் பையன் கறுப்பையன் கோப்பிக் கேற்றிலையும் அலுமினிய ஜொக்குகளையும் சுமந்துவர

இளையதம்பியரும் தனது தறைக்கு வந்து சேர்ந்து விட்டார்.

''என்னெடி பூதி, என்ரை தோட்டத்தறைக்கு வந்திட்டு நீ மற்றவளவையோடை வியளம் கதைச்சுக் களைச்சுப் போய் வந்திருக்கிறாயாக்கும்?'' என்று கேட்டுக் கொண்டே அவர் வந்தார்.

இளையதம்பியர் தொலைவில் வருவதைக் கண்டு விட்டு மற்றவர்கள் எல்லோரும் அவதி அவதியாக வேலை செய்வது போலக் காட்டிக்கொள்ள பூதி மட்டும் சாவகாசமாகக் கொட்டப் பெட்டிக்குள் இருந்து வெற்றிலையை எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தாள்.

''என்னெடி பூதி, நான் கேக்கிறன், நீ உன்ரை பாட்டிலை இருக்கிறாய்? உமக்கு செல்லங்கூடித்தான் போச்சு!'' என்று பூதிக்கு மேல் செல்லக் கோபம் காட்டிக் கொண்டார் இளையதம்பியர்.

''ஓமோம், என்ரை செல்லத்துக்கு என்னவாக்கும்?'' என்று படக்கெனக் கேட்டாள் பூதி.

''எடி ஆரெடி உதிலை குனிஞ்சு கொண்டிருக்கிறவள்? பேத்தை வயித்தியன்ரை செல்லியே? அவள் கெட்டிக்காறி! எடி செல்லிப்பொட்டை இஞ்சை பாரெடி! நீ நேத்துக் கேட்டுப் போட்டாய் எண்ணிறத்துக்காக எல்லாருக்கும் அலுமினியப் பேணி கொண்டு வந்திருக்கிறன்! எங்கையெடி ஒருக்காச் சிரியெடி!''

இளையதம்பியர் செல்லியைப் பார்த்து இதமாகக் கேட்டார்.

செல்லி தலையை நிமிர்த்தவில்லை!

''எடி பூதி நீ சொல்லெனடி ஒருக்கா அவளைச் சிரிக்கச் சொல்லி! நீ சொன்னாத்தான் அவள் சிரிப்பாள் போலை கிடக்கு?'' இளையதம்பியரின் இந்தப் பேச்சுக்கு ''ஓமோம், இப்ப உந்தவேலைதான் பாக்கப் போறன்!''



என்று சொல்லிக்கொண்டே பூதி கறுப்பையனுக்குக் கிட்டவாக வந்து கோப்பிக் கேத்திலையும் அலுமினியக் கிண்ணங்களையும் பெற்றுக் கொண்டாள்.

''எடி பூதி, முதலிலை அலுமினியக் கிண்ணத்திலை செல்லிக்குத்தான் குடு கண்டியோ! அவள்தான் என்னை வாய் திறந்து கேட்டவள்! நயினார் தன்னிலே அன்புதான் எண்டதைக் கண்டோண்ணை அவள் தலையைக்கூட நிமித்திறாளில்லை. எண்டாலும் நீ அவளிட்டைத்தான் நாளுக்குப் பேணியைக் குடு!''

பேசி முடித்துவிட்டு, இளையதம்பியர் திருப்பி நடக்கத் தொடங்கினார்.

''எடி பூதி! அங்கை பாரெடி உன்ரை ஆக்கள் எல்லாம் எல்லாத் தறையளுக்கையும் அலுமினியப் பேணியள்ளை கோப்பி குடிக்கிற ஒய்யாரத்தை?'' என்று சற்றுத் தொலைவில் நின்றே பூதிக்குக் காட்டிவிட்டு அவர் பெரு வரம்பால் நடந்து கொண்டிருந்தார்.

கறுப்பையனால் கொண்டு வரப்பட்ட மூன்று அலுமினியக் கிண்ணங்களில் ஒருவர் மாறி ஒருவர் கோப்பி குடித்துமுடிய சற்றுநேரம் எடுத்துவிட்டது. கறுப்பையன் பொறுத்து நின்று பாத்திரங்களை எடுத்துச் சென்றான்.

வெய்யில் நெருப்பாக எரிந்தது. கார்கால மழைப் பருவம் தவறிவிட்டால் வெய்யில் அப்படித்தான்.

கிளறப்பட்ட வெங்காயங்களின் தாள்கள் சிறு சிறு குவியல்களுக்கு மேலே வதங்கிப் போய்க் கிடந்தன.

தோட்டத் தறைகள் கலகலப்பாய் இருந்தன.

மதிய வேளையாயிற்று.

கறுப்பையன் தலையில் குஞ்சுக் கடகத்தில் சோறும் வலக்கையில் வாளியுடனும் வந்து சேர இளையதம்பியரும் வந்து சேர்ந்தார்.

சோற்றுக் கடகத்தை இறக்கி வைத்துவிட்டுக் கறுப்பையன் தோட்டக் கிணற்றில் தண்ணி எடுத்து வந்தான்.

"எடி பூதி, கடகத்திலை சோறும் அலுமினியச் சட்டியிலை கறியும் வைச்சுக் கிடக்கு, தண்ணி வாளியிக்கை அலுமினியப் பேணியும் வைச்சுக் கிடக்கு; கட்டோடை தலைவாழையிலையளுங் கிடக்கு; வாழையிலை எண்டோண்ணை நீ ஒரு மாதிரி நினைப்பாய்! பிராமணி எப்பெண்டாலும் கோப்பை கீப்பையிலை திண்டிருப்பானே? ஏன் கனக்க! எங்கடை வீட்டிலை விரதச் சாப்பாட்டை நானுஞ்சரி, வீட்டிலை ஆருஞ்சரி கோப்பையிலை திண்டிருக்கிறதைக் கண்டிருப்பியே? ஏனெடி செல்லிப்பெட்டை நான் சொல்லுறதிலை ஏதும் பிழையிருக்கோ, சொல்லு பாப்பம்! நீ இவளவையைப் போலை இல்லை. கொஞ்சம் விஷயந் தெரிஞ்சனீ! நான் சொல்லுறத்திலை பிழைகிழை இருந்தா வெக்கப்படாமச் சொல்லு பாப்பம்!"

இளையதம்பியர் பேசி முடித்துவிட்டார்.

செல்லியோ பூதியோ அல்லது யாருமோ வாய் திறக்கவில்லை.

சற்றுவேளைக்குப் பின்பு பூதி தலை நிமிர்ந்து பார்த்த போது கறுப்பையன் மட்டும் நிற்க இளையதம்பியர் பெருவரம்பால் போய்க் கொண்டிருந்தார்.

அதன் பின்பும் சிறிதுவேளை யாரும் பேசவில்லை.

வெய்யில் கொளுத்தியது.

"அவர் சொல்றதும் சரிபோலைதான் கிடக்குப் பூதியக்கை!"

இது செல்லியின் குரல்!

பூதி திடுக்குற்று விட்டாள்.



செல்லியிடமிருந்து பூதி இந்த வார்த்தையை எதிர்பார்க்கவில்லை.

"எல்லாத் தறையளுக்கையும் இலையிலைதான் குடுக்கப் போகினம் போலை கிடக்கு!"

இப்படிச் செல்லியே மீண்டும் பேசினாள்.

இவைகளைப் பற்றி எதையும் அறியாத கறுப்பையன் இலைச் சுருளை எடுத்துப் பிரித்து அவைகளை ஒவ்வொன்றாகக் கழுவி அடுக்கிக் கொண்டிருந்தான்.

## 11

வெங்காயத் தாள்கள் தலைகட்டி முடிய மைமல் ஆகிவிட்டது.

தோட்ட வெளிவரை ஒன்றாகவே சேர்ந்து வந்தவர்கள் ஊர்மனை வந்ததும் அவரவரே பல பக்கங்களிலும் கலைந்து போய்க் கொண்டபோது, வழமையான தனது பாதையைவிட்டு பூதி செல்லிக்குப் பின்னால் சென்று கொண்டிருந்தாள்.

"என்னெணை பூதி அக்கை இதாலை?" என்று செல்லி கேட்டாள்.

"ஒண்டுமில்லைச் சும்மா வாறன்!" என்று மொட்டையாய்ப் பதில் சொல்லிவிட்டு பூதி நடந்து கொண்டிருந்தாள்.

இப்போது செல்லியின் பாதையில் வந்த மற்றவர்களும் ஆங்காங்கே பிரிந்து சென்று விட்டனர்.

இருட்டி விட்டது.

"நல்ல முன்னிருட்டாக் கிடக்கெணை!" என்றான் செல்லி.

''ஓம் பொட்டை! பறுவம் வந்து ரெண்டு நாளெல்லே அதுதான் இப்பிடி இருட்டாய் கிடக்கு! காலடி பாத்து நட! பூச்சியைப் பூரானை கல்லுவளிய கிடக்கும்!'' இப்படி பூதி அவளை எச்சரிக்கை செய்தாள்.

''வீட்டை போகாமல் எங்கையெணை பயணம்?'' இப்படிச் செல்வி ஒப்புக்குக் கேட்டாள்.

பூதி இந்த வேளையில் எங்கே போகிறாள் என்பது செல்விக்குத் தெரியும். பூதியின் மச்சாள் வீட்டில் அவளுக் காகஒரு சிரட்டைக் கள்ளுக் காத்திருக்கும் சமீப காலத்தி லிருந்து அவளுக்கு இந்தப் பழக்கம். அவளின் மச்சாள் பெரிய கறுப்பி அவளுக்காக இதைக் கட்டிக் காத்து வைத்திருப்பாள். கணவன் கறுத்தான் சேர்வை செய்து கொண்டுவரும் ஆண்பனைக் கள்ளுக் காலத்தில் ஒரு சிரட்டை கள்ளையும், ஆண்பனைக் கள்ளு அருந்தலாகி விட்ட காலங்களில் பெண்பனைக் கள்ளில் ஒரு சிரட்டை யையும், அதுவும் அருந்தலாகிவிட்டபோது காய்வெட்டிக் கள்ளில் ஒரு சிரட்டையும் மச்சாள் பூதிக்காகப் பெரிய கறுப்பி வைத்திருக்கத் தவறுவதில்லை.

பூதி எங்கே போனாலும் பொழுது கருகியதும் அவாவுடன் பெரிய கறுப்பி வீட்டுக்கு ஓடிவந்து அடுக்களைக் கொட்டிலுக்குள்ளிருந்து அதைக் குடித்து விட்டால் தான் அவளுக்கு ஆத்ம திருப்தியாக இருக்கும். மச்சாள் காரியிடம் அவள் இதை இலவசமாகப் பெற்றுக் கொள்வதில்லை. நாள் தவறாமல் வீட்டுக்குள் ஒரு பானை வைத்து அதற்குள் பிடி அரிசி அள்ளிப் போட்டு, கிழமைக்குக் கிழமையோது அல்ல பதினைந்து நாட்களுக்கு ஒரு தடவையோ கொண்டுவந்து மச்சாள்காரியிடம் கொடுத்துவிட்டுத்தான் மறு வேலை பார்ப்பாள். இப்படிக் கிடைக்கும் அரிசியால் பெரிய கறுப்பி குடும்பத்தின் ஒரு நாள் சீவியம் ஓகோவென்று ஓடிவிடும்.



பூதி தனது கள்ளைத்தான் குடிக்கிறாள் என்பதில் கறுவலுக்கும் பெரும் திருப்தி. ஏனெனில் இளைய தம்பியர் குடும்பத்திற்கும் அவன்தான் வாடிக்கையாகக் கள்ளுக் கொடுத்து வந்தான். இளைய தம்பியருக்கு வாடிக்கையாக வைக்கும் அரைத் தூணமுட்டிக் கள்ளை கிறேசர் தகர வீட்டின் பின் தாழ்வாரத்தோடுள்ள கொட்டுப் பனைக்குள் வைத்து விட்டும், மனைவி விசாலாட்சி அம்மாளுக்கு வைக்கும் ஒரு போத்தல் தனி மரத்தானை குசினிப்புறத்துத் தகரப் பீப்பாவுக்குள் வைத்துவிட்டுத்தான் அவன் வீடு வந்து பூதிக்கான கள்ளென்று கணக்குப் பார்க்காமல் மனைவி கறுப்பியிடம் கொடுப்பான். பூதிக்கும், இளைய தம்பியருக்கும் இருந்த தொடர்பின் சகல பிரிவுகளும் கறுவலுக்குத் தெரிந் திருந்தது. இதனால்தான் இளைய தம்பியரின் குடும்பங் களுக்கும் தான்தான் கள்ளு விநியோகம் என்று எண்ணிக் கொள்வதில் அவனுக்குப் பெருமை.

''என்னெடா கறுவல், பூதிக்கும் நீதானாம் குடுக் கிறனீ! ஏன் ஐயா பூதிக்குக்கும் குடுக்கச் சொல்லிச் சொல்லியே வைச்சிருக்கிறார்? பூதியின்ரைக்கும் காசு ஐயாதானையெடா தாறவர்?'' இப்படி ஒரு நாள் விசாலாட்சி அம்மாள் இருட்டோடு இருட்டாக கிணற்றடி வழுப்பனையடியில் நின்று கறுவலைக் கேட்டுவிட்டாள்.

அம்மாளின் இந்தக் கேள்வி கறுவலுக்கு ஒரு மாதிரி யாக இருந்தது. ''ஓமோம், நயினாரின்ரை குடும்பங்கள் ரெண்டுக்கும் நான்தான் சப்பிளை; எனக்கு ரெண்டு பேரும் ஒரு மாதிரித்தானாக்கும்!'' என்று படக்கென் அவன் பதில் சொன்னான். அம்மாள் வாயை மூடி கொண்டாள். அம்மாளுக்கும் விஷயத்தை நேராகத் தெரியச் செய்து பூதியை அம்மாள் அங்கீகரிக்கச் செய்து விட்டதில் கறுவலுச்குப் பெருமையாகவும் இருந்தது. இதனால் பூதி உரிமையோடு போய் உரிமையோடு தன ஒரு சிரட்டையானை றாங்கியாக எடுத்துக் கொள்வாள்

இந்த நடைமுறைகள் செல்லிக்கு தெரியாவிட்டாலும் பூதியக்கை பெரிய கறுப்பி அக்கையிடம் வாடிக்கை வைத்துக் கொண்டிருப்பது தெரியும்.

''செல்லிப்பொட்டை நீ தனிய இப்பிடி இருட்டுக்கை திரியாதை! உன்ரை வீடு மட்டும் வாறன்!''

இப்படி பூதி சொன்னபோது செல்லிக்குச் சிரிப்பு வந்தது.

''எணை பூதி அக்கை! நான் என்ன குமரியே?''

இப்படிச் செல்லி ஒற்றைக் கேள்வி ஒன்றினைப் போட்டாள்.

''எடி! கலியாணங் கட்டாமை இருந்தா மட்டும் குமரியே? நீ புருஷனை விட்டுப் போட்டு இருக்கிறவள்! அதிலையும் கட்டிக் கொஞ்ச நாளையிலை விட்டவள்! கட்டுப்பெட்டி மாதிரி இருக்கிறவள் அதுதான் சொன்னனான்.

செல்லி ஒன்றும் பேசாமல் நடந்தாள்.

தெற்கே இருந்து வீசி வந்த காற்றுச் சுழி ஒன்று கல்லுத்துகள் வரை கிளப்பி வந்து இருவர் முகங்களிலும் அடித்தது.

''செல்லி! அவன் அறுவான் நேத்தும் இண்டைக்கும் தோட்டத் தறையிக்கை உன்னோடடை கதைச்ச கதையளைக்கேட்டனியல்லே? அவன்ரை யோசினை என்னெண்டு உனக்கு இன்னும் விளங்கேல்லையே?''

பூதி கேள்விகள் இரண்டையும் அடுத்தடுத்துப் போட்டு விட்டு நடந்தாள்.

செல்லி ஒன்றுமே பேச முடியாமல் அவளுக்குப் பின்னால் நடந்து கொண்டிருந்தாள்.

பூதியும் சற்றுவேளை எதுவும் பேசவில்லை.

செல்லி வீட்டுக் கடவைக் கண்டாயம் வந்தது.



''அப்ப நான் போகட்டே அக்கை?''

செல்லி பூதியைக் கேட்டாள்.

''நான் கதைச்ச கதையள் விளங்கிச்சுதே? ஒண்டும் பேசாமல் போறாய்!'' பூதி கேட்டாள்.

பூதியின் இந்தக் கேள்விக்கு இப்போது செல்லி பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். ஆனாலும் அவள் பேச வில்லை. கொட்டுப்பனைக் கடவையால் ஒரு காலை அப்பக்கமாக வைத்து மறுகாலை எடுத்து உள்ளே வைக்க முயன்றாள்.

''இவ என்ன சுத்தமானவளோ என்னைக் கேக்கிறதுக்கு எண்டு நீ நினைக்கிறாய் என்ன? ஓமோம் நான் அவனுக்கு முந்தானை விரிச்சவள்தான். உன்னையும் அவன் வைப்பாக வைச்சிருக்கத்தான் வலை போடுறான்! அதுக்காகத்தான் சொல்லுறன் செல்லி; கவனம் பெட்டை!''

இப்படிக் கூறிவிட்டுப் பூதி தனது பாதைக்குத் திரும்பி விட்டாள்.

அடிவானத்தில் வெளுப்புத் தெரிந்தது.

பூதி பெரிய கறுப்பி வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தாள்.

அவள் மனமெல்லாம் செல்லியை நோக்கித்தான் சுழன்றது. செல்லி தனது கேள்விக்குப் பதில் சொல்லாமல் மௌனம் சாதித்ததிலிருந்து அவளின் மனத்தின் மீது அவள் சந்தேகப்பட்டாள். செல்லி இதற்கு இணங்கிப் போக விரும்புகிறாள் என்ற முடிவுக்குத்தான் பூதியால் வரமுடிந்தது. ''பாவம் அவள்! இளம் வயசிலே புருசனை விட்டிட்டு இருக்கிறவள்!'' என்று அவளுக்காகப் பூதி பச்சாதாபப்பட்டாள்.

இளைய தம்பியரின் குணங்களைப் பற்றி எல்லாம் பழமும் தின்று கொட்டையும் போட்டவள் பூதி. இளைய

தம்பியரின் அவயவங்களின் ஒவ்வொரு அசைவுகளையும் அவள் கணக்கெடுத்து வைத்திருக்கிறாள். ஏதாவது ஒன்றில் கண்வைத்துவிட்டால் வேட்டை நாயைப் போல கண் வைத்த அந்த ஒன்றை சுற்றிச் சுற்றி வந்துகொண்டே இருப்பார். "நினைத்ததை அடைந்து, அல்லது அதை அழித்து விடுவது" என்று தனக்குள்ளேயே ஒரு கொள்கையை வைத்துக் கொண்டு அவர் செய்து முடித்த பல காரியங்களை அவள் அறிந்திருக்கிறாள். இதனால் பூதி மிகவும் பயந்தாள். செல்லிக்கு இவைகளையெல்லாம் சொல்லி விளங்க வைக்க அவளுக்கு முடியவில்லை.

மச்சாள் பெரிய சறுப்பி வீட்டுக்கு அவள் வந்து சேர்ந்தபோது "என்ன மச்சாள் செண்டது?" என்று கேட்டுக் கொண்டே பெரிய கறுப்பி அவளுக்குக் கட்டியங் கூறினாள்.

## 12

கூதிர் காலம் பிறப்பெடுத்து விட்டது. இன்னும் மழையைக் காணோம்!

ஒரு மாதத்திற்கு மேல் வெங்காயக் கிளறல் அமளி நீடிக்கவில்லை. அதிலும் இளைய தம்பியரின் தறையின் வேலை இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே முடிந்து விட்டது.

வெங்காயம் தாள்க் கட்டுடன் வீட்டுக்கு வந்து சேர்ந்துவிட்டால் இதைத் தொங்க விடுவதற்குப் பிரத்தியேகமாகக் கட்டப்பட்டிருக்கும் பனை ஓலைப் பெருங் குடிலுக்குள் வேலை செய்ய இரண்டு அல்லது மூன்று கூலிகள் போதுமானதாகும்.

கிறேசர் மடுவத்துக்கும், வீட்டுக்கும் இடையே உள்ள இடைத் தூரத்து நட்டுக்கு நடு முது புளியமரத்துப் பச்சவாட்டில்தான் அந்தப் பெருங் குடிசை அமைக்கப்பட்டிருந்தது.



செல்லியை மட்டும் கூட்டிக்கொண்டு வேலைக்கு வரும்படி இளைய தம்பியர் பூதிக்குப் பணித்திருந்தார். இந்தப் பணிப்பின்படி பூதி செல்லியுடன் வேலைக்கு வந்திருந்தாள்.

"டேய் கறுப்பையா! வெங்காயத் தூக்குக்கு ஆராரடா வந்திருக்கிறாளவை?" என்று விசாலாட்சி அம்மாள் கறுப்பையனைக் கேட்டாள்.

"பூதியும், வேறை யாரோ ஒரு பொண்ணும் வந்திருக்கிறாங்க!" என்று கறுப்பையன் பதில் சொன்னான்.

சமீப காலத்திலிருந்து பூதியை வீட்டில் வேலைக்காகக் கணவர் கூப்பிடுவதில்லை என்பது விசாலாட்சி அம்மாளுக்குத் தெரியும். கடந்த நான்கு வெங்காயப் போகங்களுக்கும் பூதி வந்ததில்லை. பூதியை வீட்டு வேலைக்குக் கூட்டிவந்து கண்ணுக்கு முன்னால் அவளை மனைவியானவள் அடிமையாக நடத்துவதைப் பார்த்துச் சகிக்க முடியாமல்தான் இளைய தம்பியர் அவளை வராமல் தடுத்து வைத்திருந்தார். இப்போது அவளை அழைத்து வந்ததையிட்டு அம்மாள் மனதுக்குள் எதை எதையெல்லாமோ நினைத்துப் பார்த்தாள்.

பூதியுடன் வந்த அந்தப் புதியவள் யார் என்பது அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆயினும் அவள் கண்ணால் காணாத அந்தப் புதியவளைப் பற்றி எதை எதை எல்லாமோ நினைத்துப் பார்க்க வேண்டியதாயிற்று!

"அவள் இளம் பொம்பிளையோடா?" என்று அவள் கறுப்பையனைக் கேட்டு விட்டாள்.

அம்மாளின் இந்தக் கேள்விக்கு கறுப்பையனால் பதில் கூறமுடியவில்லை. சற்று வேளைக்கிடையில் "சின்னப்

பொண்ணு, கட்டைப் பொண்ணுங்க!'' என்று அவன் பதில் சொல்லிவிட்டான். அவள் கணித்த கணிப்பு அது!

அவளை ஒரு தடவை பார்த்துவிட வேண்டும் என்ற எண்ணம் அம்மாளுக்கு வந்தது.

தாவணிச் சேலையைச் சரி செய்து கொண்டு அம்மாள் பெருங்குடில் பக்கம் போனாள்.

முதலில் அவள் கண்கள் கண்டது செல்லியைத்தான்.

அவள் மிகவும் இளமையாக இருந்தாள்.

அவள் பருவத்தின் பூரிப்பு அம்மாளின் கண்களைக் குத்தியது.

அம்மாள் செல்லியைப் பார்த்த பார்வையைச் சற்றுத் தள்ளி இருந்த பூதி புரிந்து கொண்டாள்.

''எடி நீ ஆற்றை மோளெடி?'' இப்படி அம்மாள் கேட்க, செல்லி வாய் திறப்பதற்கிடையில் ''அது எங்கடை பேத்தை வைத்தி அண்ணையின்ரை மூத்தவளாக்கும்!'' என்று பூதியே பதில் சொன்னாள்!''

''நான் அவளைத்தான் கேட்டனான்!'' என்று தனது ஆளுமையை உறுதிப்படுத்தினாள் அம்மாள். சக்களத்திக்குத் தனது அதிகாரத்தை அவள் காட்டித்தான் ஆக வேண்டும்.

''என்னவும்?'' என்று கேட்டுக் கொண்டே இளையதம்பியர் வர, அம்மாள் படக்கெனக் குடிலை விட்டுப் போய்விட்டாள்.

இளையதம்பியர் பூதியின் முகத்தையே சற்றுப் பரிதாபமாகப் பார்த்தார். இந்தப் பார்வை ''அவள் ஏதாவது பேசிப் போட்டாளோ?'' என்று கேட்பதற்கு ஒப்பாயிருந்தது.

பூதி பேசாமல் இருந்தாள்.

இளையதம்பியரும் பேசாமலே நின்றார்.



''என்ன செல்லி, அம்மா ஏதும் சொன்னவோ?''

இப்படி இளையதம்பியர் கேட்டார்.

''ஆற்றை மோள் எண்டு கேட்டவ'', செல்லி பதில் சொன்னாள்.

''ஏனெடி பயப்பிட்டனி, அண்டைக்கு தோட்டத்தறையக்கை துணிஞ்சு என்னைக் கேட்டனீ, இப்ப பயந்திட்டாய என்ன?''

இளையதம்பியரின் இந்தக் கேள்வி செல்லியைச் சங்கடப்படுத்தி விட்டது.

''பேத்தை வைத்தியன்ரை மோள் எண்டு நான் சொன்னனான். சொன்னாப்போலை அவவுக்குப் பத்திக் கொண்டு வந்திட்டுது! ''உன்னைக் கேக்கேல்லை'' எண்டு என்னிலை அவ பாஞ்சுவிழ நாயினாரும் வந்திட்டுது!'' என்று பூதி கூறினாள்.

''உனக்கேனெடி தரகு வேலையை? அவள் சொல்லுவாள்தானை! செல்லி என்ன ஊமையே?'' என்று கேட்டு விட்டு இளையதம்பியர் போய்விட்டார்.

இளையதம்பியர் தன்னைக் கண்டித்துப் பேசிவிட்டதனால் பூதிக்குச் சற்றுக் கோபம் வந்துவிட்டது. அதுவும் செல்லிக்கு முன்னால் என்றால்! ஆனாலும் பூதி கோபத்தை அடக்கிக் கொண்டாள்.

கல்லுக் கிறேசரின் இரைச்சல் தொடங்கிவிட்டது

இப்போதுதான் ஜோவுக்குள் கற்களைத் தள்ளி அதை இயக்கி விட்டிருக்கிறார்கள்.

செல்லிக்கு இந்த இரைச்சல் புதிது.

செவிகளால் அந்த இரைச்சலைத் தாங்க முடியவில்லை.

''எணை அக்கை நிக்கேலாமை இரையுதெணை!'' என்றாள் அவள்.

''அது முதல்லை இப்பிடித்தான் இருக்கும் பெட்டை. போகப் போகப் பழகிப்போம்!'' என்றாள் பூதி.

அந்த இரைச்சலுக்குள் செல்லியால் பூதியுடன் பேச முடியவில்லை.

இடையே கறுப்பையன் செல்லிக்கும் பூதிக்குமாக இரண்டு சிரட்டைகளையும் கலக்கிய கோப்பியையும் கொண்டுவந்து கொடுத்துச் சென்றான்.

''என்னக்கை நேத்தைக்கு அலுமினிய ஏதனத்திலை வந்தது; இண்டைக்குச் சிரட்டை வருகுது?'' என்று கிறேசர் ஓசைக்கு மேலாகக் குரலை உயர வைத்துச் செல்லி பதியைக் கேட்டாள்.

''அதுதான் எனக்கும் ஒண்டுமாய் விளங்கேல்லை!'' என்று பூதியும் குரலை உயர்த்திப் பதில் சொன்னாள்.

மீண்டும் கிறேசர் சத்தம் மேலோங்கி நின்றது.

பொழுது மதியத்திற்கு வந்திருக்க வேண்டும்! அதனால் தான் சாப்பாட்டு வேளைக்காகக் கிறேசர் சத்தம் ஓய்ந்திருக்கிறது.

கிறேசர் வேலைக்காரர்களைச் சாப்பாட்டுக்கு அனுப்பிவிட்டு கிறேசர் கங்காணி சண்முகம் சாப்பாட்டுக்காகப் புறப்பட்டு விட்டான்.

வெளியே சென்றிருந்த இளையதம்பியரின் கார் இரைந்து கொண்டு வந்து சேர்ந்தது.

அவசர அவசரமாக இளையதம்பியர் காரில் இருந்து இறங்கிப் பெருங் குடிலுக்கு வந்தார்.

''இன்னும் அம்மா சாப்பாடனுப்பயில்லையே?'' என்று கேட்டுக் கொண்டே அவர் வந்தார்.

பதில் ஒன்றும் எழவில்லை.



''பூதி நீ பசிகிடப்பாய்! செல்லி பாவம்; பிஞ்சுப் பெட்டை! சுருண்டு போனாள்'' என்று அவர் மறுபடியும் குரல் கொடுத்தார்.

இதற்கும் பதில் கிடைக்கவில்லை.

உள்ளே வந்த இளையதம்பியர் பெருங்குடிலின் ஓரத்தோடு அலுமினியச் சட்டியில மேற்பரப்பில் புழுதி படர்ந்து கிடந்த கோப்பியையும், சிரட்டைகள் இரண்டையும் கண்டார்.

''அவள் பாவி கோப்பியையும் சிரட்டையளையும் அனுப்பியிருக்கிறாள். அதுதான் இவளவை அதைக் குடிக்காமல் வைச்சிருக்கிறாளவை!'' என்று அவர் மனதால் சொல்லிக் கொண்டார். இருந்தாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் ''டேய் கறுப்பையா, இன்னும் இவளவைக்குச் சாப்பாடு குடுக்கையில்லையேடா? இப்ப நேரமென்னெடா?'' என்று இரைந்தார்.

சத்தங் கேட்டுக் கறுப்பையன் ஓடி வந்தான்.

''என்னங்க சொன்னீங்க?'' என்று விநயமாகக் கேட்டான்.

''ஏன்ரா மடையா! கோப்பியோடை சிரட்டையளைக் கொண்டு வந்து குடுத்தனீ? தோட்டத்துக்குக் கொண்டு போன அலுமினியப் பேணியள் எங்கையடா?''

அவரின் இந்த மறு கேள்விக்கு,

''அதுங்க... அதுங்க... வீட்டை வாற பள்ளியளுக்குச் சிரட்டையிலைதாங் குடுக்கிறதெண்ணு அம்மாதாஞ் சொன்னாங்க...'' என்று கறுப்பையன் தடதடத்தான்.

''நாங்க வீட்டிலை போய்த் திண்டிட்டு வாறமாக்கும்!'' என்று கூறிவிட்டுப் பூதி பெருங்குடிலுக்கு வெளியே வந்தாள். செல்லியும் அவள் பின்னாலேயே வந்தாள்.

# 13

இரவு வந்தபோது பூதியின் முற்றத்தில் பெண்களெல்லாம் கூடி இருந்தனர்.

அன்று பகல் வெங்காயத் தாள் கட்டு வேலைகளுக்கு நயினார் வீடுகளுக்குப் போனவர்களுக்கெல்லாம் அந்த வீடுகளில் அவர்களுக்கும்— பூதிக்கும் செல்விக்கும் கிடைத்த அனுபவந்தான் கிடைத்தது. சொல்லி வைத்தாற் போல எல்லா இடங்களிலும் ஒரே மாதிரி சிரட்டையும் கோப்பியும் வந்ததைப் போல சொல்லி வைத்தாற் போலவே எல்லோருமே அரை நேரத்துடன் திரும்பி விட்டனர்.

வந்தவர்களில் யாருமே பின்நேர வேலைக்குப் போகவில்லை.

ஆண்பிளைகள் ஆங்காங்கே வேலைக்குப் போயிருந்தனர். அவர்கள் எல்லோரும் வீடு திரும்ப சில வேளை நேரம் அதிகம் ஆகவுங்கூடும்.

முருகையனும், குணசிங்கனும் இளவாலைக்கு இருப்பிருந்து கல்லுடைப்பதற்காகப் போனவர்கள் வர இரண்டோ மூன்றோ நாட்கள் ஆகலாம்.

''திருப்பதியனும், செல்லத்துரையனும், மைக்கலும் சிறுப்பிட்டிப் பக்கத்திற்கு குழை தாழ்வுக் கொத்திறத்துக்குப் போனவர்கள் பின்னிலவு காலமாக இருப்பதால் சில சமயம் கொந்திறாத்தை முடித்துக் கொண்டு ஒன்று பாதிக்கு மேல்தான் வரக்கூடும்.

லோகேஸ்வரன் மயிலங்காட்டிலிருந்து இன்று அதிகாலையோடு வந்து பெண்கள் பகுதியினரின் சிரட்டை



தட்டுவம் ஒழிப்பில் வெற்றி கண்ட மகிழ்ச்சியைத் தெரிவித்து விட்டு, தான் வல்வெட்டித் துறையில் இருக்கும் அக்காள் வீட்டுக்குப் போவதாகச் சொல்லிவிட்டுப் போனவன் எப்போது திரும்புவான் என்று யாருக்கும் தெரியாது.

முக்கியமான இவர்களை உடனடியாகச் சந்திக்க முடியாது போனமையால்தான் பெண்கள் எல்லோரும் பூதி வீட்டு முற்றத்தில் கூடி இருந்தனர்.

''இளையதம்பி நயினாருக்குத் தெரியாமை உது ஒண்டும் நடந்திராது! எல்லா நயினார்மார் வீட்டிலையும் ஒரே மாதிரி நடந்திருக்கு!''

''தங்கடை தங்கடை வெங்காயக் கிளறல் முடியிற மட்டும் ஒரு மாதிரிச் சொல்லிக் காரியங்களை முடிச்சுப் போட்டு எல்லாரும் ஒத்தாப்போலை செய்திருக்கிறாங்கள்.''

''மருதப்பர் பொஞ்சாதி, அவதான் கனகம்மா நாச்சியார்! என்ன சொன்னவ தெரியுமே? அவள் பூதிப் பள்ளியின்ரை மையல்லை புது நயினார் இளையதம்பியன் ஒரு மாதிரி தோட்டத் தறையளுக்கை அலுமினியப் பேணியள்ளை எல்லாருக்கும் குடுக்க வைச்சிட்டான் எண்டு வீடு வாசல் வழியவும் சிரட்டையை விட்டிட்டு வேறை ஏதனத்திலை திண்டு குடிக்கலாம் எண்டு பள்ளியளுக்கும் ஒரு நினைப்பாக்கும்! எண்டெல்லே குத்திப் பேசினவ!''

''நீயும் ஒரு ரோசக்காறி எண்டெல்லே கதைக்கிறாய்! பூதி அக்கையை இழுத்துப் பேசையிக்கை சும்மா வாயை வைச்சுக் கொண்டிருந்திட்டு இப்ப பேசிறா! நானெண்டா அவநாச்சியாரைக் கேட்டிருப்பன்! அவவைப் போலை புரிசன் மலைபோலை இருக்கேக்கை இளையதம்பிக்கு முந்தானை விரிச்சதுபோலை மதி அக்கை செய்தவளோ?

எண்டு அவவின்ரை அரிக்கன் இறவிக்கை கழண்டு விழக் கேட்டிருப்பன்!''

''எடி எடி சும்மா அறுந்த கதையளை விட்டிட்டு இப்ப கதைக்கிறதைக் கதையுங்கோடி! இப்ப என்ன நாளைக்குப் வேலைக்குப் போறதோ விடுறதோ?''

''இஞ்சபார் இவள் பாவியின்ரை கதையை! இதுகள் அறுந்த கதையாம் இவவுக்கு! அமசடக்கா வீடு வழிய வேசையாடிற தேவடியாளவை வாய்க்கு வந்தபடி பூதி அக்கையை சொல்ல விட்டிருக்கிறதோ? ஓ, பூதி அக்கை கோவியன் எண்டாலும் ஒருதனைப் பிடிச்சு வைச்சிருக்கிறா! இவளவையைப் போலை கண்ட கண்ட மாதிரி நக்கேல்லை!''

''இஞ்சை, இப்ப எல்லாரும் வந்தது என்னைப் பற்றிப் பேசிறதுக்கோ இல்லாட்டி நாளைக்கு என்ன செய்யிறதெண்டு முடிவெடுக்கிறதுக்கு வந்தனிங்களோ?''

பூதியின் இந்தக் கேள்விக்குப் பின்பு வேண்டாத விதங்களில் எல்லாம் பேச்சுத் தொடரவில்லை.

''நாளைக்கு ஆரும் வேலைக்குப் போகப்படாது வெளியிலை போனவையும் வந்தாப்போலை முடிவெடுக்கும் வரையிலை போகாம நிப்பம்!''

செல்லி உருப்படியாகத் தனது அபிப்பிராயத்தை வைத்தாள்.

''செல்லித் தங்கச்சி சொல்லுறதும் சரி தான்! எண்டாலும் அவங்கடை வளவுவழிய குடியிருக்கிற நாங்கள். ஆகவும் எடுபிடியிலை நிக்கப்படாது!'' இப்படி அரை வயதைத் தாண்டிய ஒருத்தி பேசினாள்.

''நாங்கள் என்ன அவையோடை சண்டைக்கே போறம்? தோட்டத் தறைவழிய நேத்து முந்தநாத்து தந்த மாதிரி மரியாதையாத் தந்தாத்தான் வேலை செய்வ



மெண்டு சொல்லப்போறம்! அதுக்கு அவை இணங்கினாச் சரி இல்லாட்டி விடட்டுக்கன்!'' என்று செல்லி சொன்ன போது முன்னவள் அதை வெட்டிப் பேசினாள்.

''அவை காணிபூமிக்காறர், பொருள் பண்டக்காறர், ஐஞ்சாறு தலைமுறைக்குத் தின்னக்கூடிய காசுகளஞ்சு வைச்சிருக்கினம்! எங்களெட்டை என்ன கிடக்கு? எத்தினை நாளைக்கு வாயை வயித்தைக் கட்டிக் கொண்டு கிடக்கிறது? ஒரு வீட்டிலை ஒருதன் உளைச்சு பிள்ளை குட்டியளைப் பாக்கேலுமே? எல்லாத்தையும் செவ்வையாய் யோசிக்காமல் ஒண்டிலை இறங்கப்பிடாது பொடிச்சி!''

நடுவயதானவளின் பேச்சு முடியும் வரையில் செல்லியால் பொறுத்திருக்க முடியவில்லை.

''உப்பிடி உப்பிடி நெடுகப் பாத்துப் பாத்துத்தான் எங்கடை சனங்கள் உந்த நிலையிலை இருக்குதுகள்! ஒண்டைச் செய்யிறத்துக்கு முன்னம் கனக்க யோசிச்சா கடைசியிலை ஒண்டுஞ் செய்யேலாது! ஏன் கனக்க வேண்டாம்; உந்த நந்தாவில் கந்தசாமி கோயில்காரர் செத்தாலும் உவங்களை உள்ளுக்கு விடுகிறேல்லை எண்டு சொல்லிச்சினம்! கடைசியிலை என்ன நடந்தது? எங்கடை நாலைஞ்சுபேர் செத்தவைதான். பேந்தென்ன நடந்தது? அவையாலை எத்தினை நாளைக்குக் கோயிலைப் பூட்டி வைக்க முடிஞ்சுது! இப்ப திறந்து விடேல்லையே? எத்தினை இடம்வழிய தேத்தண்ணிக் கடைவழிய விடாமல் இருந்தவை; என்னபாடு பட்டினம்? அக்கை சொல்லிற மாதிரி எல்லாத்துக்கும் பார்த்துக்கொண்டிருந்தா ஒண்டும் நடவாது! ஒண்டில் அறுகுது அல்லது கிழியுது!''

செல்லி ஆவேசமாகப் பேசி முடித்த போது,

''செல்லிப்பொட்டை சொல்லுறதுதான் சரி எத்தினை நாளைக்கு இந்த நாளைய சீலப்படுகிறது! அவை என்ன கடிச்சே புடுங்கிப் போடுவினம்?''

இப்படி ஒரு குரல் செல்லி சொன்னதைஅனுமதித்தது.

''எனக்கென்ன உது விருப்பமில்லை எண்டு சொன்ன மாதிரி என்னிலை ஏறிப்பாயிறளவை! மற்றப் பக்கத்து நியாயங்களையும் யோசிக்காமல் கண்ணைமூடிக்கொண்டு போகப்படாது எண்டுதான் சொன்னனான். எல்லாருமா ஒத்துச் செய்யிறதுக்கு நான் என்ன மாறே?''

என்று தனது ஒப்புதலை ஒருமாதிரித் தெரிவித்துக் கொண்டாள் நடு வயதுக்காரி.

''எலலாத்தையும் பொடியளோட யோசிச்சுப் போட்டுத்தான் செய்ய வேணும்; நாளைக்கு ஒத்தபடி எல்லாரும் வேலையளுக்குப் போகாமல் நிப்பம்!''

என்று முடிவான ஒரு தீர்மானத்தை வைத்தாள் பூதி.

''சிலவேளை நயினார்மார் வீடுகள்ளை இருந்து வரச் சொல்லி ஆக்களை அனுப்பினாலும் அனுப்புவினம்! அப்ப என்ன செய்யிறது?''

ஒருத்தி இப்படிக் கேட்டாள்.

''அனுப்பினா அனுப்பட்டன்! எல்லாம் யோசிச்சு வாறம் எண்டு சொல்லி அனுப்புவம்! வாறவை என்ன காதுக்கையே பூந்திடுவினம்?''

செல்லி படக்கென்று சொன்னாள்!

''இந்தப் பெட்டை சுடுகுது மடியைப்பிடி எண்டுதான் நிக்கிறாள்! யோசிச்சுப்போட்டு வாறம் எண்டு அவைக்கேன் சொல்லுவான். வாறம் போங்கோ எண்டு சொல்லி அனுப்புவம்! பேந்தும் ஆக்களை அனுப்பினாச் சுகமில்லை நாளைக்கு வாறம் எண்டு சொல்லுவம்! பிறகு பொடியளோடை யோசிச்சுப்போட்டு மிச்சத்தைக் கதைப்பம்!''

இப்படியே அந்த நடுவயதுக்காரி செல்லிக்கு மறுப்புச் சொன்னாள்.

''ஏன் பொய் சொல்லுவான்; தேவையில்லாமை?''



செல்லி கேட்டாள்.

''தேவை இல்லாமை எண்டு ஆர் சொன்னது பொடிச்சி? இவள் பொடிச்சி நயினார் அவைக்கு அரிச்சந்திரன் மாதிரி நடக்கப் பாக்கிறாள்!''

நடுவயதுக்காரியின் இந்தப் பேச்சிக்குப்பின் பேச்சுகள் நீடிக்கவில்லை.

எல்லோரும் கலைந்து செல்ல நிலவு மேலே வந்துவிட்டது.

## 14

இரவு படுப்பதற்கு ஒண்டுபாதி ஆகிவிட்டதால் உடம்பின் அலுப்புத் தீரப் பூதி நன்றாக விடியும் வரை தூங்கிவிட்டாள். வழக்கத்தில் அவள் இப்படி இல்லை.

அவள் தனிக்கட்டை. ''ஏன் இவ்வளவு நேரம்?'' என்று கேட்பதற்கு யார் இருக்கிறார்கள். குடிசையின் கிழக்குப்புற கிடுகு அடைப்புக்கூடாக உள்ளே வந்த சூரியக் கதிர்கள் தான் அவள் உடம்பை மெதுவாகச் சுடச் செய்து அருட்டி விட்டிருந்தது.

''பூதி; பூதி'' என்ற ஒரு குரலும் போதாக் குறைக்கு வெளியே இருந்து வந்ததனால் அவள் கண்விழித்து, ஓலைக்கீற்றுப் படலையைத் தள்ளிக் கொண்டு வெளியே வந்தாள்.

குடிசைக்கு முன்னால் இளையதம்பியரின் வேலைக்காரன் கறுப்பையன் நின்றான்.

பூதி கறுப்பையனின் வரவை எதிர்பார்த்திருக்கவில்லை; ஆயினும் உடனடியாகவே அவன் வந்த காரணத்தைக் கண்டுவிட்டாள்.

''பூதி, ஐயா உங்களை கூட்டிட்டு வரட்டாமுங்க!''

கறுப்பையனும் வந்த காரணத்தை நீட்டி முடக்காமல் எடுத்த எடுப்பிலேயே சொல்லிவிட்டான்.

''எனக்கு உப்ப வர நேரமில்லை; பேந்து வாற தெண்டு போய்ச் சொல்லு கறுப்பையா!'' என்று பூதி வெடுக்கெனக் கறுப்பையனுக்கு பதில் சொன்னாள்.

''என்னங்க பூதி! நீங்க ஒண்ணு! கையோட கூட்டிட்டு வரச் சொல்லி ஐயாவு சொல்லிட்டிருக்காரு......!'' என்று கறுப்பையன் இழுத்தாற் போலக் கூறினான்.

திடீரெனப் பூதியின் மனதில் ஒரு எண்ணந் தோன்றியது. இரவு நயினார் வீட்டில் நயினார்மார் கூடிப் பேசி ஏதோ நடந்திருப்பதாகவும், அதனால் அவன் அனுப்பப் பட்டிருப்பதாகவும், கறுப்பையாவிடமிருந்து முன்கூட்டியே அதை அறிந்துவிடுதல் தனக்கு உதவியாக இருக்கும் என்றுதான் அவள் எண்ணினாள்.

''தம்பி கறுப்பையா, ஏன் மோனை அவசரப்படுறாய்? எப்பன் இரன் வாறன்!'' என்று இதமாகக் கூறினாள்.

கறுப்பையனுக்கு மனது குளிர்ந்தது. குடிசைக்கு முன்னால் நின்ற சரிந்த பனை மரத்தில் சாய்ந்து கொண்டான் அவன்.

பூதி மறுபடியும் குடிலுக்குள் சென்றவள் கையில் ஒரு மாம்பழத்துடனும் சிறு கத்தியுடனும் திரும்பி வந்து, ''இந்தா மோனை இதை எப்பன் வெட்டித் திண்டு பார்; செம்பாட்டான் பழம்! நீ உன்ரை ஐயாவீட்டையும் இப்பிடித் திண்டனியோ எண்டுபார்!'' என்று கூறிக் கொண்டே அவனிடம் நீட்டினாள்.

கறுப்பையன் தயங்கினான்.

அவன் ஏன் தயங்குகிறான் என்பது பூதிச்குத் தெரியும்.



எளியஞ் சாதி வீட்டில் அவன் இப்பிடித் தின்னக் கூசுகிறான்!

''இஞ்சை ஆருங் காண மாட்டினமெடா தம்பி; நீ வெட்டித் திண்டு பார்!''

''அதுக்கில்லைப் பூதி!'' என்று அசடுவழியக் கூறிக் கொண்டே மாம்பழத்தையும் கத்தியையும் வாங்கிக் கொண்டான்.

பூதி கோடிப்புறம் போய் விட்டாள்.

அவள் திரும்பி வரும்போது கறுப்பையன் மாங்காயைச் சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

''என்ன கறுப்பையா, இரவு வீட்டை ஆர் வந்தினம்; ஏதெட்டாலும் நடந்துதோ!'' என்று பூதி கேட்டாள்.

''ஓம் பூதி, எல்லாக் கமக்காறங்களும் சேந்து வந்து ஐயாவைப் பிச்சுப் பிடிங்கியிட்டாங்க! உங்க பேரையும் இழுத்திழுத்துப் பேசிட்டிருந்தாங்க. அவங்க போனப்புறம் அம்மாவும் ஐயாவைக் கிழிகிழியெண்ணு கிழிச்சாங்க! 'பள்ளிச்சியோட படுக்கப் போய் ஊரவங்களெட்டையெல்லாம் இப்பிடித் திட்டு வாங்கிறதுக்கு வெக்கப்படேல்லையா?' எண்ணு ஐயாவைக் கேட்டாங்க! ஐயாவுக்குக் கோபம் வந்திடிச்சு! அம்பாவைப் போட்டு மொங்கு மொங்கெண்டு மொங்கிட்டாரு! நாஞ் சொன்னேண்ணு சொல்லிடாதீங்க பூதி! அம்மா விட்டாங்களா? அவவும் ஐயாவை மொங்கிட்டாங்க!......... அப்புறம்......... அப்புறமா......''

கறுப்பையா மனதில் கிடந்தைச் சொல்லி முடிக்கவில்லை; இடையே துண்டித்து விட்டான்.

பூதி வீட்டுக்குள் சென்று இன்னோர் மாங்காயை எடுத்து வந்து கறுப்பையனிடம் கொடுத்தாள்.

முதல் மாங்காயை முடித்து அதன் கொட்டையைச் சூப்பிக் கொண்டே கதை சொல்லிக் கொண்டிருந்த கறுப்

பையன் கொட்டையை அப்புறமாக விசுக்கி எறிந்து விட்டு மறு மாம்பழத்தைச் சீவத் தொடங்கினான். அது சீவுவதற்கு இதமில்லாததாக இருந்தது. நசிபட்டுக் கூழாகிக் கிடந்ததால் கத்திக்கு அது நழுந்திக் கொண்டிருந்தது.

''அது எப்பன் கூடக் குறையப் பழுத்துப் போச்சு மோனை. வெக்கப்படாதை சூப்பித் தின்! கைகழுவிறதுக்கு வேணுமெண்டால் தண்ணி தாறன்!'' என்று பூதி மிகவும் நைசாகப் பேசினாள்

அங்குமிங்குமாக ஒரு தடவை வெருண்டு பார்த்து விட்டுக் கறுப்பையன் பூதி சொன்னபடியே பழத்தைச் சூப்பத் தொடங்கிவிட்டான்.

''எப்பிடி மோனை பழம்?'' என்று பூதி கேட்ட கேள்விக்கு, ''செம்பாட்டான் பழம் எண்டால் கேக்க வேணுங்களா?'' என்று கறுப்பையன் பதில் சொன்னான்.

''கதையை இடையிலை முறிச்சுப் போட்டாய் மோனை! பேந்தென்ன நடந்தது? என்னெட்டைச் சொல்லுறத்துக்கு என்ன பயம்? சொல்லடா மோனை!''

பூதி கேட்ட மறு கேள்விக்குக் கறுப்பையனால் உடனே பதில் சொல்ல முடியவில்லை.

''என்னெண்டா... பேந்தென்னெண்டா......''

பேசமுடியாமல் கறுப்பையன் இப்படியே இழுத்துக் கொண்டிருந்தான்.

''பூதி, உங்கிட்டைச் சொன்னா என்ன? என்னைப் புடிச்சுக் குடுத்திட மாட்டீங்களே!'' இப்படிச் சொல்லி விட்டு அவன் பூதியின் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தான்.

''உந்தப் புன்னாலைக் கட்டுவன் கந்தசாமியாராணை நான் உன்னைப் பிடிச்சுக்குடன்!''

பூதி கட்டுவன் கந்தசாமியாருக்கு மேலாகச் சத்தியம் வைதது விட்டாள்.



''அதை ஏனுங்க கேக்கிறிங்க? அம்மாவு துடப்பன் கட்டையாலை ஐயாவை மொங்கிப் போட்டு தாலியை அறுத்து அவரு மூஞ்சியிலை விட்டெறிஞ்சாங்க...... அப்புறமா வீட்டுக்கை போய் படாரென்று அடிச்சுப் பூட்டியிட்டாங்க! ஐயா கிறேசருக்கை தானுங்க வந்து படுத்தாரு! நமக்கேணுங்க உந்தச் சோலி சுறட்டெல்லாம். நான் கண்ணை மூடிட்டுத் தூங்குறாப் போலை கிடந்திட்டேனுங்க: விடிஞ்சுதாங்க, ஐயா வந்து என்னைக் கூட்டிட்டுப் போய் கிறசரடியிலை வைச்சு பூதியைப் போய்க் கையோட கூட்டிட்டு கிறசருக்கு வாடாண்ணு சொன்னாருங்க; அப்புறமா நான் வந்திட்டேனுங்க......''

கறுப்பையன் பூதி வீட்டுக்கு வந்தது வரை சொல்லி முடித்து விட்டான்.

பூதி ஒரு முட்டிக்குள் தண்ணீர் எடுத்து வந்து கறுப்பையன் கைகளுக்கு ஊற்ற, கறுப்பையன் கைகளைக் கழுவிக் கொண்டான்.

''தம்பி, மோனை ஐயாவிட்டப் போய் பூதியை வீட்டிலை காணவில்லை எண்டு சொல்லு மோனை! நான் ஒண்டுந்தெரியாது போல மத்தியானம் வாறன். இப்ப நீயும் நானும் ஒண்டாப் போனா ராத்திரி நடந்த காரியங்களை நீ என்னிட்டைச் சொன்னாலுஞ் சொல்லி இருப்பாய் எண்டு ஐயா நினைச்சாலும் நினைப்பார்!''

பூதி சொன்ன, இந்த உபாயம் கறுப்பையனுக்குச் சரியாகவே பட்டிருக்க வேண்டும்! ''ஓம் பூதி, நீங்க சொல்ற மாதிரிச் செய்திட்டாப் போச்சு! நாம ஏன் வீணாக் கரைச்சலுக்கை மாட்டிட்டு அவஸ்தைப் படுவான்!'' என்று சொல்லிக் கொண்டு கறுப்பையன் உடுத்தியிருந்த சாரத் துணிவரை குனிந்து, மாம்பழச் சுவடுகளைத் துடைத்துக் கொண்டே நடக்கத் தொடங்கி விட்டான்.

அவன் பனங்கூடலுக்கூடாகக் கண்ணுக்கு மறையும் வரை பார்த்து நின்று வீட்டு பூதி வயிற்றுப் புகைச்சலுக்கு

தண்ணீர் சுடவைப்பதற்காக முற்றத்தில் கிடந்த பனம் பன்னாடைத் துண்டுகளை எடுத்துக் கொண்டு உள்ளே போனாள்.

''என்ன பூதி அக்கை! நயினார் வீட்டுக் கறுப்பையன் வந்திட்டுப் போறான் போலை கிடக்கு! என்னவாம்? ராத்திரி ஆளுக்கு நித்திரை வரையில்லையாமோ?'' என்று கேட்டுக் கொண்டே செல்லி வந்தாள்.

## 15

கறுப்பையன் கிறேசரடிக்குப் போனபோது இளையதம்பியரைத் தவிர அங்கு யாரும் இருக்கவில்லை.

கிறேசர் வேலைக்காரர் வர இன்னும் நேர இருந்தது. ''பூதி எங்கையெடா? அவள் ஏன்ரா வரேல்லை?'' என்று இளையதம்பியர் அதட்டினார்.

''அதென்னெண்டாலுங்க, பூதி வீட்டிலை இல்லைங்க; வீட்டினல படலை கட்டிக் கிடக்குங்க!''

கறுப்பையன் நசிந்து கொண்டே கூறினான்.

''என்னடா அது? அவள் அங்கை இல்லையோ? எங்கையெடா விடியக்கு முன்னம் ஆடப்போட்டாளோடா?''

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வது கறுப்பையனுக்கு முடியாத ஒன்று. அவன் மௌனமாக நின்றான்.

''டேய், என்னெடா நான் கேக்கிறேன் நீ வாயை மூடிக்கொண்டு நிக்கிறாய்?''

இளையதம்பியர் மீண்டும் ஒரு கேள்வியைக் கேட்டார்.



''அவங்க எனக்குச் சொல்லிப் போட்டுப் போனாங்களா?''

இப்படிக் கறுப்பையன் பதில் சொல்லிவிட்டான்.

வந்தது நாசம்!

ஆவேசம் வந்தவரைப்போல இளையதம்பியர் அவன் மீது பாய்ந்தார்; காலாலும் கையாலும் அவனை உதைத்தார்; அடித்தார்.

உடம்பைச் சுருக்கிச் சுருக்கிக் கொண்டு அவன் அந்த அடி உதைகளை வாங்கிக் கொண்டான்.

அவனுக்கு இது பழகிய ஒன்று!

''வடக்கத்தையான்ரை வாய்க்கொழுப்பைப் பார்! நீர் எதிர்த்துப் பேச வெளிக்கிட்டீர் என்ன?'' என்ற கேள்வியுடன் இளைய தம்பியர் தனது ஆவேசத்தைக் குறைத்துக் கொண்டார்.

அவர் உடம்பு களைத்தது.

மூச்சு வாங்கியது.

அடியை வாங்கிக் கொண்ட கறுப்பையன் ஒரு பக்கத்தோடு நின்ற பனைமரத்தோடு முகத்தை முட்ட வைத்துக் கண்ணீர் விட்டபடி நின்றான்.

''டேய் நாயே! போடாங்காலை!, என்ரை கண்ணிலை படாமைக்கு அங்காலை போடா!'' என்று இளையதம்பியர் இறைந்தார். இந்த இரைச்சலுக்கு அசைந்து கொடுக்காமலே கறுப்பையன் மரத்தோடு நின்று விம்மிக் கொண்டே இருந்தான்.

''டேய் வடக்கத்தியன்! உன்னெட்டை என்னடா சொன்னனான் நாயே! உமக்குக் கொழுப்பு மிஞ்சிப் போச்சு!'' என்று கூறிக் கொண்டே இளையதம்பியர் பக்கத்தே கிடந்த தென்னம்பூப்பாளை ஒன்றை எடுத்து அவனைத் தாறுமாறாக அடித்து நெகிட்டினார்.

கறுப்பையன் பாவம்!

கைகள் இருந்தும் அவைகளை உயர்த்த முடியாதவன்! ஒன்றுதான் அவனால் செய்ய முடிந்தது. பிடிவாதமாக நின்ற இடம் நகராமலே நிற்பது! அவ்வளவுதான்!

இளையதம்பியரின் கை ஓயவே, பாளையை அப்புற மாக விட்டெறிந்து, கொடியில் கிடந்த தனது அரைக்கை வட்டக் கழுத்து நைசனலை எடுத்துப் போட்டுக் கொண்டு வெளியே புறப்பட்டு விட்டார்.

கறுப்பையன் நின்ற இடத்திலேயே நின்றான்.

அவன் உடம்பில் பாளைக் காம்புகளின் தடிப்புக்கள் படிந்து பொருமி வந்தன.

"வேசைமோனே! நான் வரேக்கை உதிலை நின்டி யென்டால் உன்ரை முதுகுத்தோலை உரிச்சுப்போடுவன்!" என்று இரைந்துகொண்டே இளையதம்பியர் புறப்பட்டு விட்டார்.

சற்று வேளைக்குப் பின் இளையதம்பியரைத் தேடிக் கொண்டு வாத்தியார் வந்தார்.

''இளையதம்பியர்; இளையதம்பியர்'' என்று அழைத் துக்கொண்டே வந்த வாத்தியார் கறுப்பையனைக் கண்டு விட்டார்.

''என்னெடா மோனை உன்ரை கோறம்?'' என்று கேட்டுக்கொண்டே வாத்தியார் கிட்ட வருவதற்கிடையில் கறுப்பையனின் விம்மல் வெடித்துப் பெருங்குரல் ஆகி விட்டது.

ஏதோ நடக்கக்கூடாதது நடந்திருப்பதாக வாத்தி யார் ஊகித்துக் கொண்டார்.

கறுப்பையனைச் சிறிது வேளை அழவிட்டுவிட்டார். அவன் அழுது, விம்மி, கடைசியில் விக்கல் அளவுக்கு வந்து விட்ட தன்மேல் வாத்தியார் அவனின் தடிப்புக் குறிகள்



அடர்ந்திருந்த பகுதிகளைத் தடவி விட்டபோது அவை களில் இருந்த இரத்தக் கசிவுகள் அவரின் கையில் ஒட்டி யது. வாய்க்குள் 'சூக்' கொட்டிக் கொண்டு வாத்தியார் தன் உடம்பை ஒட்டியிருந்த சால்வையை எடுத்து அந்த இரத்தக் கசிவுகளை ஒற்றி எடுத்தார். கறுப்பையன் உடம்பை நெளித்து நெளித்து அவரின் ஒத்தடத்திற்கு ஒத்தாசை செய்தான்.

இப்போது கறுப்பையனுக்கு அழுகை முற்றாக நின்று விட்டது.

''மோனை கறுப்பையா என்ன மோனை நடந்தது?'' என்று வாத்தியார் கேட்டார்.

''அது வாத்தியாரை, பூதியைக் கையோட கூட்டிட்டு வரச் சொல்லி ஐயா சொன்னாங்க; நான் போனனுங்க; அங்கை பூதி இல்லைங்க; நான் திரும்பி வந்து சொன்னே னுங்க; அதுக்கு என்னைப்போட்டு ஒதைச்சிட்டு இப்பிடித் தென்னம்பாளையாலை சாத்து சாதென்ணு சாத்தியிட் டாருங்க!''

கறுப்பையன் ஒரு மாதிரிப் பேசி முடித்துவிட்டான்.

கதைசொன்ன முடிவில் அவனுக்கு மறுபடியும் வெப்பி யாரம் வந்துவிட்டது. அவன் மறுபடியும் விம்மினான்.

''தம்பி, கறுப்பையா! அதுக்கென்ன ஐயாதானை அடிச்சவர்; அடிக்கிற கைதான்ரா அணைக்கும்! போ; போய் வீட்டிலை அலுவலிருக்கும் செய்!'' என்று அவனை ஆசுவாசப்படுத்தி வீட்டுக்கு அனுப்பி வைக்க முயன்றார் வாத்தியார்.

அப்போது இளையதம்பியரின் வேலைக் கங்காணி சண்முகம் வந்தான்.

கறுப்பையனின் கோலத்தையும், சுப்பையா வாத்தி யார் அவனுக்கு தேறுதல் கூறுவதையும் கண்டுவிட்ட அவன் ''என்ன வாத்தியார் கறுப்பையன்ரை கோலம்?

என்ன வாத்தியார் நடந்தது?'' என்று கேட்டுக்கொண்டே வந்தான்.

''தம்பி பொறடா நான் எல்லாம் சொல்லுறன். கறுப்பையா நீ போமோனை!'' என்று சொல்லி வாய் மூடுமுன் இளையதம்பியர் திரும்பி வந்துவிட்டார்.

''இஞ்சார், நான் சொல்லிப் போட்டடன், தன்ரை தன்ரை அலுவலைப் பார்த்துக் கொண்டு போகிட வேணும்! தேவையில்லாத காரியம் பாக்கப்பிடாது!'' என்று சற்றுக் கடுமையாகச் சொல்லிக் கொண்டே வந்தார்.

கங்காணி அப்பால் நகர்ந்து விட்டான்.

வாத்தியாருக்கு இளையதம்பியரின் பேச்சுப் பிடிக்கவில்லை.

''என்ன இளையதம்பியர் கதை அவ்வளவு நல்லாயில்லை!'' என்று எடுத்தார் போல அவர் கேட்டுவிட்டார்.

''டேய் கறுப்பையா, போடா வீட்டை! வாறவை போறவை யோடை என்னடா உனக்குக் கதை? போடா வீட்டை!'' என்று கறுப்பையனை உரப்பினார் இளையதம்பியர்.

இப்போது வாத்தியாருக்கு மனதுக்குள் ஏதோ ஒன்று தெரிந்தது. 'ஏதோ எக்கச்சக்கமான காரியம் ஒன்று நடந்திருப்பதாகவும், அதைக் கறுப்பையன் தங்களிடம் சொல்லிவிடப் போகிறான் என்று பயந்துதான் இளையதம்பி இப்படிப் பேசுகிறான்' என்று வாத்தியாரின் மனதுக்குள் ஒன்று படமாகத் தெரிவது போல இருந்தது.

''இஞ்சை இளையதம்பியர் உம்மடை வேலைக்காறனை நீர் என்னென்டாலுக்கு செய்யும்! ஆனால் கண்கடை தெரியாமல் பேசப்படாது! ஆரோடை பேசிறன் எண்டு கவனிச்சுப் பேசவேணும் கண்டீரோ?''



இப்படிச் சற்றுக் கடுமையாக வாத்தியார் பேசிவிட்டார்.

''இஞ்சேர் சட்டம்பி, என்னை நீ பயப்படுத்தப் பாக்கிறாய் என்ன? நீ என்ன எனக்குத் தலைப்பே!'' என்று பதில் கேள்வி கேட்டுவிட்டு இளையதம்பியர் கிறேசர் அடைப்புக்குள் போய்விட்டார்.

வாத்தியார் தொடர்ந்தும் அங்கு நிற்கவில்லை.

# 16

வாத்தியார் பெரும் பனங்கூடலைத் தாண்டித் தோட்டக்கரையில் மிதந்து பூதி வீட்டுப் பக்கமாகப் போய்க் கொண்டிருந்தார்.

இளையதம்பியரைச் சந்திக்க வந்தபோது அவர் பூதி வீட்டைப் பற்றி நினைக்கவில்லை. இப்போதுதான் அந்த நினைப்பு அவருக்கு வந்திருக்க வேண்டும்!

கறுப்பையனை இளையதம்பியர் அதிகாலையோடு பூதி வீட்டுக்கு அனுப்பி வைத்ததும் அவன் இப்படி உதைபட்டதும், இளையதம்பியர் கண்மண் தெரியாமல் இப்படிப் பேசியதும் ஏதோ ஒரு பெரிய விஷயத்திற்காகத்தான் என்பது அவர் நினைப்பு. அதனால்தான் அவர் பூதி விட்டை நோக்கி இவ்வளவு அவசரமாகப் போகிறார்.

பூதி வீடு வருவதற்கிடையில் அவர் நெஞ்சத்தில் பல எண்ணங்கள் அலைமோதின. 'இந்த இளையதம்பி இப்படி என்னோடை பேசிப் போட்டான்!' என்ற எண்ணந்தான் எல்லாவற்றையும் விடத் தலைதூக்கி நின்றது.

இளையதம்பியரின் வரலாற்றுச் சுருக்கத்தை அவரின் மனது தனக்குள் திரையிட்டுப் பார்த்துக் கொண்டது.

இளையதம்பியர் சமையல் கோலத்துடன் உடுவில் பெண்கள் பாடசாலையில் நின்ற காட்சி...

இளையதம்பியர் சுன்னாகச் சந்தைக்குள் பாடசாலைச் சமையல் தேவைக்காகக் காய்ப்பிஞ்சுகளை வாங்கித் தனது பெருங்கரியர் சயிக்கிளில் கட்டிக் கொள்ளும் காட்சி...

இளையதம்பியர் தங்களைப் போன்றவர்களைக் கண்டவுடன் தோளிலிருந்து சால்வையை எடுத்துக் கெண்டைக் கையில் போட்டுக்கொண்டு விலகி நிற்கும் காட்சி...

இளையதம்பியரின் உறவினர்கள் பிரேதம் தூக்கியும், முகிலாப்புப் பிடித்தும் செல்லும் காட்சி...

இளையதம்பியர் தனது கைபடவே சுன்னாகத்து ஆலடிச் சுடலை வெளியில் கல்லரித்துக் குவியலாக்கும் காட்சி...

இளையதம்பியர் பழைய லொறி ஒன்றினைத் தள்ளித் திரியும் காட்சி...

இப்படிப் பல காட்சிகள் அவர் மனத்தினுள் தெரிந்தன.

அவர் பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டார்.

இப்போது மாவிலங்கையடிச் சந்திப்பு கழிந்து விட்டது.

பூதி வீடு சமீபித்து விட்டது.

அப்போதுதான் பூதி வீட்டிலிருந்து செல்லிப் பெட்டை வெளியே வந்து கொண்டிருந்தாள்.

"உதாரு, ஏன் பொட்டை பூதி இருக்கிறாளே?" என்று வாத்தியார் கேட்டார்.



"ஓமாக்கும், உங்கைதான் இருக்கிறா!" என்று மொட்டையாகக் கூறிவிட்டு செல்லி அவரை விலத்திக் கொண்டு சென்றாள். "ஓகோ வாத்தியார் நயினாரையும், இளையதம்பி நயினார் தரகுக்கு விட்டிருக்கிறார் போலை கிடக்கு" என்று அவள் மனது நினைத்துக் கொண்டது.

வாத்தியார் பூதி குடிசையின் முற்றத்திற்கு வந்து விட்டார்.

யாரோ வரும் அரவங்கேட்டு பூதி முற்றத்தைப் பார்த்தாள், நின்றது வாத்தியார்.

"என்னவாக்கும் வாத்தியார் நயினார்?" என்று கேட்டுக் கொண்டே அவள் வெளியே வந்தாள்.

"ஒண்டுமில்லைப் பூதி, நான் உன்னெட்டைத்தான் ஒரு அலுவலாய் வந்தனான்..."

வாத்தியார் மேலே ஏதோ பேசுவதற்காகப் பூதியின் அனுமதியைக் கேட்பது போலத் தயங்கினார்.

"அது வாத்தியார் நயினார் நான் தனிய ஒண்டுஞ் செய்யேலாது! நயினார் ஏன் வந்திருக்கெண்டும் எனக்கு விளங்குது! நான் இளையதம்பி நயினாருக்கு வைப்பாடிச்சி தான். எண்டாலும் இது ஊருக்கு ஒத்த விஷயம்! அவளவை ஒருத்தியும் வேலைக்கு வரச் சம்மதிக்கிறாளவை இல்லை. நான் என்ன செய்யிறது?"

பூதி இப்படிப் பேசி முடித்து விட்டாள்.

இதை வாத்தியார் எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் அவர் ஆச்சரியப்படவில்லை.

"இல்லைப் பூதி..."

வாத்தியார் வாய் திறக்குமுன் "நம்மாணை வாத்தியார் நயினார், உதைமட்டும் என்னெட்டைக் கேக்காதையுங்கோ! ஊருக்கு மாறாய் நான் ஒண்டுஞ்

செய்யமாட்டன்! பேந்து அவளவை என்னைத் திண்டு கை கழுவிப் போடுவாளவை!'' என்று கூறி முத்தாய்ப்பு வைத்து விட்டாள் பூதி.

''பூதி நான் சொல்லுறதைக் கொஞ்சம் கேளடி...''

இப்போது வாத்தியார் பேசி முடிக்கவில்லை...!

''அண்டைக்கும் இப்பிடித்தான் இளையதம்பி நயினார் சொல்லுறதைக் கேட்டு நம்பி அவளவையை வேலைக்கு அனுப்பினனான்! வெங்காயக் கிளறல் மட்டும் அலுமினிய ஏதனத்திலை தண்ணி குடுத்தினம்! பேந்தென் னெடாண்டா சிரட்டையிலை குடுக்கத் துவங்கியிட்டினம்! அவதான் இளையதம்பி நயினாற்றை மூத்தவ! அவ என்னைப் பாத்துக் கேக்கிறா பள்ளியளுக்கும் ஒரு நினைப்போண்டு! அவவுக்குத் தெரியேல்லை என்னைப் பற்றி! நான் தெரியாமக் கேக்கிறன் வாத்தியார் நயினார்! ஒரு ஆன வெள்ளாடிச்சி சொன்னாலும் பறவாயில்லை. உவ சொல்ல இந்தப் பூதி கேக்கிறதோ? நம்மாணை நயினார் நான் சொல்லிப் போட்டன்; ஊரிலை இருக்கிற வளவை பட்டினி கிடந்து செத்தாலுஞ் சாவாளவையே தவிர இப்பிடி மானங்கெட்ட சீவியம் சீவிக்காளவை! காலமை அவன் கறுப்பையாப் பொடியனையும் இளைய தம்பிக் கமக்காறன் அனுப்பினவர்; நான் இல்லை எண்டு போய்ச் சொல்லச் சொல்லி அனுப்பிப் போட்டன். இப்ப நம்மைப் பிடிச்சு அனுப்பியிருக்கிறார்! அவர் நினைச்சார் பொண்டிலெட்டை விளக்குமாத்தாலை அடி வாங்கிக் கொண்டு சீவிக்கிற சீவியம் பள்ளியளும் சீவிப்பாளவை யெண்டு! மழைக்கால இருட்டெண்டாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாதெண்டு அவருக்குத் தெரியேல்லை! சீ உப்பிடியும் ஒரு சீவியமோ? பொண்டிலெட்டை அடியும் வாங்கிப்போட்டு, அவள் தாலியை அறுத்து மூஞ்சையிலை எறிஞ்சாப் பிறகு சீவிக்கிற சீவியமும் ஒரு சீவியமோ? எங்கடை பள்ளியிலை ஒருத்தி இப்பிடிச் செய்யவும்



மாட்டாள்; ஒரு பள்ளனும் இப்பிடி வெக்கங்கெட்ட உயிரை வைச்சிருக்கவும் மாட்டாள்... தூ...!''

பூதி மூச்சைப் பிடித்துப் பேசி முடித்துவிட்டுக் காறி உமிழ்ந்து கொண்டாள்!

வாத்தியார் வந்த விஷயத்தை எடுத்துக் கொண்டார். அதனால் அவருக்கு மனது நிறைந்த திருப்தி!

''அதுதான் பூதி சொல்ல வந்தனான்; அவன் கறுப் பையனை இளையதம்பி போட்டு நொருக்கினான்; அதைப் பற்றித்தான் உன்னெட்டைக் கேக்க வந்தனான்...''

உபாத்தியாயரின் பேச்சு பூதியை ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டது.

கறுப்பையன் தனக்கு மட்டும் முதல் முதலில் சொன்ன இந்தத் தகவல்கள் இத்தனைவிரைவில் இளையதம்பியருக்கு எப்படித் தெரிந்தது என்பதனை அவளின் சின்ன மூளை யால் அனுமானிக்க முடியவில்லை.

''நம்மாணை வாத்தியார் நயினார், ராத்திரித்தான் உது நடந்ததாம்; அதைத்தான் அந்தப் பாவிப் பொடியன் எனக்குச் சொன்னவன். நான் இன்னும் உதைப்பற்றி ஆருக்கும் மூச்சு விடேல்லை. அதுக்கிடையிலை உதை அவர் எப்பிடி அறிஞ்சவர்? எனக்குச் சொல்லிப் போட்டன் எண்டு அவன் பொடியன் சொல்லி இருக்க மாட்டான்! ம்...''

பூதி பேசாமல் சற்று யோசனையில் இருந்தாள்.

வாத்தியாருக்கு உள்மனதில் சிரிப்பு வந்தது.

பூதியின் யோசனைக் கறுப்புத் திரையை அவரால் ஓரளவுக்கு விடுவிக்க முடிந்தது.

இளையதம்பியர் பூதிக்கு அவன் சொல்லிவிட்டான் என்பதைத் தெரிந்துகொண்டு அவனை உதைக்கவில்லை என்றும், பூதியைக் கைபோடு அழைத்து வரவில்லை

என்றுதான் அவர் சினங்கொண்டு அவனைத் தாக்கியிருக்க வேண்டும் என்றும் அவர் முடிவுக்கு வந்துவிட்டார்.

எது எப்படி இருந்தாலும் வாத்தியாருக்கு ஒன்றுமில்லை.

அவர் வந்த காரியம் ஆகிவிட்டது.

வாழ்நாள் எல்லாம் இளையதம்பியரை வாட்டி வதைக்க இந்தத் துப்புப் போதும்!

பூதிக்கோ அடி மனதுக்குள் ஒரு போராட்டம்! பாவம் அந்தக் கறுப்பையனைத் தான்தான் காட்டிக் கொடுத்ததாக அமைந்துவிடுமோ என்ற ஏக்கம் ஒரு புறம்; இதை வைத்துக்கொண்டு இளையதம்பியருக்கு மேலாக ஒரு இழிவு வந்துவிடுமோ என்ற அனுதாபம் மறுபுறம்!

''என்ன பூதி கனக்க யோசிக்கிறாய் போலே கிடக்கு. நீ சொன்னனி எண்டு நான் ஆரெட்டையுஞ் சொல்லன்! பூதி! உங்கடை பொட்டையளின்ரை காரியங்களை நான் வில்லங்கமில்லாமல் தீத்துவிடுவன். நான் உங்கினைக்கை இருக்கிற நயினார்மாரைப் போலையோ புது நயினார்மாரைப் போலையோ இல்லைக் கண்டியோ! அவசரப்படாதையுங்கோ பாத்துச் செய்யுறன்! ஒண்டு சொல்லிப் போட்டன் பூதி! இளைய தம்பியைப் பற்றிச் சொன்னா உனக்குப் பிடியாதெண்டு எனக்குத் தெரியும்! எண்டாலும் என்ரை கடமை நான் அதைச் சொல்லுறது. அவனைக் கன நாளைக்கு நம்பாதை! அவன் திண்ட சட்டியிக்கை பேலுறவன்!''

இப்படி நீட்டிப் பேசிவிட்டு வாத்தியார் போய்க்கொண்டிருந்தார்.

## 17

அன்று பகல் எல்லாம் இளைய தம்பியரின் கிறேசர் வேலை வழமைபோல நடந்து கொண்டிருந்தது.



இளைய தம்பியர் கிறேசர் அறைக்குள்ளேயே அடைப்பட்டுக் கிடந்தார்.

ஊரில் உள்ள கமக்காரர்களின் வெங்காயக் கொட்டில்கள் எதிலும் வேலைகள் நடந்ததாகத் தெரியவில்லை. கூலிக்காரிகள் யாருமே வேலைக்கு வரவில்லை.

மருதப்பர் வாத்தியாரிடம் ஆள் அனுப்பியிருந்தார் மருதப்பரின் அழைப்புக் கிடைத்ததும் வாத்தியார் அவசர அவசரமாக மருதப்பர் வீட்டுக்குப் போனார்.

''என்ன வாத்தியார், உவன் இளையதம்பியனை நம்பிப் பிரயோசனம் ஒண்டுமில்லைப்போலை கிடக்கு! வெங்காயங்களும் பாட்டத்திலை கிடந்து நசிஞ்சு அழுகப் போகுது! என்ன செய்ய இப்ப!'' என்ற கேள்வியை மருதப்பர் வாத்தியாரிடம் கேட்டார்.

''ஓமோம், உதைப்பற்றித்தான் நான் யோசிச்சுக் கொண்டு வாறன் பாருங்கோ! நீங்கள் சொல்லுறதுதான் மெத்தச் சரி, இனி இளையதம்பியை நம்பிப் பிரயோசனமும் இல்லை. அவள் பூதியும் இனி இவற்றை சொல்லைக் கேக்காள்!'' இப்படி நாசூக்காகக் காரியத்தில் கையை வைத்தார் வாத்தியார்.

''ஏன் வாத்தியார்; ஏன் அப்பிடிச் சொல்லுறீர்? பூதியோடை என்ன தெறிச்சுப் போச்சோ?''

மருதப்பரின் இந்தக் கேள்விக்கு வாத்தியார் சாங்கோபாங்கமாகப் பதில் சொல்லத் தொடங்கி... இளையதம்பியரை அவர் மனைவி விசாலாட்சி அம்மாள் விளக்குமாத்தால் ஆலாத்தி எடுத்து, தாலிக்கொடியை அறுத்து மூஞ்சியில் எறிந்தது வரையில் சொல்லி முடித்துவிட்டார்.

இந்தச் சேதியைக் கேட்க மருதப்பருக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

ஒரு மாதத்துக்கு முன் இளையதம்பியர் வீட்டில் நடந்த கூட்டத்தில் தன்னை இளையதம்பியர் தூக்கி

யெறிந்து பேசியதிலிருந்து மருதப்பர் மனதுக்குள் கறுவியம் வைத்திருந்தார். இப்போது அதற்கு உயிர் கொடுக்கும் விதத்தில் விசாலாட்சி அம்மாள் ஆலாத்தி எடுத்ததும், தாலிக் கொடியை அறுத்து மூஞ்சியில் எறிந்ததும் அமைந்து விட்டது.

''என்ன வாத்தியார்; விசாலாட்சி இப்பிடிச் செய்தவளோ? உண்மையாத்தான் சொல்லுறியளோ?'' என்று அந்தத் தகவலை மேலும் உறுதி செய்து கொள்ளும் விதத்தில் கேட்டார்.

அப்போது மருதப்பர் மனைவி விறாந்தைக் கதவோரம் நின்று இவைகளை அவதானிப்பதைக் கண்டு விட்ட வாத்தியார் எதையோ நினைத்துக் கொண்டு மேலே பேசுவதை நிறுத்திக் கொண்டார்.

மனைவி வந்து நிற்பதைப் பார்த்துவிட்டுத்தான் வாத்தியார் பேச முடியாமல் திக்குகிறார் என்பதை அவதானித்துக் கொண்ட மருதப்பர், ''இஞ்சேரும், குசனியிக்கை வேலையில்லையே?'' என்று மனைவியைக் கடைக் கண்ணால் பார்த்துக் கொண்டு கேட்கவே, அவள் உள்ளே தலையை இழுத்துக் கொண்டாள்.

''நான் என்ன பொய்யே சொல்லப்போறன் பாருங்கோ! கண்ணாலை கண்ட கறுப்பையன் பூதிக்குச் சொன்னவன். அதுதான் கறுப்பையன் பாவிப் பொடியனுக்கு அவன் பாவி அடி அடியெண்டு அடிச்சுப் போட்டான். நான்தான் அவன்ரை மேல்லை ஊறின இரத்தத்தை இந்தச் சால்வையாலை ஒத்தி எடுத்தனான்; பொய்யெண்டால் பாருங்கோ!'' என்று கூறிக் கொண்டே வாத்தியார் தனது சால்வைத் தலைப்பை விரித்துக் காட்டினார்.

சால்வை முகத் தலைப்பில் இரத்தக் கறை இஞ்சக்காகோடிட்டுத் தெரிந்தது.

மருதப்பருக்கு மனம் திருப்தியாகிவிட்டது. ''இஞ்சேரப்பா, வாத்தியாருக்கு எப்பன் கோப்பி சுடச்



சுடப் போட்டு வந்து குடுமப்பா''' என்று அவர் குரல் வைத்தார்.

உள்ளேயிருந்து பதில் ஏதும் கிடைக்காததினால் ''கேக்குதே!'' என்று மீண்டும் குரல் எழுப்பினார்.

''ஓமோம். அதுதான் செய்யிறன்!' என்ற குரல் — மனைவியின் குரல் உள்ளே இருந்து வந்தது.

இப்போது மருதப்பருக்குத் திருப்தி!

''இளையதம்பியரைப் பற்றிக் கதைத்ததைக் கேட்டு விட்டு மனைவியானவள் மன வில்லங்கப்பட்டுக் கொண்டு சீறிப்பாய்வாளோ?'' என்று அவர் பயந்திருந்தார். அப்படி ஒன்றும் இல்லை என்பதனைத்தான் அவளின் பதில் காட்டியது.

கனகம்மா வாத்தியாருக்கும் கணவனுக்குமாகக் கோப்பியை கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போனாள்.

கனகம்மாள் உள்ளே போய்விட்டாள் என்பதைச் சரியாகக் கணக்கெடுத்துக் கொண்ட வாத்தியார் மீண்டும் பேசினார்.

பேச்சுக்கள் நீண்டு கொண்டே போயின.

அன்று காலை இளையதம்பியர் தன்னுடன் நடந்து கொண்ட விதத்தைக் கதையோடு கதையாகச் சொல்லாமல் இருக்க வாத்தியாரால் முடியவில்லை.

மருதப்பர் திடுக்குற்றவராக ''என்ன உம்மோடையும் இப்பிடிக் கதைச்சுப் போட்டானோ? கோவியப் பிள்ளைக்கு எப்பனும் கண்கடை தெரியேல்லைப் போலை கிடக்கு!'' என்று வாய்விட்டே சொல்லிவிட்டார்.

வாத்தியார் இதற்குப் பதில் பேசாமல் வீட்டுக்கு வெளியே பார்வையைப் புதைய விட்டபடி இருந்தார்.

''இஞ்சேரும் வாத்தியார், இந்த மருதப்பன்தான் உவனை மனிசனாக்கினவன்! இவன் இல்லாட்டி உவன் சபை சந்தியிலை ஏறி இருக்கேலுமே? இப்ப அவன் என்னெடாண்டா முழுநயினார் ஆகிறதுக்கு சதை கண்ட இடத்திலை கடிக்கப் பாக்கிறான். சரி எத்தினை நாளைக்கு உவன்ரை கொடி பறக்கப்போகுது பாப்பம்! உவனை பழையபடி வைக்காட்டி நானும் மருதப்பன் இல்லைக் கண்டீரோ!''

மருதப்பரே சபதம் எடுக்கும் முறையில் பேசித்தள்ளி விட்டார். வாத்தியாரின் வேலை குறைந்துவிட்டது.

''எனக்கொரு யோசினை வருகுது பாருங்கோ!'' என்று வாத்தியார் இழுத்தார்.

''யோசினை வந்தா ஏன் வைச்சுக் கொண்டிருக்கிறீர் சொல்லுமன் வாத்தியார்!''

மருதப்பர் கேலியாகக் கேட்டார்.

''இந்தக் கோசு வெங்காயத் தூக்கல் முடியும் வரையிலை பள்ளியளோடை ஒருமாதிரிச் சமரசத்துக்கு வருவம், அதுக்கென்ன தோட்டங்களுக்கை குடுத்தது போலை ஒரு மாதிரிக் குடுத்து முடிப்பம்! இதுக்கு இளையதம்பியன் தேவையில்லை. பூதியெட்டைச் சொல்வி நான் செய் விப்பன்!''

வாத்தியார் பேச்சை நிறுத்திக் கொண்டார்.

''ஓம் வாத்தியார் விளங்குது! இப்ப பூதி வாத்தி யாற்றை பக்கம் போலை கிடக்கு, நடக்கட்டுக்கு; நடக் கட்டுக்கு!'' என்று கண்சிமிட்டிக் கொண்டே கூறினார் மருதப்பர்.

கனகம்மா வாசல்படி வரை வரும் அரவம் கேட்டது.

''அங்காலை இஞ்சாலை பாத்துக் கதையுங்கோ; ஆரும் கேட்டா என்ன நினைப்பினம்!'' என்று மருதப்பரைச் சுரண்டிக்கொண்டே கூறினார் வாத்தியார்.



மருதப்பர் சற்றுவேளை வாய் மூடி இருந்தார்.

''அப்ப நான் போய் பூதியோடை கதைச்சுப் போட்டு வரவோ?'' என்று கேட்டுக்கொண்டே வாத்தியார் எழுந்திருந்தார்.

''வாத்தியார், அவள் பூதி சரியான சூரி கண்டீரோ? ஆகக் கடுமையா இடங் குடுத்தமாதிரிக் கதைச்சுப் போடக் குடாது! பேந்து அவள் தலையிலை ஏறிக் குந்தி விடுவாள்! அவள் தலையிலை ஏறிக் குந்தினா உமக்குப்பறவாயில்லை; மற்றப் பள்ளியளும் சேந்து தலையிலை ஏறிச் செவியைக் கடிக்க வெளிக்கிட்டிட்டாப் பிறகு புன்னாலைக்கட்டுவன் வெள்ளாளற்றை மானம் போயிடும்; கவனம்!''

இப்படிச் சொல்லிக் கொண்டே மருதப்பர் பெருந் தெருவரை வந்து, கந்தசாமி கோவிலடிப் பக்கம் திரும்பி விட்டார். இந்தவேளை அவசர அவசரமாக மருதப்பர் கந்தசாமி கோவிலடிக்கு ஏன் போகிறார் என்பது வாத்தியாருக்கு ஓரளவு விளங்கிவிட்டது.

கோவில் மடத்தில் அவரின் வயதை ஒட்டிய பலர் கடதாசிக் கூட்டம் போடும் நேரம் இது...!

''நிச்சயமாக இளையதம்பியரைப் பற்றி — அவர் மனைவி விளக்கு மாத்தாலை ஆலாத்தி, தாலியை அறுத்து மூஞ்சியில் வீசியது பற்றி ஒரு கதாப்பிரசங்கமே அங்கு நடக்கப் போகிறது'' என்பது பற்றிய முடிவு வாத்தியாரின் உள்மனதில் பளிச்சிட்டது.

வாத்தியார் நேராகப் பூதி வீட்டுக்கு வந்தார்; வீட்டில் பூதி இல்லை.

வெய்யில் கொழுத்தியது.

காற்றோட்டமும் குறைச்சல்!

வியர்த்துக் கொட்டியது.

பூதியின் குடிசைக்குச் சற்று அப்பால் இருந்த மாளிகைக்குக் கீழ் அவர் பூதிக்காகக் காத்திருந்தார்.

# 18

மாலை வருவதற்கிடையில் ''இளையதம்பியரை பெண்சாதிக்காரி விளக்கு மாத்தாலை ஆலாத்தி, தாலியையும் அறுத்து மூஞ்சியில் எறிஞ்சு போட்டாளாம்'' என்ற செய்தி ஊரெல்லாம் பரவிவிட்டது.

சாயந்தரம் சுன்னாகம் சந்தைக்குப் போய்வந்தவர்கள் ஒருபுறமாகவும், மருதனார்மடச் சந்திக்குப் போய் வந்தவர்கள் ஒருபுறமாகவும், இணுவில் பிரசவ மருத்துவ மனைக்குப் போய்வந்தவர்கள் ஒருபுறமாகவும், ஆங் காங்கே இருந்து ''இளையதம்பியரை, பெண்சாதிக்காறி விளக்குமாத்தாலை ஆலாத்தி, தாலியையும் அறுத்து மூஞ்சையிலை எறிஞ்சு போட்டாளாம்'' என்ற இந்தச் செய்தியை அட்சரந் தப்பாமல் எடுத்து வந்து ஊர் மனைக்குள் சேர்த்துவிட்டனர்.

இளையதம்பியரின் வீட்டுக்கு மிகச் சமீபமாக உள்ள கட்டுவன் சந்திப்பின் கடைகளிலிருந்து பலராலும் பேசப் பட்ட இந்தச் செய்திதான் அவர் காதுகளில் இலேசாகப் பட்டது.

அன்று பகல் பொழுதெல்லாம் இளையதம்பியர் கிறேசருக்குள்ளேயே அடைபட்டுக் கிடந்தார்.

மதியவேளை கறுப்பையன் சோர்ந்து சுருண்டு கொண்டே அம்மாளால் அனுப்பப்பட்ட சாப்பாட்டைக் கொண்டு வந்தான். அதை அவர் அவனிடம் இருந்து பெற்றுப் பக்கத்தே இருந்த மரத்தோடு மோதி அடித்து



அவனை அனுப்பிவிட்டு, கல்லுக் கங்காணியைப் பிடித்து சந்திப்புக் கடைக்கு அனுப்பிக் கடைச் சாப்பாட்டை எடுப்பித்து மதியப் பசியைத் தீர்த்துக் கொண்டார்.

அதற்குப் பின் அவர் வாயில் தண்ணீரைக்கூட ஊற்ற வில்லை.

பொழுது கருகிவரும் போதுதான் இளையதம்பியர் கிறேசருக்கு வெளியே வந்தார். அப்போது அங்கே வந்திருந்த அவரின் அடியாள்க் கூட்டத்தில் முக்கிய ஒருவரான சுருளியன்தான் இந்த விளக்குமாத்தால் ஆலாத்தி, தாலியையும் அறுத்து எறிந்த சம்பவத்தை கேள்விப்பட்ட விதங்களிலெல்லாம் சொல்லி வைத்தான்.

இளையதம்பியருக்கு உடம்பெல்லாம் வெட வெடத்தது.

சுருளியனுக்குப் பதில் சொல்ல அவருக்கு வார்த்தை களே கிடைக்கவில்லை.

மறுபடியும் கிறேசர் வளவுக்குள் அவர் போய் விட்டார்.

அவர் தலை சுழன்றது.

இரவு நடந்த அந்தச் சம்பவம் தனது வீட்டோடு நின்றுவிடும் என்றுதான் அவர் நம்பினார்.

இந்தச் சம்பவம் நடந்தபோது யாரும் விழிப்பிருந்த தாக அவருக்கு நினைப்பில்லை.

பிள்ளைகள் எல்லோரும் படுக்கைக்குப் போய் தங்கள் தங்கள் அறைக்குள்ளேயே படுத்து விட்டதன் மேல்...

கிட்டத்தட்ட மணி பன்னிரெண்டுக்கு மேல் இருக்கும்...

மனைவியை உதைக்க...

அவள் திருப்பி உதைக்க...

பக்கத்தே இருந்த துடைப்பக் கட்டையால் அடிக்க...

தாலிக்கொடியை அறுத்து விட்டெறிய...

விறாந்தையில் ஒரே ஒரு வெளிச்சந்தான்...

அதுவும் இருண்ட மஞ்சள் வெளிச்சம்!

அடுத்து அண்டிய வீடுகளிலும் யாரும் விழித்திருந்த தாகவும் இல்லை...

இந்தச் சம்பவம் வெளியே போனதற்கான காரண காரியத்தைத் தெரிந்துகொள்ள இளையதம்பியருக்கு முடியவில்லை.

கறுப்பையன் எங்கே படுத்திருந்தான்?

அவன் கிறேசர் பக்கத்துக் கொட்டிலுக்குள் படுத்து நீண்ட நேரமாகியிருந்தது.

வழக்கத்தில் படுத்தவுடன் அவன் குறட்டைவிடத் தொடங்குவானாக இருந்தால் விடிந்து முதுகில் வெய்யில் சுடும் வரை குறட்டை விடுவான்.

அவனுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை!

அப்படித் தெரிந்திருந்தாலும் அவன் வெளியாரிடம் மூச்சுக்கூட விட்டிருக்கான்!

இதுவரை அவன் யாரையும் கண்டிருக்கவும் முடியாது.

காலை அவன் பூதியிடம் மட்டுந்தான் போயிருந்தான். அங்கும் பூதி இல்லை.

அவன் உதை வாங்கிக் கொண்டிருந்தபோது வாத்தியாரும், கல்லுக் கங்காணியுந்தான் வந்திருந்தார்கள். வாத்தியாருக்கு அவன் சொல்லியிருந்தால் கங்காணி கட்டாயம் சொல்லியிருப்பான்!

அவனும் இதுவரை இதுபற்றி ஒன்றும் பேசவிலலை!

அப்படியானால்...?

அப்படியானால்...?



இளையதம்பியரால் சரியான முடிவு ஒன்றுக்குமே வர முடியவில்லை.

‘‘உந்தச் சின்னக் காரியத்துக்கு உப்பிடியெல்லாம் யோசிக்கிறதோ பாருங்கோ?’’

இப்படிச் சுருளியன் கேட்டான்.

‘‘உதுக்கென்ன யோசினை சுருளி! ஆர் உந்தக் கதையைக் கொண்டோடித் திரிஞ்சது எண்டுதான் தெரியேல்லை!’’ இளையதம்பியர் சுருளியின் முகத்தைப் பார்த்துப் பரிதாபமாகச் சொன்னார்.

‘‘அதுதான் எனக்கும் விளங்கேல்லை! கோயில் மடத்திலை இருக்கிறவங்கள் கதைச்சாங்கள்; என்னையுங் கேட்டாங்கள். பின்னேரம் சுன்னாகம் சந்தைக்குப் போனனான்; அவன் சீலைக்கடை நாகலிங்கமும் கேட்டவன். மருதனாமடத்தடிக் கிட்டினுவும் உப்ப என்னைக் கண்டு கேட்டவன்; உதிலை சந்திக் கடையிலை யும் கதைக்கிறாங்கள்! அதுதான் ஓடியந்தனான்!’’

சுருளியன் தான் அறிந்தது அறிந்தபடி அப்படியே மறுபடியும் சொன்னான்.

‘‘ஆராயிருக்க வேணுமெண்டு நீங்கள் நினைக் கிறியள்?’’ என்று சுருளியன் ஒரு கேள்வியையும் கேட்டான்.

‘‘சுப்பையா வாத்திதான் உதிலை வெள்ளனக் கறுப்பையனோட கதைச்சுக் கொண்டு நிண்டவன்...’’ இளையதம்பியர் பின்பும் ஏதோ பேச முயன்றார்.

‘‘சை! அப்பிடி நினைக்கேல்லை! அவா இப்பிடிக் கதையார்?’’ என்றான் சுருளியன் இடைமறித்து.

‘‘சுருளி உதெல்லாம் சொல்லிக் கொண்ட? நான் அப்போதே கறுப்பையனோடை வாத்தி கதைச்சதை ஏதோ கறுப்பையனெட்டைக் கதை கேக்கிறான் வாத்தி எண்ட பயத்திலை வாத்தியை ஒரு மாதிரிப் பேசிப்

போட்டன்; அவனும் கோவிச்சுக் கொண்டுதான் போனவன்...''

இளையதம்பியர் கடைசியாகப் பேசிய இந்தப் பேச்சுச் சுருளியனை ஓரளவுக்கு யோசிக்க வைத்தது.

''இப்ப எனக்கு விஷயம் விளங்கிப் போச்சு!'' என்றான் சுருளி.

சுருளி எதையுமே சுளுவில் கண்டுபிடிக்கக் கூடியவன் என்பது இளையதம்பியருக்குத் தெரிந்த விஷயம்.

சுன்னாகம் சுடலையடி வெளியில் கல்லுக் கிளறிய காலத்திலிருந்து இன்று வரை சுருளி அவருக்கு நண்பன்.

இளையதம்பியரின் நன்மை தின்மை சகலத்திலும் சுருளி ஒருத்தன் தான் ஆத்மார்த்த பங்காளன்!

அவனுக்குத் தெரியாததென்பது இளையதம்பியரின் வாழ்க்கையில் ஒன்றுமே இருக்க முடியாது.

இதுவரை இளையதம்பியருக்காக அவன் செய்தவைகள்...!

இவற்றுக்கெல்லாம் இளையதம்பியர் அவனுக்குப் பணமாகத்தான் நன்றியறிதலைச் செய்து வருகிறார்.

ஊரில் எங்கு கோயில் வேள்வி நடந்தாலும் இளையதம்பியரும், சுருளியனும் அங்கு நிற்பர். 'அது கவுணாவத்தையாக இருந்தால் என்ன? காட்டு வயிரவர் கோயிலாக இருந்தாலென்ன? பேர்பெற்ற எச்சாட்டி வயிரவர் கோயிலாக இருந்தாலென்ன? சுன்னாகத்து ஐயனாராக இருந்தாலென்ன? எல்லா இடத்து வேள்விகளுக்கும் இளையதம்பியர் சமூகந்தராமல் இருப்பதில்லை. இளையதம்பியர் சமூகந் தந்தால் சுருளியனும் துணைக்கு இல்லாமல் இருக்க முடியாது. எப்படியும் ஒரு கிடாய் எடுபடும்! பின்பு இளையதம்பியரின் கிறேசர் வளவில் கிடாய் உரிக்கப்படும்.



கிடாய் உரிப்பதில் சுருளியனுக்கு நிகர் சுருளியன் தான்.

கிடாயின் முன்னங்கால் எலும்பொன்றைக் கீழ் மொழியோடு மடக்கி முறித்தெடுத்து, பின்னங்கால் பெரு நரம்பு இடைவெளிக்குள் வில்லுக் கத்தியால் குத்தித் துளை செய்து, முறித்த எலும்பை அத்துளைக்குள்ளால் செருகி எடுத்து பூவரசத்தலை மொக்கில் கொழுவிவிட்டு சுருளியன் கிடாய் உரிக்கத் தொடங்கினால் ஆகக் கூடியது பத்தே பத்து நிமிடங்களுக்கிடையில் எந்தப் பெரிய கிடாயும் உடல் வேறு தோல் வேறாக ஆகிவிடும்.

துப்பரவென்றால் துப்பரவுதான்!

கெதியென்றால் கெதிதான்!

கிடாயின் ஒரு மயிர்த்தின்னும் உள் சதையில் ஒட்டி இருக்காது.

கிடாய் உரிப்பில் அத்தனை நிபுணன் சுருளியன்.

இது போன்று எத்தனையோ விஷயங்களில் அவன் நிபுணன்!

அவன் ஊகித்து ஒன்றைச் சொன்னானானால் அது சரியாகத்தான் இருக்கும். அதில் இளையதம்பியருக்குப் பூரண நம்பிக்கை!

''கறுப்பையன்தான் வாத்திக்குச் சொல்லிப் போட்டான்.''

சுருளியன் இப்படிச் சொன்னான்.

## 19

ஊரில் வெங்காயத் தூக்கு வேலைகள் ஒழுங்காக நடந்து வந்தன. இந்த ஒழுங்கைச் செய்வதற்கு வாத்தி

யார்தான் படாத பாடுபட்டு ஒரு மாதிரி நிலைமையைச் சீர்ப்படுத்திவிட்டார்

இந்த விஷயத்தைச் சாதிப்பதற்கு வாத்தியார் பூதியிடம்தான் முதலில் போனார்.

''அண்டைக்கும் இளையதம்பி நயினாற்றை சொல்லைக்கேட்டு நான் எங்கடை பெட்டையளெட்டைப் பேச்சு வாங்கின மாதிரி இதுவும் வந்திடப்படாது வாத்தியார் நயினார்!''

இப்படிப் பூதி எடுத்த எடுப்பிலேயே சொன்னாள்.

''பூதி நீ என்னை நம்பேல்லையே? நான் எழுந்த மானத்திலை என்ரை மூப்பிலை வரையில்லைப் பூதி! ஊருக்கை ஆமான மனிசன் மருதப்பரோடை கதைச்சுப் போட்டுத்தான் வாறன்! என்னை நம்பு பூதி! நான் எப்பெண்டாலும் ஆரையும் ஏமாத்தியிருக்கிறனெண்டு ஒருதர் சொல்லட்டுக்குப் பாப்பம்! காலமும் கொஞ்சம் கொஞ்சமா மாறி வருகுது பூதி! எல்லா நயினாரவையும் இப்ப முந்தின மாதிரி இல்லை. உனக்குக் கோவம் வந்தாலும் வரும். எண்டாலுஞ் சொல்லத்தான் வேணும்! நமோவணை நமோவணை நயினார் பரம்பரையிலை வந்தவை ஒருநாளும் பிழை விடாயினம். நிறைகுடம் தளம்பாது எண்டு சும்மாயே சொல்லுறவை! உந்த இடையிட்டு நயினார்மாராய் வந்தவைதான் புதுமைக்கு வண்ணான் குறிகட்டி வெளுத்த மாதிரி அர்த்த ராத்திரியிலை குடை பிடிக்கிறவை! என்ன பூதி நான் சொல்லுறது விளங்குதெல்லே?''

தனது பேச்சின் முடிவில் ஒரு கேள்வியையும் கேட்டு வைத்தார் வாத்தியார்.

''ஓமோம் வாத்தியார் நயினார் விளங்குது! உதிலே எனக்கென்ன கோவம்? என்ரை இளையதம்பி நயினாரைத்தான் சொல்லுறியளெண்டு நல்லா விளங்குது! அதுக்கென்ன செய்யிறது? அந்தாளை எந்த வழிக்கும் திருப்பிப்



போடலாம். ஆனா அவர் நாச்சியார் எல்லோ அந்தாளை ஆட்டிப் படைக்கிறா! அது சரி வாத்தியார் நயினார்! ஒரு விநாடிக்கை அவ அந்தாளை விளக்குமாத்தாலை ஆலாத்தி தாலிக்கொடியையும் அறுத்தெறிஞ்ச கதை என்னெண்டு ஊரெல்லாம் பரவிச்சு தெண்டுதான் எனக்கு விளங்கேல்லை. நம்மாணை வாத்தியார் நயினார் நான் ஒரு காகத்துக்கும் சொல்லேல்லை. அதுக்கிடையிலை உப்பிடிக் கதை பரவிப் போட்டுது!''

பூதி பேசி முடித்தாள்.

''அதுதான் எனக்கும் ஒண்டுமா விளங்கேல்லைப் பூதி! நான் உண்ணாணை மருதப்பரை விட வேறை ஒருத்தருக்கும் மூச்சுக்கூட விடேல்லை. ஒருவேளை இளையதம்பியர் அடிச்ச கோவத்திலை கறுப்பையன்தான் எல்லாருக்கும் சொல்லியிருப்பானாக்கும்! மருதப்பரும் உதை ஒரு கதையெண்டு தூக்கிப் பிடிச்சுக் கொண்டு திரியார்...''

வாத்தியார் முடிக்கவில்லை.

''ஓமோம் வாத்தியார் நயினார். அது எனக்குத் தெரியும். அவர் என்னெண்டு உதைத் தூக்கிப் பிடிக்கிறது? அப்பிடித் தூக்கிப் பிடிச்சுக் கொண்டு திரிய அவ கனகம்மா நயினாத்தி என்ன விடப் போறாவை? இளையதம்பி நயினாற்றை கண்ணிமை மயிரிலை ஒண்டு விழுந்தாலும் அவவின்ரை நெஞ்செல்லோ இடிக்கும்! எனக்கெல்லோ தெரியும்! ஏன் வாத்தியார் நயினாருக்கும் என்ன தெரியாதே கேக்கிறன்?''

பூதியின் இந்தக் கேள்வி வாத்தியாரின் பேச்சை அடைத்துவிட்டது. அவர் பேசாமல் வெளியைப் பார்த்துக் கொண்டு நின்றார்.

''ஊருக்கை இருக்கிற எல்லா நயினார் நயினாத்திமாற்றையும் சீத்துவக்கேடுகள் பூதிக்கும் தெரியுது எண்டு

வாத்தியார் நயினார் யோசிக்கிது போலைகிடக்கு! சரி சரி அதுகளைப் பற்றி எல்லாம் ஏன் இப்ப கதைச்சுக் கொண்டிருப்பான்! நீங்கள் வந்த விஷயத்தைக் கதைப்பம்! எங்கடை பொடியள் கூட்டம் வைச்சுத்தான், வாத்திபார் நயினார் எங்களை வேலைக்குப் போகவேண்டாம் எண்டு மறிச்சவங்கள். அவங்களோடை கதைத்க வேணும்! வாத்தியார் நயினார் ஒண்டு செய்வமே? சற்று வேளை நிண்டு கொண்டியளாய் இருந்தால் முக்கியமான ரெண்டொரு பொடியளைக் கூட்டிக்கொண்டோடி வந்திடுறன்!'' என்றாள் பூதி.

வாத்தியாருக்கு நிலைமை சிக்கலாகிவிட்டது.

பூதியுடன் கதைத்து ஒரு மாதிரிச் சரிசெய்யலாம் என்றுதான் அவர் நினைத்திருந்தார். ஆனால் பூதியோ அவரை உத்தியோக பூர்வமாகப் பேசும்படி கதையோடு கதையாகக் கேட்கிறாள்.

''பொடியளோடை கதைக்கிறத்திலை ஒண்டுமில்லைப் பூதி! இதுகளுக்கெல்லாம் எல்லாரோடையும் ஏன் கதைச்சுப் பறையடிப்பான் எண்டுதான் யோசிக்கிறன்; பேந்து நாலுபேர் நாலு கதை கதைச்சுக் குழப்பப் பாப்பாங்கள்! கட்டி வைச்சிருக்கிற பூனையை அவிட்டு விட்டுப் போட்டுப் பேந்து ஏன் வாசு வாசு எண்ணுவான் எண்டுதான் பாக்கிறன். உங்கை பாக்கேல்லையே புதுப் பணக்காறன் இளையதம்பியை? தேவையில்லாமைப் பெண்டிலோவை கதைச்சுப் போட்டு இப்ப படுகிற பாட்டை! நானும் ஒரு விசரன்! உன்னெட்டை அவனைப் பற்றிக் கதைக்கிறன். கோவிச்சுக் கொள்ளாதையடி ஆத்தை! சும்மா கதைக்குச் சொன்னனான்.''

வாத்தியார் பேசி முடிக்கும்போது பூதி வீட்டு முன் பனைவெளிக் கூடாக செல்லி வந்து கொண்டிருந்தாள்.

''ஆர் பூதி உதிலை ஒருத்தி வாறாள்? கட்டைப்புட்டு மாதிரி அவளின்ரை கொய்யகந் துள்ளிற துள்ளலைப்



பார். உன்னெட்டைத்தான் வாறாள் போலை கிடக்கு! உண்ணாணைப் பூதி நான் வந்த காரியத்தை அவளெட்டைச் சொல்லிக்கில்லிப் போடாதை!''

வாத்தியார் பயத்துடன் மன்றாடிக் கேட்டுக் கொண்டார்.

''அவள் எங்கடை பேத்தை வைத்தியண்ணையின்ரை செல்லிப் பொட்டை. அவளுக்கு உள்ளதைச் சொல்லாட்டி அவள் வேறை மாதிரி எண்ணிப் போடுவாள். அவள் பொல்லாத விடுப்புப் பிடுங்கி! ''பூதியக்கையை இளைய தம்பி நயினார் மேய்ச்சது பத்தாதெண்டு, இப்ப வாத்தியார் நயினார் மேய்க்க வந்திட்டார் எண்டு எண்ணிப் போடுவாள்!''

பூதி பேசிக் கொண்டே கண் சிமிட்டினாள்.

''அக்கை!'' என்று அழைத்துக் கொண்டே செல்லி வந்தாள்.

''ஓம் பொட்டை இருக்கிறன் வா! இஞ்சை வாத்தியார் நயினாரும் வந்திருக்கிறார்!'' என்று செல்லிக்கு வாத்தியார் நயினாரை அறிமுகப்படுத்தும் பாவனையில் கூறினாள் பூதி.

''பொட்டை நீ எங்கடை பேத்தை வைத்தியன்ரை மோள் எண்டு இப்பான் பூதி சொன்னவள்! உன்ரை புரிசன் எங்கை பொடிச்சி வேலை?'' என்று ஒரு கேள்வியுடன் நிறுத்திக் கொண்டார் வாத்தியார்.

புருஷனைப் பற்றிக் கேட்டது செல்லிக்குப் பத்திக் கொண்டு வந்தது.

''புரிஷன் இல்லாதவளவையை ஊர் உலகத்திலை இருக்க நயினாரவை விடாயினம் போலை கிடக்கு!'' என்று அவள் படக்கென்று கேட்டு விட்டாள்.

வாத்தியார் திகைத்துப் போய் இருந்தார்.

சற்று வேளை!

''எடி விசரி, வாத்தியார் நயினார் சும்மா கேக்க நீ என்னெடி கதை கதைக்கிறாய்? அவற்றை வயசென்னடி உன்ரை வயசென்னடி?'' என்று வாத்தியாரைச் சமா தானப்படுத்தும் விதத்தில் பூதி சற்றுக் கண்டிப்புத் தொனியில் பேசினாள்.

''அலைஞ்ச நாய் பீயிலை விழுகிறதுக்குத் திரியிற வைக்கு வயதைப் பற்றித் தெரியப் போகுதே அக்கை?''

மீண்டும் செல்லி குத்தலாகவே பேசினாள்.

வாத்தியாருக்குப் பாதி உயிர் போய்விட்டது.

''எடி எடி விடெடி!''

இப்படிப் பூதி செல்லியைப் பலமாக உரத்தாள்.

செல்லி இதற்குமேல் ஒன்றும் பேசவில்லை.

வாத்தியாரும் பேசவில்லை.

பூதியும் பேசவில்லை.

சற்று வேளை ஆயிற்று!

''அக்கை! உங்கடை கதையை நான் ஏன் குழப்புவான்; நான் போகப் போறன். அவன் லோகேசுப் பொடியனும் குணசிங்கன் பொடியனும், எங்கடை முருகையனும் நீ இருக்கிறியோ எண்டு பாத்துக் கொண்டு வரச் சொன்ன வங்கள். ஏதோ கதைக்க வேணுமாம்; அதுதான் வந்தனான்; நான் போய்ச் சொல்லுறன் அக்கை அலுவ லோடை இருக்குதெண்டு!'' என்று கூறிக் கொண்டே செல்லி புறப்படத் தயாரானாள்.

''எடி பொட்டை! இஞ்சை வாத்தியார் நயினாரும் பொடியளோடை தான் கதைக்கிறதுக்கெண்டு வந்திருக் கிறார். பொடியளைக் கெதியாய் வரக்காட்டிவிடு; செக்கலாப் போச்சு அவரும் போகவேணும்!''



பூதி இப்படிச் சொன்னாள்.

செல்லி போய்விட்டாள்.

வாத்தியாருக்கு அசைய முடியவில்லை.

## 20

கூதிர்காலம் நடுப்பகுதி ஆயிற்று. இப்போதுதான் மழை அங்குமிங்குமாகப் பெய்யத் தொடங்கியிருக்கிறது.

கறுப்பையனைப் பார்ப்பதற்காக ஹற்றனில் இருந்து அவன் அப்பன் வேலுச்சாமி வந்திருந்தான்.

கறுப்பையனுக்கு நேரே மூத்தவளான பெரிய மருதா யிக்கு இரண்டு மாதத்தில் கல்யாணம் நடைபெற இருந்தது. மல்லிகைப் பூப்பஜாரில் புடவைக் கடை வைத்திருந்த யாழ்ப்பாணத்து முதலாளி சிற்றம்பலம் பிள்ளை வீட்டு நிரந்தர வேலைக்காரனாக இருந்த மாடசாமிக்குக் கல்யாணம் பொருத்தமாகி இருந்தது.

வேலுச்சாமிக்கு இந்தக் கல்யாணம் ஒப்பேறியதில் மிகவும் திருப்தி. யாழ்ப்பாணத்தையா வீட்டிலேயே சம்மந்தம் வைத்துக் கொள்வதைப் போன்ற கிழுகிழுப்பு அவனுக்கு.

மருமகன் மாடசாமி, மகள் பெரிய மருதாயியைக் கட்டி முடிந்ததும், யாழ்ப்பாணத்திலிருக்கும் தனது முந்தி ரிகைத் தோட்டத்திற்கு குடும்பத்துடன் அனுப்பி வைப்ப தாக சிற்றம்பலம் முதலாளியார் வேலுச்சாமியிடம் சொல்லியும் இருந்தார்.

கலியாணக் கைச்செலவுக்குப் பணம் தேவை. அதனுடன் மகனுக்கும் கலியாணத்தைப் பற்றிச் சொல்லி விட்டுக் கையோடு கலியாணம் முடியும் வரை உதவிக்காக

வீட்டுக்கு அழைத்து வந்துவிடத்தான் வேலுச்சாமி வந்திருந்தான்.

சிற்றம்பலம் முதலாளியாரின் சிபார்சின் பேரில்தான் இளையதம்பியரின் வீட்டுக்கு வேலைக்காரனாக வேலுச்சாமி கறுப்பையனை அனுப்பியிருந்தான்.

கறுப்பையனை இளையதம்பியருடன் அனுப்பி வைத்ததற்கு ஒரே ஒரு தடவைதான் செல்வச் சந்நதி திருவிழாக் காலத்தோடு மனைவியையும் பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு வேலுச்சாமி கறுப்பையனிடம் வந்து பத்து நாள் வரை தங்கிப் போனான்.

இப்போது வருடங்கள் ஐந்துக்கு மேல் ஆகிவிட்டன.

வேலுச்சாமி இப்போதுதான் மகன் கறுப்பையனைப் பார்க்க இளையதம்பியரின் வீட்டுக்கு வந்திருக்கிறான்.

அப்போதுதான் கறுப்பையன் பத்து நாட்களுக்குமுன் ஊருக்கென்று போய்விட்டதாக இளையதம்பியர் வேலுச்சாமிக்குச் சொன்னார்.

வேலுச்சாமி மல்லிகைப்பூப் பஜாரைவிட்டு வெளியேறி இது இரண்டாவது நாள்தான். ஆனால் இதுவரை மகன் அங்கு வந்து சேராதது அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. இருந்தும் வேலுச்சாமி அதை அவ்வளவு பாரதூரமாக எடுக்கவில்லை.

இளையதம்பியர் வேலுச்சாமியை ஒருநாள் வீட்டோடேயே வைத்திருந்து அவனுக்குப் போதும் போதும் என்ற அளவுக்கு விருந்தளித்தார்.

விருந்தென்றால்...!

மூக்கு முட்ட அவனைக் குடிக்க வைத்தார்.

சுருளியன் இரண்டு குடலை ஆட்டிறைச்சியைக் கொண்டு வந்தான். அந்த இரண்டு குடலை இறைச்சியையும் சமைத்து வேலுச்சாமிக்கு முன்னால் படைத்து பலாத்காரமாக அவனை உண்ண வைத்தார்.



வந்ததிலிருந்து ஒருநாள் இருட்டியதோ மறுநாள் விடிந்ததோ வேலுச்சாமிக்கு ஞாபகத்தில் இல்லை.

''வேலுச்சாமி, உன்ரை மோளுக்குக் கலியாணம் எண்டு சொல்லுறாய்! உன்னைச் சும்மா விடுகிறது நல்லாயில்லை. கறுப்பையனும் போகேக்கை ஐநூறு ரூவாக் காசு வாங்கிக் கொண்டுதான் போனவன். எண்டாலும் பொட்டைக்குக் கலியாணமெண்டு தெரிஞ்சிருந்தா கொஞ்சங்கூடக் குடுத்திருப்பன். இண்டைக்கு நீ போறாய்தானே. நான் ஒரு ஆயிரம் ரூபாக் காசு தாறன்; பொட்டையின்ரை காரியத்தை ஒப்பேத்தி விடு. பேந்து பாப்பம்! சிற்றம்பலத்தார் தன்ரை முந்திரியத் தோட்டத்திலைதான் மோளையும் மருமோனையும விடப் போறன் எண்டு சொன்னவர் எண்டு நீ சொல்லுறாய்! அவற்றை தோட்டம் உதிலை ராச பாதையிலைதான் கிடக்கு! எல்லாம் நான் பேந்து கவனிக்கிறன்; கறுப்பையனும் ஒருக்காக் கொழும்பு பாக்க ஆசையாக் கிடக்கெண்டு சொன்னவன். சிலவேளை கொழும்பு பாத்துக்கீத்துப் போட்டு அவன் வீட்டை வர நாள் செண்டாலுஞ் செல்லும்! அவன் வந்தோண்ணை சகோதரியின்ரை கலியாண வீட்டையும் முடிச்சுப்போட்டு அவனை அனுப்பிப் போடவேணுங் கண்டியோ? என்ன வேலுச்சாமி நான் சொல்லுறதுகள் கேக்குதே?''

இளையதம்பியர் அதிகாலையோடு, கிறேசர் மடுவத்திலிருந்து பேசிமுடிக்கும் வரை கைகட்டி, வாய் பொத்தி மௌனியாக வேலுச்சாமி நின்றான்.

பின்பும் அவன் பேசவில்லை.

''என்ன வேலுச்சாமி பேசிறாயில்லை? காலமை றெயில்லை உன்னை அனுப்பியிருக்கலாம். உவன் சுருளியனை விடியப்புறத்தோடை சயிக்கிளையுங் கொண்டு வரச் சொல்லிச் சொல்லிவிட்டனான். அவனும் வரேல்லை! மத்தியானம் யாழ்தேவி றெயில்லை. சுன்னா

திலை கொண்டு போய்ச் சுருளியன் ஏத்திவிட்டிட்டு வருவான். யாழ்தேவியிலை போனியெண்டா பொல்காவலையிலை வாற கொழும்பு றெயிலைப் பிடிச்சுக் கொண்டு விடியிறத்துக்கிடையிலை ஊருக்குப் போய்ச் சேர்ந்திடுவாய்! காசு கொண்டு போறனீ, கண்ணைக் கிண்ணை மூடியிடாதை! வவுனியாவுக்கங்காலை சிங்களச் சாதியள்! வெறும் இரணியச் சாதி கண்டியோ அவங்கள்! கவனம்; கவனம்!''

இளையதப்பியர்தான் மீண்டும் பேசி ஓய்ந்தார்.

''ஐயா, நீங்க மவராஜனா இருக்கணும்!'' என்று மொட்டையாக ஒரு வார்த்தை மட்டும் சொல்லிக் கொண்டு, தலைமேல் இரு கரங்களையும் கூப்பி, உடம்பைச் சற்று முன் வளைத்து அவன் இளைய தம்பியரைக் கும்பிட்டான்.

வேலுச்சாமியின் இமைகளில் நீர் மூட்டி வடிந்தது.

''நான் என்ன கடவுளேயெடா? கடவுளைக் கும்பிட்டது மாதிரி என்னைக் கும்பிடுகிறாய்; வேலுச்சாமி எடு கையை!''

இளையதம்பியர் சற்று உரக்கிக் கூறினார்.

வேலுச்சாமி கைகளை எடுத்துக் கொண்டான்.

வெளிக் கேற்றைத் திறந்து கொண்டு சுருளியன் வந்தான் — சயிக்கிள் ஒன்றை உருட்டிக் கொண்டு வந்தான்.

''சுருளி நீ அரிச்சந்திரன்தான்! விடியப்புறம் வாறெண்டுட்டுப் போனனி; இப்ப வாறாய் என்ன?''

இளையதம்பியர் சற்றுச் சினத்துடன் சுருளியனைக் கடிந்தார்.

''இஞ்சை நிண்டு நேரஞ் செல்லத்தானே போனனான். தண்ணியும் கூடிப்போச்சு; எண்டாலும் வேளையோடை



எழும்பியிட்டன். ஆலெடிச் சுடலையுக்கை வரேக்கை ரயரும் வெடிச்சுப் போச்சு...''

சுருளியன் நடந்த தவறுக்காகத் தன்பாட்டிலேயே வருந்தப்பட்டான்.

''சரி இப்பிடி வா!'' என்று சுருளியனை கேற்றுக்கு வெளிப்பக்கம் அழைத்தார் இளையதம்பியர்.

சுருளியன் போனான்.

''சுருளி, நான் உதிலை ஒருக்காப் போட்டுவாறன். வேலுச்சாமியோடை கதைச்சுக் கொண்டிரு! வேலைக்கு வாறவங்களோடை அவனைக் கதைக்க விட்டிடாதை!''

சுருளியின் காதுக்குள் இரகசியமாகக் கூறிவிட்டு இளையதம்பியர் வெளியே போகப் புறப்பட்டார்.

''அப்ப அவன்ரை சாப்பாடு......?''

சுருளியன் ஒரு கேள்வியைக் கேட்டான்.

''இடையிலை ஒருக்கா வீட்டை போய் அவள் 'மனிசி யெட்டை ஏதும் வாங்கியந்து குடு. நான் எல்லாத்துக்கும் வந்திடுறன்!''

இதைச் சொல்லிவிட்டு இளையதப்பியர் வெளியே போய்விட்டார்.

சுருளியன் உள்ளே வந்தான்.

''வாங்க சுருளித்தம்பி, இரவு யாரிட்டையும் சொல்லிக்காமப் போயிட்டீங்க! நா ரொம்ப யாஸ்தியாக் குடிச்சிட்டன்; நீங்க போனது தெரியேல்லை!''

வேலுச்சாமி சுருளியனை வரவேற்று தனது பெலயீனத்தையும் சொன்னான்.

''ஓம் வேலுச்சாமி! எனக்கு முக்கியமான அலுவல் இருந்தது. போட்டன்; விடியப்புறம் உன்னைக் கொண்டு போய் ரயில் ஏத்திவிடுறன் எண்டு சொல்லிப் போட்டுப்

போனன்; இப்பான் வாறன். நிண்டு மத்தியான ரயில்லை ஏத்திவிடச் சொல்லிப்போட்டுப் போறார்! காலமைச் சாப்பாடு திண்டிட்டியே?''

என்று சுருளியன் ஒரு கேள்வியையும் போட்டு நிறுத்தினான்.

''இப்ப என்னங்க அவசரம்? காலமை வேலை எதுவும் இன்னும் முடிக்கேல்லை!'' என்று அலுத்துக் கொண்டான் வேலுச்சாமி!

''சரி சரி; நான் போய் சாப்பாட்டை எடுத்திட்டு வாறன்!'' என்று கூறிக் கொண்டே சுருளியன் போய் விட்டான்.

வேலுச்சாமி வெளிக் கதவைத் தள்ளிச் சாத்திக் கொழுவிவிட்டு வெளிக்குப் போனான்.

அவனுக்கு வெளிக்குப் போகும் இடம் முன்னமே பழக்கமானது.

முன்பு பத்து நாட்கள் வரை அவன் தங்கியவன்!

ஊரில் சிலரையும் அவனுக்குத் தெரியும்.

## 21

அப்போதுதான் சுப்பையா வாத்தியார் வெளிக்குப் போவதற்காக நில வடலிக் காட்டுக்கு வந்து கொண்டிருந்தார்.

வீட்டில் வாத்தியாருக்கு மலசல கூட வசதி இருந்தும் சுமார் கால்மைல் தூரத்திலிருக்கும் அந்த நில வடலிக் காட்டுக்குள் வெளிக்குப் போகாவிட்டால் அவருக்குப் பூரணத் திருப்தி ஏற்படுவதில்லை.



இளையதம்பியரை ஒவ்வொரு நாளும் காலையில் கிறேசர் வளவில் சந்திக்க வருவது வழக்கமாகிவிட்டதனால் இளையதம்பியரைத் தரிசிக்க வரும்போது அந்த நில வடலிக் காட்டைத் தரிசிப்பதும் வழக்கில் வந்துவிட்டது.

சிங்கப்பூரில் இருக்கும் யாரோ ஒரு புண்ணியவான் தறும 'வெளிக்'கென்று இந்த நில வடலிக் காட்டை விட்டுவிட்டு சிங்கப்பூரில் இருக்கிறான்.

''என்ன வாத்தியார் சாமிங்களா? என்னங்க வேலுச்சாமிப்பயலை மறந்திட்டீங்களா சாமி'' என்று குரல் கேட்டு வாத்தியார் திரும்பியபோது வேலுச்சாமி காவி படிந்த பற்களைத் திறந்து வைத்துக் கொண்டே வாத்தியாருக்குப் பக்கவாட்டாக நில வடலிக்கூடாக வந்தான்.

''எட வேலுச்சாமி! என்ன ஆள் வசப்பிழையாப் போச்சு? மட்டுக்கட்ட முடியேல்லை; எப்ப வேலுச்சாமி வந்தனீ?'' என்று வாத்தியார் கேட்டார்.

''நேத்திக்கு காலம்பெற றெயில்லை !வந்தேங்க! வந்தாப்பிறவு ஐயா விடமாட்டெண்டிட்டாருங்க! 'வேலுச்சாமி நீ இன்னைக்கு முத்தா எம் வூட்டிலேயே சாப்பிட்டுட்டுத்தான் மறுவேலை பாக்கணும்' எண்ணு வூட்டிலே புடிச்சி வைச்சிட்டாருங்க சாமி!''

வேலுச்சாமி பேசி முடித்து வாத்தியாரின் அடுத்த கேள்விக்குப் பதில் சொல்லக் காத்திருந்தான்.

''எப்பிடிச் சுகம் வேலுச்சாமி? குழந்தையள் கலியாணம் கிலியாணம் கட்டிட்டுதா?''

இது வாத்தியாரின் அடுத்த கேள்வி.

''ஆமாசாமி, மூத்த மகளுக்கு வாற மாதத்திலை கலியாணங்காட்சி நடத்திப்புடலாமெண்டு நினைக்கிறங்க; ஐயாவிட்டைச் சொல்லவந்தேங்க! வந்த காரியம் நல்லபடியா முடிஞ்சுதுங்க! 'இந்தாடா வேலுச்சாமி

இதிலே ஆயிரம் ரூபா இருக்கு, எடுத்துட்டுப் போடாண்ணு' விட்டெறியிறதாச் சொல்லியிட்டாங்க! மவன் கறுப்பையன் பத்து நாளைக்கு மிந்திப் போயிட்டானாமுங்க! அவனிட்டையும் ஐந்நூறு குடுத்திருக்கிறாராமுங்க! மனிசனெண்டா இப்பிடியெல்லாங்க இருக்கணும்! தங்க மனசுங்க அவருக்கு!''

வாத்தியாரை வேலுச்சாமியின் பேச்சுத் திடுக்குற வைத்துவிட்டது. நான்கு நாட்களாக 'பரியாரி' வராத தால் சற்று வளர்ந்திருந்த தாடி மயிரைக் கோதியவாறே வாத்தியார் யோசித்துக் கொண்டு நின்றார்.

''வந்த காரியம் சுபமா முடிஞ்சுதுங்க வாத்தியார் சாமி! இன்னைக்கே போயிடாலாமெண்ணு பாக்கிறதுங்க! சுருளித் தம்பியிட்டை என்னை இன்னைக்கு உச்சிப் பொழுது றயிலுக்கு அனுப்பிடச் சொல்லி ஐயா சொல்லியிருக்காருங்க!......''

வேலுச்சாமி பேசிக் கொண்டே போனான்;

வாத்தியார் யோசித்துக் கொண்டே நின்றார்.

''கறுப்பையன் எப்ப போனவனாம் வேலுச்சாமி?''

இப்படி வாத்தியார் திடீரெனக் கேட்டார்.

''அது பத்து நாளைக்கு மிந்தியாமுங்க!''

வேலுச்சாமியும் இப்படிப் பதில் சொன்னான்.

''உன்னை இன்னைக்கே போகச் சொல்லியிட்டாரா வேலுச்சாமி?''

''ஆமாங்க! இன்னைக்கு உச்சிப் பொழுதுக்கு போவச் சொல்லியிட்டாருங்க!''

இது வேலுச்சாமியின் பதில்.

கடைசியாக வாத்தியார் கறுப்பையனைக் கண்டது, இளையதம்பியர் கிறேசர் வளவு மரத்தோடு அவன்



இளையதம்பியரிடம் உதை வாங்கிக் கொண்டு நின்ற போது!

அவனின் உடம்பில் பூம்பாளைத் தடிப்புக்களில் இரத்த நீர் கசிந்தது......

அவன் விம்மி விம்மி அழுதது......

இளையதம்பியர் தன் மீது சீறிப் பாய்ந்தது......

பூதி தனக்குச் சொன்னதான விளக்குமாத்து ஆலாத் தல்......

தாலியறுப்பு வீச்சு!.........

ஊரெல்லாம் பரவி வந்த கதை!.........

இவைகள் எல்லாம் ஒரே குறுகிய வட்ட நேரத்துள் செவிப் புலன்களுக்குக் கேட்டும், கட்புலனுக்குத் தெரிந்தும் வாத்தியாரை நிலத்தோடு வேர் கொள்ள வைத்துவிட்டது.

சற்றுத் தொலையில் சுருளியன் வருவது வாத்தியாரின் கண்களுக்குத் தெரிந்தது.

''வேலுச்சாமி, சுருளியன் உன்னைத் தேடிக் கொண்டு தான் வாறான் போலை கிடக்கு! வாத்தியார் என்ன கேட்டவர் எண்டு கேப்பான்; சொல்லிக்கில்லிப் போடாதை கவனம்! உன்னையும் கொண்டு போடு வாங்கள் கவனம்!''

இப்படிக் கூறிக்கொண்டே வாத்தியார் நிலவடைக் காட்டுக்குள் மறைந்துவிட்டார்.

வேலுச்சாமிக்கு ஒன்றும் விளங்கவில்லை.

'சுருளித்தம்பியோடையும், ஐயாவோடையும் வாத்தியார் சாமி சரியில்லைப்போலை இருக்கணும்!'

இப்படி வேலுச்சாமி மனதுக்குள் சொல்லிக் கொண்டே சுருளியனை நோக்கி நடந்தான்.

''வேலுச்சாமி! வாத்தியார் என்ன கேட்டவர்?''

இப்படிச் சுருளியன் கேட்டான்.

''எப்பிடியேடா வேலுச்சாமி, சொகமாக இருக்கியா எண்ணு கேட்டாரு; ஆமாஞ்சாமி எண்ணு சொல்லிட்டிருந்தன் அவளவுதானுங்க!''

வேலுச்சாமி ஒரு மாதிரிப் பதில் சொல்லிவிட்டான்.

இதற்கு மேல் சுருளியன் திரும்பி வந்த வழியே நடக்க வேலுச்சாமி பின்னால் வந்து கொண்டிருந்தான்.

''வாத்தியார் இப்ப ஐபாவோடை அவ்வளவு நல்லா யில்லை வேலுச்சாமி! அதுதான் உன்னெட்டை வேறயு மேதும் கேட்டிருப்பாரெண்டு நினைச்சுக் கேட்டன்!''

இடைவழியில் சுருளியன் இப்படிக் கூறினான்,

''அவரு அப்பிடி ஒண்ணுங் கேக்கேல்லைங்க!''

வேலுச்சாமி மறுபடியும் மொட்டையான அதே பொய்யையே சொன்னான்.

கிறேசர் வளவுக்குள் வந்ததும் ''வேலுச்சாமி, அம்மா தோசை குடுத்தா கொண்டந்தனான். முகத்தைக் கழுவிப் போட்டுச் சாப்பிடு'' என்றான் சுருளியன்.

''என்னங்க சுருளித் தம்பி, ரெண்டு நாளா ஒடம்பிலை தண்ணி ஊத்தெல்லைங்க! ஒருவாட்டி குளிச்சிட்டுச் சாப்பிடட்டுங்களா!'' என்று சொல்லிக் கொண்டே வேலுச்சாமி கிறேசர் வளவுக் கிணற்றடிப் பக்கம் போனான்.

சுருளியனும் அவனுக்குப் பின்னாலேயே பேசாமல் சென்றான்.

நிலத்து மண்ணை விரலால் தொட்டு பல்லை விளக்கிக் கொண்டு, போர்த்தி இருந்த துண்டை உடுத்தி வேட்டியை அவிழ்த்துக் கிணற்றுக் கட்டில் வைத்துவிட்டு துலாவைத் தாழ்த்தி வேலுச்சாமி தண்ணீரை அள்ளிக் குளிக்கத் தொடங்கி விட்டான்.



வேலுச்சாமி குளித்துக்கொண்டிருந்தபோது சுருளியன் வேலுச்சாமியின் முகத்தை உற்றுப் பார்த்தபடி கிணற்றுக் கட்டில் இருந்தான்.

''என்னங்க தண்ணி இப்பிடிக் குளிருது?'' என்றான் வேலுச்சாமி.

சுருளியன் வேலுச்சாமியின் கேள்விக்குப் பதில் அளிக்காமல் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

வேலுச்சாமியின் மனதில் வாத்தியார் சொல்லிவிட்டுப் போன அந்த வார்த்தைகள் பளிச்சிட்டன. 'வாத்தியார் என்ன கேட்டவர் எண்டு கேப்பான்! சொல்லிக்கில்லிப் போடாதை கவனம்! உன்னையுங் கொண்டு போடுவாங்கள்!' என்ற இந்த வார்த்தை அட்சரம் தவறாமல் அவனுக்குக் கேட்டன.

''வேலுச்சாமி ஒழிக்காமல் சொல்லு! வாத்தியார் உன்னெட்டை வேறை ஒண்டுஞ் சொல்லேல்லையே?''

சுருளியன் இப்படித் திடீரெனக் கேட்டான்.

''ஏன் தம்பி அதையே மறுவாட்டியுங் கேக்கிறீங்க? அவரு ஏதாச்சும் கேட்டிருந்தா நான் உங்ககிட்ட மறைப் பேங்களா!''

வேலுச்சாமி சற்று அழுத்தமாகவே பதில் சென்னான்.

வேலுச்சாமி குளித்த நீர் பக்கத்து வாய்க்காலால் ஓடிச் சற்று அப்பால் மதாளித்து நின்ற — அப்போதுதான் கன்னிப் பூரிப்புடன் மிளிர்ந்த அடியெடுத்த தென்னங் கன்றுப் பாத்தியை நிறைத்து, ஒரு இடத்தில் நிலத்தை வெடிக்கச் செய்து சள சளவென்று கீழே ஓடியது.

''இதென்னெங்க தம்பி, இதிலை ஏதாச்சும் புதைச்சீங்களா?'' என்று வேலுச்சாமி கேட்டான்.

சுருளி திடுக்குற்று விட்டான்.

# 22

வேலுச்சாமியை விட்டுப் பிரிந்த பத்து நிமிட வேளைக்கிடையில் வாத்தியார் மருதப்பர் வீட்டுக்குப் போய்விட்டார்.

மருதப்பர் வீட்டில் இல்லை.

''உப்ப வந்திடுவார் இருங்கோ வாத்தியார்!'' என்று மருதப்பருக்குச் சாய்மனைக் கதிரையை இழுத்துவிட்டு விட்டு மருதப்பர் மனைவி கனகம்மாள் உள்ளே போய் விட்டாள்.

கறுப்பையனைப் பற்றிய சிந்தனைதான் வாத்தியாரின் மூளையை வளைத்துப் பிடித்துக் கொண்டிருந்தது.

நாளொன்றுக்கு ஒரு தடவையேனும் கண்ணில் படும் கறுப்பையனை கடந்த பல நாட்களாக அவர் காண வில்லை. அது......?

வேலுச்சாமிக்கு எடுத்த எடுப்பிலேயே ஆயிரம் ரூபா தருவதாக இளைய தம்பியர் ஒப்புக் கொண்டிருக்கிறார்—அது...?

வேலுச்சாமிக்கு யார் கண்ணிலும் படாமல் வீட்டோடு வைத்திருந்து விட்டு உடனடியாகவே அவனை அனுப்பிவிடுவதற்காக எடுக்கும் முயற்சி — அது...?

சுருளியுடன் சில நாட்களாக இளையதம்பியர் நெருங்கிப் பழகியதில்லை. இப்போது சுருளியைக் கை யோடயே வைத்திருப்பது—அது...?

கறுப்பையன் பத்து நாட்களுக்கு முன்னேயே போய் விட்டதாக வேலுச்சாமிக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.



ஆனால் வேலுச்சாமி நேற்றுத்தான் வந்திருக்கிறான். ஹற்றனலிருந்து இங்கு அவன் வந்து சேர ஆகக்கூடியது ஒன்றரை நாட்களுக்குமேல் ஆகி இருக்காது. பத்து நாட் களுக்கு முன் அவன் போயிருந்தால் வேலுச்சாமி அவனைத் தேடி வந்திருக்கமாட்டானே!— அது...?

இவைகளெல்லாம் ஒவ்வொரு கேள்விகளாக வாத்தி யாரின் நெஞ்சுக்குள்ளே அணிவகுத்து வந்தன.

கனகம்மா வாத்தியாருக்குச் சுடச்சுட பால் கோப்பி கலந்து வந்து கொடுத்தாள்.

''சீனி கனக்கப் போட்டிட்டியளாக்கும் பிள்ளை!'' என்றார் வாத்தியார்.

''ஏன்? எப்போதையும் போலைதான் போட்ட னான்!'' என்றாள் கனகம்மா.

''இல்லைப் பிள்ளை, சுன்னாகம் தம்பையாப் பரி யாரியரெட்டை நேற்றைக்குப் போனனான். அவர் சீனியையும் சோத்தையும் குறைச்சா நல்லதெண்டு சொன்னவர்; அதுதான்...''

இப்படி வாத்தியார் விளக்கம் அளித்தார்.

''சீனி கொஞ்சந்தான் போட்டனான்!'' என்று கனகம் மாள் கூறினாள்.

வாத்தியார் இன்னும் காலையிலிருந்து தண்ணீர்கூடக் குடிக்கவில்லை. அதனால் வயிறு பகீரென்று எரிந்தது.

வாத்தியார் கோப்பியைக் குடித்து முடிந்ததும் முடியாததுமாக இருந்தபோது மருதப்பர் வந்து சேர்ந்தார்.

''என்ன வாத்தியார் இந்தப் பக்கம்? வெள்ளனவே வந்தனீங்கள்?'' என்ற கேள்விகளை மருதப்பர் கேட்டார்.

''அப்பிடிப் பெரிசா ஒண்டுமில்லை; சும்மா இப்பிடி வந்தாப் போலை!'' என்று வாத்தியார் சம்பிரதாயப்படி பதில் சொன்னார்.

''நானும் ஏதும் பெரிய விசேஷம் ஏதும் எண்டு நினைச்சன்; வாத்தியார் இளையதம்பியன் வீட்டிலை பள்ளியள் ஆரும் வேலைக்கு வந்தவளவையாமோ?'' என்ற கேள்வி ஒன்றுடன் மருதப்பர் சாய்மனைக் கட்டிலில் சரிந்து விட்டார்.

வாத்தியார் தனது கதிரையை மருதப்பருக்கு மிகவும் பக்கமாக இழுத்து விட்டுக் கொண்டு மருதப்பரின் காதோடு காது வைத்தாற்போல எதையோ பேசினார்.

கனகம்மாள் உள்ளே போய் நீண்ட நேரம் ஆகி விட்டது.

அவளின் காதில் தான் பேசும் வார்த்தைகள் விழுந்து விடக்கூடாது என்பதற்காக வாத்தியார் அவதானமாகப் பேசினார்.

மருதப்பர் குறுக்குக் கேள்விகள் ஒன்றுமே கேட்காமல் வாத்தியாரின் வாயையே பார்த்துக் கொண்டிருந்தார்.

வாத்தியாரின் குரல் பெரிதாக வெளியே கேட்க வில்லை.

கைவிரல்களை மடித்து மடித்து ஒவ்வொரு மடிப் புக்கும் கீழ்க் குரலில் பேசிக் கொண்டிருந்தார் வாத்தி யார்.

வாத்தியார் கோப்பி குடித்த பாத்திரத்தை எடுத்துப் போகும் சாக்கில் கனகம்மா ஒரு தடவை வெளியே வந்தாள். அவளைக் கண்டதும் வாத்தியார் கதையை மாற்றி, ''காணி நல்ல மலிவு பாருங்கோ, விடாமல் தீத்துப் போடவேணும்!'' என்று சற்றுப் பலமாகக் கூறினார்.



பாத்திரங்களுடன் உள்ளே போன கனகம்மாளுக்கு 'வாத்தியார் என்னைக் கண்டோண்ணை கதையை மாத்திறார்; ஏதோ முக்கியமான கதையாத்தான் இருக்க வேணும்' என்று மனதுக்குள் பட்டது.

கனகம்மா உள்ளே போனதும் வாத்தியார் முறைப் படி மிகுதிக் கதையையும் தொடங்கினார்.

வாத்தியார் கதையை முடித்தாரோ இல்லையோ மருதப்பர் ''அப்ப இப்ப என்ன வாத்தியார் செய்வம்?'' என்று கேட்டார்.

''வடுவாப் பயலை மாட்டிறத்துக்கு உதுதான் சரியான நேரம் பாருங்கோ, அதுதான் உங்கடை யோசினையையும் கேக்கலாமெண்டு வந்தனான்'' என்றார் வாத்தியார்.

''எனக்கு ஒண்டுமாப் பிடிபடயில்லை! ஏன் வாத்தி யார் இப்பிடிச் செய்தாலென்ன?'' என்றார் மருதப்பர்.

மருதப்பரிடமிருந்து உருப்படியான ஆலோசனை ஒன்று வரப் போவதாக வாத்தியார் எதிர்பார்த்தார்.

வேலுச்சாமியனைப் பிடிச்சு முதல்லை பொலிசிலே ஒரு என்றியைப் போட்டா என்ன?''

மருதப்பரின் இந்த யோசனை வாத்தியாருக்கு உருப் படியானதாகப் படவில்லை. வாத்தியார் சற்று வேளை மௌனமாக இருந்தார்.

''ஏன் வாத்தியார் என்ரை யோசினை சரியில்லைப் போலை! அதுதான் பேசாமல் இருக்கிறியள்!'' என்றார் மருதப்பர்.

வேலுச்சாமியைச் சுருளியனோடை வைச்சிருக் கிறான். முதல்லே வேலுச்சாமியைப் பிடிக்கச் சுருளியன் விடான்! அது ஒரு பக்கம் கிடக்கட்டு! சுன்னாகத்துப் பொலிசிஞ்சுப்பற்றர் அவன்ரை வீட்டிலை அடுகிடை

படுகிடை கிடக்கிறான். "மோனைக் காணயில்லை இளையதம்பியரிலைதான் ஐமிச்சமாக் கிடக்கெண்டு வேலுச்சாமி என்றி போடப் போனானெண்டாப் பொலி சிஞ்சுப்பெற்றர் வேலுச்சாமியைத் தான் கொல்லு வான்!"

வாத்தியார் பேசி முடித்தார்.

மருதப்பர் பேசவில்லை.

'அப்பிடியெண்டா விதானைப் பொடியனெட்டை இலேசாகச் சொல்லிப் பாப்பம்!" என்றார் மருதப்பர்.

"விதானைப் பொடியனோ? நல்ல விதானைப் பொடியனெட்டைத்தான்! அவன் தயிருக்கச் சட்டியை நக்கிற தந்திரமான பூனையெண்டதைத் தெரிஞ்சு கொண்டும் சொல்லுறியள்! இதுதான் நல்ல சாட்டெண்டு நினைச்சுக் கொண்டு இளையதம்பியனெட்டைக் கறக் கிறதைக் கறந்து கொண்டு சொல்லுற எங்களையும் வில்லங்கத்துக்கை மாட்டிவைப்பான் கண்டியளோ? தலை யாரி வீட்டுகதை ஒளிச்ச மாதிரி நாங்கள் அவனெட்டை ஒளிக்கப்படாது!" என்றார் வாத்தியார்.

மருதப்பருக்கு இதற்கு மேல் ஒரு ஆலோசனையும் மனதுக்கு வரவில்லை.

"தெல்லிப்பளையிக்கை இருக்கிற உங்கடை சொந்தக் காறப் பொடியன் ஒருவன் யாழ்ப்பாணம் சுப்பிறீன்ரன் கந்தோரிலை வேலை செய்யிறான் எண்டு முந்தி ஒருக்காச் சொன்னனீங்கள்...! ஒரு நாள் வண்டிச் சவாரியிலை..."

வாத்தியார் பேசி முடிக்கவில்லை.

"ஓமோம் தீர மறந்து போனன்; அவனை ஒருக்காச் சந்திச்சு யோசிச்சமெண்டா அவன் ஏதும் சொல்லித் தருவான்! ஒருக்காப் பின்னேரம் போலை அவன்ரை வீட்டை போட்டு வருவமே வாத்தியார்?"

இப்படி மருதப்பர் வாத்தியாரைக் கேட்டார்.



வாத்தியார் தனது சம்மதத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

இரண்டு பேரும் பின்னேரம் தனித்தனியே ஐந்து மணி போல வெளிக்கிட்டுப் போய் அற்பைச் சந்தியிலை சந்தித்து, சந்தியில் நிற்கும் காரில் ஒன்றைப் பிடித்துக் கொண்டு போவது என்று முடிவாயிற்று.

வாத்தியார் போய்விட்டார்.

கனகம்மாள் வெளியே வந்தாள்.

"வாத்தியார் கதைச்ச கதையளை நானும் கேட்டுக் கொண்டுதான் இருந்தனான். இஞ்சை நான் சொல்லிப் போட்டன்! உந்த வில்லங்கமான வேலையள்ளை மாட்டுப் படப்போறியள்! ஊர் வேலையளை இனியெண்டாலும் விடுங்கோ! சத்தியமாச் சொல்லிப் போட்டன்! நீங்க போகப்படாது" என்றாள் கனகம்மாள்.

## 23

சிந்தனை ஒருங்கு கூட்டித் தலை கவிழ்ந்து கொண்டே வாத்தியார் வந்து கொண்டிருந்தபோது எதிராக யாரோ வரும் அரவம் கேட்டுத் தலை நிமிர்ந்தார்.

எதிரே வருவது செல்லி.

"என்ன செல்லிப் பொட்டை துலைக்கே?" என்று கேட்டார் வாத்தியார்.

"செல்லக்கண்டர் நயினார் வீட்டிலே வேலை செய் யிறன்; பிந்திப் போனம்; பேசப் போகினம்!" என்று கூறிக் கொண்டே செல்லி வாத்தியாரை வழிவிலத்திக் கொண்டு நடக்க எத்தனித்தாள்.

''இஞ்சை செல்லி, ஏன் பொட்டை என்னைக் கண்டோண்ணை முகத்தைச் சுழிக்கிறனி? அண்டைக்கு பூதி வீட்டிலை என்னோடை பாஞ்சு விழுந்தாய்? இப்ப...''

வாத்தியாரின் இந்தப் பேச்சுக்குச் செல்லி ஒன்றுமே பேசவில்லை. அவள் போகத்தான் முயன்றாள்.

''செல்லி, பூதி வீட்டிலை நிக்கிறாளோ இல்லாட்டி எங்கையெண்டாலும் போட்டாளோ?'' என்று வாத்தியார் கேட்டார்.

''அவவும் என்னோடைதான் வேலை செய்யிறா; வேளையோடை போயிருப்பா; அங்கைதான் நானும் போறன்!'' என்றாள் செல்லி.

''செல்லி, ஒரு முக்கிய அலுவல் சொல்லி விடுகிறன் பூதியட்டை இரகசியமாச் சொல்லி விடுகிறியோ? செல்லக் கண்டர் வீட்டை வந்து கதைப்பன்தான்; பேந்து அவன் பாவி ஏதும் கரவுகிரவு நினைப்பான்! அதுதான் செல்லி...''

வாத்தியாரின் பேச்சு செல்லியைக் கொடுப்புக்குள் சிரிக்கவைத்துவிட்டது. எதை நினைத்துக் கொண்டாளோ செல்லி, தனது சம்மதத்தைத் தெரிவிக்கும் விதத்தில் தலை அசைத்தாள்.

செல்லி சற்று வழிக்கு வருவதாக வாத்தியாருக்கு மனதுக்குள் ஒரு எண்ணம் தலை தூக்கிக் கூத்தாடியது.

செல்லியின் தலைக்குச் சமீபமாகத் தலையைச் சாய்த்துக் கொண்டே...

''ஒருக்கா மத்தியானம் போலை பூதி வீட்டை போற வழியிலை காத்துக்கொண்டு நிக்கிறனெண்டு என்னை ஒருக்காச் சந்திச்சுக் கொண்டு போகட்டாம் எண்டு சொல்லு! ஒரு முக்கியமான அலுவலெண்டு சொல்லு! இரகசியமாகச் சொல்லிவிடு!''



இதைச் சொல்லி முடித்தார் வாத்தியார்.

இதைமட்டும் சொல்வதற்கு வாத்தியாரின் உடல் ஏன் இவ்வளவு துடிப்புத் துடிக்க வேண்டும்.

செல்லியின் தேங்காய் எண்ணெய்ச் சிக்கு நாற்றம் வாத்தியார் மூக்கு வரை வந்து மோதியது.

செல்லி தலை அசைவுடன் ஒரு தடவை கண்களைச் சிமிட்டிப் பல்லைக் காட்டிக்கொண்டே அப்பால் போய் விட்டாள்.

''அவள் பொட்டை பயப்பிடுகிறாள்'' என்று மனதுக்குள் கூறிக் கொண்டே வாத்தியார் மறுபக்கம் போய்க் கொண்டிருந்தார்.

சுப்பையா வாத்தியாருக்கு இப்போது வயது நாற்பத்தைந்தாகிவிட்டது. கடந்த வருடந்தான் அவர் வேலையில் இருந்து நோய் நொடியென்று ஓய்வு பெற்றுக் கொண்டார். ஆனால் அவரைப் பார்ப்பவர்கள் யாருமே அவருக்கு வயது நாற்பத்தைந்தென்றோ, அன்றிப் பென்சன் எடுத்தவர் என்றோ சொல்ல மாட்டார்கள்.

அவர் உடல்வாகு அப்படி!

இதுவரை அவருக்குக் கலியாணம் காட்சி எதுவும் நடக்கவில்லை.

அவர் உரும்பிராய் சைவப் பாடசாலையில் உதவி ஆசிரியராகப் படிப்பித்தபோது தனது சக ஆசிரியை ஒருத்தியைக் காதலித்ததாகக் கதை!

திருநெல்வேலி சைவ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இரண்டாண்டுகள் ஆசிரிய மாணவனாக இருந்த காலத்தில் அந்தப் பெண்ணானவளைச் சந்தித்ததாகவும், அன்றிலிருந்தே அவள்மீது உயிரையே வைத்திருந்து இறுதியில் உரும்பிராய்ச் சைவ வித்தியாலயத்தில்

ஒன்றாகப் படிப்பித்து காதலை வளர்த்துக் கொண்டதாகவும் அந்தக் காதல் ஜோடியைப் பற்றிப் பல பல கதைகள்.

வாத்தியார் மிகப் பெரும் செல்வாக்குள்ள பரம்பரைக் குடும்பத்தில் பிறந்தவரல்ல.

அவரின் தந்தை ஒரு 'நல்ல கமக்காரன்' என்பதைத் தவிர குடும்ப அந்தஸ்துக்கு இணைவு இலக்கணமாக நிற்பது 'ஆதியில் சொல்லப்பட்ட சுண்டி எடுத்த வேளான குடும்பம்' என்பதுதான். சமீப காலத்திலிருந்து இந்த 'சொல்லப்பட்டதில்' கலப்பு வந்தேவிட்டது.

சின்ன வயசாக இருக்கும்போது அதிகாலையோடு எழுந்து காலை உணவை முடித்துக்கொண்டு, தாயானவள் கொடுக்கும் வாழைஇலைக் கட்டுப்பிட்டையும் எடுத்துக் கொண்டு நடக்கத் தொடங்குவாராயின் வாசவிளான் சைவ வித்தியா லயத்தைச் சென்றடையச் சரியான நேரப் பொருத்தமாகிவிடும். அத்தனை அளவுக்கு மிகக் கஷ்டப் பட்டே அவர் தனது படிப்பை ஒப்பேற்றி, ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை வரை வந்து, அதற்குப் பின்னால் இரண்டொரு பாடசாலைகளில் கடமை புரிந்து கடைசியில் உரும்பிராய் சைவ வித்தியாலயத்திற்கு மாற்றலாகி வந்து சேர்ந்த போதுதான் இந்தப் பெண்ணானவளிடம் தனது உள்ளம் உயிர் எல்லாவற்றையும் கொடுத்து வைத்திருந்தார்.

கண்ணுக்கெட்டிய தூரத்தில் வாத்தியார் வருவாரானால் ''சுப்பையா வாத்தியார் வருகிறார்'' என்று துணிந்து சொல்லிவிடலாம். ஏனெனில் அவரின் உடை, நடை, பாவனை எல்லாமே ஒருவிதம்.

மடித்துக் கட்டிய பீஸ் வேட்டி. நெஞ்சுக்கு நேராகப் பொத்தான்கள். கழுத்து மட்டத்திற்கு ஒட்டப் பூட்டப்பட்ட முழுக்கை நைசனல்; இடது தோளில் கறுப்புக்கரை உத்தரிய மடிப்புச் சால்வை;



எப்போதும் எண்ணெய்ப் பசை மினுங்க, நடுவகிடிட்டு, சற்றுப் பின்நோக்கி வாரிவிடப்பட்ட முடி;

நெற்றியில் நிறைந்த திருநீற்றுப் பூச்சு;

நெற்றியில் ஒரு விரல் அளவில் பச்சைக் குங்குமப் பொட்டு;

உயரம் பருமை எல்லாம் அளவுக்குள் அடங்கிய சாமுத்திரிகா இலட்சண அட்சரம் தவறாத உடம்பு;

கடுகளவு பச்சைக் கலப்புடைய சந்தனக் கலவை நிறம்;

செருப்பு அணியாத பாதம்;

இத்தியாதி இலட்சணங்களைவிட வேறு எந்த இலட்சணத்திலும் யாரும், எப்போதும் வீட்டைவிட்டு வேறெங்கும் அவரைக் கண்டிருக்க மாட்டார்கள்.

எந்தக் கூட்டத்தில் வாத்தியார் நின்றாலும் கண்ணுக்குப் பட்டென்று பட்டுவிடுவதைவிட அவரின் குரல் அவரை இனங்காட்டிவிடும்.

நாலரைக் கட்டைச் சுருதி!

திடீரென்று ஒருநாள் இவர் உயிரையும், உடலையும், அதற்குட்பட்ட சகலதையும் கொடுத்து வைத்திருந்த அந்த மோகினிப் பெண் யாரோ ஒரு டாக்டரை மணம் முடித்துக்கொண்டு வேலையையும் விட்டுப் போய் விட்டாள்.

போனவள் இவரால் அடைக்கலம் வைக்கப்பட்டிருந்தவைகளைக் கொடுத்துவிட்டாவது போயிருக்கலாம்.

அதை அவள் செய்யவில்லை.

''அதைத் திருப்பிப் பெற வேண்டும்'' என்று வாத்தியாருக்கு எண்ணம் வந்ததுமில்லை.

'அந்த மோகினி போய் விட்டாளே!' என்பதற்காக வாத்தியார் மௌன விரதம் அனுட்டித்ததாகவோ, ஊன் உறக்கம் இன்றி இருந்ததாகவோ, வெறுமனே காற்றில் பிதற்றித் திரிந்ததாகவோ, ஏங்கி இடிவிழுந்து திரிந்த தாகவோ, குறைந்த பட்சம், 'பரியாரி'யிடம் முகச் சவரம் செய்ய மூஞ்சியைக் கொடுக்காமல் விட்டதாகவோ, 'கட்டாடி'யிடம் உடுதுணி போடாமல் ஊத்தையனாகத் திரிந்ததாகவோ, குளிப்பு முழுக்கற்று இருந்ததாகவோ எண்ணெய்ப் பசை பூசி நடு வகிடிட்டு தலை வாரிக் கொள்ளாமலோ, திருநீற்றுப் பூச்சுடன், பச்சைக் குங்குமப் பொட்டிடாமல் இருந்ததாகவோ யாரும் விரல் மடித்துக் கூறிவிட முடியாது.

சைவப் பாடசாலையே அவர் நடத்தையைப் பார்த்து ஆச்சரியப்பட்டது.

''வாத்தியார் எச்சணம் நஞ்சு குடிச்சாலுங் குடிப் பார்'' என்று கூறியவர்கள் மூக்கின் மேல் விரல் வைத்தனர்.

''வாத்தியார் ஆகக் குறைஞ்சது ஒரு மாத காலமாவது லீவு போட்டிட்டு வீட்டுக்குள்ளை கிடப்பார் பந்தயம் பிடிக்கிறியளோ?'' என்று கேட்டவர்கள் வாயடைத்துப் போய்விட்டனர்.

''வாத்தியாரைத் தனியக்கினிய இருந்து யோசிக்க விடப்படாது'' என்று தங்களுக்குள் முறை வைத்து அனுதாப மிகுதியால் வாத்தியாருக்கு வேடிக்கைப் பேச்சுக்களைப் பேசிக் கொண்டிருந்தவர்கள் வெட்கப் பட்டனர்.

சுப்பையா வாத்தியார் வாத்தியார்தான்!

அவருக்கு யாரின் உதவியும் தேவைப்படவில்லை!

அந்த மோகினிப் பெண் போய்விட்டாள்!

வாத்தியாரால் அடைக்கலம் வைக்கப்பட்டவைகளை திருப்பித் தராமலே போய்விட்டாள்.



இன்றுவரை அதைத் திருப்பிப் பெறவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு வந்ததில்லை.

வயது நாற்பத்தைந்தாகிவிட்டது.

அந்த மோகினிப் போய் இருபது ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன.

''மோனை ஒரு கலியாணத்தை இனியெண்டாலும் கட்டன்'' என்று கேட்டு நச்சரித்த தாயானவள் செத்தும் போனாள்.

தந்தை முன்னமேயே போய்விட்டார்.

இப்போது வாத்தியாரின் அடக்கமெல்லாம் சகோதரி வீட்டில்தான்.

## 24

செல்லி செல்லக்கண்டர் வீட்டு வெங்காயக் கொட்டி லுக்குப் போனபோது ''என்னெடி பொட்டை இப்பான் வேலைக்கு வாறதோ? என்னதான் இருந்தாலும் வேண்டிற காசுக்கு ரெண்டகம் செய்யப்படாது!'' என்றாள் பூதி.

''நான் என்ரை அலுவலாய் நிண்டிட்டு வரெல்லை அக்கை, உன்ரை அலுவலாயும் வாத்தியாற்றை அலுவலா யுந்தான் மினக்கெட்டுப் போட்டு வாறன்!'' என்றாள் செல்லி கண்களைச் சிமிட்டிக் கொண்டே

''என்னெடி பொட்டை! என்ரையும் வாத்தியாற்றை யும் அலுவலாயுமோ? உமக்குப் பகிடி கூடிக்கொண்டுது!'' என்று இலேசாகச் செல்லியைக் கடிந்து கொண்டாள் பூதி.

''நான் என்ன பொய்யே சொல்லுறன்? உள்ளதைச் சொன்னா ஏன் உனக்கு உடம்பெல்லாம் நோகுது

கேக்கிறின்?'' என்று இப்போது செல்லி சற்று அழுத்த மாகச் சொன்னாள்.

''எடி அங்காலை இஞ்சாலை பாத்துப் பேசடி!''

பூதி ஓசையைத் தணித்துக் கூறினாள்.

செல்லி பேச்சை அத்துடன் நிறுத்திக் கொண்டு குனிந்து வெங்காய முடிப்பில் ஈடுபட்டிருந்த பூதியின் காதுக்குள் ''வாத்தியார் மத்தியானம் வேலையாலை போகேக்கை உன்ரை வீட்டடியிலை — தோட்டக்கரை மாவிலங்கையடியிலை நிக்கிறதாம்; சந்திச்சுக் கொண்டு போ கட்டாயம்!'' என்றாள்.

''ஏனாமெடி?''

பூதி சற்று அதிர்ச்சியுடன் கேட்டாள்.

''எனக்குச் சொன்னவரே? ஏதோ முக்கியமான கதை யாம்; சந்திக்காமல் போயிட வேண்டாமாம்! உதுக ளெல்லாம் வேறை ஆருக்கும் சொல்லக்கூடிய கதையா யிருக்குமே கேக்கிறன்?''

செல்லியின் இந்தப் பேச்சுக்குப் பின்பு பூதி சற்று வேளை பேசாமல் இருந்தாள்.

செல்லி வேலையைத் தொடங்கிவிட்டாள்.

''என்ன அக்கை ஒண்டும் பேசிறாயில்லை?''

சற்றுவேளைக்குப் பின் செல்லி கேட்டாள்.

''என்னத்தைப் பேசச் சொல்லுறாய்? உனக்குக் கதைக்கிற கதை என்ன கதையாத கதை என்ன எண்டு ஒண்டுந் தெரியாது! என்ரை காலப் பிழையிலை இளை யாம்பிக்கு முந்தானை விரிச்சாப்போலை எல்லா நயினார் மாருக்கும் விருச்சுப் போடுவன் எண்டு நீ நினைச்சுக் கொண்டாய்! பூதியின்ரை குணத்தை இன்னும் உனக்குத் தெரியேல்லை!''



பூதியின் இந்தப் பேச்சுச் செல்லியின் மனதைக் குடைந்துவிட்டது. ''அக்கை கோவியாதையெணை! வெற் றுக்குத்தான் கேக்கிறன்; அண்டைக்கும் வாத்தியார் வீட்டைத் தேடி வந்து கதைச்சுப்போட்டுப் போறார்; இண்டைக்கும் தனியச் சந்திக்கச் சொல்லச் சொல்லி விட்டிருக்கிறார்; அப்ப நான் உப்பிடிக் கதையாமல் வேறை எப்பிடிக் கதைக்கிறது?''

ஒரு கேள்வியைப் போட்டுச் செல்லி நிறுத்திக் கொண் டாள்.

''சரியெடி என்னை விடு! வாத்தியாரைப் பற்றி உனக்கு ஏதும் தெரியுமா? அந்தாள் ஒரு விசுவாமித் தரனெடி!''

பூதி பேசி முடிக்கவில்லை. ''ஆர் வாத்தியாரோ? விசுவாமித்திரனோ? எனக்குச் சொல்லாதை அக்கை உந்தக் கதையை! பாக்கிறியே உந்த விசுவாமித்திரனை ஒரு ஆட்டு ஆட்டிக் காட்டிறன்'' என்றாள் செல்லி படச் கென்று.

செல்லியின் பேச்சுப் பூதியை திடுக்குற வைத்து விட்டது.

''எடி எடி விசர்க்கதை கதையாதையடி; விடடி விசர்க்கதையளை!'' என்று சொல்லிவிட்டு பூதி எழுந்து கிடுகு அடைப்புக்குள் போய்விட்டு வந்தாள்.

இதற்குப் பின் அந்தப் பேச்சு நீளவில்லை!

செல்லக்கண்டரின் மனைவி இரண்டு அலுமினியக் கிண்ணங்களுடனும், அலுமினியக் கேற்றில் நிறைந்த தேனீருடனும் வந்து சேர்ந்தாள்.

''பூதி, தேத்தண்ணியைக் குடி; பொடிச்சிக்கும் குடு, புளுக்கொடியல் சீனியும் தேங்காயும் போட்டுத் துவைச் சனான்; அதிலையும் ரெண்டுஉருண்டை கொண்டு வாறன் தின்னிறியளே?'' என்று கேட்டுக் கொண்டே கொட்டி லுக்குள் வந்தாள் அவள்.

பூதி செல்லியின் முகத்தைப் பார்த்தாள்.

செல்லி பேசாமல் இருந்தாள்.

திரும்பிப் போன அம்மாள் இரண்டு புளுக்கொடியல் உருண்டைகளை சண்டி. இலையில் வைத்தபடி ஏந்தி வந்தாள்.

"எங்கடை பிள்ளையளுக்கும் சண்டி இலையிலை தின்னிறத்துக்கு ஆசை! அதுதான் சண்டி இலையிலை கொண்டு வந்தனான்!" என்று கூறிக் கொண்டே இருவரிடமும் ஒவ்வொன்றாகக் கொடுத்தாள். "பிள்ளையள் பள்ளிக்கூடத்தாலை தவிச்சு வரப்போகுதுகள்" என்று கூறிக் கொண்டே அவள் அவசரமாகப் போய்விட்டாள்.

"எடி பொட்டை! சும்மா பேய் வேலை செய்து போடாதை! விருதுக்கு வேட்டையாடப் போய்ப் பொறியுக்கை விழுந்திடாதை! உவங்கள் இரணியங்கள்!"

இப்படிச் சம்பந்தா சம்பந்தமில்லாமல் புளுக்கொடியல் மாவைத் தின்று கொண்டிருக்கும்போது பூதி கூறினாள்.

செல்லிக்கு முதலில் பூதி கூறிய தொடர் விளங்கவில்லை. சற்று வேளைக்குள் விளங்கிவிட்டது. "வாத்தியார் என்ற விசுவாமித்திரனை மடக்கிக் காட்டிறன்" என்று தான் கூறிய வார்த்தைக்கு இப்போதுதான் சரியான பதிலைப் பூதியக்கை சொல்கிறாள்" என்ற முடிவுக்கு செல்லி வந்தாள்.

"அக்கை இன்னும் வாத்தியாரை மறக்கேல்லை!" என்றாள் கிண்டலாக.

"பொட்டை, நான் முந்தியும் உனக்குப் பட்டதும் படாமலும் சில கதையள் சொல்லியிருக்கிறன்! நீ புருஷனை விட்டிட்டிருக்கிறனி! பேந்து வாற பாரங்களை நீ சுமக்கமாட்டாய்! நான் புருஷனை விட்டிருக்கேல்லை; புருஷனைத் தின்டவள். எனக்கு அப்பிடி ஒரு சுமையும் வராது! நான் அப்பிடிச் செய்து போட்டன் எண்டு நீயும் செய்ய வெளிக்கிட்டிடியெண்டால்...... அண்டைக்கு நீ தோட்டத்துக்கை நிக்கேக்கை இளைய தம்பியன் உன்னிலை கண்ணைப் போட்டிட்டான் எண்டு எனக்குத் தெரியும். எண்டாலும் அவன் எனக்கு எப்பல் மடக்கும் எண்டத்தாலையும், இடையிலை வேறை தொல்லையள் வந்ததாலையும் நிப்பாட்டிப் போட்டான். இப்ப நீயா விசுவாமித்திரனை மடக்கிறன் எண்ணிறாய்! கொப்பன் அறிஞ்சா ரெண்டு பேரையும் வெட்டி. எறிஞ்சு போடுவான்......"



பூதியின் இந்த நீண்ட பேச்சு முடியும் வரை காத்திருந்த செல்லிக்கு பூதியின் பேச்சு முடிவில் தான் பேசுவதற்கு ஒன்றுமில்லைப்போலப் பட்டிருக்க வேண்டும். அவள் பேசவில்லை.

செல்லக்கண்டர் வீட்டுக் காய்வெட்டிப் பனை பிரிப்பதற்காக மார்க்கண்டனும் வேறொருவனும் அடிவளவுக்குள் வந்தனர்.

இறுக வரிந்து கட்டப்பட்ட கொடுக்குடன், வியர்வை ஊறிய தேகத்தில் கயிற்று வடத்தை மாறிப் போட்டுக் கொண்டு அந்த இருவரும் வந்தது சமீபத்தில் ஊருக்குள் நடந்த வாலிவதம் நாடகத்தில் வந்த இராமன் இலட்சுமணர்களை ஒரேவேளையில் சொல்லி வைத்தாற் போன்று செல்லிக்கும், பூதிக்கும் ஞாபகப்படுத்தியது.

"அங்கபார் பொட்டை, அண்டைக்குக் கூத்திலை வந்த ராமர் இலச்சுமனர் மாதிரிக் கிடக்கு எங்கடை பொடியளைப் பாக்க!' என்றாள் பூதி.

"ஓமெணை! நான் சொல்லவெண்டு யோசிக்க அதுக்கிடையிலை நீ சொல்லிப் போட்டாய்!" என்றாள் செல்லி.

"து! நாவுறுபடக்கூடாது!" என்று தனது உமிழ் நீரை வெளியே பளிச்சிடத் துப்பினாள் பூதி.

மார்க்கண்டனும், மற்றவனும் மரத்தில் ஒருவர் பின் ஒருவராகத் தொற்றி குத்துக்கைத் தாங்குதலில் ஏறிவிட்டனர்.

சற்று வேளைக்குள் அப்புதுப் பனையின் காவோலைகள், மட்டைகள், பன்னாடைகள் சரசரத்துக் கொண்டு காற்றுக்குப் பறந்து அங்கு மிங்குமாக வீழ்ந்தன.

அதன்பின் இரண்டொரு சீக்காய்க் குலைகள்!

அதற்குப் பின்னால் பாதி பாதியான சீக்காய்ப் பிரிவுகள்.

வெளியே வந்து பூதி அண்ணாந்து பார்த்தாள்.

வட்டெடிக்குக்கீழ் இரண்டு இளந்தாரிகளும், இரண்டு கிட்டிகளில் எதிரும் புதிருமாக நின்று காய்வெட்டிப் பிரிக்கும் காட்சி அவளுக்குக் குளிர்மையாக இருந்தது.

செல்லி இருந்த இரையிலேயே வடக்குப்புறமாக— வீட்டு முற்றத்தின் பக்கம் கண்களை வீசினாள்.

அங்கே......

செல்லக்கண்டரின் நடுவில் மகள் அந்த உச்சிப் பொழுது கண்களில் குற்றாமல் தடுக்க கரத்தால் நிழல் ஆக்கிக் கொண்டு அந்தக் காய்வெட்டி மரத்தின் வட்டையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

வெளியே நின்ற பூதியும் உள்ளே வந்தாள்.

''அப்ப போட்டு வருவமை அக்கை?'' என்றாள் செல்லி.

''ஓமோம், போய் எப்பன் வயித்துப் பாட்டைப் பாத்திட்டு வருவம்'' என்றாள் பூதி.

இருவரும் கிளம்பிவிட்டனர்.

இடையே செல்லி பிரிந்து போனாள்.

பூதி மா விலங்கை மரத்தடி நோக்கிப் போனாள்.



## 25

**வா**த்தியார் கொடுத்துவிட்டுச் சென்ற தகவலால் பூதி திடுக்குற்றுப் போய்விட்டாள்.

''கறுப்பையனை இளையதம்பியன் சரிக்கட்டிப் போட்டான்!'' என்ற வாத்தியாரின் அந்தப் பட்டென்ற சொல்லை பூதியின் நெஞ்சுக்குள்ளே இரையெடுத்துக் கொண்டிருந்தது.

''சாய், வாத்தியார் எழுந்த மானத்திலை சொல்லுறார்; அப்பிடி நடந்திருக்காது!'' என்றும் அவள் தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டாள்.

''அப்படி நடந்திருந்தால் நான்தான் அந்தப் பாவிப் பொடியன்ரை எமனாக இருந்திருக்கிறன்'' என்ற இன்னோர் அடிப்பும் நெஞ்சுக்குள்ளே புரண்டு கலவரப்படுத்தியது.

வாத்தியார் பூதிக்கு ஒரு பொறுப்பான வேலையையும் கொடுத்துச் சென்றிருக்கிறார். அதாவது, 'அவள் எப்படியும் இளையதம்பியர் வீட்டுக்குப் போகவேண்டும். கறுப்பையன் நிற்கிறானா என்பதை அவதானிக்க வேண்டும்; வேலுச்சாமியை ஒரு தடவை வெளியே கொண்டு வந்து ஒழுங்கை மூட்டில் அவளுக்காகக் காத்துக் கொண்டு நிற்கும் தன்னைச் சந்திக்க வைக்க வேண்டும்' என்பவை மொத்தமான ஓர் பெரிய வேலை.

பூதி நடு வானத்தைப் பார்த்தாள்.

பொழுது இன்னும் உச்சியிலிருந்து அதிக தூரம் சரியவில்லை.

வேலுச்சாமியை ஏற்றிச் செல்ல வரும் யாழ்தேவி சுன்னாகம் ஸ்ரேசனுக்குச் சரியாக இரண்டு பத்துக்குத் தான் வரும்! அதற்கிடையில் பூதி ஏற்றுக் கொண்ட வேலையைச் செய்து முடிப்பதற்காக இளையதம்பியரின் கிறேசர் காணிக்குள் சென்றுவிட வேண்டும்.

இன்று சனிக்கிழமை!

கிறேசரில் வேலை இல்லாத நாள்!

வழமைப்படி பூதியை இளையதம்பியர் சந்தித்து அனுபவிக்கும் நாள்!

பூதி அவசரமாக தனது குடிசைக்கு ஓடினாள்.

மண்குடத்தைச்சரித்து முகத்தையும் தோள்மூட்டுக்குக் கீழானதும், குறுக்குக் கட்டுக்கு மேலானதுமான பகுதிகளைத் தண்ணீரால் துடைத்தாள்.

போக்குவரத்துக்கான குறுநாட்டுச் சேலையைக் கொய்யகம விட்டு உடுத்திக் கொண்டாள்.

இறப்பில் செருகி இருந்த கொம்புச் சீப்பை எடுத்து தலையை வாரிக் கொண்டு அள்ளுகொண்டையைப் போட்டுக் கொண்டாள்.

புறப்பட்டுவிட்டாள்.

பூதி கிறேசர் வளவுக் கேற்றைத் திறந்தபோது உள்ளே சந்தடி எதையும் காணவில்லை.

மெதுமெதுவாக நடந்த பூதி கிறேசர் மண்டப வாசல் கதவைத் தள்ளினாள். கதவு தானாகவே திறந்து கொண்டது.

உள்ளே சுருளியன் இருந்தான்.

அவனுக்குப் பக்கமாக இன்னொருத்தன்.

அவன்தான் வேலுச்சாமியாக இருக்க வேண்டும்.



இரண்டு வருடத்திற்குமுன் ஒரே ஒரு நாள்தான் அவனைப் பூதி பார்த்திருக்கிறாள். அதனால் அடையாளம் மனதிலிருந்து விடுபட்டுப் போய் விட்டது.

இருவரும் சீமெந்து நிலத்தில் தான் இருந்தனர்.

இருவருக்கும் நடுவே உடைத்து வைக்கப்பட்ட சாராயப் புட்டி ஒன்றும், இரண்டு கிளாசுகளும், ஒரு பீங்கானில் இறைச்சிக் கறியும் இருந்தன.

வேலுச்சாமி பூதியை மிரண்டு மிரண்டு பார்த்தான்.

''இது ஆர் தெரியெல்லையா வேலுச்சாமி! நம்ம பூதி!'' என்ற சுருளியன் அவனின் காதுவரை குனிந்து, ''ஐயாவின்ரை வைப்புச் சரக்கு!'' என்று குரலை அமுக்கிக் கூறினான்.

''அட நம்ப பூதி அம்மை!'' என்று கூறிக் கொண்டே வேலுச்சாமி பூதிக்கு மரியாதை செய்யும் பாவனையில் சற்று நகர்ந்திருக்க முற்பட்டான்.

''இளையதம்பியரை ஒரு பெருமடக்கு மடக்க, வழமைப்படி அந்தப் பெருமடக்கோடு இளையதம்பியர் குறைந்தது பத்து நிமிட நேரம் மெய்யுறக்கம் செய்ய, அந்த மயக்கம் தெளிவதற்கிடையில் வேலுச்சாமியை வெளியே அழைத்து வந்துவிடுவது......'' இந்தத் திட்டத்தோடுதான் பூதி வந்தாள். ஆனால் இங்கு......?

இளையதம்பியர் இல்லை.

அவருக்குப் பதில் சுருளியன்தான் வேலுச்சாமியோடு இருக்கிறான்!

''ஆரெடி உதிலை நிக்கிறவள்?'' என்று கேட்டுக் கொண்டே இளையதம்பியர் வந்தார்.

பூதி வாய் திறவாமல் வழியைச் சற்று விட்டு ஒதுங்கி நின்றாள்.

"ஆரட்டையெடி பூதி வந்தனி? எந்தப் புரிசனையெடி புடிக்க வந்தனி? ஏனெடி வாத்தி இதுக்கிடையிலை கையை விட்டிட்டானையெடி?"

இப்படிக் கேள்விகளாக அடுக்கினார் இளையதம்பியர்.

வேலுச்சாமியும் சுருளியனும் திடுக்குற்றுப் போய் அப்படியே இருந்தனர்.

பூதியின் குனிந்த தலை நிமிரவில்லை.

"எடி பூதி! என்னைவிட உனக்குக் கொழுத்த மாப் பிள்ளை வாத்தி கிடைச்சிட்டானெடி! என்ரை வீட்டை விட்டுட்டு மற்ற கமக்காறப் பரதேசியள் வீடுகளுக்கெல் லாம் கூலிப் பெண்டுகளைக் கொண்டு திரியிற நீ இப்ப ஏனேடி இஞ்சை வந்தனீ கேக்கிறன்? நன்றி கெட்ட நாய்! திண்ட சட்டியிக்கை பேளுகிற வேசை!......"

இளையதம்பியர் பேசிமுடிக்குமட்டும் பூதி காத்திருக்க வில்லை.

"வேசைகீசையெண்டு கதைச்சா......"

அவளும் பேச்சை முடிக்கவில்லை.

பாய்ந்து வந்த இளையதம்பியர் அவளின் கொண் டையைச் சுற்றிப்பிடித்து இழுத்துக் குதறி எறிய — பூதி பக்கத்து அறைத் தாழ்வாரத் தகரத்தில் மோதி விழ, மறு படியும் இளையதம்பியர் அவள் மயிரைப் பிடித்து இழுத்து, அவள் முதுகில் நான்கைந்து பனங்காய்க் குத்துக் குத்தி......

சுருளியனுக்கு இதற்குமேல் அங்கு இருப்பது நாகரீக மாகப்படவில்லை. கண்ணைச் சிமிட்டி வேலுச்சாமியை அழைத்துக் கொண்டு அவன் கிறேசர் வளவுக்கு வெளியேயே வந்து விட்டான்.

பூதியினதும் இளையதம்பியரினதும் நடைமுறைகள் அவனுக்குத் தெரியும்.



இளையதம்பியர் சுகம் அனுபவிக்க இப்படியும் ஒரு முறையை இடைக்கிடை வைத்துக் கொண்டிருக்கிறார் என்பதும் அவனுக்குத் தெரியும். அதிலும் இளையதம்பி யருக்கு ஒருவித சுவை!

பல சந்தர்ப்பங்களில் இந்த முறையை சுருளியன் கண்டிருக்கிறான்.

"இதென்னங்க சுருளித்தம்பி இது?" என்று வேலுச்சாமி வெளியே வந்து சுருளியனைக் கேட்டான்.

"அது இப்பிடித்தான் வேலுச்சாமி! இண்டைக்கு நீ றெயிலுக்குப் போனபாடில்லை!" என்று கூறிக்கொண்டே சுருளியன் வேலுச்சாமியை விதிக்கு அழைத்து வந்து விட்டான்.

இதற்குப் பின் உள்ளே இருந்து பேச்சுமில்லை; மூச்சு மில்லை

மதியம் திரும்பிவிட்டது.

ஏறக்குறைய மணி ஒன்றரை இருக்கும்.

உடையைச் சரி செய்து கொண்டு......

சிதறிக் கலைந்த கூந்தலை அநாயாசமாக அள்ளிக் கொண்டை போட்டுக் கொண்டு......

கிறேசர் மடுவத்து அறையைத் திறந்து கொண்டு......

வெளிக்கேற்றையும் திறந்து கொண்டு......

பூதி இப்போதுதான் வெளியே வந்தாள்.

வேலுச்சாமியை அவள் கண்கள் துலாவின.

அவனோ அல்லது சுருளியனோ அவள் கண்களுக்குப் படவில்லை.

சற்றுவேளை அவள் கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே நின்றாள்.

இளையதம்பியர் அசதி கலைந்து எழும் நேரக் கணக்கு அவளுக்குத் தெரியும். அதற்கு இன்னும் நேரமிருந்தது.

வெளியே இருந்து வேலுச்சாமியும் சுருளியனும் கதவைத் தள்ளிக் கொண்டு வந்தனர்.

இருவருக்கும் கண் மண் தெரியாத வெறி!

வேலுச்சாமி இடறுப்பட்டு விழ, சுருளியன் அவனைத் தூக்கி நிறுத்தித் தான் சரிய, நிமிர்ந்த வேலுச்சாமி குனிந்து சுருளியனை நிமிர்த்த......

பூதி பக்கத்துப் பனைமரத்தோடு ஒதுங்கி நின்றாள்.

அவளை இருவரும் பார்க்க வில்லை.

வேலுச்சாமியை வாத்தியாரிடம் அழைத்துச் செல்ல முடியாதென்பது பூதிக்குத் தெரிந்தது அதனுடன் இன்னொன்றும் நிச்சயமாகத் தெரிந்தது. 'வேலுச்சாமியின் பயணம் இன்று நடவாது' என்பது.

பூதி கேற்றைத் திறந்து கொண்டு ஒழுங்கை மூட்டை நோக்கிச் சென்றாள்.

## 26

பூதியோடு வேலுச்சாமி வரவில்லை. இது வாத்தியாருக்கு பெரும் ஏமாற்றமாகிவிட்டது.

பூதி வந்த கோலத்தைப் பார்க்க வாத்தியாருக்கு மனதுக்குள் ஒன்று விளங்கியது.

''நான் என்ன வாத்தியார் நயினார் செய்யிறது? சுருளியன் வேலுச்சாமியைக் கைவிட மாட்டன் எண்டிட்டான். ஒண்டு தெரிஞ்சு போச்சு. வேலுச்சாமி



இண்டைக்குப் பயணம் போகமாட்டான் எண்டது'' என்றாள் பூதி.

''ஏன் என்ன நடந்தது?'' என்று வாத்தியார் அவசரமாகக் கேட்டதற்கு ''இளையதம்பியர் அசதியிலை கிடக்கிறார்; இவங்கள் ரெண்டு பேருக்கும் தலைகெட்ட வெறி; இதுக்கிடையிலை றெயில் போயிடும்! அங்கை றெயில் இரையிற சத்தமும் கேக்குது!'' என்று குறிப்பும் காட்டி நின்றாள் பூதி.

வாத்தியார் எல்லாவற்றையும் புரிந்து கொண்டு விட்டார்.

''பூதி, நீ போ! ஆருங் கண்டாலும்! தேவையெண்டாப் பிறகு சந்திக்கிறன்!'' என்று கூறிக் கொண்டே வாத்தியார் ஒழுங்கை மூட்டில் திரும்பி அவசர அவசரமாக நடந்தார்.

வாத்தியார் செல்லக்கண்டர் வீட்டைக் கிட்டிய போது, செல்லக்கண்டர் வளவுப் படலையைத் திறந்து கொண்டு மார்க்கண்டனும், மற்றவனும் உடம்பை நனைத்திருந்த வியர்வையில் ஒட்டியிருந்த பன்னாடைத் தூசுகளைத் தட்டிக் கொண்டே வெளியே வந்தனர்.

''என்ன பொடியள்; பனைகினை பிரிச்சனீங்களே?'' என்று வாத்தியார் கேட்டார்.

''ஓம் வாத்தியார்; செல்லக் கண்டர் ஐயா வீட்டிலை ரெண்டு காய்வெட்டி பிரிச்சுப்போட்டு வாறம்!'' என்றான் மார்க்கண்டன்.

''சரி சரி களைச்சுப் போனியள்; வாருங்கோ மோனை!'' என்று அவர்கள் போகும் பாதைக்குக் கை காட்டிக் கூறிவிட்டு வாத்தியார் மேலும் நடந்தார்.

''வாத்தியார் என்ன மச்சான் இப்பிடி அவசரப் பட்டுக் கொண்டோடுறார்?'' என்று அப்பால் போன போது மார்க்கண்டனை மற்றவன் கேட்டான்.

''பாவம் நல்ல ஒரு பிறவி! தெரியாமல் உந்த சாதி வெறிக் கூட்டத்தோடை மாட்டுப்பட்டுக் கொண்டு நிக்குது! எங்கை நிண்டாலும் ஆளின்ரை நிதானத்திலை பிழை வராது மச்சான்! இந்தவேளை எங்கையோ பெரிய அலுவலாத்தான் போகுது போலை கிடக்கு!'' என்று சற்று வாத்தியாரைப் பற்றிக் கூறிக் கொண்டான் மார்க்கண்டன்.

இருவரும் தோட்டப் பக்க நடைபாதையில் மிதந்து பனை வெளிக்கூடாகச் சென்றனர்.

வாத்தியாருக்கு மனது திருப்தியாக இல்லை.

மனதில் இருந்த திட்டத்தின்படி வேலுச்சாமியன் வரவில்லை.

இனி முயன்று பார்க்க வேண்டியது மருதப்பரால் சொல்லப்பட்ட தெல்லிப்பளையானைக் கொண்டு ஏதாவது செய்வதுதான்!

வாத்தியார் வீட்டுக்கு வந்தபோது அவரின் தங்கை சீதை ''அண்ணை வாருங்கோவன் சோறு ஆறுது!'' என்றாள்.

வாத்தியார் வாய் கொப்பளித்துக் கை அலம்பிவிட்டு அடுக்களைக்குள் நுழைந்தார்.

மருமக்கள் பொடியள் இரண்டும் ஒருவருக்கொருவர் இழுபறி பட்டுக்கொண்டே சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

வாத்தியார் வாங்குப் பலகையை இழுத்துவிட்டுக் கொண்டே உட்கார்ந்து கொண்டார்.

வாத்தியார் ஆசாரக்காரன்.

படிக்கும் காலந் தொட்டு, ஆசிரியர் கலாசாலையிலிருந்து திரும்பி, இருபது வருடங்கள் படிப்பிக்கும் வரை தொடர்ந்து, இதன் மேலும் அவர் பென்சன் எடுக்கும் வரை வந்த பழக்கம் இது!



தாயார் இறந்துபோகும் வரை அவளுக்கும், அதற்குப் பின்பு சகோதரி சீதைக்கும் இது ஒரு பெரிய அலுப்பான சுமை!

அவருக்காகத் தனியாக ஆசாரச் சட்டி, அகப்பை, ஏதனம் எல்லாவற்றையும் இத்தனை ஆண்டுகாலம் தீண்டத் தகாத பாத்திர வகைகளோடு உரசப்பட விடாமல் பக்குவப்படுத்துவதென்பது இலேசுப்பட்டதல்ல

வெள்ளிக்கிழமைகளைத் தவிர — மற்றப்படியான விரத நாட்களையும் தவிர ஏனையநாட்களில் மச்சம் மாமிசத்தோடு பழகும் ஒரு வீட்டில் — அந்தப் பாபச் சோதனைக்கு நடுவே சுத்த ஆசாரக் காரனாக இன்று வரை அவர் இருந்து வருவதுங்கூட இலேசுப்பட்ட ஒன்றல்ல.

தங்கையானவள் இன்று வெந்தயக் குழம்பும், தூதுவளைச் சம்பலும், தக்காளிச் சாம்பாரும் வாத்தியாருக்காக வைத்திருந்தாள்.

கறிகளின் தாளிப்பு வாசனை மூக்கைப் பிடுங்கியது.

வாத்தியார் உணவை மெது மெதுவாகக் கொரித்துக் கொண்டிருந்தார்.

அவருக்கு உணவு உள் எடுக்கவில்லை.

''என்னண்ணை மாமாவின்ரை கறியள் நல்லாயிருக்கெண்டு மருமக்கள் சொல்லுறாங்கள், நீங்கள் சாப்பிடாமல் சும்மா கொறிக்கிறியள்?''

தங்கை சீதை இப்படிக் கேட்டாள். இந்தக் கேள்விக்கு எப்படிப் பதில் சொல்வதென்று வாத்தியாருக்குத் தெரியவில்லை.

''என்னண்ணை வயித்துக்கைகியித்துக்கை ஏதும் சுகயீனம்சிகயீனமாயிருக்கே? உள்ளி மிளகு சீரகம் குத்தி

எப்பன் ரசம் வைக்கட்டே அண்ணை? சொல்லுங் கோவன்!''

தங்கையின் அடுத்த இந்தக் கேள்விக்கு அவர் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்!

''ஒண்டுமில்லத் தங்கச்சி! எனக்கு மனங் கொஞ்சம் சரி யில்லை. எனக்கொண்டுமில்லை; நீ பயப்படாதை!'' என்றார் வாத்தியார்.

''மனஞ் சரியில்லை'' என்ற அவரின் சொல்லு அவளைக் குலுக்கி விட்டது.

இன்றைக்கோ அல்லது நேற்றோ அல்லது அதற்கு முந்தியோ வீட்டில் அவர் மனது நோகக் கூடிய ஏதும் நடந்ததாக அவளுக்கு ஞாபகமில்லை.

அண்ணன்மேல் அவளுக்கு அளவுக்கு அதிகமான அக்கறை!

''பிள்ளை; மோனை; கொண்ணன் இனிக் கலியாணங் கட்டுவான் எண்டு நான் நினைக்கேல்லை. தற்சேலா நான் கண்ணை மூடியிட்டா அவனை நீதான் பார்க்க வேணும்.''

சாவதற்கு நான்கு நாட்களுக்கு மூன் தாயார் தன்னி டம் இப்படிச் சொல்லிவிட்டுச் செத்தது இன்னும் அவள் நெஞ்சில் ஆணி அடித்தது போல இருக்கிறது. அதனால் அண்ணன் மீது அவள் தெய்வத்தின் மதிப்பையே வைத்தி ருந்தாள்.

அண்ணனின் ஒவ்வொரு அசைவுக்கு ஏற்ற விதத்தி லும் தனது நடவடிக்கைகளை அமைத்துக் கொண்டு வருகிறாள்.

அண்ணனை இப்படி ஒண்டிக்கட்டையாக்கிவிட்டு வேறொருவனுடன் வாழ்வு நடத்திக் கொண்டிருக்கும் அந்த மோகினியை ''பசாசு வேசை!'' என்று அவள் மன துக்குள் திட்டிய நாட்களும் உண்டு.



அவள் மட்டுந்தான் வீட்டில் வாத்தியாருடன் அப்படி என்பதல்ல. அவளின் கணவன் - சதா தோட்டநிலத்தோடு கிடந்து செத்துவிட்டு வீட்டுக்கு வரும்போது ''இஞ்சே ரப்பா, கொண்ணன் சாப்பிட்டிட்டாரே?'' என்று கேட் காத நாட்கள் - நேரங்கள் ஒன்றுமே இருக்க முடியாது. ''கொண்ணன் சாப்பிட்டிட்டாரே?'' என்ற அந்தக் கேள்வி ஒன்றுக்குள்ளேயே மைத்துனனான வாத்தியார் மேல் தான் வைத்திருக்கும் பெருமதிப்பையெல்லாம் முத்திரைக் குத்தி வைத்திருக்கிறார்.

வாத்தியாருக்கு மொத்தத்தில் மூன்று மருமக்கள். மூவரும் ஆண்கள்.

மூத்தவனுக்கு இப்போது வயது இருபது வரையில் இருக்கும்.

அவன் இப்போது வீட்டில் தங்குவதில்லை; எப்போதோ ஒரு நாளைக்கு வருவான்; போவான்; ஆனால் வீட்டுக்கு வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தன்னந்தனியாக மாமன் வாத்தியாருடன் குறைந்தது ஒரு மணி நேரத்தைத் தன்னும் கழிக்காமல் அவன் திரும்புவ தில்லை.

''தம்பி என்னண்ணை சொல்லிப்போட்டுப்போறான்! எங்கை அண்ணை திரியிறானாம்? ஒண்டுஞ் சொல்ல மாட்டானாம்!''

இப்படி அவன் போனபின் தங்கைகேட்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ''அவன் என்ரை மருமோன்' பிழை விடான் தங்கச்சி! நீ பயப்பிடாதை!'' என்று மட்டும் வாத்தியார் சமாதானஞ் செய்வார்.

வாத்தியாருக்கு மற்ற இரண்டு மருமக்களும் சின்னஞ் சிறியவர்கள். வாத்தியார் படலைக்கு வந்ததும் ஓடிச் சென்று கையைப் பிடித்து அழைத்து வருவார்கள்.

வீட்டில் அத்தனை மதிப்பு அவருக்கு!

''மனஞ் சரியில்லை'' என்று அவர் சொன்ன அந்தச் சொல்லு அவளைப் படாத பாடு படுத்திவிட்டது.

அவள் எதையோ நினைத்துக் கொண்டாள்; அவள் கண்கள் பனித்தன.

# 27

**நா**லுமணி ஆவதற்கிடையில் வாத்தியார் சயிக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டார்.

ஐந்து மணிக்கெல்லாம் வாத்தியார் மருதப்பருக்காக அற்பைச் சந்திப்பில் காத்திருக்க வேண்டும்.

மூன்றே மூன்று மைல்கள்தான்!

கால்மணி நேரத்துள் போய்விடலாம்!

வாத்தியார் அவசரப்பட்டார்.

வாத்தியாரின் சுபாவம் அப்படி!

ஒரு விஷயத்தை இலேசில் தொடங்க மாட்டார். தொடங்கி விட்டாலோ கடைசி வரையில் அதை விடமாட்டார். அதைச் செய்து முடிக்கும் வரை அவருக்கு உடம்பு ஓய்ச்சலோ மன ஓய்ச்சலோ இருக்காது!

அற்பைச் சந்திப்பு வீட்டிலிருந்து மூன்று மைல் தூரமாயினும் வாத்தியார் அந்தச் சந்திப்புக்கு அடிக்கடி வருவதில்லை. அப்படி வந்தாலும் சந்திப்பில் தரித்து நிற்பதில்லை. அவர் எந்தச் சந்திப்பிலும் நிலைத்துநிற்பதில்லை.

இன்று மருதப்பருக்காக அவர் அங்கு காத்திருக்க வேண்டியதாயிற்று.

போவோர் வருவோர் பலர் அவரைப் பார்த்துத் தலை ஆட்டி மரியாதை செய்து விட்டுப் போயினர். ''என்ன, வாத்தியார் சுணநேரமாக் காத்துக்கொண்டு நிக்கிறியள்?'' என்றும் இரண்டொருவர் கேட்டு விட்டனர்.



மருதப்பர் வந்தவுடன் புறப்படுவதற்கு வசதியாக பக்கத்துப் பெற்றோல் நிலையக்காரனிடம் சொல்லிக் கொண்டு சயிக்கிளை வைத்துவிட்ட வாத்தியார், சந்திப்பில் நின்ற ஒரு A-40 கார்க்காரனை தெல்லிப் பளைக்குப் போய்வரக் கூலியையும் விசாரித்தார்.

''தெல்லிப்பளை யூனியன் பள்ளிக்குடத்தடிக்குப் பன்ரெண்டு ரூவா எடுக்கிறனாங்கள் வாத்தியார்; அங்காலை மகாஜ்னாக் கொலிச்செடி வரையிலை போக வேணும் எண்டும் சொல்லுறியள். உங்களோடை என்னத்தைப் பாக்கிறது; சிலவேளை சுணங்கிக்கிணங்கி வர வேண்டி வந்தாலும், நீங்கள் ஒரு பதினைஞ்சைத் தாருங்கோவன்!''

இப்படிக் கார்க்காரன் கேட்டான்.

''என்னெண்டாலும் மனச் சாட்சிப்படிக்குச் செய் தம்பி!'' என்று கூறிக்கொண்டே பத்து ரூபாய்த் தாள் ஒன்றை அவனிடம் நீட்டி, ''பெற்றோல் கிற்றோல் இல்லாட்டி அடிச்சுக்கொண்டு வாரும் தம்பி!'' என்றும் கூறினார்.

கார்க்காரனும் பெட்ரோல் அடித்துக் கொண்டு வந்து தயாராக நின்றான்.

மணி ஐந்தாயிற்று!

மருதப்பரைக் காணவில்லை.

ஐந்தரை ஆயிற்று!

மருதப்பரைக் காணவில்லை.

ஆறும் ஆகி, அதற்கு மேலாகி, இருட்டியும் விட்டது. மருதப்பரைக் காணவேயில்லை.

வாத்தியாருக்கு ஓரிடத்தில் நிற்க முடியவில்லை.

சந்திப்பு வீதியில் அங்குமிங்குமாக நடந்தார்.

வீதியில் தெற்குப் பக்கமாக பார்வையை நீட்டி நீட்டி வீசினார்.

''என்ன வாத்தியார் ஆளை இன்னும் காணேல்லை?'' என்றான் கார்க்காரன்.

''ஆள் வராமல் விடாது; வரும்; வரும்!'' என்று வாத்தியார் அவனுக்கு மறுமொழி சொன்னது மட்டுமல்ல அதனால் தனது மன ஆறுதலுக்குப் பரிகாரம் தேடிக் கொண்டார்.

நேரம் ஏழுக்கு மேலாயிற்று!

மருதப்பர் வருவார் என்ற நம்பிக்கை வாத்தியாருக்கு அற்றுப் போய்விட்டது.

அவர் வராததற்கான காரணத்தை அறிந்துவிட மனதால் ஆய்வு நடத்தினார்.

''ஆளுக்கு ஏதும் சுகம்கிகம் இல்லாமல் வந்திட்டுதோ?''

''சிலவேளை பெஞ்சாதிக்கு ஏதும் சுகயீனம் வந்திருக்கும்!''

''இளைய தம்பியளுக்குப் பயந்து ஆள் கடத்திப் போட்டுதோ?''

''மறந்து கிறந்து போச்சாக்குமோ?''

வாத்தியாரின் ஆய்வு நீண்டு கொண்டே போயிற்று.

''என்ன வாத்தியார், இனி ஆள் வருமெண்டு நான் நினைக்கேல்லை! கொழும்பு ரெயிலுக்குச் சுன்னாகத்துச் சவாரி ஒண்டு வந்தது; அதையும் விட்டிட்டன்!''

இப்படி இலேசாகத் தான் வாங்கிய பத்து ரூபாவுக்கு கணக்குப் பார்த்துக் கணக்காகப் பேசினான் கார்க்காரன்.

வாத்தியாருக்கு இது விளங்கிவிட்டது.



அவனிடம் கொடுதத பத்து ரூபாவைத் திருப்பி வாங்குவதாக வாத்தியார் நினைத்திருக்கவும் இல்லை.

''தம்பி, ஆளைக் காணேல்லை; நான் போட்டு வாறன்! சில சமயம் நாளைக்குப் போகவேண்டி வந்தா வாறன்!'' என்று கூறிவிட்டு வாத்தியார் பெற்றோல் செற்றை நோக்கி நடந்தார்; அங்கே நின்ற சயிக்கிளை எடுத்தார்; புறப்பட்டுவிட்டார்.

வாத்தியார் நேராக மருதப்பர் வீட்டுக்குத்தான் வந்து சேர்ந்தார்.

மருதப்பர் வீட்டு விறாந்தையில் பெற்றோல் மாஸ்க் லாம்பு மட்டும் மொட்டையாக எரிந்து கொண்டிருந்தது.

வீட்டில் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

சயிக்கிளை முற்றத்தில் மரத்தோடு சாத்தி வைத்து விட்டு வாத்தியார் விறாந்தையில் ஏறினார்; விறாந்தையையும். உள்புற வீட்டையும் இணைத்திருந்த கதவைத் தட்டினார்.

''ஆரது வாத்தியாரே?'' என்று கேட்டுக்கொண்டு கனகம்மா கதவைத் திறந்தாள்.

''அவரை நாலு மணிபோலை ஆரோ வந்து கூட்டிக் கொண்டு போனவை! இன்னும் காணேல்லை; எங்க போட்டார் எண்டுத் தெரியேல்லை!'' என்றாள் வந்ததும் வராததுமாக.

மருதப்பர் நிலபுலம் செய்பவர்தான்; இடைக்காலங்களில் புகையிலைக் கண்டும் செய்வார். வீட்டுக்குள் பாடத்தில் புகையிலை கிடந்தாலும் அவர் புகைப்பது, அப்போது கொடி கட்டிப் பறந்த வை.சி.சி. குசுருட்டைத் தான். அந்தச் சுருட்டுக்குப் போடப்படும் கோடாவிலும் அது எரியும் போது புகையில் மிதந்து வரும் வாசனையிலும் அவருக்குப் பேரின்ப சுகம் கிடைக்கும். அவரின்

அந்தக் கோடாப் புகை வாசனையில் வாத்தியாருக்குப் பரிச்சயம் உண்டு.

அந்தக் கோடாப் புகை வாசனை இப்போது வாத்தியாரின் சுவாசத்தில் பட்டது.

''மருதப்பர் உள்ளேதான்'' என்பதைப் பறைசாற்றிய அந்தக் கோடா வாசனையை உள்ளெடுத்துக் கொண்டே வாத்தியார் நின்றார்.

வழமைப்படி வாத்தியாரை இருக்கும்படி கேட்டு உபசரிக்கும் கனகம்மாள் இப்போது அப்படிச் செய்ய வில்லை.

இதற்குமேல் அங்கே நிற்பது நாகரீகமாகப் படாமல் போகவே வாத்தியார் வெளியே வந்துவிட்டார்.

''இனி எங்கே போவது?''

இதைப் பற்றி இந்த நிமிடம் வரை வாத்தியாருக்கு முடிவேதும் இல்லை.

''பூதி வீட்டுக்குப் போனால் அவளிடமிருந்து ஏதாவது புதினம் அறியலாம்!'' என்ற நினைப்பு அப்போது தான் மனதுக்குள் தளிர் விட்டது. இருந்தும் அந்த இருட்டுக்குள் சயிக்கிளைத் தள்ளிக்கொண்டு வடலிக் கன்றுகளுக்கூடாகவும், பனைகளின் அடிப் பாதைகளுக் கூடாகவும் போக அவருக்கு அலுப்பாயிருந்தது.

இப்போது வாத்தியார் செல்லக்கண்டர் வீட்டு வாசலுக்கு வந்துவிட்டார்.

அப்போதுதான் செல்லக்கண்டர் வீட்டுப்படலையைத் திறந்து கொண்டு ஒருவன் வந்தான்.

அவன் நிச்சயமாக சேர்வைக்கார மார்க்கண்டனாகத் தான் இருக்க வேண்டும்! ஏனெனில் அவனின் இயனக் கூடு கிலுங்கும் ஓசை கேட்டது.



''ஆருது மார்க்கண்டுப் பொடியனே? என்னடா மோனை இன்னும் சீவல் முடியேல்லையே?'' என்று வாத்தியாரின் குரல் கேட்டு மார்க்கண்டன் நின்றான்.

''ஓம் வாத்தியார்! எங்கடை பொடியள் சேந்து வேதக் கோயிலடியிலை பின்னேரம் ஒரு கூட்டம் வைச்சனாங்கள்; கூட்டம் முடியச் செண்டு போச்சு; அதுதான் இண்டைக்கு ... சுணங்கினது! கடைசிப்பனை அறுத்துப் போட்டுப் போறன்!''

மார்க்கண்டன் பதில் சொல்லிவிட்டு நகர முற்பட் டான்.

''எட மோனை! குறை நினைச்சுப் போடாதை! இந்தச் சயிக்கிளை ஒருக்கா வீட்டிலை வாத்தியார் தந்த தெண்டு குடுத்துப்போட்டுப் போறியே?''

வாத்தியாரின் இந்தக் கேள்வி மார்க்கண்டனுக்கு மனமகிழ்வையே கொடுத்தது. கொஞ்சத் தூரமாவது வாத்தியாரின் சயிக்கிளில் போகலாம்!

''அதுக்கென்ன வாத்தியார்! காத்துக் கிடக்கே?'' என்று கேட்டுக்கொண்டே மார்க்கண்டன் வாத்தியாரிட மிருந்து சயிக்கிளைக் கை மாறிக் கொண்டான்.

சயிக்கிளை மார்க்கண்டனிடம் கொடுத்ததுதான் தாமதம் ''மோனை பிறேக்குச் சரியில்லை; இருட்டுக்கை விழுந்துகிழுந்து போயிடாதை'' என்று கூறிக் கொண்டே வாத்தியார் இருளுக்குள் மறைந்து போனார்.

குளிர் காற்றுப் பலமாக வீசிக் கொண்டிருந்தது; மழை இலேசாகத் தூறியது.

தோட்டத்துக் குறுக்குப் பெரு வரம்பில் இறங்கி நடந்து—

பனை வெளியின் அடிப் பாதையில் நடந்து,

தோட்டக்கரை மாவிலங்கையடியைக் கடந்து,—

வாத்தியார் பூதி வீட்டுக்கு வந்துவிட்டார்.

# 28

பூதியின் கொட்டில் வெளிச்சமற்று இருண்டு கிடந்தது.

''பூதி வீட்டில் இல்லை'' என்பதைப் புரிந்துகொண்ட வாத்தியார் அவளுக்காக அங்கே காத்திருப்பதா இல்லையா? என்பதைத் தீர்மானிப்பதற்காகச் சிறிது நேரம் நின்றார். முடிவில் தீர்மானித்துவிட்டார்.

நான்கைந்து முதுபனைகள் சூழ்ந்த அந்தக் கொட்டிலின் முன்னால் மொட்டையாகத் தனித்து நிற்பது அவருக்குக் கஷ்டமாக இருக்கவே சற்று அப்பால் சென்று தோட்டக் கரையோடு பூதியை மத்தியானம் சந்தித்த மாவிலங்கை மரத்தின் கீழ் குந்திக் கொண்டார்.

அவர் மனது இருக்கை கொள்ளவில்லை.

அது எங்கெல்லாமோ அலைந்தது.

இளையதம்பியரையும், சுருளியனையும், கறுப்பையனையும், வேலுச்சாமியையும் சுற்றிச் சுற்றித்தான் அது வந்தது.

''இந்தக் காரியத்தில் இளையதம்பி செய்த மனிதத் தன்மை இல்லாத காரியத்தை அம்பலத்திற்குக் கொண்டு வந்து விட்டாலே இதில் தனது பங்கு முடிந்த மாதிரி தான்'' என்று அவர் எண்ணினார். ''ஆனாலும் அதைச் சாதிப்பதற்குத் தன்னுடன் ஒத்துழைக்க யாரும் துணிந்து வரமாட்டார்கள்'' என்ற எண்ணமும் இடையிடையே தோன்றித் தோன்றி மறைந்தது.

பூதி உதவிய அளவுக்கு உதவி கிடைக்குமெனில்......

இளையதம்பியருடன் மிகவும் நெருக்கமான உறவை அவர் வைத்துக் கொண்டது சமீபத்தில்தான். இந்தக்



கிட்டிய கால உறவில் இருந்து இளையதம்பியரின் சின்னக் குணங்கள் சிலவற்றை அவர் கண்டிருக்கிறார். ஆனாலும், இப்படி ஒரு இரணியத் தனத்தை இளையதம்பியரிடமிருந்து அவர் எதிர்பார்க்கவில்லை.

ஊருக்குள் என்னதான் நாக்கு வளைப்பு நடந்த போதும் பூதியை வைப்பாடிச்சியாகப் பகிரங்கமாக வைத்திருப்பதை இளையதம்பியரின் பரந்த மனப்பான்மை தான் என எண்ணியும் நம்பியும் வந்தார்.

மருதப்பர் வீட்டோடு இளையதம்பியருக்கு இருந்த ஈடுபாட்டை வாத்தியார் பெருங் குற்றமாகக் கருதவில்லை. ''மருதப்பருடைய இயலாத் தன்மை இளையதம்பியரை அப்படி ஆக்கிவிட்டது'' என்று அவர் மனது முடிவெடுத்து வைத்துக் கொண்டிருக்கிறது. ஆயினும் கறுப்பையனைத் தீர்த்துக் கட்டிய காரியத்தில் இளையதம்பியரை மாட்டி வைப்பதில் மருதப்பரை ஈடுபட மருதப்பர் மனைவி விடப் போவதில்லை என்பது அவர் மனதுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

பலவழிகளிலும் இளையதம்பியருடன் மருதப்பருக்கு இருந்த மனத்தொல்லைகளைச் சரியானபடி சீண்டிவிட்டு மருதப்பரைச் செயல்படவைக்கலாம் என்றுதான் காலையிலிருந்து அற்பைச் சந்திப்பிலிருந்து திரும்பும்வரை அவர் எண்ணியிருந்தார். இப்போது அந்த நம்பிக்கை சிறிது சிறிதாக நகர்ந்து வெகுதூரம் போய்விட்டதாக அவருக்குப் பட்டது.

காலை மருதப்பரை அவரின் வீட்டில் வைத்துக் கதைத்த தனது மடத் தனத்தை அவர் நொந்துகொண்டார். அவரை மெதுவாக வெளியே அழைத்து வந்து அவர் மனைவியின் காதுக்குப் படாமல் பக்குவமாகக் காரியத்தை விளங்க வைத்திருந்தால் இப்படி வந்திருக்காது என்பது அவரின் இப்போதைய நினைப்பு.

''மருதப்பரை எப்படியும் இதற்குள் இழுத்து வந்து விடுவதுதான்; ஆளை விடுறேல்லை'' என்று அவர் மனதுக்குள் மீண்டும் உறுதி செய்து கொண்டார்.

நிலவு காலிக்க வெகுநேரம் இருந்தது.

மேல் வானப் பரப்பில் வெள்ளிக் கூட்டங்கள், துகள்கள், எல்லாம் களங்கம் ஏதும் இல்லாமல் ஜெகஜ் ஜோதியாக இருந்தன.

மெதுவான கச்சான் காற்று வீசியது.

தோட்டக்கரைப் பனைகளின் காவோலைகள் மெது மெதுவாகச் சரசரத்தன.

இந்த வேளையில் தன்னந்தனியாக...

அதுவும் கைம்பெண்ணான ஒருத்தியின் வீட்டுக்குப் பக்கத்தே...

யாருங் கண்டால் என்ன நினைப்பார்கள்?

இவைகளைப் பற்றிய அக்கறை எதுவுமே வாத்தி யாருக்கு இருக்கவில்லை.

அவர் மனம் விரும்பியதெல்லாம் பூதியைப் பார்த்து, அவளிடமிருந்து ஊர்ப் புதினத்தைத் தெரிந்து கொண்டு வேண்டுமானால் மருதப்பரிடம் தான் தோற்றுப் போனதைச் சொல்லி ஆறி — அவளிடமேனும் ஆலோ சனையைப் பெறுவது என்பவைகளில் தான்.

சின்ன வயதிலிருந்து வாத்தியாருக்கு ஒருவிதமான மனப்போக்கு! தனது மனதுக்கு மாறானதாக யாருக்கு எது நடந்தாலும் அதைப் பார்த்துக் கொண்டு அவர் சும்மா இருந்து விடுவதில்லை, நலிந்த பக்கத்துக்காக நியாயம் பேசுவார். வரிந்து கட்டிக்கொண்டு சண்டைக் கூட தயாராகி விடுவார்.

வாத்தியாரின் இந்தச் சுபாவத்தைக் களைந்தெறிய அவரது பெற்றோரும், அதைத் தொடர்ந்து அவரின்



காதலியான மோகினியும், அதற்குப் பின்பு அவருக்கு எல்லாமான சகோதரியும் என்னதான் முயற்சி எடுத்தும் வாத்தியாரைத் தடுத்துவிட முடியவில்லை. இந்தச் சுபாவத்தினால் அவர் சம்பாதித்துக் கொண்ட எதிரிகள் பலர். ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டுமென மனதுக்குள் தீர்மானித்து விட்டாரோ அதிலிருந்து அவரைப் பின்வாங்கச் செய்துவிட யாருக்குமே முடியாது. அந்தக் காரியத்தைச் செய்து முடிக்கும் வரை அவர் விசர் நாய் போலத்தான்!

இத்தனை குணங்களும் உடைய வாத்தியார் அந்த மோகினியின் விவகாரத்தில் இலேசில் விட்டுவிட்டது ஆச்சரியமான ஒன்றுதான். இதற்கான மூல காரணங்கள் யாருக்கும் தெரியாது.

''எனக்குக் கல்யாணம் பேசுகினம்!''

இப்படி அந்த மோகினி ஒருநாள் இவரைக் கேட்டாள்.

''நீர் என்ன சொன்னனீர்?''

வாத்தியார் சாவதானமாகக் கேட்டார்.

''அவர் ஒரு டாக்குத்தராம்!''

அந்த மோகினி அவர் கேள்விக்குப் பதில் சொல்லாமல் வேறேதோ சொன்னாள்

''நான் கேட்டதுக்கு மறுமொழி சொல்லும்; கலியாணம் பேசிறவைக்கு நீர் என்ன மறுமொழி சொன்னனீர்?''

வாத்தியார் மறுபடியும் முந்திய கேள்வியையே கேட்டார்.

''நான் இன்னும் ஒரு முடிவுஞ் சொல்லேல்லை!''

''அப்ப என்ன முடிவு சொல்லப் போறீர்?''

''.........''

''நான் கேக்கிறன் பேசாமல் வாறீர்! என்ன முடிவு சொல்லப் போறீர்?''

''ஐயா உங்களைப் பற்றி விசாரிச்சுப் போட்டாராம்! உங்கடை பேத்தியார் முறையான ஒருத்தியைப் பள்ளன் கொண்டோடினவனாம்!''

''பேந்து......''

''பேந்து திருப்பிக் கொண்டு வந்து சொந்தக்காறருக்கை கட்டி வைச்சவையாம்!''

''அதுக்கு?''

''அதுக்குத்தான் என்னை அந்த டாக்குத்தருக்குக் பேசுகினம்!''

''அப்ப ஒண்டு செய்யுமன்!''

''என்ன செய்ய?''

''நீர் அந்த டாக்குத்தரைக் கட்டுமன்; நான் ஒரு பள்ளியைப் பாத்துக் கட்டிறன்!''

''.........''

''ஏன் யோசிக்கிறீர்?''

''நீங்கள் பள்ளியைக் கட்டிறன் எண்டு சொன்னாப் பிறகு...''

''சொன்னாப் பிறகு?''

''நான் டாக்குத்தரைத்தான் கட்டப் போறன்!''

பாடசாலையிலிருந்து அந்த மோகினியோடு பஸ்சுக்கு வரும் இடைவேளையில் நடந்த அந்தச் சம்பாஷணைக்குப் பின்பு அவளை பஸ் வண்டித் தரிப்பு நிலையம்வரை தொடர்ந்து வராமலே வாத்தியார் தனது சயிக்கிளில் ஏறிக்குந்திக் கொண்டார்.

மறுநாள் வந்தது.

பாடசாலையில் அந்த மோகினி வாத்தியாரிடம் கண்களை ஊரவிட்டாள்.



வாத்தியார் வாத்தியாராகவே இருந்தார்.

பஸ்சுக்கு வரும் வழியிலே அந்த மோகினி வாத்தியாரை எதிர்பார்த்தாள்.

வாத்தியார் வரவில்லை.

அவர் தன் பாதையில் போய்விட்டார்.

மறுநாளும் ஆயிற்று. அதற்கு மறுநாளும் ஆயிற்று.

பாடசாலையே ஆச்சரியப்பட்டது.

அந்த மோகினி இரண்டு நாட்களாகத் தன்னந்தனியாக பஸ்சுக்குப் போனது...

வாத்தியார் தன்பாட்டிலேயே தன் பாதையில் சயிக்கிளில் ஏறிக்கொண்டு போனது...

அந்த மோகினியின் திருக்கல்யாணத்திற்குப் பாடசாலை சக ஆசிரியர்களுக்கும் அழைப்பு வந்தது.

வாத்தியாருக்கும் வந்தது.

வாத்தியார் அமைதியாகத் திருமண விழாவிற்குப் போய் வந்தார்...

வாத்தியார் பழைய சிந்தனையில் மூழ்கிவிட்டார்.

பூதியின் குரல் கேட்டது.

அவளுடன் வேறு யாரோ ஒருத்தியும் கூடி வருகிறாள். அவள் செல்லி.

## 29

இந்த நேரத்தில் வாத்தியார் தன்னிடம் வந்ததால் பூதி முதலில் திடுக்குற்றுப் போனாள்.

செல்லிக்கு ஒன்றும் விளங்கவில்லை.

மணி ஏறக்குறைய ஒன்பதுக்கு மேல்!

இருட்டு வேளை!

வாத்தியார் தன்னந் தனியாக!

செல்லி ஒவ்வொன்றாக மன உறைக்குள் போட்டுப் பார்த்துக் கொண்டாள்.

செல்லி எதை நினைத்துக் கொண்டாளோ!

அங்கு தான் நிற்பது அவளுக்கே அசிங்கமாகப் பட்டது.

''அக்கை நான் போட்டு வரட்டே?''

எல்லாவற்றையும் அடக்கி இப்படி ஒரு கேள்வியைக் கேட்டாள் செல்லி!

அவளின் கேள்வியின் உள்ளுடனைப் புரிந்துகொண்ட பூதி, ''எடி விசரி நில்லெடி போகலாம்!'' என்று கூறினாள்.

சற்றுவேளை மௌனத்தில் கழிந்தது.

''வாத்தியார் நயினார் வெள்ளனவே வந்தனீங்கள்? வந்து கனநேரமாப் போச்சே?''

இப்போதுதான் சம்பிரதாயப்படி பூதி வாத்தியாரிடம் பேசினாள்.

''நான் வந்து கொஞ்ச நேரம் ஆகுது பூதி'' என்று வாத்தியார் பதில் கூறும்போதே நெருப்புப் பெட்டியை இடுக்கில் இருந்து எடுத்து ஒரு குச்சியைத் தட்டி தகர விளக்கை எரிய வைத்தாள் பூதி.

வெளிச்சத்தில் வாத்தியாரின் முகம் செல்லிக்கோ பூதிக்கோ தெரிந்ததைவிட வாத்தியாருக்குத்தான் இருவரின் 7முகங்களும் நன்றாகத் தெரிந்தன.

''ஊருக்கை என்ன கதையாக் கிடக்கு எண்டு உன்னைக் கேட்டுக் கொண்டு போகத்தான் நிண்டனான்! மருதப்பரெல்லே கறுப்பையன்ரை விஷயமா தெல்லிப் பளையான் ஒருதனட்டைப் போக அற்பைச் சந்திக்கு வாறன் எண்டிட்டு என்னை ஏமாத்திப் போட்டார்! ஊருக்கை கறுப்பையனைப் பற்றி என்ன கதை நடக்கு?''



வாத்தியாரின் இந்தக் கேள்வி இப்போதுதான் செல்லிக்கு விஷயத்தை ஒரு அளவுக்கு விளங்க வைத்தது.

கோவிலடியில் பின்னேரம் நடந்த கூட்டத்திலை கறுப்பையனை இளையதம்பியர் குளோசாக்கிப் போட்டார் என்ற விதத்தில் பூதி பலரின் காதுகளுக்குள் சொன்னதும், வாத்தியார் எப்பிடியும் இளையதம்பியரை மாட்டிறன் எண்டுதான் நிக்கிறார் என்று சொன்னதும் அவளுக்கு நினைப்பு வந்தது. அந்தச் சன வேளைக்குள் வாத்தியாரையும் பூதியையும் இணைக்கும் விதத்தில் தான் நினைத்துக்கொண்ட நினைப்பைப் பற்றி அவள் சிறிது வேளை வருத்தப்பட்டாள்.

''பாவம் அந்தக் கறுப்பையன் பொடியனை கன நாளாய் ஒருத்தருந்தான் காணேல்லையாம்! சொன்னாப் போலை ஒண்டைச் சொல்லாயல் விட்டிட்டன். பொழுது செக்கலுக்கை சுருளியன் வேலுச்சாமியைப் பயணம் அனுப்புறத்துக்கு பனங்கிழங்குக் கட்டுகளோடை சயிக் கிள்ளை ஏத்திப் போனதைக் கன பேர் கண்டவர்களாம்! இத்தறியிலை வேலுச்சாமி கனதூரம் போயிருப்பான்!'' என்றாள் பூதி.

வாத்தியார் சிறிது நேரம் பேசாமல் நின்றார்.

செல்லி வாய் திறக்கவில்லை.

அவள் வாத்தியாரின் முகத்தையே கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தாள்.

உள்ளுக்குள் அவளுக்குள் வாத்தியார் மேல் இப்போது இரக்கம் வந்தது.

''சும்மா ஊரு விஷயத்திலை இந்த மனிசன் தன்னை மாட்டிக் கொண்டு உலையப் பாக்குது!'' என்று அவள் மனதுக்குள்ளே குரல் வைத்தாள்.

''அவர் மருதப்பர் நயினாருக்கு இளையதம்பியைப் பிடிச்சுத் தின்னிற கோவம்! அவர் வாத்தியார் நயினா ரோடை வந்திருப்பார்; அவ சிங்கார நாச்சியார் விட்டி ருக்க மாட்டா! இளையதம்பியின்ரை விஷய மெண்டா அவ தொடுகிலும் சம்மதிச்சிருக்கா! அவரும் பொண்டிலுக்குப் பீப்பயம்!'' என்று கதையை மீண்டும் தொட்டாள் பூதி.

''அந்தாளும் என்ன செய்யிறதெணை? வயது சென்ட நேரத்திலை அவவைக் குமரியாக் கட்டினா அவ பின்னை விடுகிறாவே? கீறின கோட்டுக்கை அவர் நிக்கத்தானை வேணும்! வயது போன நேரத்திலை...''

செல்லி வாயைத் திறந்து பேசிவிட்டு நாக்கைப் பற் களிடையே வைத்துக் கடித்துக் கொண்டாள். வாத்தி யாருக்கு முன்னால் தான் அப்படிப் பேசியது தப்பு என்பதை இப்போது அவள் உணர்ந்திருக்க வேண்டும் இல்லாவிட்டால் இப்படி நாக்கைக் கடித்துக் கொள்ள எந்த நியாயமும் இல்லை.

''எடி எடி பேசாமல் இரெடி! இவளெட்டை நெடுகச் சொல்லுறனான்; உனக்குக் கதைக்கிற கதை எது கதை யாத கதை எது எண்டு தெரியாதெண்டு!'' என்று பூதி செல்லியை கண்டித்துக் கொண்டாள். சற்று வயதான வாத்தியாரை வைத்துக் கொண்டு அவள் இதைப் பேசி யிருக்கக்கூடாது என்பது அவள் நினைப்பு.

''பொட்டை சொல்லுறத்திலை என்ன பூதி பிழை? அந்தாள் வயதுக்கேற்றாப்போலை ஒரு தாரமிழந்த வளைத் தன்னும் கட்டியிருக்கலாம். மடத்தனமாக அந்தாள் செய்த வேலையைக் கதைக்கத்தானை வேணும்!''



வாத்தியாரின் இந்தப் பேச்சு செல்லியின் நெஞ்சைக் கிள்ளியது.

பூதி ஒன்றும் பேச முடியாமல் இருந்தாள்.

''அப்ப நான் போட்டு வாறன்!'' என்று கூறிக் கொண்டே வாத்தியார் புறப்பட்டு விட்டார்.

''முன்னிருட்டு, காலடி பாத்துப் போங்கோ வாத்தி யார் நயினார்!'' என்றாள் பூதி.

''வேறையுமொரு கதை வாத்தியார் நயினார்!'' என்று சொல்லிக் கொண்டே பூதி வாத்தியாரைக் கிட்டினாள்.

''எங்கடை பொடியள் இண்டைக்கு ஒரு கூட்டம் ஒண்டு வைச்சவங்கள்; வைச்சு வாற கொடியேத்தத்துக்கு ராசரெத்தினத்தாற்றை கந்தசாமி கோயிலுக்கைப் போகப் போறாங்களாம்; அதுதான் அதை உங்களெட்டை ஒருக்காச் சொல்லச் சொல்லி சொன்னவங்கள்! தாளைக்கு மத்தியானம் அவங்களும் உங்களைச் சந்திக்க வாறனெண்டவங்கள்!''

பூதி ஒரு மாதிரிப் பேசி முடித்து விட்டாள்.

வாத்தியார் பேசாமல் அப்படியே நின்றார்.

பூதியும் பேசாமல் நின்றாள்.

செல்லியும் பேசவில்லை.

''அப்ப பொடியளுக்கு என்ன சொல்ல?'' என்றாள் பூதி.

''என்னைக் கண்டு கதைக்கிறதெண்டா வரச் சொல்லிச் சொல்லன்! அவங்கள் கேக்கிறத்திலை என்ன பிழை இருக்கு? காத்திருக்கேக்கைதான் தூற்ற வேணும் கண்டியோ! தமிழர் தமிழர் எண்டு எல்லாரும் அடிச்சுத் தள்ளிக் கொண்டு நிக்கினம்! உதுகளையும் செய்யட்டுக் கன்! நான் உதுக்கு மாறில்லை. பொடியளின்ரை பக்கத் துக்கு நிண்டு கேட்டுப் பாப்பம்!''

வாத்தியார் இப்பிடி நேராகவே ஒப்புக் கொள்வார் என்று பூதி எதிர்பார்க்கவில்லை. ''கொஞ்சம் பொறுங் கோ'' என்றுதான் சொல்வார் என்று மாலையில் கோவிலடி யில் கூடியவர்களில் பெரும்பான்மையினர் சொன்னார்கள். பூதியும் அப்படித்தான் உள் மனதில் நினைத்திருந்தாள். ஆனால் வாத்தியாரோ.........?

பூதியின் நெஞ்சுக்குள்ளே நன்றியின் பிரவாகம் கிளம்பியது. ஆனாலும் அவள் அதை அடக்கிக் கொண் டாள்.

செல்வி அப்படியே சிலையாகி விட்டாள்.

வாத்தியாரிடம் இப்படி ஒரு பெரிய மனசு இருக்கிறது என்பதை அவள் எதிர்பார்க்கவில்லை.

''பூதி, எனக்கு விடிய ஒரு வேலை கிடக்கு, நான் ஒருக்கா யாழ்ப்பாணம் போறன். பொலிசு சப்பிறீன்ரனை ஒருக்காக் காணவேணும்; வர என்ன நேரஞ் செல்லுதோ தெரியேல்லை. பொடியள் வாறதெண்டா இரா எட்டு மணிக்குப் பிறகு வரச்சொல்லு! அவங்களைக் கனபேரை ஏன்? ரெண்டொரு பேரை வரச் சொல்லு. அப்ப நான் போட்டு வாறன்!'' என்று கூறிக்கொண்டே வாத்தியார் போய்விட்டார்.

ஒரு தடவை வீசி வந்த கச்சான் காற்று பேணி விளக்கை அணைத்துவிட்டது.

பூதி ஒரு குச்சியைப் பற்ற வைத்தாள்.

அதுவும் காற்றுக்கு அணைந்தது.

மற்றக் குச்சியைப் பற்ற வைத்தாள்.

அதுவும் காற்றுக்கு அணைந்து போயிற்று.

''இஞ்சை கொண்டு வா அக்கை; நான் கொளுத் திறன்'' என்று கூறிக் கொண்டே செல்வி தட்டித் தடவிப் பூதியின் கையைப் பிடித்து நெருப்புப் பெட்டியைப் பெற்றுக் கொண்டாள்.



''இதென்ன பொட்டை உன்ரை கையெல்லாம் வேத்துக் கிடக்கு!'' என்றாள் பூதி!

செல்வியின் தோள் மூட்டுவரை தடவி விட்டுத்தான் அவள் இதைக் கூறினாள்.

செல்வியின் தோள் மூட்டிலிருந்து வியர்வை வழிந் திருந்தது.

''அதொண்டுமில்லை அக்கை சும்மா வேர்க்குது!'' என்றாள் செல்வி.

அவளின் குரல் ஒரு மாதிரியாகக் கேரியது.

''என்ன பெட்டை உனக்கேதும் சுகமில்லை. சிகமில்லையே? குரலும் நடுங்குது போலை கிடக்கு!'' என்றாள் பூதி.

இதற்கிடையில் செல்வி பேணி விளக்கைக் கொளுத்தி விட்டாள்.

பூதி வெளிச்சத்தில் செல்வியின் முகத்தையே பார்த் தாள்.

முகம் சிவந்து, கண்கள் அதிலும் சிவந்து போய் வியர்வை முகத்தாலும் வழிந்தது. பூதி எழுந்து அவள் நெஞ்சில் கையை வைத்துப் பார்த்தாள். நெஞ்சு படபடென்று இடித்தது.

## 30

அதிகாலையோடு எழுந்து யாழ்ப்பாணப் பட்டண பஸ்ஸைப் பிடித்துக் கொண்டு வந்து விட்ட வாத்தியார் காலை உணவை பஸ் நிலையத்திற்கு முன்னால் இருந்த சுபாஸ் கபேயில் முடித்துக் கொண்டு பொலிஸ் தலைமைக்

கந்தோருக்கு வந்து சேர மணி எட்டுக்கு மேலாகி 'விட்டது.

முனியப்பசாமி கோவிலடியை அண்மித்தபோது 'வாத்தியார் துலைக்கே?'' என்ற குரல் எழவே திரும்பிப் பார்த்தார். வெள்ளைச் சேட்டும் சூட்டுமாக நடுவயதான [illegible] த்தியாரைப் பார் [illegible] சிரித்தான்.

வாத்தியாருக்கு உடனே பதில் சொல்ல முடியவில்லை.

அவனை முன்பு எங்கோ இரண்டொரு தடவை பார்த்ததாக ஞாபகம். ஆனால் குறிப்பாக தொட்டு நினைக்க முடியவில்லை.

''தம்பியைத் தெரியேல்லை!'' என்றார் வாத்தியார்.

''என்ன வாத்தியார் மறந்து போனியள்! என்ரை பேர் சதாசிவரத்தினம்! எங்கடை குஞ்சியப்பு; அவர்தான் மருதப்புக் குஞ்சியப்பர்; அவரோடை ஒருநாள் இதிலை நடந்த மாட்டுச் சவாரியிலை 'சந்திச்சு... மாடு குறுக்க வந்து...''

சதாசிவரத்தினம் பேசி முடியவில்லை. ''எடதம்பி நீரே? நானும் தீர மறந்து போனன்! நீர் சுப்பிறீன்ரன் கந்தோரிலையெல்லே வேலை! நேத்தைக்குப் பின்னேரம் மருதப்பரும் நானும் உம்மட்டைத்தான் ஒரு அலுவலாய் வர வெளிக்கிட்டனாங்கள்! அவருக்குக் கொஞ்சம் சுக மில்லை. கும்பிடப் போன தெய்வம் குறுக்கை நிண்டு வழி மறிச்சாமல பின்னாலை நின்டெல்லே கூப்பிட்டிருக்குது! சுப்பிறீன்ரன் கந்தோருக்குத்தான் போறன்!

இப்படிச் சிறிது பகிடியும் கலந்து பேசினார் வாத்தியார்.

''என்ன விஷயம்? சொல்லுங்கோ நான் உதவி செய்யிறன்!'' என்று அவக்கென்று கேட்டான் சதாசிவ ரத்தினம்.



''ஒண்டுமில்லைத் தம்பி; வாரும் சொல்லுறன்...'' என்று சொல்லிக் கொண்டே இணையாக நடந்து விஷயத்தை அவனுக்கு விளங்க வைத்துக் கொண்டே போனார் வாத்தியார்.

முதலில் சதாசிவரத்தினம் மிகவும் உற்சாகத்துடன் வாத்தியாரின் கதையைச் செவிமடுத்தான். பின்பு சற்றுச் சோர்ந்து, முடிவில் உற்சாகமே இழந்து போனான்.

''வாத்தியார் சுப்பிறீன்ரன் துரைக்கும் எனக்கும் அவ்வளவு நல்லாயில்லை. என்ரை பிறமோசனையும் நிப்பாட்டி வைச்சுக் கொண்டிருக்கிறான்!''

இப்படிச் சதாசிவரெத்தினம் மெதுவாகக் கதையை விடத் தொடங்கினான்.

'ஆள் உழட்டிறான்!' என்று வாத்தியார் மனதுக்குள் சொல்லிக் கொண்டார்.

''உமக்கு இது கஷ்டமெண்டா ஆரும் ஒரு ஆமான ஆளை உள்ளுக்குப் பிடிச்சுத்தாரும்! மிச்சம் நான் பாத்துக் கொள்ளுறன்!'' என்றார் வாத்தியார் மிகவும் படியிறங்கி.

''ஆரைப்பிடிக்க? அவன் ஒருதன் இருந்தவன். நேற்றுத்தான் சிக் லீவிலை போட்டான்; ஒரு கிழமைக்குப் பிறகு வந்தீங்களெண்டாத் தெண்டிச்சுப் பாக்கலாம்!''

சதாசிவரெத்தினத்தைப் பயன்படுத்துவது முடியாத காரியம் என்பது வாத்தியாருக்குத் தெரிந்துவிட்டது.

சுப்பிறீன்ரன் கந்தோர் கட்டிடம் வந்துவிட்டது.

''அப்ப வாத்தியார், போட்டு ஒரு கிழமைக்குப் பிறகு வாருங்கோ பாப்பம்!'' என்று சொல்லியபடி அவன் கந்தோரின் கண்ணாடிக் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே போய்விட்டான்.

வாத்தியாரின் பதிலுக்காக அவன் காத்திருக்க வில்லை.

வாத்தியார் தன்னந்தனியாக நின்றார்.

மேலே என்ன செய்வதென்றே அவருக்குத் தெரியவில்லை.

வாத்தியார் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் இருந்தபோது திருநெல்வேலிச் சந்தையில் காய்பிஞ்சுப் புறோக்கராக இருந்த சுப்பையா என்ற ஒருவன் இப்போது கோட்டுப் புறோக்கராக இருப்பதாக அறிந்திருக்கிறார்.

சுப்பையனை வாத்தியாருக்கு நன்கு தெரியும்.

'கோட்டெடிக்குப் போனால் அவனைச் சந்திக்கலாம்' என்று மனதுக்குள் எண்ணிக்கொண்டே வாத்தியார் பொலிஸ் கோட்டெடி மலைவேம்புக்குக் கீழ் வந்தார்; அங்குமிங்குமாகச் சுப்பையனைத் தேடினார்.

''ஆரைத் தேடிறியள்?'' இப்படி வேம்புக்குக் கீழ் இருந்த பெட்டிக் கடைக்குள் நின்ற கடைக்காரன் வாத்தியாரைக் கேட்டான்.

''சுப்பையாவை எங்கை தம்பி பிடிக்கலாம்?'' வாத்தியார் கேட்டார்.

வாத்தியாரின் இந்தக் குரல் கேட்டதுதான் தாமதம். வேம்புக்குக் கீழ் இருந்த நாலுகால் தங்குமடத்துக்குள் இருந்து சுப்பையனே வாத்தியாருக்கு முன் ஆஜரானான்.

''தம்பி சுப்பையா உம்மெட்டைத்தான் வந்தனான்!'' என்று வாய் நிறையக் கூறிக்கொண்டே வாத்தியார் சுப்பையாவை அழைத்துக் கொண்டு ஒதுக்குப்புறமாகப் போய்விட்டார்.

சுப்பையாவுக்கும் வாத்தியாருக்கும் அரை மணி நேரத்துக்கு மேல் இரகசியப் பேச்சு நடந்தது.

''பொலிஸ் சுப்பிறீன்ரனைப் பிடிச்சு எல்லாத்தையும் செய்வம்; முதல்லை ஒரு பெட்டிசம் போடவேணும் வாத்தியார் வாருங்கோ!'' என்றுவாத்தியாரை அழைதுக்கொண்டே சுப்பையன் கோட்டடியின் தென்கிழக்கு எல்லையோடு இருந்த பிறக்கிறாசிமார் தங்குமிடத்துள் நுழைந்தான்; அங்கிருந்த தட்டச்சுக்காரனிடம் பேரம் பேசினான்; பேரம் முடிந்தது.



வாத்தியார் விபரங்களைத் தமிழில் சொல்லச் சொல்ல அவைகளை நிரைப்படுத்தி அந்தத் தட்டச்சுக்காரன் ஆங்கிலத்தில் பொறித்தான்.

பொட்டிசம் அடித்து முடிந்தது.

''வாத்தியார் ஆற்றை கையெழுத்தைப் போடிறது?'' என்று சுப்பையா கேட்டான்.

வாத்தியார் எதையும் யோசிக்காமல் ''ஏன் ஆற்றையும் கையெழுத்தைப் போடுவான்?'' என்று கேட்டுக்கொண்டு தானே கையெழுத்திடத் தயாரானார்; கையெழுத்திட்டு விட்டார்.

பெட்டிசத்தை சுப்பிறீன்ரனின் விலாசம் அடிக்கப்பட்ட என்பலப்பில் போட்டு தட்டச்சுக்காரனின் பிசகைத் தீர்த்துவிட்டு சுப்பையாவும், வாத்தியாரும் பொலிஸ் கந்தோரை நோக்கிச் சென்றனர்.

வாத்தியார் தன் கையாலேயே அந்தப் பெட்டிசத்தை சுப்பிறீன்ரன் பெட்டியில் சேர்ப்பித்துவிட்டார்.

பெரிய ஒரு வேலை முடிந்த திருப்தி வாத்தியாருக்கு!

''வாத்தியார்! நீங்கள் போட்டு ஐஞ்சு பத்து நாளையாலை என்னைச் சந்தியுங்கோ! சுப்பிறீன்ரனைச் சந்திக்க நான் ஒழுங்குகளைச் செய்து வைக்கிறன்?'' என்று கூறிக்கொண்டே சுப்பையன் வாத்தியாரின் முகத்தையே பார்த்துக் கொண்டான்.

வாத்தியாருக்கு விளங்கிவிட்டது.

அவனைத் திருப்திப்படுத்தும் விதத்தில் சட்டைப் பையைத் துளாவி வாத்தியார் காரியத்தை முடித்து விட்டார்.

சுப்பையன் பிரிந்து விட்டான்.

வாத்தியார் பஸ் நிலையத்திற்கு வந்து சேர மணி ஒன்றுக்கு மேலும், ஊருக்கு வந்து சேர மணி நான்குக்கு மேலாகவும் ஆகிவிட்டது.

சந்திப்பிலிருந்து வாத்தியாரின் வீடு இரண்டு கூப்பிடு தூரம் இருக்கும்!

பஸ்சிலிருந்து இறங்கி வாத்தியார் குறுக்கு வீதியால் நடந்து கொண்டிருந்தார்.

வாத்தியாரை மருவிக் கொண்டு சயிக்கிள் ஒன்று விரைந்தோடியது.

வாத்தியார் சற்று திடுக்கிட்டுப் போய்விட்டார். ஆனாலும் சமாளித்துக் கொண்டு சயிக்கிளில் போனவனை அவதானித்தார்.

அவன் சுருளியன்!

சற்றுத் தூரத்தில் அவன் காலை ஊன்றிக் கொண்டு நின்றான்.

வாத்தியார் நிலைமையை ஓரளவுக்கு ஊகித்துக் கொண்டார்.

''என்ன பு... வாத்தியார் பாக்கிறீர்?''

சுருளியன் வாய்க்குள்ளிருந்து இவ்வார்த்தைத் தொடர் பிறந்தது.

வாத்தியார் பதில் பேசவில்லை.

வாத்தியாரை தலையிலிருந்து கால் போகும்வரை வெறித்துப் பார்த்துக் காறிப் பின்புறமாகத் துப்பிவிட்டு சுருளியன் போய்விட்டான்.



வாத்தியார் நிதானமாக நடந்து கொண்டிருந்தார்.

அவர் வீடுபோய்ச் சேர்ந்துவிட்டார்.

மத்தியானச் சாப்பாடு அவருக்காகக் காத்திருந்தது.

''அண்ணை சாப்பிட வாருங்கோ!'' என்றாள் தங்கை சீதை.

வாத்தியார் சாப்பாட்டை முடித்துக் கொண்டார்.

பொழுதாயிற்று.

வாத்தியார் முற்றத்துத் தலைவாசல் கொட்டகைக்குள் சாய்மனைக் கட்டிலில் படுத்துக் கொண்டார்.

மருமக்கள் இரண்டு பேரும் எரியும் வெளிச்சத்தைச் சுற்றி இருந்து படித்துக் கொண்டிருந்தனர்.

''வாத்தியார் இருக்கிறாரோ?'' என்று கேட்டுக் கொண்டே இருவர் வந்தனர்.

ஒருவன் குணசிங்கன்; மற்றவன் முருகையன்.

''வாருங்க மோனை!'' என்று வாத்தியார் இருவரையும் வரவேற்றார்.

## 31

வாத்தியார் சாய்மனைக் கட்டிலிலே நிமிர்ந்தபடி இருந்தார்.

குணசிங்கனும் முருகையனும் வாத்தியாருக்கு வலப் பக்கமாக வாங்கில் இருந்தனர்.

''தங்கச்சி, இந்தப் பிள்ளையளுக்கு எப்பன் கோப்பி கலக்கு'' என்று தங்கைக்குக் கட்டளை இட்டார் வாத்தியார்.

யருமக்களை வீட்டு விறாந்தைக்குப் படிக்க அனுப்பி விட்டார்.

''என்ன பொடியள்; என்னவோ கதைக்க வேணும் எண்டியளாம்? ஏன் பேசாமல் இருக்கிறியள் கதையுங் கோவன்!'' என்று நேராகவே பேச்சைத் தொடங்கும்படி சொல்லி வைத்தார் வாத்தியார்.

தங்கைக்காரி குசினிக்குள் முகத்தைச் சுழித்துக் கொண்டு கோப்பி கலந்துகொண்டிருந்தாள். அண்ணனின் சுபாவம் அவளுக்குத் தெரியும். ஆனால் இன்றுவரை உள்ளூரில் உள்ள பள்ளர் யாரையும் அவர் வீட்டில் வாங்கில் இருத்திக் கதைத்ததில்லை. இதனால் அவள் மிகவும் மனச் சங்கடப்பட்டாள். வெளியே போன கணவன் வந்து இதைக் கண்டு விட்டால் சிலவேளை பெரிய வில்லங்கத்தில் வந்தாலும் வந்துவிடும் என்பது அவள் நினைப்பு.

''வாற வரியக் கொடியேத்தத்துக்கு இராசரெத்தினம் ஐயாவின்ரை கந்தசாமி கோயிலுக்கை போறதெண்டு நாங்கள் முடிவு செய்து போட்டம்; மாவிட்டபுரம், சந்நதி எல்லாந் திறந்துவிட்டும் ஐஞ்சாறு வருஷமாப் போச்சு; அதுதான் இதை உங்களோடையும் யோசிப்பம் எண்டு வந்தனாங்கள். பெரியாக்களும் உங்களோடை யோசிக்கச் சொல்லித்தான் சொல்லுகினம்!''

குணசிங்கம் சொல்ல வேண்டியவைகளை சுருக்கிச் சொல்லி முடித்துவிட்டான்.

''தம்பியவை கனகாலமா சிரட்டையிலை தண்ணியும் தட்டுவத்திலை சோறும் குடுத்து வந்த விஷயத்தை உங்கடை ஒற்றுமையாலை நிப்பாட்டிப் போட்டியள்! சூட்டோடை சூடா இதையும் ஒப்பேத்திப் போடப் பாக்கிறத்திலை பிழை ஒண்டுமில்லை. நான் உங்கடை பக்கந்தான்! நடுவிலை நிண்டு தரகு வேலை பாக்காமல், நாளைக்கு நீங்களும் ரெண்டுபேர் வாருங்கோ; நானும் சேர்ந்து வாறன்; இராசரெத்தினத்தாரைப் போய்க் கேப்பம்! நியாயத்தைக் கேக்கிறத்துக்கு என்ன பயம்? இப்ப அவசரமில்லைத் தம்பியவை; மாதம் முடிய ஒரு நாளைக்குப் போவம்!''



வாத்தியார் பேசி முடித்தபோது, குசினிக்குள் இருந்து, ''தம்பி, மாமாவை ஒருக்கா வரச் சொல்லு!'' என்று தங்கைக்காரி குரல் வைக்கவே, வாத்தியார் எழுந்து குசினிக்குள் சென்றார். இரண்டு கிளாஸ்களில் விடப்பட்டிருந்த கோப்பியையும் அண்ணனையும் தங்கைக்காரி மாறிமாறிப் பார்த்தாள்.

''நீ என்ன யோசிக்கிறாய் எண்டு எனக்கு விளங்குது தங்கச்சி! அது சரி கோப்பியைக் குடு! உதோடைதான் குடு!'' என்று கூறிவிட்டு வாத்தியார் தலைவாயிலுக்கு வந்துவிட அவருக்குப் பின்னால் தங்கைக்காரி கோப்பியை எடுத்து வந்து வாங்கில் வைத்துவிட்டுப் போனாள்.

''கோப்பி ஆறப்போகுது, குடியுங்கோ; பேந்து கதைப்பம்!'' என்றார் வாத்தியார்.

இருவரும் கோப்பி குடித்து முடிந்தது.

வெளியே படலை அடிபடும் ஓசை கேட்டது.

வாத்தியாரின் மைத்துனர் கந்தையர் தோளில் குழைக் கட்டு ஒன்றுடனும் மண்வெட்டியுடனும் வந்து சேர்ந்தார்.

அவர் இப்போதுதான் தோட்டத்திலிருந்து வருகிறார்.

அவரைக் கண்டவுடன் முருகையனும், குணசிங்கனும் எழுந்து அவருக்கு மரியாதை செய்ய முயன்றனர்.

''இருங்கோ மோனை! இருங்கோ மோனை!'' என்று அவர்களைப் பார்த்துக் கையமர்த்திவிட்டு அவர் கிணற்றடிப் பக்கம் போய்விட்டார்.

வாத்தியாரின் தங்கையானவளுக்கு இப்போதுதான் நெஞ்சுக்குள் தண்ணீர் வந்தது.

அவர்கள் வாங்கிலிருந்ததைப் புருஷன் அங்கீகரித்து விட்டதாக அவள் மன ஆறுதல் அடைந்தாள்.

வெளியே சயிக்கிள்கள் கிலுங்கிய ஓசைகள் கேட்டன.

வாத்தியாரின் மூத்த மருமகன் விவேகானந்தனும், அவனுக்கு நண்பர்களாக இருவரும் வந்தனர்.

''இஞ்சை தம்பியும், இவற்றை இயக்கக் காறரும் வருகினம். அவையோடையும் கதைச்சால் நல்லது; தம்பியவை இப்பிடி வாருங்கோ!'' என்று வந்தவர்களுக்கு மறுபுறமாக இருந்த வாங்கைக் காட்டினார் வாத்தியார்.

''இவர்தான் நான் சொன்ன என்ரை மாமா; இவை ஊரிலை இருக்கிறவை!'' என்று விவேகானந்தன் வந்த நண்பர்களுக்கு இவர்களை அறிமுகப்படுத்தினான்.

வந்திருந்த மற்ற இருவரும் ஊருக்குப் புதிதானவர்கள்.

அவர்களை வாத்தியாருக்கோ, அல்லது முருகையன், குணசிங்கன் ஆகியோருக்கோ தெரியவில்லை. யாருடைய பெயரையும் சொல்லி விவேகானந்தன் அறிமுகப்படுத்தவும் இல்லை.

அந்தப் புதிய இருவருக்கும் ஏறக்குறைய விவேகானந்தனின் வயதுதான் இருக்கும்.

பார்ப்பதற்கு அவர்கள் மிகவும் குளிர்மையானவர்களாக இருந்தார்கள்.

அவர்களின் கண்பார்வைகள் மற்றவர்களை ஊடுருவும் சக்தியுடையவையாக இருந்தன.

அவர்கள் நீளக் களிசானுக்குள்ளும் கைநிறைந்த மேலங்கிக்குள்ளும் அடைபட்டுக் கிடந்தார்கள்.

''இப்ப விஷயமென்னெண்டாத் தம்பியவை! இந்தப் பொடியள் ரெண்டும் தாழ்த்தப்பட்டவை! இந்த ஊருக்கை இருக்கிற, கந்தசாமி கோயிலுக்கை வாற வரிசம் கொடியேத்தத்துக்கு போகப் போகினமாம்! அதுக்குத்



தான் வந்தவை! வேளையோடை அடுக்குப் பண்ணினாத் தான் நல்லதெண்டு!''

இலேசாகக் கதையைத் தொடக்கி வைத்தார் வாத்தியார்.

''எத்தனை தலைமுறையளா அவை கோயிலுக்கை போகேலாமை இருக்கினம்; கடவுளுக்குக் கிட்டப் போக இப்ப விரும்புகினம்! எல்லாத் தமிழனும் ஒண்டாச் சேர வேணும் எண்டு கத்திறம்; அதுதான் இவையையும் தமிழராக்க கோயிலுக்கை போக விடுறதுதான் சரியெண்டு நான் சொல்லுறன்! ஏன் தம்பியவை நான் சொல்லுறத்திலை ஏதும் பிழை இருக்கோ?''

வாத்தியார் அவர்களிடம் இப்படி ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டு நிறுத்திக் கொண்டார்.

''நீங்க சொல்லுறது பிழை எண்டு நாங்கள் சொல்லேல்லை. ஆனா இந்த நேரத்திலை உது பிரதான வேலைதானா எண்டுதான் யோசிக்க வேண்டியிருக்கு; ஒரு எதிரியோடை போராட வேண்டிய வேளையிலை இதை இருமுனைப் போராட்டமாக மாத்திறது பிழை எண்டுதான் நினைக்கிறம்; நீங்களும் யோசித்துப் பாருங்கோ!''

இப்படி ஒருவன் பேசிமுடித்தான்; வாத்தியாரையே யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகோள் விடுத்தான்.

இந்தப் பேச்சை வாத்தியார் எதிர்பார்க்கவில்லை. ''தம்பி சொல்லுறதை எப்பன் விளங்கச் சொல்லுமன்?'' என்றார் வாத்தியார்.

''அதாவது நாங்க சொல்லுறது என்னெண்டால், உதிலை நாங்கள் மினக்கெட்டமெண்டா தமிழரிலை கன பேர் எங்களோடை சேராயினம்! எங்களை எதிர்ப்பினம்; நாங்கள் நினைச்ச காரியத்தைச் செய்து முடிக்கேலாமல் போகிடும்!''

மற்ற வாலிபன் வாத்தியாருக்குப் பதிலாக இதைச் சொல்லி முடித்தான்.

''அப்பிடியெண்டாத் தம்பி தமிழர் எல்லாரையும் நீங்க எப்பிடி ஒண்டு சேர்க்கப் போறியள்?'' வாத்தியார் இப்படிக் கேட்டார்.

''அது பாருங்கோ மாமா, பொதுப்போராட்டங்களை நடத்த நடத்த எல்லாம் ஒண்டாச் சேருற நிலைமை தானாக வரும்; உலகத்திலை அடிமைப் பட்டவனெல்லாம் இப்பிடித்தான் ஒண்டாச் சேர்ந்தவன்.''

இப்போது விவேகானந்தன் மாமாவின் கேள்விக்குப் பதில் சொன்னான்.

''பக்கத்திலை அடிப்படலைக்கை கிடக்கிற கடவுளுக்குக் கிட்டப் போக விடுகிறியளில்லை; வலு தூரத்திலை இருக்கிற இலக்குக்கு எப்பிடித் தம்பி ஆக்களைக் கொண்டு போகேலும்? ஆயிரம் வருஷ காலம் உங்கடை தொண்டு துரவு செய்து, உங்கடை வாழ்வு சாவு எல்லாம் பாத்த சனங்களை உங்கடை கண்ணுக்குத் தெரியேல்லை. உலகத்திலை அடிமைப்பட்டவங்கள்தான் உங்கடை கண்ணுக்குத் தெரியுது. உப்ப உந்தச் சனங்களின்ரை காரியத்திலை தலையிட்டா நாளைக்கு ஆட்சியைப் பிடிக்கிற சங்கதி குழம்பிப் போமெண்டு நீங்கள் நினைக்கிறியள்! சரி நாளைக்கு ஆட்சியைப் பிடிச்சிட்டியள் எண்டு ஒரு கதைக்கு வைச்சுக் கொள்ளுவம்; அதற்குப் பிறகும் நீங்கள் அமைக்கிற ஆட்சியிலை இவைக்கும் பங்கு குடுக்க நீங்கள் சொல்லுற மற்றத் தமிழர் விடாயினம்! அப்ப என்ன செய்யப் போறியள்?''

வாத்தியார் எக்கச் சக்கமான கேள்வியைப் போட்டு அவர்களை வாய் பேசாது வைத்துவிட்டார்.

''தம்பியவை இந்தச் சனங்களுக்கு நீங்கள் மாறான ஆக்கள் எண்டது விளங்குது! நீங்கள் மாறா நிக்கிறியள்



எண்டதுக்காக இந்தச் சனங்கள் விடப் போறதில்லை. ஏதோ யோசிச்சுச் செய்யுங்கோ!''

வாத்தியார் மீண்டும் பேசி முடித்துவிட்டார்.

விவேகானந்தன் குசினிக்கு உள்ளே சென்று தாயாரிடம் ஏதோ காதோடு காது வைத்துப் பேசினான்; பின்பு வந்தவர்களையும் அழைத்துக்கொண்டு போய்விட்டான்.

அப்போதுதான் கிணற்றடிக்குச் சென்றிருந்த மச்சானார் வந்தார். ''என்ன தம்பியின்ரை குரல் கேட்டுது; போட்டானே?'' என்று கேட்டார்.

''ஓமோமப்பா போட்டான்!'' என்று மொட்டையாகச் சொன்னாள் விவேகானந்தனின் தாய் சீதை.

## 32

அடை மழையும், வெள்ளமும் தண்ணியுமாகக் கூதிர் காலம் முடிந்துவிட முன்பனிக் காலமும் பிறந்து தூற்றலும், தூறலுமாக இருந்த போது ஒரு நாள்...

செல்லியின் கணவனானவன் செத்துப் போனான் என்ற இழவுச் செய்தி செல்லி வீட்டுக்கு வந்தது. இதை அறிந்த பூதி காலையோடு செல்லி வீட்டுக்குப்போனாள்.

பேத்தை வைத்தியன், மகளான செல்லியுடன் சண்டைப்பட்டுக் கொண்டிருந்தான்.

செல்லியை கணவனான பொன்னனுக்குக் கட்டிக் கொடுத்துவிட்டுத் தனது பொறுப்புத் தீர்ந்ததாகத்தான் வைத்தியன் நிம்மதி அடைந்திருந்தான்.

ஏறக்குறையப் பத்து மைல் வரை தூரமுள்ள ஆனைக்கோட்டையில் பொன்னன் கிட்டத்தட்ட ஓராண்டு காலந்தான் செல்லியை மனைவியாக வைத்திருந்தான். அதற்குப்

பின் செல்லி அவனைக் கைகழுவி விட்டுவிட்டு தன் ஊரோடு வந்து விட்டாள்.

பொன்னனுக்கு ஏற்கெனவே ஒரு வைப்பு இருந்திருக்கிறது. அவனை ஒரு கட்டையில் பிடித்துக் கட்டிவிட்டால் இந்த வைப்புக்கிப்பெல்லாம் இல்லாமல் போய் விடும் என்றுதான் அவனின் தாய்க்காரி தூரத்து உறவினனான வைத்தியனின் வீட்டில் சம்மந்தத்தை ஏற்படுத்தினாள். பின்பு செத்தும் போனாள். ஆனால் பொன்னனோ வைப்பை விட்டபாடில்லை.

காரண காரியமில்லாமல் பொன்னன் செல்லியை நேரங்காலமின்றி உதைத்தான்.

செல்லி சீதனமாகக் கொண்டு வந்த காதோலை, அட்டியல், காப்பு, இவைகளுடன் தான் கட்டிய தாலியையும் பொன்னன் முடித்துவிட்டான். பொதுவில் செல்வி எல்லோரிடமும் நன்றாக — கூச்சமின்றிப் பேசும் பழக்கமுடையவள். ''அவள் இவனுடன் பல் இழித்துப் பேசினாள்; இவனுடன் சிரித்துப் பேசினாள்; இன்னொருவனுடன் கண் சிமிட்டிப் பேசினாள்'' என்றெல்லாம் கூறிக்கொண்டு பொன்னன் அவளை உதைப்பான்.

ஒரு நாள்...

பொன்னன் தனது 'வைப்பு' வீட்டிற்குப் போய்விட்டு நேரங்கெட்ட நேரத்தில் வந்தான்.

குடிசையில் முன் படலையை உட்கட்டுக்கட்டிவிட்டுச் செல்லி உள்ளே படுத்துத் தூங்கிவிட்டாள்.

நான்கைந்து நாட்கள் வீட்டு விலக்காகி இருந்துவிட்டு அன்று மாலை வேளையில்தான் அவள் தோய்ந்துவிட்டுப் படுத்துக் கொண்டதால் அவளுக்குச் சகலத்தையும் மறந்த அசதி!

பொன்னன் வந்தது; படலையை இடித்து இடித்துக் குரல் வைத்தது எதுவுமே அவளுக்குத் தெரியாது.



உள்ளே கைவிளக்கு மட்டும் எரிந்தது தெரிந்தது.

பொன்னன் கட்டிய படலையை அப்படியே விட்டு விட்டு அடுத்த வீட்டுக்கார ஐயன் வீட்டுக்குப் போனான்.

ஐயனுக்கு நல்ல வெறி.

அவன் அந்த அர்த்த சாமத்திலும் வீட்டில் பிதற்றிக் கொண்டிருந்தான்.

''என்ரை மனிசி இஞ்சை வந்தவளே?'' என்று பொன்னன் ஐயன் வீட்டில் விசாரித்தபோது, ''உம்மடை பொண்டிலை இஞ்சையோடா தேடுறது?'' என்று ஐயன் வாயில் வந்ததைக் கேட்டுவிட்டான்.

நித்திரையில் இருந்த செல்விக்கு இந்த வார்த்தைகள் அசரீரி போலக் கேட்டன.

அவள் திடுக்குற்று எழுந்தாள்,

அப்போதுதான் அவளுக்கு நிலைமை புரிந்தது.

கணவன் வந்து தன்னை எழுப்பிப் பார்த்துவிட்டு ஐயன் வீட்டுக்குப் போயிருக்கிறான் என்பது அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

அவசர அவசரமாகப் படலைக் கட்டை அவிழ்த்துக் கொண்டு அவள் வெளியே வரவும் பொன்னன் முற்றத்துக்கு வரவும் நேரம் சரியாக இருந்தது.

''எங்கையெடி ஆடப் போட்டு வாறாய்?''

பொன்னன் படக்கெனக் கேட்டான்.

செல்லிக்கு வாய் அடைத்துவிட்டது.

பொன்னன் அவளின் நீண்ட கூந்தலை எட்டிப் பிடித்தான்; கையில் சுருட்டிப் பிடித்தான்; அவளை இழுத்துக் குதறினான்; அவளை மொத்து மொத்தென்று மொத்தினான்; நல்லப் பனங்காய்க் குத்துகள்!

செல்லி வாய் திறக்கவில்லை.

மௌனத்தால் அந்த நிஸ்டூரத்தைச் சமாளிக்க முயன்றாள்; அந்த மௌனம் பொன்னனை உற்சாகப் படுத்தியது.

பொன்னன் அவள் மயிரைப் பிடித்து கொட்டிலுக்குள் சென்றான்.

செத்தையில் இயனக் கூட்டில் கிடந்த பாளைக் கத்தியை எடுத்தான்;

பொத்திச் சுற்றிப் பிடித்த தலைமுடியைப் பிடியோடு கணத்தில் அரிந்தெடுத்து விட்டான்.

இதற்கும் செல்லி கத்தவில்லை.

அவள் சுபாவம் அப்படி.

இப்படி எத்தனை நாள் அவள் மௌனத்தில் நிஸ்டூர மடைந்திருக்கிறாள்.

ஆனால் இப்போது...

அவளின் பென்னம்பெரிய குடுமி போய்விட்டது.

வெட்டப்பட்ட குடுமியை அப்படியே முற்றத்தில் எறிந்து விட்டுப் பொன்னன் படுத்துவிட்டான்.

அதற்குப்பின்பு செல்லி என்ன செய்தால் என்பது அவனுக்குத் தெரியாது.

விடிந்து அவன் கண் விழித்தபோது செல்லி வீட்டில் இல்லை.

அறுத்து வீசப்பட்ட குடுமியும் முற்றத்தில் இல்லை.

நன்றாக விடிவதற்கு முன்னதாகவே செல்லி கட்டுவனுக்குத் தந்தை வீட்டுக்கு வந்துவிட்டாள்.

இவை நடந்து ஏழாண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன.

இன்றைய வரையில் செல்லி தகப்பனாருக்குப் பாரமாக இல்லை.



தன் கைகளைத் தானே அடித்துக் கொள்கிறாள்; தான் வாழ்வதுடன் தந்தையையும் பார்த்துக்கொள்கிறாள்; தனது தங்கையின் குடும்பத்துக்கும் உதவி ஒத்தாசை செய்கிறாள்.

இந்த ஏழாண்டு காலம் யாராவது ஒருத்தன்; அல்லது ஒருத்தி கை மடித்துச் செல்லியைப் பற்றி ஒரு சின்னத்தனமான சொல்லும் சொல்ல முடியவில்லை. ஆனால் "செல்லி பொல்லாத வாய்க்காரி!" என்ற சொல்லுக்கு மட்டும் அவள் ஆளாகிவிட்டாள். அவ்வளவுதான்!

வெட்டி எறியப்பட்ட செல்லியின் தலை முடி இரண்டு மடங்காக வளர்ந்துவிட்டது.

அவள் அந்த மயிர்க் குப்பையை முடிபோட்டுக் கொள்ளும் அழகே அழகு!

"என்ன தேப்பனும் மோளும் நாய்கடி பூனைகடியாய் நிக்கிறியள்!"

இப்படிக் கேட்டுக் கொண்டே பூதி வந்து சேர்ந்தாள்.

"இஞ்சை பாரெடி பெட்டை! எப்பிடி இருந்தாலும் அவள் கட்டின புரிசன், அவன்ரை இழவு வீட்டுக்கு வந்து சொல்லிப் போட்டுப் போறாங்கள்; இவள் தொடுகிலும் போகமாட்டன் எண்ணிறாள்; நாளைக்கு உலகம் என்ன சொல்லும்? நீ சொல்லு பாப்பம்?"

வைத்தி பூதியை நியாயம் கேட்டான்.

பூதிக்கு உடனே இதற்குத் தீர்ப்புச் சொல்ல முடியவில்லை.

செல்லிக்கு நடந்த கொடுமைகள் சகலத்தையுமே பூதி அறிந்து வைத்திருந்தாள். யார் என்னதான் சொன்னாலும் அவள் இழவு வீட்டுக்குப் போகப்போவதில்லை என்பது பூதிக்குத் தெரியும்.

சற்று வேளைக்குப் பின் ''என்ன பொட்டை செய்யப் போறாய்? ஊர் உலகத்துக்கு மறுமொழி சொல்ல வேணும்!'' என்றாள் பூதி.

''அக்கை! நான் சொல்லிப் போட்டன்; நான் போகன்! அப்பு வேணுமெண்டா மருமோனைப் போய் கண்ணிலை வைச்சுக் கொண்டு வரட்டுக்கும்!''

செல்லி சற்றுத் தாழ்ந்த குரலில் கூறினாள்.

''எண்டாலுமெடி பிள்ளை......''

பூதி இப்படி இழுத்தாள்.

''அக்கை! நான் சொல்லிப் போட்டன்; என்னைத் துண்டு துண்டா வெட்டிப் போட்டாலும் போகன்; வேணுமெண்டா நஞ்சு குடிச்சுச் சாவனே ஒழியப் போக மாட்டன்.''

இதைச் சொல்லிவிட்டு செல்லி கோடிப் புறமாகப் போனாள்.

''ஏடி இஞ்சை வாடி பிள்ளை! எல்லாம் யோசிச்சுச் செய்வம். இப்ப என்ன அவசரம்?'' என்றாள் பூதி.

''என்னக்கை யோசிக்கிறதோ?'' என்ற கேள்வியை மட்டுந்தான் செல்லி கடைசியாகக் கேட்டாள்.

# 33

அப்போதுதான் வாத்தியார் படுக்கையை விட்டு எழுந்திருந்தார்.

அவர் வீட்டு வாயிலில் பொலிஸ் ஜீப் ஒன்று வந்து நின்றது.

இரண்டு பொலிசார் உள்ளே வந்தனர்.



வீட்டு நாய் சுழன்று சுழன்று குலைத்தது. வந்தவர்களில் ஒருவன் ''ஆர் சுப்பையா?'' என்று கேட்டான்.

வாத்தியார் ''அது நான்தான்!'' என்று சொல்லிக் கொண்டே முற்றத்திற்கு வந்தார்.

''சுன்னாகம் இஞ்பெக்ரர் ஐயா உங்களைக் கூட்டி வரட்டாம்; வெளிக்கிட்டு வாருங்கோ!'' என்றான் மற்றவன்.

வாத்தியாருக்கு விஷயம் ஓரளவுக்கு விளங்கிவிட்டது. தான் பொலிஸ் சுப்பிறீன்ரனுக்குக் கொடுத்த பெட்டிசத்தின் விசாரணைக்காகத்தான் என்பது தெரிய முடியாத ஒன்றல்ல. மாதம் ஒன்றுக்கு மேல் அது வந்திருக்கிறது.

தங்கைக்காரி ஏங்கிப் போய் முற்றத்தில் நின்றாள். தனது மூத்தவனைத் தேடித்தான் பொலிசார் வந்திருப்பதாக அவள் முதலில் எண்ணினாள். ஆனால் அவர்கள் அழைத்தது அண்ணனைத்தான் என்பதை அறிந்த போது அவளின் ஏக்கம் மறு திசைக்கு வந்துவிட்டது.

வாத்தியார் முகம் அலம்பி, உடையை மாற்றிக் கொண்டு புறப்பட்டுவிட்டார்.

பொலிஸ் ஜீப் இளையதம்பியரின் வீட்டடிக்கு வந்த போது அதைத் தரிக்க வைத்து ஒருத்தன் உள்ளேபோய் இளையதம்பியரிடம் ஏதோ பேசி விட்டு வந்தான்.

ஜீப் வண்டி பொலீஸ் நிலையத்திற்கு வந்து சேர்ந்து விட்டது.

சந்தைமுறை நாளானதால் வீதி எங்கும் அடித்து நெருக்கிக் கொண்டிருந்த ஜனக் கூட்டத்தில் பலர் வாத்தியாரைப் பொலீஸ் ஜீப்புக்குள் இருக்கக் கண்டனர்.

வாத்தியார் உள்ளே வந்ததும் பொலிஸ் அதிகாரி வாத்தியரை ''வாருங்கோ வாத்தியார்; வாருங்கோ!'' என்று வரவேற்றார்.

இந்த வரவேற்பு முறை வாத்தியாருக்கு விகற்பமான எண்ணங்களையே வருவித்தது.

அந்த அதிகாரி இந்த நிலையத்திற்குப் பொறுப்பாக வந்து சில மாதங்கள்தான் இருக்கும். இந்தச் சில மாதங்களில் இளையதம்பியர் வீட்டில் இரண்டொரு தடவைகள் இந்த அதிகாரியை அவர் கண்டிருக்கிறார். இரண்டொரு தடவைகள் பேசியும் இருக்கிறார்.

தனக்கிருந்த சில்லறை வேலைகள் பலதைப் பார்த்து முடித்து விட்டு மறுபடியும் அதிகாரி வாத்தியார் பக்கம் கவனத்தைத் திருப்ப மணி பத்துக்கு மேலாகி இருக்கும். இதுவரை அருகுப்புறமாகப் போடப்பட்டிருந்த வாத்தியாரை தனக்கு நேரான கதிரைக்கு வரச்சொல்லிவிட்டு, அதிகாரி தனது விசாரணையை ஆரம்பித்து விட்டார்.

''கறுப்பையன் என்ற வேலைக்காரப் பொடியன் சம்பந்தமாக சுப்பிறீன்ரன் துரைக்குப் பெட்டிசம் எழுதியது நீங்கள் தானே?''

''ஓமோம், அது நான் தான்.''

''கறுப்பையனை உங்களுக்கு எவ்வளவு காலமாகத் தெரியும்?''

''கிட்டத்தட்ட நாலு வருஷமாத் தெரியும்?''

''இளைய தம்பியை எவ்வளவு காலமாகத் தெரியும்?''

''ஏறக்குறையப் பதினைந்து வருடங்களாகத் தெரியும்!''

''கறுப்பையனை இளையதம்பி அடித்துக் கொன்றிருக்கக் கூடும் என்று நீர் குறிப்பிட்டிருக்கிறீர்; எதை வைத்துக் கொண்டு குறிப்பிட்டீர்?''

''ஒரு குறிப்பிலை அப்படி நினைக்கிறன்!''

''இது சட்டப்படியான நடவடிக்கை! குறிப்புக் கிறிப்பென்று சொல்வதையெல்லாம் ஒப்புக் கொள்ள முடியாது.''



''.........''

''வாத்தியார், இதற்குச் சந்தர்ப்ப சாட்சியாகவாவது ஏதாவது சொல்ல முடியுமா? அல்லது யாரையாவது கொண்டு வர முடியுமா?''

''கறுப்பையனின் அப்பன் வேலுச்சாமி வந்து மகனைத் தேடியபோது பத்து நாளைக்குமுன் கறுப்பையன் போய்விட்டான் என்று இளையதம்பியர் சொல்லி அனுப்பியிருக்கிறார்.''

''சிலவேளை அவன் பத்து நாட்களுக்கு முன்னேயே ஏன் ஊருக்குப் போயிருக்கக் கூடாது?''

''ஒரு மாதத்துக்கு முந்தியிருந்தே அவனை அந்த வீட்டிலை இல்லையெண்டு எல்லாரும் கதைக்கினம். நானும் அதை நம்பிறன்.''

''கருப்பையனின் தகப்பனுக்கு இளையதம்பியர் பத்து நாட்களுக்கு முன் போனதாகச் சொன்னதைக் கேட்டதற்கும் யாராவது சாட்சி இருக்கிறார்களா?''

''.........''

''வாத்தியார் ஏன் பேசாமல் இருக்கிறீர்?''

''.........''

''வாத்தியார் உமக்குத் தேவையில்லாத வேலைை பார்க்கிறீர்! பத்துப் பதினைஞ்சு வரிசமாகச் சிநேகித யிருந்த இளையதம்பிக்கும் உமக்கும் இப்ப ஏதோ மன வில்லங்கம் வந்திருக்கு! நீர் இவரை மாட்டப் பாக்கிறீர்! உமக்குப் புத்தி சொல்ல வேண்டியது எனது கடமை! தேவையில்லாத காரியங்களிலை ஈடுபடாதையும்.''

இதைக் கூறிவிட்டு அதிகாரி இதுவரை தான் எழுதிய குறிப்பின் கீழ் கையெழுத்தை வாங்குவதற்காக வாத்தியாரிடம் கொப்பியை நகர்த்தினார்.

எழுதி வைக்கப்பட்டதை வாத்தியார் மேல் இருந்து கீழ் வரை பார்த்தார். இதுவரை தனது வாயினால் பிறந்தவைகள் சரியாகவே எழுதப்பட்டிருந்தது.

வாத்தியார் கையொப்பமிட்டார்.

''வாத்தியார், நான் ஒருத்தன் இருக்கிறன் எண்டில்லாமல் என்னை விட்டிட்டு எஸ். பி. க்கு பெட்டிசம் போட்டிருக்கிறீர்! சரி சரி, அதைப் பிறகு பாக்கிறன்; இப்ப நீர் போகலாம்!''

அதிகாரியின் இந்தப் பேச்சுக்குப்பின் வாத்தியார் அங்கு இருக்க வில்லை.

வாத்தியார் வெளியே வந்தபோது மணி பதினொன்றுக்கு மேலாகி விட்டது. அவருக்கு மனது உற்சாகமாக இல்லை.

கறுப்பையன் விஷயத்தில் இதற்கு மேல் எதுவும் செய்ய இருப்பதாக அவருக்குப் படவில்லை.

தோல்வியின் பாதிப்பு அவரின் உடலெல்லாம் ஊடுருவி இருக்க வேண்டும்.

அவர் உடம்புக்குச் சோர்வாக இருந்தது. போதாக்குறைக்குக் காலையிலிருந்து தண்ணீருமில்லை வெந்நீருமில்லை.

ஒரு செருமல் சத்தம் கேட்டது.

எதிரே சுருளியன் வந்தான்.

அவன் ஓட்டிவந்த சயிக்கிளின் பின் கரியலில் இரண்டு பச்சைக் குடலைகள் இருந்தன.

'அவைகள் கடா இறைச்சிகளாக இருக்க வேண்டும்' என்பதை ஊகித்துக் கொள்ள வாத்தியாருக்கு அதிக நேரம் ஆகவில்லை.

வாத்தியாரைக் கடந்து கொண்டு போன சுருளியின் சயிக்கிள் பொலிஸ் நிலையத்திற்குப் பக்கவாட்டில் உள்ள அதிகாரியின் பங்களா வாயில்வரை சென்று நின்றது.



வாத்தியார் அப்படியே நின்றார்.

சுருளியன் ''அம்மா; அம்மா'' என்று அழைத்தான்.

கதவு திறந்தது.

நீளக் கிமோனா அணிந்த ஒரு சிவத்தப் பெண் வெளியே வந்தாள்; ''என்ன சுருளி?'' என்று கேட்டாள்.

''ஆட்டிறைச்சி; இளையதம்பி ஐயா தந்தவர்!'' என்று கூறிக் கொண்டே சுருளியன் குடலைகளை அவிழ்த்தெடுத்தான்.

''பெட்டை, பெட்டை!'' என்று அம்மாள் அழைத்தாள். அந்த அழைப்பைக் கேட்டுக் கொண்டு சின்னஞ்சிறிய பெண்பிள்ளை ஒருத்தி வந்தாள். சுருளியன் அவள் கையிலேயே குடலைகளை வைத்தான். அதன் பாரத்தைத் தாங்கமுடியாத அந்தச் சின்னப் பெண் துவண்டு வளைந்து கொண்டே உள்ளே போனாள்.

''அப்ப நான் போட்டு வாறனம்மா!'' என்றான் சுருளியன்.

அம்மாளின் சாயம் பூசிய சொண்டுகள் விரிய — பற்கள் வெளியே பளிச்சிட ''போட்டு வா சுருளி!'' என்றாள்.

சுருளியனுக்கு இது போதும்!

அவன் சயிக்கிளை உருட்டிக் கொண்டு திரும்பி விட்டான்.

இப்போது வாத்தியார் பஸ் நிலையத்தை நோக்கி நடக்கத் தொடங்கிவிட்டார்.

வாத்தியார் சந்திப்புக்கு வந்துவிட்டார்.

அப்போது குறுக்கு றோட்டில் மருதப்பரை அவர் கண்டார்.

தொலைவில் வாத்தியாரை மருதப்பர் கண்டிருக்க வேண்டும். பக்குவமாகப் பக்கத்தே இருந்த சந்துக்குள்

அவர் மாறிவிட்டார். இது வாத்தியாருக்கு விளங்காமல் இல்லை. அவர் மருதப்பரைத் தொடர விரும்பவும் இல்லை.

வாத்தியார் பஸ்சைப் பிடித்துக் கொண்டு கட்டுவன் சந்திப்புக்கு வர மதியம் திரும்பிவிட்டது.

இளையதம்பியரின் வீட்டடியால்தான் அவர் வர வேண்டும்.

இளையதம்பியரின் வீட்டு வாயிலில் பொலிஸ் ஜீப் நின்றது.

## 34

வாத்தியார் வீட்டுக்கு வந்தபோது முற்றத்தின் தலைவாயில் கீழ்ப்படியில் பூதி நாடிக்குக் கை கொடுத்தபடி வாத்தியாருக்காகக் காததிருந்தாள்.

வாத்தியாரின் சகோதரி சீதை அவசர அவசரமாக அடுக்களைக்குள் எதையோ செய்து கொண்டிருந்தாள்.

பிள்ளைகள் இன்னும் பாடசாலையிலிருந்து வரவில்லை. அவள் கணவனும் இன்னும் தோட்டத்திலிருந்து வரவில்லை.

வாத்தியாரைக் கண்டதும் பூதி சற்று நகர்ந்து இருந்து வாத்தியாரைப் பார்த்த ஏக்கப் பார்வை அவரைச் சற்றுவேளை குலுக்கி விட்டது.

பூதியின் வாயிலிருந்து கேள்வி பிறப்பதற்கிடையில்—

''பொலீசு சுப்பிறீன்ரனுக்கு நான் போட்ட பெட்டிசத்தை விசாரணை பண்ணக் கூட்டிக்கொண்டு போனவங்கள் பூதி! விசாரிச்சு முடிச்சுப் போட்டாங்கள்! ஒண்டும் நடந்தபாடில்லை!'' என்று சொல்லிவிட்டார்.



அன்று காலை ''வாத்தியாரைப் பொலீஸ் ஜீப்பில் பிடித்துக் கொண்டு போறாங்கள்'' என்ற செய்தி ஊரெங்கும் அடிபட்டு பூதிக்கும் வந்து சேர்ந்தது.

அந்தச் செய்தியைப் பூதியின் காதுக்குக் கொண்டு வந்தவள் செல்லிதான்.

செல்லி துடித்த துடிப்பை பூதி ஒருவளால்தான் உணர முடியும்.

''எணை அக்கை! வாத்தியாரைப் பொலிசுக்காறர் பிடிச்சு ஜீப்பிலை போட்டுக் கொண்டு போறாங்களாம்!'' என்று கூறிக்கொண்டே அவள் வந்த வரத்து......

முகமெல்லாம் வியர்த்துக் கொட்டக் கொட்ட......

உடம்பு படபடக்கப் படபடக்க......

சொண்டுகள் துடிதுடிக்கத் துடிதுடிக்க......

குரல் கொன்னிக்கக் கொன்னிக்க......

செல்லியின் இந்தக் கோலம் பூதியை மலைக்க வைத்து விட்டது.

''அதுக்கேனடி பொட்டை நீ இப்பிடி வில்லங்கப்படுகிறாய்? ஏதோ அலுவலுக்குக் கூட்டிக் கொண்டு போறாங்கள் போலை கிடக்கு; அதுக்குப்ப என்ன...?''

இப்படித்தான் பூதி அவளுக்குப் பதில் சொன்னாள்.

செல்லிக்குத் தனது நிலையை அடக்கிக் கொள்ள முடியவில்லை.

''அக்கை, ஒருக்கா வாத்தியார் வீட்டை ஓடிப்போய் விசாரிச்சுக் கொண்டு வாணை! உண்ணாணைப் போட்டு வாணை!'' என்று பூதியை அவசரப்படுத்தினாள் அவள்.

பூதிக்கு, வாத்தியாரைப் பொலீஸ் பிடித்துக் கொண்டு போனது ஒரு புறத்தில் மனதைக் குடைந்து கொண்டிருந்தாலும் மறுபுறத்தே செல்லியின் துடிப்பையும் அந்தரத்

தையும் வைத்து மன அந்தரங்கத்துள் பார்த்தபோது அவள் மீது பரிதாபமாகவும் இருந்தது.

இதற்கு மேல் செல்லியிடம் பேசிக் கொண்டிருக்காமலே பூதி புறப்பட்டு விட்டாள்.

''அச்சை நீ வாற வரையிலை இதிலைதான் இருப்பன்!''

பூதி போகும்போது செல்லி இதை மட்டும் கூறினாள்.

பூதிக்கு செல்லியின் இந்தத் துடிப்புக்கான காரணம் வெளிச்சமாகத் தெரிந்ததாயினும் இந்தத் துடிப்பில் எதிர்காலப் பெறுபேறுகளை எண்ணிப் பார்க்க அவள் மனது கூசியது.

இளையதம்பியரிடம் தான் அகப்பட்டுக் கொண்டது போலைச் செல்லியும் வாத்தியாரிடம் தானாகவேதான் அகப்பட்டுக் கொள்ள எத்தனிப்பதாகவே அவள் மனதுக்குப் பட்டது.

வாத்தியாரின் விசுவாமித்திரத் தன்மை பூதிக்கு நன்கு தெரிந்தது. ஆயினும் செல்லியின் பிடிவாதச் சுபாவத்தை வைத்துக் கொண்டு பார்க்குமிடத்து அவளுக்கு முன்னால் வாத்தியாரின் விஸ்வாமித்திரத்தனம் நின்று பிடித்துவிடக் கூடிய ஒன்றாக இருக்கும் என்று அவளால் ஒப்புக்கொள்வது கடினமாக இருந்தது.

நீண்ட நேரமாக வாத்தியாருக்காக அவள் காத்திருந்த போது ஓராயிரம் எண்ணங்கள் பூதியின் மனதுக்குள் வந்தும் போயும் கொண்டிருந்தன.

பூதிக்கு இடையே ஒரு கோப்பியைக் கலக்கி வந்து கொடுத்தாள் சீதை.

''உனக்கு அண்ணனைப் பொலிசு கொண்டு போன செய்தியை ஆர் பூதி சொன்னது?'' என்று சீதை கேட்ட கேள்விக்கு, ''செல்லி சொன்னவள் பிள்ளை!'' என்று சொல்லிவிடத்தான் பூதி வாய் உன்னினாள். ஆயினும் எதையோ நினைத்துக் கொண்டு அதை மறைத்து விட்டாள்.



''எங்கடை பொட்டையள் கதைச்சவளவை பிள்ளை!'' என்று சீதைக்குப் பூதி பதில் சொல்லிவிட்டாள்.

சீதைக்கு அண்ணன்காரனைப் பொலீஸ்காரர் கூட்டிச் சென்றதற்கான காரணம் இன்னும் தெரியவில்லை. இளையதம்பியரின் வேலைக்காரப் பொடியன் கறுப் பையன் விஷயத்தில் வாத்தியார் தலையிட்டிருப்பதும் அவளுக்குத் தெரியாது. ஆனால் பூதிக்கோ அவைகள் யாவுந் தெரியும். அதனால்தான் பூதி மிகவும் பயமடைந் தாள். ''சிலவேளை தான்கூட சந்தர்ப்ப சாட்சியாக்கப் படலாம்'' என்று எண்ணும் அளவுக்கு யோசிக்கப் பூதிக்குத் தெரியவில்லை. அவ்வளவுதான்.

''ஏனாம் பூதி அண்ணனைப் பொலிசுக்காரர் கூட்டிக் கொண்டு போறாங்கள் எண்டு நினைக்கிறாய்?'' என்று சீதை கேட்ட இன்னொரு கேள்விக்கு, ''அதுதான் பிள்ளை எனக்கும் விளங்கேல்லை'' என்று ஒரு பெரும் பொய்யைச் சொல்லப் பூதிக்கு விருப்பமில்லை. ''இளையதம்பி நயினாற்றை வேலைக்காரப் பொடியனைக் காணேல்லை எண்டு ஊரிலை கதையாக் கிடக்கு; வாத்தியார் நயினாரும் இளையதம்பி நயினாரும் சினேகிதமெல்லே! சிலவேளை விசாரிக்கவாக்கும்!'' என்று எங்கோ சுற்றி எப்படியோ பதில் சொன்னாள் பூதி!

''ஓ உங்கிணைக்கை கதைக்கினமெண்டு என்ரை அவர் சொன்னவர் தான்; நான் அதைக் கதையா எடுக்கேல்லை! உண்மைதானே பூதி! அப்ப அந்தப் பொடியன் எங்கை?''

இப்படிச் சீதை அடுத்த கேள்வியைப் போட்டாள்.

பூதிக்குப் பேச முடியவில்லை.

''என்ன பூதி பேசிறாயில்லை? இளையதம்பியர் வீட்டுக் காரியங்கள் உனக்குத் தெரியாமல் இருக்குமே?''

சீதை கண்களைச் சிமிட்டிக் கொண்டே பேசினாள். இந்தச் சிமிட்டலில் பலவித கருத்துக்கள் தொங்கி நிற்ப தாகப் பூதிக்கும் படக்கென்று பட்டது.

இதற்குப் பின் சீதை அடுக்களைக்குள்ளேயே அடங்கி விட்டாள். இதற்கு மேல் தன்னை எதுவுமே கேட்டுவிடக் கூடாது என்பதுதான் பூதியின் விருப்பம் எல்லாம்!

அண்ணனுக்கு நல்ல பசி என்பது சீதைக்குத் தெரியும்.

காலைகூட வாய்க்குள் ஏதும் போட்டுக் கொள்ளாமல் அவர் புறப்பட்டுவிட்டார். இப்போதும் பொழுது சரிந்து விட்டது.

அடுப்பில் வாத்தியாருக்கான பொன்னாங்காணி ஆரதக்கறி கொதித்துக் கொண்டிருந்தது. வாழைக்காய்ப் பொரியலும், பிரண்டைச் சம்பலும் வேளையோடு ஆக்கப் பட்டு விட்டன.

வாத்தியார் தலைவாசல் சாய்மனைக் கட்டிலில் ஆயாசத்துடன் சரிந்து கொண்டார்.

''வேறை என்ன வாத்தியார் நயினார் நடந்தது?'' என்று குரலைத் தாழ்த்திக் கொண்டு பூதி கேட்டாள்.

''ஒண்டும் நடக்கேல்லை. என்னைக் குறுக்குமறுக்காக் கேள்வியளைப் போட்டு இன்ஸ்பெக்டர் மடக்கிப் போட் டான்; கண்ட சாட்சி ஏதும் இருக்கோண்டு கேக்கிறான்; இல்லாட்டிச் சந்தர்ப்பச் சாட்சியைக் கொண்டு வரச் சொல்லிக் கேக்கிறான். உன்னைக் கொண்டே அதுக்கை மாட்ட நான் விரும்பேல்லைப் பூதி! சொல்லத் துவங்கினா எல்லாத்தையும் சொல்ல வேணும்; கறுப்பையன் உனக்குச் சொன்ன கதையைச் சொல்ல வேணும்; வேந்து வேலுச்சாமி எனக்குச் சொன்ன கதையைச் சொல்ல வேணும்; எண்டா லும் எனக்கவன் சொன்னதைச் சொல்லிப் பாத்தன்; எனக்கவன் அதைச் சொல்லேக்கை கேட்டுக் கொண்டு நிண்ட சாட்சி வேணுமெண்டு கேக்கிறான்!''



வாத்தியார் பேசிவிட்டு நிறுத்திக் கொண்டார்.

பூதி பேசாமலே இருந்தாள்.

''நான் அங்கை நிக்கேக்கை சுருளியன் இறைச்சிக் குடலையும் கொண்டு வந்து குடுத்தவன்; உப்ப வரேக்கை கண்டன், இளையதம்பியன்ரை படலைக்கை பொலிஸ் ஜீப் நிக்குது! பேந்தென்ன ஒண்டுக்கை ஒண்டாய் எல்லாத் தையும் சரிக்கட்டிப் போட்டாங்கள்!''

மீண்டும் வாத்தியார் பேசிவிட்டு நிறுத்திக் கொண் டார்.

அடுக்களைக்குள் இருந்த சீதை எல்லாவற்றையுமே காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்ததைப் பூதி பனைமட்டை நிரைக்கூடாகக் கவனித்தாள்.

''அப்பிடியெண்டால் வாத்தியார் நயினார் இனிமேல் ஏழைப்பட்டதுகள் சீவிக்கேலாது எண்டு சொல்லுங் கோவன்; இரணியங்கள் எல்லாமாச் சேந்து இல்லாது பொல்லாததுகளைப் பசியாறுவாங்கள்!''

பூதி சற்றுக் குரலை உயர்த்தி ஆத்திரத்துடன் கூறினாள்.

## 35

பூதி செல்லக்கண்டர் வீட்டுப் படலையைக் கிட்டிக் கொண்டிருந்தபோது படலையைத் திறந்து கொண்டு மார்க்கண்டன் வந்தான்.

அவன் இயனக்கூட்டுடனும், வடக் கயிற்றுடனும் வந்து கொண்டிருந்ததைக் கண்டுவிட்டபோது அவன் காய்வெட்டிப்பனை சேர்வையாக்கப் போய் விட்டு வருகிறான் என்பதைப் பூதி புரிந்து கொண்டாள். இருந்

தாலும் இந்த நேரங்கெட்ட நேரத்தில் அவன் அங்கு வந்து போவதை விரும்பாத அவள் ''என்ன தம்பி, இரண்டுங் கெட்ட நேரத்திலை கண்டபடி வளவுக்குள்ளை போறதே! வேளையோடை போட்டு வராதையன்?'' என்றாள்.

''இல்லையெணை பூதி ஆச்சி; சேர்வை மரங்களைப் பாத்து முடியச் செண்டு போச்சு! காய் வெட்டிதானே! இன்னுஞ் சேர்வை ஆக்கேல்லை. அதுதான் இடை நேரத் திலை ஏறிப்போட்டு வாறன்'' என்று மார்க்கண்டன் சாவதானமாகப் பதில் சொல்லிவிட்டு ''துலையாலையே ஆச்சி'' என்ற கேள்வி ஒன்றையும் கேட்டான்.

''நான் உதிலை வாத்தியாரெட்டைப் போட்டு வாறன் மோனை!'' என்று பூதி கூறி முடிக்குமுன், ''சொன்னாப்போலை காலமை வாத்தியாரைச் சுன்னாகத் துப் பொலிசுக்காரர் பிடிச்சுக் கொண்டு போனவங் களாம்; என்ன புதினமாம்?'' என்று கேட்டான் மார்க் கண்டன்.

பூதி மார்க்கண்டனின் கேள்விக்குப் பதில் சொல்லித் தான் ஆகவேண்டும்!

அவனுக்கு என்ன சொல்வது?

''இளையதம்பியற்றை வேலைக்காரப் பொடியன் கறுப்பையனை ஒரு மாதம் வரையிலை காணயில்லை யெண்டு நீ கேள்விப்படேல்லையே? அதுதான் அதைப் பற்றிக் கூட்டிக்கொண்டு போய் விசாரிச்சவங்களாம்!'' என்று பூதி பதில் சொல்லிவிட்டாள்.

''ஓமாமெணை கன நாளாய்க் காணேயில்லை எண்டு தான் கேள்வி! சிலபேர் கதைக்கினம் இளையதம்பியர் பொடியனை முடிச்சுப் போட்டார் எண்டு!'' என்று சற்றுக் குரலைத் தாழ்த்தி மார்க்கண்டன் கூறவே, ''தம்பி டேய்! அங்காலை இஞ்சாலை பாத்துக் கதை! எண்டாலும் ஏன் நயினார் வீட்டுக் கதையளை எங்களுக்கு! ஆரெடா



தம்பி உந்தக் கதையை உனக்குச் சொன்னது?'' என்றாள் பூதி!

மார்க்கண்டன் தடதடத்தான். பின்பு தட்டுத் தடுமாறி, ''அது ஒரு ஆள் சொன்னது; சொன்னாளை என்னத்துக்கு?'' என்று மார்க்கண்டன் பூதியை மறுகேள்வி கேட்டான்.

''ஆரோ சொல்லக்கூடாதவை சொல்லியிருக்கினம் போலை கிடக்கு; எனக்கேன் மறைக்கிறாய்? எனக்குத் தெரியும் சொல்லடா மோனை!'' பூதி கதை விட்டுக் கதை கேட்டாள்.

''அதெணை, செல்லக் கண்டற்றை நடுவிலுப் பொட்டை சொன்னவ...''

மாாக்கண்டன் தன்னாலேயே சொல்லிவிட்டான்.

இதற்குமேல் மார்க்கண்டனுடன் ஒன்றும் பேச வில்லை. ''போடா மோனை!'' என்று மட்டும் சொல்லி விட்டு பூதி வந்துவிட்டாள்.

''செல்லக்கண்டற்றை நடுவிலுப் பொட்டை சொன்னவ!'' என்ற இந்தச் சொல் பூதியின் நெஞ்சுக் குள்ளே போய்ப் படிந்து கொண்டது.

பூதி வீட்டு வாயிலுக்கு வந்தபோது படலை ஓரம் செல்லி பூதிக்காகக் காத்திருந்தாள்.

செல்லியைப் பூதி எதிர்பார்க்கவில்லை.

அவளைவிட்டு வாத்தியார் வீட்டுக்குப் போய் நேர மும் அதிகமாயிற்று. இதுவரை அவள் வீட்டுக்குப் போயி ருப்பாள் என்றுதான் பூதி எதிர்பார்த்தாள்.

''என்னெடி பிள்ளை நீ இன்னும் போகேல்லையே?'' என்று கேட்டுக் கொண்டே பூதி வந்தாள். வந்தவள் இக் கேள்வியோடு செல்லியின் முகத்தைப் பார்த்தாள்.

செல்லியின் முகம் கறுத்துப் போய் ஈரப்பசை இன்றி இருந்தது.

இந்தக் கோலத்தில் செல்லியைப் பூதி ஒரு நாளும் கண்டதில்லை.

''என்னவாம் அக்கை?''

செல்லி மொட்டையாகவே இந்தக் கேள்வியைக் கேட்டாள்.

''இளையதம்பியன்ரை வேலைக்காரப் பொடியனைக் காணாததுக்காக வாத்தியாரிலை ஐமிச்சப்பட்டுக் கூட்டிக் கொண்டுபோய் விசாரிச்சுப்போட்டு விட்டிட்டாங்களாம்; வாத்தியார் வந்திட்டார்.''

பூதியும் மொட்டையாகவே பதில் சொல்லிவிட்டாள்.

''வந்திட்டாரை? நீ கண்டு கொண்டு தானை அக்கை வாறாய்?''

பூதி ஒரு தடவை சொன்னதை உறுதிப்படுத்த விரும்பும் தோறணையில் செல்லி கேட்டாள்.

''ஓமெடி எண்ணுறன்; நான் வாத்தியாரைக் கண்டு கொண்டு தான் வாறன் எண்ணிறன்!''

பூதி செல்லியின் கேள்வியைக் கண்டிக்கும் தோறணையில் பேசினாள்.

''அதுக்கேனணை இப்ப என்னிலை பாயிறாய்?'' என்று கேட்டுக் கொண்டே செல்லி வீட்டுக்குப் போவதற்காக எழுந்திருந்தாள்.

''இஞ்சை இரெடி பிள்ளை; உன்னோடை கனக்கக் கதைக்க வேணும்! இஞ்சை! பழமுந் திண்டு கொட்டையும் போட்டனான் சொல்லுறன்; சும்மா பேய்த் தனமான யோசினைகளை விட்டிட்டு உன்ரை பாட்டிலை இரெடி பிள்ளை! உண்ணாணை நான் ஒண்டு கேக்கிறன்; நீ ஏன் வாத்தியாற்றை காரியத்திலை உப்பிடி அக்கறைப்படுகிறாய்? அவர் என்ன உனக்குச் சொந்த பந்தமோ கேக்கிறன்? நீ சில வேளை என்னைத் திருப்பிக் கேட்பாய், நீ



பெரிய சுத்தமோ எண்டு! நான் முந்தியும் உனக்குச் சொன்னனான்; உன்ரை காலம் இளையதம்பியெட்டைக் கொண்டு போய்த் தள்ளிப் போட்டுதெண்டு! எடி பிள்ளை! கலியாணம் முடிச்சு ஒரு வரிசத்துக்கிடையிலை புருஷனை விட்டிட்டு இப்ப ஏழெட்டு வரிசம் கட்டுப்பெட்டி போலை இருந்தனீ! உப்ப உன்ரை புரிசனும் செத்துப் போனாப் பிறகு நீ உன்னை அலக்களிக்கப் பாக்கிறதே? வாத்தியார் நல்ல மனிசந்தான்; நான் அதை இல்லையெண்டு சொல்லேல்லை! எண்டாலும் உவங்கள் ஒரு இரணியப் புறப்புக் கௌடி! தங்கடை அலுவலுகள் முடியுமட்டுந்தான்! பள்ளியள்ளை இத்தினை பேரை வைச்சிருக்கிறன் எண்டு மற்றவங்களுக்குக் கணக்குக் காட்ட வெக்கப்பட மாட்டாங்கள். என்னவோ நான் சொல்லிப் போட்டன்! கவனம்; முந்தியும் மூந்தியும் சொன்னனான்; கவனம்!''

பூதி மூச்சுப் பிடித்துக் கொண்டு பேசி முடித்து விட்டாள்.

செல்லி பதில் ஏதும் பேசாமலே பூதியின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''எடி பிள்ளை, எப்பன் தேத்தண்ணி வைச்சுத் தாறன். பனங்கட்டியுங் கிடக்குக் குடிச்சிட்டுப் போவன்; அப்போதை முழுக்க வயித்தைக் காய வைச்சுக் கொண்டிருக்கிறாய்!'' என்று கூறியபடியே பூதி அடுப்பில் தேநீர் உலையை ஏற்றித் தேநீரை வைக்கத் தொடங்கி விட்டாள்.

செல்லி பேசாமலே இருந்தாள்.

அவள் எண்ணமெல்லாம் எங்கோ போய்விட்டது.

கணவன் பொன்னனுடன் கழித்து விட்ட அந்த ஓராண்டு கால துர்பாக்கியமான வாழ்வை அவள் மறுபடியும், மறுபடியும் நினைத்துப் பார்க்கிறாள்.

பொன்னன் என்ற அவள் கணவன் அர்த்த ஜாமத்தில் பெருங் குடுமியைப் பிடித்து இழுத்துச் சென்று இயனக்

கூட்டில் இருந்த பாளைக் கத்தியை எடுத்து அறுத்து எறிந்த அந்தக் காட்சி...

விடிவெள்ளி முளைத்துவிட்ட பின்பு இரவோடிரவாக முட்டாக்குடன் ஆனைக்கோட்டையிலிருந்து கட்டு வனுக்கு வந்து சேர்ந்த கோலம்...

இந்த ஏழாண்டு கால வாழ்க்கையில் யாருக்கும் பார மாக இல்லாமல் தன்பாட்டிலே கையடித்து, நாங்கியாக வாழ்ந்து விட்ட வாழ்வு...

தனது கட்டுப்பெட்டி போன்ற உடலைப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்செறிந்த பலர், தன்னைப் பார்த்து வீசிய கடைக்கண் வீச்சுகள்...

ஊருக்கு நாங்கி காட்டி, யாருக்கும் எதற்கும் விட்டுக் கொடுக்காமல் நடந்து கொண்ட கிறுக்கு...

சமீபத்தில் பூதியக்கையின் இளையதம்பியர் தன்மீது வளைந்த வளைவு...

இத்தனையும் எண்ணிப் பார்த்துக் கொண்ட செல்வி யின் மனதில் கடைசியில் வாத்தியார்...

''ஏன் பொட்டை மலைச்சுப் போய் இருக்கிறாய்? உன்ரை நன்மைக்குத்தான் சொன்னனான் பொட்டை! குடி, தேத்தண்ணியைக் குடி!'' என்று கூறிக் கொண்டே பூதி உலை மூடிக்குள் தேநீரைக் கலக்கிச் சிறிய பனங் கட்டிக் குட்டான் ஒன்றையும் கொடுத்தாள்.

செல்வி இன்னமும் வாய் திறக்கவில்லை.

பார்வையை எங்கோ வைத்துக்கொண்டு அவள் தேநீரைக் குடித்தாள்.

வெளியே வெய்யிலின் உக்கிரகம் குறைந்து கொண்டு வந்தது.



# 36

''என்ன வாத்தியார்! பொடியளையுங் கூட்டிக் கொண்டு இந்தப் பக்கம்?'' என்று இராசரெத்தினத்தார் கேட்டுக் கொண்டே வீட்டு முன் போட்டிக்கோவுக்கு வெளியே வந்துவிட்டார்.

இராசரெத்தினத்தாருக்குக் கணவேளையில் ஒரு சங்கடம் வந்து விட்டது.

வாத்தியார் வந்திருக்கிறார்; தன்னுடன் பள்ள பொடியள் இரண்டையும் கூட்டி வந்திருக்கிறார். வாத்தியாரை உள்ளே அழைத்துப் பொடியளை வெளியே வைத்திருப்பதா? அல்லது எல்லோரையும் உள்ளே அழைப்பதா? அதுவும் அல்லாவிட்டால் மூவரையும் வெளியே வைத்துக் கதைப்பதா?

நல்ல வேளையாக போட்டிக்கோவுக்கு முன்னால் உள்ள பலா மரத்தோடு முதல் நாள் கட்டிட வேலைக் காகப் பறித்திருந்த சற்று வெள்ளைப் பாலியாத்து மண் கும்பம் அவர் கண்களுக்குப் பட்டது. ''வெய்யில் நேரம் வாத்தியார்; இப்பிடி வெள்ளை மண்ணில் இருப்பமோ?'' என்று கேட்டுக் கொண்டே இராசரெத்தினத்தார் வாத்தியாரை முந்திக் கொண்டே மணல் கும்பத்துக்கு மேல் போய் உட்கார்ந்து கொண்டார்.

வாத்தியாரும் உட்கார்ந்து கொண்டார்.

முருகையனும், குணசிங்கனும் சற்று அப்பால், மண் கும்பி விளிம்போடு உட்கார்ந்தனர்.

''பொடியள், உப்பிடி நடுவிலை இருங்கோ மோனை; பயப்பிடாமல் இருங்கோ; இது என்ரை வளவு; என்ரை மண் கும்பி; ஆர் கேக்கிறது?'' என்றார் இராசரெத்தினத் தார்.

''நாங்கள் இப்ப வந்ததென்னெண்டாப் பாருங்கோ, வாற வரிசக் கொடியேத்தத்தில் அண்டைக்கு இந்தப் பொடியள் அவையையும் கோயிலுக்கைவிட வேணும். மாவிட்டபுரமும் திறந்து விட்டு ஐஞ்சாறு வரிசமாச்சு! அதுதான் நீங்கள் மறுக்கப்படாது ஓமெண்டு சொல்ல வேணும்!''

வாத்தியார் எந்தவித சற்றி வளைப்புமின்றி மட்ட சுத்தமாகப் பேசி முடித்து விட்டார்.

இராசரெத்தினத்தார் சற்று வேளைதான் யோசித் தார்.

''நான் என்ன வாத்தியார் உங்களுக்கு மாறே? நான் இப்ப சொன்னன்; இது என்ரை வளவு; என்ரை மண் கும்பி; என்னை ஆர் கேக்கிறதெண்டு! இது என்ரை கோயிலெண்டாலும் திருவிழாச் செய்யிறவங்கள் இப்ப ஐஞ்சாறு தலைமுறையாகத் திருவிழாச் செய்து தங்களுக் குக் கோயிலை ஆட்சிப் படுத்திப் போட்டாங்கள்! அது தான் திருவிழாக்காறர் பதினைஞ்சு பேரோடையும் யோசிச்சுப் போட்டுத்தான் முற்றுச் சொல்ல வேணும்! எட்டுப் பத்து மாசங் கிடக்குத்தானை!''

இராசரெத்தினத்தாரும் ஓரளவுக்கு ஆகவும் நீட்டிப் பேசாமல் சொல்லி முடித்துவிட்டார்.

''அப்பிடியெண்டால் எந்த மட்டிலை முற்றுச் சொல்லுவியள்?'' என்று முருகையன் கேட்டான்.

''இப்ப ஏன் பொடியள் அவசரப்படுகிறியள்? கோயில் எங்கை ஓடியே போகப் போகுது! கிடக்குந் தானை! ஒரு கொடியேத்தத்துக் கில்லாட்டி மற்றக் கொடியேத்தத்திலை செய்து போட்டுப் போறது! இப்ப ஊர் கிடக்கிற நிலவரம் தெரியாதாக்களே? சிங்களவன் எல்லாரையும் சேத்துப் 'பறைத் தமிழன்' எண்டு சொல் லேக்கை நாங்கள் எங்களுக்கை இருக்கிற பிச்சல் புடுங் குலைக் காட்டிறது சரியோ; யோசிச்சுப் பாருங்கோ! ஊர்



ரெண்டு பட்டாக் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் எண்ட மாதிரி எல்லோ வந்திடும்!''

இராசரெத்தினத்தாரின் பேச்சு முடிவதற்கிடையில், ''சிங்களவன் 'பறைத் தமிழன்' எண்டு பேசினத்தாலை தான் தமிழர் ஆத்திரப்படுகினம்போலை கிடக்கு! வெள்ளாளத் தமிழன் எண்டு இந்த மோட்டுச் சிங்கள வங்கள் பேசிருந்தா இந்த வில்லங்கமொண்டும் வந்திருக் காது!'' என்று வாத்தியார் கிண்டலாகக் கூறினார். இந்தக் கிண்டல் சினத்தைக் கிளப்பி விட்டிருக்க வேண்டும்.

''இஞ்சேரும் வாத்தியார்! உந்தப் பகிடி எனக்குப் புடிக்காது கண்டீரோ? இல்லை நான் சொல்லுறன்; கண்ட சாதியெல்லாத்துக்கும் கோயிலைத் திறந்து விடேலாது! நீர் செய்யிறதைச் செய்யுமன் பார்ப்பம்! இப்பிடித்தான் அவன் கோவிய இளைய தம்பியரோ டையும் கொழுவுப்பட்டுக் கொண்டிருக்கிறீர்! நான் கேக்கிறன் வாத்தியார்; உமக்கேன் உந்தத் தேவையில்லாத ஊர் உத்தியோகங்களை? நீர் போற போக்கைப் பாத்தா நாளைக்குப் பள்ள வீட்டிலை சம்மந்தமும் கலப்பர் போலை கிடக்கு!''

இராசரெத்தினத்தார் பேசி முடித்து விட்டு, வாத்தி யாரின் முகத்தைப் பார்க்க முடியாமல் வெளியே வெய் யிலைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

வெளியே கேற்றை அவசர அவசரமாகத் தள்ளி இடித்துத் திறந்து கொண்டு இரண்டு சயிக்கிள்கள் உள்ளே வந்தன.

அந்தச் சயிக்கிள்களுடன் நான்கு இளைஞர்கள் வந்தனர். அவர்களில் ஒருவன் இராசரெத்தினத்தாரின் மூத்த மகன் சந்திரன் என்பது வாத்தியாருக்குத் தெரியும். அவன் தனது மருமகன் விவேகானந்தனுடன் உறவு

வைத்துக் கொண்டிருப்பவன் என்பதும் வாத்தியாருக்குத் தெரியும்.

அவர்கள் உள்ளே வந்த சிறிது நேரத்தில் ஆயுதப் படையின் வாகனங்கள் மூன்று நிரையில் வீதியால் இரைந்து கொண்டோடியது.

''எட தம்பியவை, நானெல்லே நெடுகச் சொல்லுற னான். மெயின் றோட்டு வழிய திரிய வேண்டாம்; ஒழுங்கையளுக்கிளாலை திரியுங்கோ எண்டு! சொல்வழி கேட்டாத்தானே!''

என்று அவர்களைக் கடிந்து கொண்டார் இராச ரெத்தினத்தார்.

''எட தம்பி, இனிப் போதுமெடா; இண்டைக் கோருடமும் போகாதை! ஆமிக்காறங்களின்ரை கண்ணிலை கிண்ணிலை படாமலுக்கு வீட்டிலை இரு!'

இப்படி உள்ளே இருந்து அவனின் அம்மாள் குரல் கொடுத்தாள்.

''எணை அம்மா, பேசாமல் இரெணை; அப்பிடி அவங்களின்ரை கையாலை சாகக் கிடைச்சுக் கிடக்கே!'' என்று கூறிக் கொண்டே அவன் நண்பர் களுடன் மறுபடியும் வெளியேறிவிட்டான்.

''நீர் பேசாமல் இருமப்பா; அவன் போட்டு வருவான்!''

இராசரெத்தினத்தார் மனைவியானவளை ஆறுதல் படுத்திவிட்டு, ''வாத்தியார் கண்ணாலை கண்டிய ளெல்லே நடக்கிற காரியங்களை! நான் அவனை விட்டிட்டன்! தமிழருக்காகத் தானம் செய்து போட்டன். பொடியன் கட்டாயம் வெல்லுவாங்கள் வாத்தியார் நீங்கள் இருந்து பாருங்கோ!''

இப்படிக் கதையை வேறுபக்கமாகத் திருப்பமுனைந்த இராசரெத்தினத்தாரை வாத்தியார் அதிக தூரம் போக



விடவில்லை. ''அப்ப நாங்கள் போட்டு வாறம்!'' என்று கூறிக் கொண்டே எழுந்து விட்டார்.

''ஓம் வாத்தியார் போட்டு வாருங்கோ! பொடியள் எப்பன் அவசரப்படாதையுங்கோடா! சிங்களவற்றை இந்தக் கரைசல்கள் முடிய நான் எல்லாம் வெண்டு தாறன்'' என்று கூறிக்கொண்டே அவர்களை வழி அனுப்பி வைத்தார் இராசரெத்தினத்தார்.

''தம்பியவை! எப்பிடிக் கோயில் முதலாளியாற்றை கறடி?''

வழியில் வைத்து வாத்தியார் முருகையனையும், குணசிங்கனையும் கேட்டார்.

''ஓமோம் வாத்தியார்: சிங்களவற்றை அலுவல்கள் முடியிற வரைக்கும் கோயிலுத் திருவிழாக்களையும் நிப்பாட்டுங்கோ எண்டு கேக்கப் பாத்தனான் வாத்தியார்; பேந்தும் உங்களை மிஞ்சிக் கதைக்கிறது மரியாதை இல்லை எண்டிட்டு விட்டிட்டன்!'' என்றான் குணசிங்கன்.

வாத்தியார் இதற்குமேல் ஒன்றும் பேசிக் கொள்ளா மலே வந்தார்.

''நீர் போற போக்கைப் பாத்தா பள்ள வீட்டிலை சம்மந்தமும் கலப்பீர் போலை கிடக்கு''

இராசரெத்தினத்தார் கேட்டுவிட்ட இந்தக் கேள்வி விஷ்வரூபமெடுத்து அவர் மனதுக்குள்வெளிகளையெல் லாம் நிரப்பிக் கொண்டிருந்தது.

இளையதம்பியருடன் தான் கொழுவுப்பட்டுக் கொண்டு நிக்கிறவன் என்று இராசரெத்தினத்தார் சொன் னதிலிருந்து இராசரெத்தினத்தார் இளையதம்பியின் பக்கத்துக்கு முற்றுமுழுதாக மாறிவிட்டார் என்றும் அவர் பண்ணினார்.

''கண்டசாதி எல்லாத்துக்கும் கோயிலைத் திறந்து விடேலாது!'' என்று இராசரெத்தினத்தார் தனது மூப்புக்குச் சொல்லவில்லை என்பதும், பலருடையதும் ஆலோசனையைப் பெற்றுத்தான் இது சொல்லப்பட்டிருக்க வேண்டுமென்றும் அவர் எண்ணினார்.

''வாத்தியார் இளையதம்பி முதலாளியின்ரை கார் வருகுது போலை கிடக்கு!'' என்றான் முருகையன்.

வாத்தியார் நிமிர்ந்து பார்த்தார்.

இளையதம்பியரின் நீலக் கார் தொலைவில் நேருக்கு நேராகத் தெரிந்தது.

''வாத்தியாரோடை அவர் ஏதும் கதைக்கட்டுக்கு...'' என்றான் குணசிங்கன்.

கார் நேராக வந்து எதிரே போய்க் கொண்டிருக்கும் போது, ''வாத்தியார் பள் நயினார்மாரோடை சோடி போட்டுக் கொண்டு போறதைக் கண்டியளோ?'' என்ற சுருளியனின் குரல் காருக்குள் இருந்து கேட்டது.

''சுருளியன் என்ன சொல்லிப் போட்டுப் போறான்; கேக்குதே வாத்தியார்?'' இப்படி முருகையன் கேட்டான்.

''கேட்டுது மோனை! அவன் இளையதம்பியனெட்டைக் குடிச்ச கூலிக்குச் சொல்லிப் போட்டுப் போறான்; எத்தினை நாளைக்கு உவையின்ரை வெருட்டுகள் வாய்க்கப்போகுது! தம்பியவை! ஆனை தன்ரை கையாலை தனக்கு மண்ணள்ளிப் போட்டது போலை உவை தங்கடை கையாலை தங்கடை தலையளிலை மண்ணை அள்ளிப் போடுகினம்! இப்பிடி எத்தினைபேர் இருந்தவை? அவை எல்லாம் இப்ப எங்கை? மாறிவாற காலம் அவையை விடாதெடா பொடியள்! நீங்கள் சோர்ந்து போகாமல் வாருங்கோ!''

வாத்தியார் பேசிக்கொண்டே நடந்தார்.



# 37

பின் பனிக் காலத் தொடக்கம்; இரண்டு நாட்களாக நடு இராத்திரியில் குளிரோடு வந்த உடல் வெக்கையை அவர் பின்பனிக் காலக் குளிர் என்றுதான் எண்ணியிருந்தார். ஆனால் அந்த வெக்கையான குளிர் தலைக் குத்தையும் கொண்டு வந்துவிட்டது.

வெறும் தலைக்குத்து மெதுவான ஜுரம் ஆகி, முடிவில் பெரும் ஜுரமாகவே ஆகிவிட்டது.

சீதை கைமருந்துகளைத் தயாரித்துக் கொடுத்தாள். முடியவில்லை. உள்ளூர் ஆறுமுகம் பரியாரியாரிடம் மருந்தும் எடுத்துப் பார்த்தாகிவிட்டது. ஜுரம் விட்ட பாடில்லை. பென்சன் எடுத்துக் கொண்ட காலத்தில் வந்த வாத நோயை விட்டு விட்டால் அறிவறிந்த காலம் தொட்டு இன்றுவரை ஒரு நோய் நொடி என்று வாத்தியார் கிடந்ததில்லை. ஒரு சிறு தடிமல் வந்தால் கூட ஆகக் கூடியது இரண்டு நாட்களுக்குள் தீர்ந்துவிடும். இந்த ஜுரமோ எட்டுப் பத்து நாட்களுக்கு மேல் அவரைப் படுக்கையில் விழுத்திவிட்டது.

இப்போது சுன்னாகம் தம்பையரின் வைத்தியம்.

தம்பையரின் வைத்தியத்திற்குப் பின்பு சற்றுப் பரவாயில்லை!

வாத்தியாரைப் பார்த்துச் செல்லப் பூதி நாள் தவறாமல் வந்து போனாள்.

''செல்லிதான் பூதியை இப்படி நாள் தவறாமல் என்னைப் பார்ப்பதற்கு அனுப்பி வைக்கிறாள்'' என்று வாத்தியாருக்கு எண்ணம் பிறந்திருக்க நியாயம் இல்லை.

ஒருநாள் மாலை ஆகிவிட்டதன் பின்பு முருகையனும், குணசிங்கனும், லோகேஸ்வரனும், அவர்களுடன் வாத்தியாருடன் எந்தத் தொடர்பும் இல்லாத—சற்று நடுவயதை எட்டிப் பிடித்த ஒருவரும் வாத்தியாரைப் பார்ப்பதற்காக வந்தனர்.

''உப்பிடி வாங்கை இழுத்துப் போட்டுக் கொண்டு இருங்கோ மோனை!''

சாய்மனைக் கட்டிலில் முற்றத்துத் தலை வாயிலில் சாய்மனைக் கட்டிலில் கிடந்தபடியே வாத்தியார் அவர்களை வரவேற்றார். ''அத்துடன் ஆர் பொடியள் இவரை எனக்குத் தெரியேல்லை?'' என்று அந்தப் புதிய மனிதரைப் பற்றியும் ஒரு கேள்வியைக் கேட்டார் வாத்தியார்.

அந்தப் புதிய மனிதரை ''கிட்டிணண்ணன்'' என்று வாத்தியாருக்கு முருகையன் அறிமுகப்படுத்தி வைத்தான்.

''தம்பி கிட்டிணர், இரும் தம்பி,'' என்று புதிய அந்த மனிதரை வாத்தியார் பிரத்தியேகக் கவனத்துடன் வரவேற்றார்.

''உம்மடை பேரை எங்கையோ கேள்விப்பட்டது போலை கிடக்குத் தம்பி, மறந்து போனன்; கேக்கிறன் எண்டு குறை நினைச்சுப் போடாதையும் தம்பி, உம்மடை ஊர் எது தம்பி?''

வாத்தியார் கூச்சப்பட்டுக் கடைசியில் கேட்டே விட்டார்.

''என்ரை பேர் கிட்டிணன் எண்டு சொல்லுறது பாருங்கோ! தாவடிக்கு அங்காலை நந்தாவிலுக்குப் பக்கத்திலை பெருங் காட்டுக்கைதான் இருக்கிறனான். இந்தப் பிள்ளையளோடை பழக்கம்! உங்களைப் பற்றி நெடுகக் கதைக்கிறவை! அதுதான் ஒருக்காப் பாத்துக் கொண்டு போவம் எண்டு வந்தனான், இவையோடை!''

அந்தப் புதிய மனிதர் தன்னைத் தானே நிதானமாக அறிமுகப் படுத்திக் கொண்டார்.



''எட இப்ப ஐஞ்சாறு வருஷத்துக்கு முந்தி தேர் எரிபட்ட கோயிலெடிப்பக்கம்! இப்ப எப்பிடிக் கிட்டிணர், அந்தக் கோயிலுக்கை எல்லாரையும் போக கும்பிட விட்டினமாம், அறுகுது அல்லது கிழியுதெண்டு இந்தப் பொடியளின்ரை ஆக்களெல்லாம் ஒண்டாய் நிண்டதாலை தானை அது நடந்தது! ஐயாண்ணன் எண்ட ஆமான மனிசனும் ஒருதன் அந்தப் பொடியள் பக்கத்திலை நிண்டதாலை அவங்களும் துணிஞ்சு இறங்கினாங்கள்! வெண்டாங்கள்! பாவம் அந்தாளையும் இந்த இரணியச் சாதி சுட்டுப் போட்டுது! எண்டாலும் அந்தாளும் நாலைஞ்சு பேரும் செத்தாலும் காரியம் வெற்றியாய் நடந்து முடிஞ்சிருக்கு! ஐயாண்ணன் எனக்குக் கிட்டின சொந்தக்காறன் தம்பி! அப்ப எங்கடை ஆக்களெல்லாம் அவரைக் கழிச்சு வைச்சவை! நான் அந்தாளின்ரை பக்கத்துக்கு நிண்டிருப்பன்; அப்ப என்னாலை ஒண்டுஞ் செய்யேலாமல் போச்சு!''

வாத்தியார் மனதைத் திறந்து வைத்துக் கொண்டே பேசுகிறார் என்பது கிட்டிணண்ணனுக்குப் புரிந்துவிட்டது. கிட்டிணண்ணர் மனதுக்குள்ளேயே புளகாங்கிதம் அடைந்து கொண்டார். என்றாலும் உடனடியாக அவர் தன்னைப்பெருமளவு இனங் காட்டிக் கொள்ள விரும்பவில்லை. மௌனமாகவே இருந்தார்.

''பொடியள் கறுப்பையன்ரை புதினம் ஏதெண்டாலும் கேள்விப் பட்டியளோ? இளையதம்பியன் பொடியளை மூடிச்சுப் போட்டான் எண்டு நான் திடமாச் சொல்லுவன். என்ன செய்யிறது அவன்ரை காசு பணத்துக்கை எல்லாரும் ஆடுறாங்கள்!''

வாத்தியார் கதையை இளையதம்பியர் பக்கத்திற்குத் திடீரெனத் திருப்பினார்.

''தம்பி கிட்டிணு, உமக்குக் கதை விளங்கேல்லைப் போலை கிடக்கு. இஞ்சை இளையதம்பி எண்ட ஒரு புதுப்

பணக்காறன் இருக்கிறான். அவன் முந்தி இருந்ததை மறந்து இப்ப ஊரை ஆளுறன் எண்டு நிக்கிறான். ஒரு இரணியன். அவனெட்டை வேலை செய்த கறுப்பையன் எண்ட இந்தியாக்காறப் பொடியனை அடிச்சுத் தாட்டுப் போட்டான்! அவனைப் பற்றித்தான் கேக்கிறன்!''

வாத்தியார் பேசி முடித்துவிட்டார்.

கிட்டிணண்ணர் பேசாமலே இருந்தார்.

''ஊருக்கை வாத்தியார் சொல்லுற மாதிரித்தான் எல்லாரும் கதைக்கினம்! சுருளியனைக் கொண்டு பொடியனைச் சரிக்கட்டிப் போட்டார் எண்டுதான் கதைக்கினம்!'' முருகையன் தனது கருத்தைச் சொன்னான்.

''எல்லாரும் சொல்லுவாங்கள்தான்! ஆனா அவனுக்கு எதிரா நடவடிக்கை எடுக்க ஒருத்தனும் வரான்! உந்த மருதப்பர்கூட முன் வைச்ச காலைப் பின்னுக்கு வைச்சிட்டார். சும்மா கதைக்கிறத்திலை என்ன மோனை இருக்கு! செய்யவெல்லோ வேணும்!''

வாத்தியார் மிகவும் மன விரக்தியோடு பேசினார்.

சற்று வேளை அமைதி நிலவியது.

''இஞ்சேர் தங்கச்சி, இவைக்கு எப்பன் தண்ணி கலக்கிக் குடன்; இஞ்சை இண்டைக்குப் புதாளும் ஒண்டு வந்திருக்கு!''

வாத்தியார் அடுக்களைக்குள் இருக்கும் தங்கைக்குக் கேட்க வேண்டும் என்பதற்காகச் சற்றுக்குரலை உயர்த்திக் கூறினார்.

''அம்மா எனக்கும் தேத்தண்ணி?'' என்று வீட்டு விறாந்தையில் படித்துக் கொண்டிருந்த கடைக்குட்டியன் குரல் வைத்தான்.

''அம்மா எனக்குமெணை!'' என்றான் அவனுக்கு மூத்தவன்.



''எல்லாருக்கும் தாறன் எப்பன் பொறுங்கோ!'' என்று எல்லோருக்குமான பதிலையும் குசினிக்குள் அடுப்போடும் நெருப்போடும் இருந்த சீதை கொடுத்தாள்.

தாழ்வாரத்தில் கட்டியிருந்த ஆடுகள் குரல் வைத்தன.

அவைகளுக்கும் குழை காட்டும் நேரம் வந்து விட்டது.

''ஆடுகளும் கத்துது! தோட்டத்துக்குப் போன அந்தாளையும் இன்னும் காணெல்லை!'' என்று சீதை தன்னுள்ளேயே சொல்லிக் கொண்டது யாருக்கும் கேட்க வில்லை.

''இஞ்சேரப்பா மூத்தவன் வந்தவனே?'' என்று கேட்டுக் கொண்டே சீதையின் கணவன் கந்தையர் முற்றத்திற்கு வந்தார்.

''இல்லையப்பா! அவன் நேத்தைக்குப் போனவன்; இண்டு முழுக்க வரேல்லை!'' என்று கணவனின் கேள்விக்குச் சீதை பதில் சொன்னாள்.

''இண்டைக்கும் பின்னேரம் இணுவில் ஆசுப்பத்திரி யெடியிலை ரெண்டு சீ.ஐ டீக்காறங்களை ஆரோ பொடியள் சுட்டுப் போட்டாங்களாம்! ஊரெல்லாம் கதையாக் கிடக்கு, ஆரோ கட்டுவன் பக்கத்துப் பொடியன் எண்டும் கதையாக் கிடக்கு, இப்ப நான் வரேக்கை சந்தியிலை பொலிசு ஜீப்பு வந்து சுத்திப் போட்டுப் போகுது! அதுதான் கேட்டன்; உவன் மூத்தவன் எங்கை போறான் வாறான் எண்டதும் விளங்கேல்லை!'' என்று கூறிக்கொண்டே கந்தையர் கிணற்றடிப் பக்கமாகப் போனார்.

சீதை சற்றுவேளை அடுப்பங்கரையில் கல்லாக இருந்தாள்.

கிட்டிணர் மற்றவர்களின் முகத்தைப் பார்க்க, மற்றைய மூவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்,

கொள்ள, வாத்தியார் அவர்கள் எல்லோரினதும் முகத்தில் தோன்றிய கேள்விக் குறிகளையே அவதானித்துக் கொண்டிருந்தார்.

சீதை அவர்களுக்குத் தேனீர் பரிமாறினாள். "அன்னை, உங்களுக்கும் தேத்தண்ணி தரட்டோ இல்லாட்டி மருந்தை உரைச்சுத் தரட்டோ?'' என்றும் கேட்டாள்.

''மருந்தைக் கொஞ்சம் பொறுத்துக் குடிப்பம்; இப்ப கொஞ்சம் தேத்தண்ணி தா; சீனியைக் கனக்கப் போட்டி டாதை!'' என்று வாத்தியார் கூறவே, சீதை அவருக்கும் தேனீரைக் கொடுத்துவிட்டு, மக்களுக்குத் தேனீர் கொடுக்கச் சென்றாள்.

கிணற்றடியில் கந்தையர் குளிக்கும் ஓசை கேட்டது.

## 38

கிட்டிணண்ணனும், வாத்தியாரும் வெகு விரைவில் இப்படி இறுக்கமாகி விட்டனர்.

வாத்தியாரின் ஜுரம் விட்டு, அவர் தேறி எழுந்தி ருக்கும்வரை நாள் தவறாமல் வந்து போனவள் பூதி. இரண்டு நாட்களுக்கு ஒருதடவை தன்னும் வந்துபோனவர் கிட்டிணண்ணன் தான்.

இரண்டொரு நாட்கள் கிட்டிணண்ணனுக்கு மதிய வேளை உணவு கூட வாத்தியார் வீட்டில்தான் நடந்தது. இந்தச் சந்திப்புகளால் வாத்தியாரைப் பற்றிக் கிட்டிணண்ணன் அறிந்ததைவிட கிட்டிணண்ணனைப் பற்றித்தான் வாத்தியார் நிறைய அறிந்து கொண்டார்.

கிட்டிணண்ணன் தனது கதைகளையெல்லாம் வாத்தியாருக்குச் சொன்னார்.



வாத்தியாரால் முன்பு குறிப்பிடப்பட்ட ஐயாண்ணன் என்ற அந்த மனிதருடன் தான் கழித்துக் கொண்ட காலம் உட்பட, நந்தாவில் தேர் எரிப்பு விவகாரத்தில் தனது மனைவி சின்னாச்சியை இழந்துவிட்ட கதை......

கிட்டிணண்ணன் வாத்தியாருடன் புதிதான பல விஷயங்களைப் பற்றிப் பேசினார்.

அவர் பேசியவைகளையெல்லாம் சிறு பிள்ளைபோல கைகட்டி வாய் பொத்திக் கொண்டிருப்பது போன்ற மன உவகையோடு வாத்தியார் கிரகித்துக் கொள்வதில் பெருமைப்பட்டார். கடைசியாகத்தான் கிட்டிணண்ணர் "இளையதம்பி தனது சொந்தக்காரன்'' என்ற தகவலைச் சொன்னார்.

இத்தகவல் வாத்தியாரைத் திடுக்குற வைக்கவில்லை. ஏனெனில் இதற்கு முன் அவரிடம் கேட்ட உலகளாவிய பல அனுபவ ஞானங்களால், அவரை இளையதம்பியருடன் இணைத்துப் பார்க்க மனது முயற்சிக்கவில்லை.

ஒரு தடவை கிட்டிணண்ணன் வந்தபோது வாத்தியார் எங்கோ வெளியில் போயிருந்தார்.

கிட்டிணண்ணன் வாத்தியாருக்காகக் காத்திருந்த போது விவேகானந்தனும், அவனின் நண்பர்கள் இருவரும் வந்து சேர்ந்தனர்.

கிட்டிணண்ணனை அவர்களுக்குத் தெரியவில்லை. அதேபோலக் கிட்டிணண்ணனுக்கும் அவர்களைத் தெரிய வில்லை.

அடுக்களைக்குள் சென்ற விவேகானந்தன் தாயாரிடம் கிட்டிணண்ணனைப் பற்றி விசாரித்த போது, ''மாமா வெட்டை வந்தவர்!'' என்று மட்டுந்தான் தாயார் சொல்லி கிட்டிணண்ணனை அறிமுகப்படுத்தினாள்.

''மாமாவெட்டை இருக்கிறியள் போலை கிடக்கு!'' என்று கேட்டுக் கொண்டே விவேகானந்தன் தன்

முற்றத்துத் தலைவாயிலுக்குள் வர மற்றவர்களும் உள்ளே வந்து வாங்கில் உட்கார்ந்து கொண்டனர்.

சற்றுவேளை அவர்கள் தங்களுக்குள் ஏதேதோ பேசிக் கொண்டனர்.

சீதை அவசர அவசரமாக புதிய உலையை ஏற்றி விட்டு, தேங்காய்த் துருவிக்கொண்டிருந்தாள்.

விவேகானந்தன் வந்ததும், தாயாரிடம் சென்று பேசியதும், உடனடியாகவே தாயார் புது உலையை ஏற்றி விட்டு தேங்காய் துருவியதும் அவர்கள் தலைவாயிலில் காத்திருப்பதும், இரவு உணவை அங்கேயே வைத்துக் கொள்வதற்காகத்தான் என்பதை ஊகிப்பது கிட்டி ணண்ணனுக்கு அதிக கஷ்டமாக இருக்கவில்லை.

நடுவே சிமிலி விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

தொலைவில் இரைச்சல்கள் கேட்டன.

அவை பொலிஸ் ஜீப்போ அல்லது வேறு காவல் படையினரது வாகனங்களின் இரைச்சலாகத்தான் இருக்க வேண்டும்.

அவர்களில் ஒருவன் கையில் துண்டுப்பிரசுரங்கள் சில இருந்தன.

''தம்பி உதிலை ஒண்டைத் தாருமன் பாப்பம்!'' என்று கிட்டிணண்ணர் கேட்டார்.

''குடும் தோழர் ஒண்டை!'' என்றான் ஒருவன்.

தோழர் என்ற இந்தச் சொல்லு கிட்டிணண்ணனை ஒரு மாதிரி எண்ண வைத்துவிட்டது. அந்தத் துண்டுப் பிரசுரத்தைப் பெற்று சிமிலி வெளிச்சத்தில் பிடித்துப் படித்தார்.

கிட்டிணண்ணனுக்கு எழுத்தோட்டம் அவ்வளவு இல்லை. அதை அவர் படித்து முடிக்கச் சற்றுவேளை ஆகி விட்டது.



''என்னப்பு விளங்கேல்லையே நெடுகப் படிக் கிறியள்?'' என்றான் ஒருவன்.

''எட பொறன் தோழர், அவர் ஆறுதலாப் படிச்சு முடிக்கட்டுக்கன்!'' என்றான் மற்றவன்.

''படிச்சு முடிச்சுப் போட்டன் தம்பியவை! எல்லாம் விளங்கிச்சுது! ஒண்டிரண்டு எனக்கு எப்பனும் விளங் கேல்லை. அதுதான் திருப்பி யோசிக்கிறன்!'' என்றார் கிட்டிணண்ணன்.

''அதென்னப்பு விளங்காததைக் கேளுங்கோவன்; சொல்லுறம்!'' என்றான் ஒருவன்.

''முன்னுக்கு ஒரு இடத்திலை தமிழினம் ஒண்டாச் சேந்தாத்தான் போராட்டத்தை வெல்லலாம் எண்டு கிடக்கு, பேந்து கடைசியிலை ''சோசலிசக் குடியரசை அமைப்போம்!'' எண்டும் எழுதிக் கிடக்கு; இதுதான் எனக்கு விளங்கேல்லை!'' இத்துடன் கிட்டிணண்ணன் கேள்வியை நிறுத்திக் கொண்டார்.

''என்னப்பு இது விளங்கேல்லை எண்ணிறியள். முதல்லை தமிழர் ஒண்டாச் சேர வேணும்; பேந்து சோசலிசக் குடியரசை அமைக்கவேணும் எண்டது விளங் கேல்லையே?'' என்றான் முன்னவன்.

''தோழர் அப்புவுக்குச் சோசலிசம் எண்டது விளங் கேல்லைப் போலை கிடக்கு; அதுதான் அவர் இப்பிடிக் கேக்கிறார்!''

இதை விவேகானந்தன் கூறினான்.

''அப்பு அதென்னெண்டால், முதலாளி தொழிலாளி எண்ட வித்தியாசங்களையும், நிலமிருக்கிறவன் நிலமில் லாதவன் எண்ட வித்தியாசங்களையும், மேல் சாதி, கீழ் சாதி எண்ட வித்தியாசத்தையும் விட்டிட்டு, தமிழர் எல்லாம் ஒண்டாச் சேந்து இந்த வித்தியாசங்கள் இல்லாத ஒரு அரசை நிறுவுவது எண்டது தான் அப்பு!''

ஒருவன் விளக்கம் தந்து விட்டான்.

''அப்பிடியெண்டால் எல்லாருமாச் சேந்து போராடி ஆட்சியை எடுத்தாப் பிறகு, காசு களைஞ்சு இல்லாமலுக்கும், நிலபுலமில்லாமலுக்கும் இருக்கிற ஏழைப்பட்டதுகளுக்கு, தங்களெட்டை இருக்கிற காசுகளைஞ்சுகளையும், நிலபுலங்களையும் பங்கிட்டுக் குடுப்பினமெண்டு நீங்கள் நினைக்கிறியளே தம்பியவை? ஒண்டுக்கை ஒண்டை மாறிச் சாறிக் கலியாணங் கட்டச் சம்மதிப்பினமை தம்பியவை? தெரியாமல் கேக்கிறன் தம்பி, பெரியாக்கள் குறைஞ்ச சாதிக்காறரைச் சபை சந்திபிலை வைப்பினமை தம்பியவை?''

கிட்டிணண்ணனின் இந்தக் கேள்விகள் உடனடியாக அவர்களைப் பதிலளிக்க இடந்தரவில்லை.

''நான் அறிஞ்சவரையிலை உலகத்திலை, உள்ளவனும் இல்லாதவனும் ஒற்றுமையாச் சேந்து சோசலிச அரசை அமைச்சு வைச்சிருக்கேல்லை! ஏன் தம்பியவை, கனக்க வேண்டாம்; உதிலை கிடக்கிற கந்தசாமி கோயிலுக்கை எளிய சாதியளைப் போக விடுறேல்லை எண்டு கோயில்முதலாளி ராசரெத்தினம் எண்டவர் பிடிவாதமாக நிக்கிறாராம்! அவர் தரவளி ஆட்சி கிடைச்சாப்பிறகு மனம் மாறி விடுவினமெண்டு நினைக்கிறியளே? அந்த முதலாளியைத் திருத்தேலுமோ கேக்கிறன்! திருந்திறவரெண்டா இந்த நேரத்திலையெல்லோ திருந்தவேணும்! இப்ப திருந்தாதவர் பேந்தெப்ப திருந்துவார்? இவர் அப்பிடி நிக்கேக்கை தமிழரெல்லாரையும் என்னெண்டு ஒண்டு சேர்க்கப் போறியள்?''

கிட்டிணண்ணன் மீண்டும் பேசினார்.

அந்த மூவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர்.

அந்த மூவரும் ஒருவன் இராசரெத்தினத்தின் மகன் தான் என்பது கிட்டிணண்ணனுக்குத் தெரியாது.



''நீங்கள் அரசியலையும், சாதி விஷயத்தையும் ஒண்டாப் போட்டுக் குழப்பிறியள் அப்பு! ரெண்டையும் தனித்தனியாகத்தான் பார்க்க வேணும்! உப்பிடிப் பாக்கக் கூடாது'' என்றான் விவேகானந்தன்.

''தம்பி! சாதியும் ஒரு அரசியலிலிருந்துதான் வந்ததெண்டு நான் நினைக்கிறன். அதை அப்பிடியே வைச்சுக் கொண்டு மேலாலை பூசி மெழுகி அரசியலைச்சரிக் கட்டினா அது ஒருநாளைக்குப்பொருமி வெடிக்கும். ஒண்டு உம்மைக் கேக்கிறன் தம்பி, உம்மடை பேர் கந்தசாமி எண்டு வைச்சுக் கொள்ளுவம்! கந்தசாமி எண்டால் எது? உம்மடை உயிரோ இல்லாட்டி உடம்போ? இரண்டையும் சேத்துத்தான் உம்மடை பேர் கந்தசாமி! அதுபோலைத் தான் தம்பி, மனிசனுக்குத்தான் அரசியல்! அந்த மனிசன் வேறை அவன்ரை குணங்கள் வேறை அவன்ரை அரசியல் வேறை எண்ணிறதும்!''

கிட்டிணண்ணன் பேசி முடிந்ததும் பேச்சுக்கள் சிறிது வேளை ஓய்ந்து விட்டன.

''ஆர் கிட்டிணரே?'' என்று கேட்டுக் கொண்டே வாத்தியார் வந்தார்.

''என்ன ஒருதற்றை பேச்சு மூச்சையுங் காணேல்லை! இஞ்சைபார் பொடியளும் இருக்கிறாங்கள்! கிட்டிணு பொடியளைத் தெரியுதே உமக்கு? வலு கெட்டிக்காறப் பொடியள்! வாய் குடுத்துத் தப்பேலாது. இவன் என்ரை மருமோன் விவேகானந்தன். மற்றப் பொடியள் எங்கடை மில்காற ராசரெத்தினத்தாற்றை மோன் சிறீ; மற்றப் பொடியனை எனக்குத் தெரியேல்லை!''

இப்படி மட்டுமட்டாக அவர்களையும் அறிமுகப் படுத்தினார் வாத்தியார்.

''அவை இவ்வளவு நேரமும் கதை கதையெண்டு கதைச்சுக் களைச்சுப் போய் இருக்கினம் அண்ணை!'' என்று அடுக்களைக்குள் இருந்து குரல் கொடுத்தாள் சீதை.

# 39

மகன் விவேகானந்தனுக்கும், மற்றைய அவனின் நண்பர்களுக்குமாக உலை ஏற்றி இறக்கி, பகல் பிடுங்கி வைத்திருந்த முருங்கைக்காயையும் ஒரு சாம்பாராக்கிப் பகல் இருந்த கறிகளோடு கலந்து உணவு கொடுக்கத் தயாராகிவிட்டாள் சீதை.

மூவரும் அடுக்களைக்குள் போய்விட்ட பின்பு ''கிட்டிணு, பொடியளோடை பேசிப் பாத்தியள் எப்பிடி?'' என்றார் வாத்தியார்.

''பொடியளுக்குத் தமிழுக்காக உயிரைவிட்டா என்ன என்கிற துடிப்பு இருக்குது! அதுக்கு மேலை சோசலிசத்தை எப்பிடி அடையிறது என்ற காரியத்திலை, ஆரோ சொன்னதுகளை அப்பிடியே பாடம் ஒப்பிச்சமாதிரி ஒப்பிக்கத் தெரியுது? அதுக்கு மேலே ஒண்டும் விஷேஷமாத் தெரியேல்லை,'' என்று வாத்தியாருக்கான பதிலை தம் குரலைத் தாழ்த்திக் கொண்டே கூறினார் கிட்டிணண்ணன்.

''ஓமோம், நானும் அப்பிடித்தான் நினைக்கிறன்; கொஞ்ச நாளைக்குப் பொறுத்துப் பாப்பம்!''

வாத்தியாரின் இந்தப் பதிலுக்குப் பின்பு கிட்டிணண்ணன் புறப்படத் தயாரானார். ''நேரஞ் செண்டு போச்சு; இனி கிட்டிணு எங்கே போகப் போறீர்? நிண்டு காலமைக்குப் போமன்'' என்று கிட்டிணண்ணரைத் தடுத்தார் வாத்தியார்.

''இண்டைக்கு முருகையப் பொடியன்ரை வீட்டிலை சின்னக் கூட்டமொண்டு நடக்க ஒழுங்கு பண்ணிக் கிடக்கு. பொடியள் காத்துக் கொண்டிருப்பாங்கள்; வாறனெண்டனான்; அதிலை ஒருக்காகப் போட்டு, ராவைக்கு அங்கை கிடந்திட்டு விடியப்புறம் புத்தூருக்கு ஒருக்காப் போகப் பாக்கிறன்'' என்றார் கிட்டிணண்ணர்.



''மெய்யே கிட்டிணு, நான் கேக்கிறது சரியோ பிழையோ தெரியேல்லை. நானும் அந்தக் கூட்டத்துக்கு வந்தாப் பொடியள் ஏதுஞ் சொல்லுவாங்களோ?'' என்று மிகப் பணிவாக வாத்தியார் கேட்டார்.

கிட்டிணண்ணன் சற்றுவேளை யோசித்துவிட்டு, அதுக்கென்ன வாத்தியார்! பொடியள் அப்பிடி ஒண்டும் நினையாங்கள்; நீங்களும் வாருங்கோவன்!'' என்று கிட்டிணண்ணன் கூறியது வாத்தியார் மனதை நிறைத்துவிட்டது. அவசர அவசரமாக வாத்தியார் புறப்பட்டுவிட்டார்.

''தங்கச்சி, நான் உதிலை ஒருக்காப் போட்டு வாறன், என்ரை சாப்பாட்டைக் கரப்பாலை மூடி வை; நான் வந்து எடுத்துத் தின்னிறன்!'' என்று சீதைக்குக் குரல் கொடுத்துவிட்டு வாத்தியார் புறப்பட்டு விட்டார்.

இளையதம்பியரின் வீட்டையும், கிறேசரையும் தாண்டிச் சென்று அப்பால் வரும் தோட்டக் கரையால் இறங்கி, இரண்டு மூன்று குச்சொழுங்கைகளையும் தாண்டித்தான் முருகையனின் வீட்டுக்குப் போக வேண்டும்.

கிறேசர் வாயிலடிக்குச் சென்றபோது அதன்வாயலில் பொலிஸ் ஜீப் ஒன்று நின்றது. உள்ளே ஆரவாரம் கேட்டது.

உள்ளே கேட்கும் குரல்கள் குடித்துக் கும்மாளக் குரல்கள் தான்!

''பாத்தீரே கிட்டிணு, பொலிசுக்காறற்றை விளையாட்டுகள் எப்படி இருக்கெண்டு?''

ஜீப்பை விலத்திக் கொண்டு அப்பால் போனதும் வாத்தியார் மெதுவாகச் சொன்னனர்.

கிட்டிணண்ணர் குரலைத் தாழ்த்திக் கொண்டே பொலிஸ்காரர்களின் வழமையான செயல்பாடுகளைப் பற்றி தனது அனுபவத்தில் கண்டவைகளை சொல்லிக் கொண்டே போனார். முருகையன் வீடுவரை பொலிஸ் காரர்கள் பற்றிய கதைகள் முடியவில்லை.

முருகையன் வீட்டு முற்றத்தில் இருந்த சிமிலி விளக் கொன்றைச் சுற்றிக் கொண்டு பலர் இருந்தனர்.

கிட்டிணண்ணனைத்தான் அவர்கள் எதிர்பார்த்திருந் தனரே தவிர வாத்தியாரை அல்ல. வாத்தியார் வந்தது அவர்கள் எல்லோருக்கும் ஆச்சரியத்தைத் தந்தது.

முருகையன் எழுந்து வந்து இருவரையும் வர வேற்றான்.

எல்லோரும் இருக்கைகளை விட்டு நகர்ந்து இருவருக் கும் இடம் விட்டனர்.

கூட்டத்தில் ஒரு புறத்தே பெண்களும் இருந்தனர்.

பூதி வாத்தியாரின் கண்களுக்குப் பட்டாள். பூதி கண்ணில் பட்டாள் என்றால் செல்வி படாமல் இருக்க முடியாது. செல்வியும் பூதிக்குப் பக்கத்தேதான் இருந் தாள்.

"அப்ப கூட்டத்தைத் துவக்கும்" என்றான் குண சிங்கன்.

எல்லோரும் சம்மதித்தனர்.

"உவன் மார்க்கண்டு மச்சான் கடைசிப் பனை ஏறிப் போட்டு இப்பான் வீட்டை போறார் வாறன் எண்டிட்டு. எப்பன் பாப்பம்?" என்றான் திருப்பதியான். கடந்த சில மாதங்களாக வல்வெட்டித் துறையில் அக்காள் வீட்டில் இருந்துவிட்டு அவன் சமீபத்தில் தான் ஊருக்கு வந்திருக் கிறான். மார்க்கண்டனுக்கு அவன் முறை மைத்துனன்.



சற்றுவேளை எல்லோரும் மார்க்கண்டனின் வரவுக் காகக் காத்திருந்தனர்.

செல்லத்துரையன் குணசிங்கத்தைச் சுரண்டி அழைத் துக் கொண்டு வெளியே போனான்.

"என்ன தம்பி குணம், வாத்தியார் வந்திருக்கிறார், எங்கடை கூட்டத்திலை இருக்க விடலாமே?"

இப்படி ஒரு கேள்வியைச் செல்லத்துரையன் குண சிங்கத்திடம் காதோடு காது வைத்துக் கேட்டான்.

"வாத்தியார் எங்கடை பக்கந்தான் அண்ணை! கிட்டிணண்ணனும் தெரியாமலே கூட்டி வந்தவர்? எண்டா லும் பூதி அக்கையை ஒருக்காக் கேட்டுப் பாப்பம், ஒருக் காப் பூதி அக்கையைக் கூப்பிடண்ணை" என்றான் குணசிங்கன்.

செல்லத்துரையன் பூதியைக் கண் ஜாடை காட்டி அழைத்து வந்தான்.

"என்ன பூதி அக்கை, வாத்தியாரும் வந்திருக்கிறார், என்ன செய்வம்?"

குணசிங்கனின் இந்தக் கேள்விக்கு "தம்பி, அந்தாள் எங்களுக்கு மாறாப் போகாதடா! நான் சத்தியம் பண்ணுவன்!" என்றாள் பூதி!

இதற்குப் பின் பேச்சு அதிகம் நீளவில்லை.

மார்க்கண்டனும் அவசர அவசரமாக வந்து சேர்ந் தான்.

யோகேஸ்வரன் கூட்டத்தைத் தொடங்கினான்.

யோகேஸ்வரன் பேசத் தொடங்குவதற்கிடையில் "எல்லாத் தோழரவைக்கும் நான் முதல்லை கூட்டம் துவங்கிறத்துக்கிடையிலை ஒரு விஷயம் சொல்ல வேணும், இண்டைக்கு இந்தக் கூட்டத்துக்கு வாத்தியார் வந்திருக் கிறது சில பேருக்குக் கூச்சமாயிருக்கெண்டு எனக்குத்

தெரியுது. ஆனால் கூச்சப்படத் தேவையில்லை; வாத்தியார் இண்டைக்குத் துடக்கம் எங்கடை ஆள்! அவர் இருக்கிறார் எண்டு கூச்சப்படாமல் கதையுங்கோ!'' என்று கிட்டிணண்ணன் சொன்னார்.

வாத்தியாருக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது.

செல்லியின் கண்களில் நீர் நிறைந்தது. யாருக்கும் தெரியாமல் அவள் அதை இமைகளால் வெட்டி விட்டாள். இருளுக்குள் யார் கண்களுக்கும் அது பட்டிருக்காது. ஆனால் பூதிக்கு மட்டும் தெரியாமல் இருக்கவில்லை. அவள் செல்லியின் கரத்தை இறுக நெரித்தாள்.

கோயில் கொடியேற்றத்திற்கு இன்னும் ஐந்தாறு மாதங்கள் வரை இருந்தன. ''இந்த இடைக் காலத்துள் இந்தப் பிரச்சனையை ஊருக்குள் இருக்கும் தீவிர அரசியல் இளைஞர்களைக் கொண்டு செய்து முடித்து விடலாம்'' என்று எல்லோருக்கும் முன்னதாக மார்க்கண்டன் அபிப்பிராயம் தெரிவித்தான்.

பலர் அதை வெட்டி கருத்துத் தெரிவித்தனர்.

பலரின் கருத்துக்களுக்குப் பின்பு எல்லாவற்றையும் தொகுத்து, கணகெடுத்துக் கிட்டிணண்ணன் அபிப்பிராயத்தைச் சொல்லிக் கொண்டிருந்தார்.

அவர் பேசும் விதத்தை ஆச்சரியத்தோடு கேட்டுக் கொண்டிருந்தார் வாத்தியார்.

ஆலயப்பிரவேசத்துக்கு முன்பு அடுத்துவரும் பசளைத் தாழ்வுக்கு, கொத்துக்கு, புல்லுப் புடுங்கலுக்கு புதிதான கோரிக்கைகள் வைக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி எல்லாம் அவர் பேசினார்.

கிட்டிணண்ணனின் பேச்சுக்குப் பின்பு எல்லோரது அபிப்பிராயங்களும் ஒரு முகப்பட்டு விட்டன. மார்க்கண்டன் மட்டும் பேசாமல் இருந்தான்.



கடந்த நாட்களில் கிட்டிணண்ணனிடம் கண்ட பல திறமைகளை இன்றுதான் வாத்தியார் ஒட்டுமொத்தமாகக் காண்கிறார்.

இதற்குப் பின்பு திருப்பதியான் பேசினான். திருப்பதியானுக்குப் பேச்சு அனுபவம் நிறைய இருந்தது. கிட்டிணண்ணனின் பேச்சுக்கு விளக்கம் தருவது போல் அவன் சாங்கோபாங்கமாகப் பேசினான். தனது சின்னஞ்சிறிய உடம்பை அசைத்து, தோட்டக் கூலிகளின் கூலி உயர்வு பற்றி அவன் பேசிய பேச்சு வாத்தியாரையே தலை அசைக்க வைத்து விட்டது.

## 40

கூட்டம் முடிந்து எல்லோரும் கலைந்து சென்று விட்ட பின் கடைசியாக விடை பெற்றுக் கொண்டவர் வாத்தியார்தான்.

வாத்தியார் வீடுவரை அவரை அழைத்துச் சென்று விட்டு வரும் பணியைக் கிட்டிணண்ணன் குணசிங்கத்திடமும், லோகேஸ்வரனிடமும் ஒப்படைத்தார். அவர்களும் வாத்தியாருடன் சென்றுவிட்டனர். தானும் வருவதாக அடம்பிடித்துக் கொண்டு திருப்பதியானும் சென்றான்.

தந்தை கட்டையனுக்கு இளையதம்பியர் கிறேசரில் இன்று அவசரமான ரா வேலை. குடிசைக்குள் கிட்டிணண்ணருக்கு இராச்சாப்பாடு தயாரானது. முருகையனின் தாய் சேதி மத்தியானம் சுன்னாகம் சந்தைக்குப் போய் திருக்கை வாங்கி வந்து பிரட்டல் கறி தயாரித்திருந்தாள். இப்போது அந்தத் திருக்கைப் பிரட்டலையும் சூடாக்கி, அதற்கு இணையாக முற்றத்திலிருந்த

நான்கு முருங்கைக் காய்களையும் பிடுங்கி, பால்கறி காச்சிக் கொண்டிருந்தாள்.

''என்ன முருகையா, மார்க்கண்டுப் பொடியன்ரை கதை ஒரு மாதிரியாகத் திரும்பியிட்டுது? என்ன சங்கதி? ஏன் அப்பிடிக் கதைச்சவன் எண்டு ஏதும் விளங்கிச்சுதே'' என்று கிட்டிணண்ணன் குரலைத் தாழ்த்திக் கொண்டு முருகையனைக் கேட்டார்.

''அதுதான் எனக்கும் விளங்கேல்லை கண்டியளோ! இப்ப கொஞ்ச நாளாக மில்காற ராசரெத்தினம் முதலாளியாற்றை மூத்தமோனோடை சினேகிதமாகத் திரியிறானெண்டு கதையாக் கிடந்தது. அதிலைதான் இப்பிடிப் பிறக் கதை கதைக்கிறான் எண்டு நினைக்கிறன்!'' என்று முருகையன் கிட்டிணண்ணனுக்குப் பதில் சொன்னான்.

இது கிட்டிணண்ணனுக்குத் திருப்தியான பதிலாக இருக்கவில்லை. ''அவற்றை எந்தப் பொடியனோடை?'' என்று விசாரணைத் தோரணையில் இன்னோர் உப கேள்வியையும் கிட்டிணண்ணர் கேட்டார்.

''அதுதான் அந்த கண்டியாலை படிப்பை விட்டிட்டு வந்திருக்கிற மூத்த பொடியனோடை. இவனும் சீவிறதெல்லாம் அவையின்ரை காணியளுக்கிள்ளைதான் அதிகம். அதாலை சிலவேளை சேந்து கீந்து பேசிப் பறைஞ்சிருப்பாங்கள் போலை கிடக்கு!''

முருகையனின் இந்தப் பதில் கிட்டிணண்ணனுக்கு இப்போது ஓரளவுக்கு விஷயத்தைத் தொடர்ந்து செல்வதற்கு வசதியாக இருந்தது.

''ஓமோம் அப்பிடியுமிருக்கும். இல்லாட்டி வேற மாதிரியுமிருக்கும்! அவன் யூனிவேசிற்றிப் பொடியனெல்லே, சாதிகீதி பாக்காமை இந்தப் பொடியனோடை நடக்கிறானாக்கும்! அவங்கள்ளை கொஞ்சப்பேர் உதுகள் அதிகம் பாக்காதவங்கள்தான்! எண்டாலும் முருகையா நாங்கள் எப்பன் கவனமாத்தான் இருக்க வேணும்.



எங்கடை பொடியளைக் கொண்டு ஏதெண்டாலுஞ் செய்விக்கிறதுக்கும் இப்பிடிச் செய்து பாப்பினம்! உதுகளை விளங்கிக் கொள்ளாமை இந்தச் சனங்களின்ரை எல்லாத் துன்பங்களையும் பொடியள் தீர்ப்பாங்கள் எண்டு நம்பிக்கை வைச்சுக் கொண்டிருந்தானெண்டா அது பிழையிலைதான் வந்து முடியும்; எண்டாலும் அவசரப்படாமல் கொஞ்சம் விட்டுப் பாப்பம்! எல்லாத்தையும் அனுபவத்திலை காணவிடுகிறது தான் தம்பி மெத்தத் திறம்!''

இதற்குமேல் கிட்டிணண்ணன் மார்க்கண்டன் விஷயமாக எதுவும் பேசவில்லை. முருகையனுக்கும் கிட்டிணண்ணன் சொன்னவைகளின் உள்ளுடன் புரிந்து விட்டது.

சேதி இருவருக்கும் இரு அலுமினியத் தட்டுகளில் சோற்றைப் போட்டு, திருக்கைப் பிரட்டலையும், முருங்கைக்காய் பால் சொதியையும் விட்டு வந்து கொடுத்தாள்.

கிட்டிணண்ணனுக்குத் திருக்கைப் பிரட்டலும் அதற்கிணையான முருங்கைக் காய்ச் சொதியும் நன்றாகப் பிடித்திருந்தது. முருங்கைக்காய்க் கீலங்களை பற்களால் வறுகி எடுப்பதோடு மட்டுமல்லாமல், அவைகளை இறுகச் சப்பிச் சக்கைகளை மட்டும் வெளியே துப்பிக் கொண்டார்.

''தம்பி இன்னுங் கொஞ்சம் முருங்கைக் காய்ப்பால் சொதி தரட்டே?'' என்று குடிசைக்குள் மறுகரை அடுக்களைப் பிரிவுக்குள் இருந்து சேதி கேட்டாள்.

''இதெண்ணெணை தரட்டே எண்ட கதை? தாவன்!'' என்றான் முருகையன்.

முருங்கைக்காய்ச் சொதியை ஒரு தேங்காய்ச் சிரட்டைக்குள் விட்டு வந்து கிட்டிணண்ணனுக்கு முன்னால் வைத்தாள் சேதி! வைத்துவிட்டு, சொதி இஞ்சை இன்னும்

கிடக்குமோனை, நீயும் விட்டுத் தின்!'' என்று மகனுக்கும் கூறினாள்.

கிட்டிணண்ணன் சிரட்டையோடு சொதியை எடுத்துப் பாதிப் பகுதியை முருங்கைக்காய் கீலங்களுடன் முருகையனின் சோற்றுக்குள் விட்டுவிட்டு மிகுதிப் பாதியைத் தனது பங்காக எடுத்துக் கொண்டார்.

''பிரட்டல் கிடக்கேயணை?'' என்று முருகையன் மறுபடி கேட்டான்.

''மத்தியானம் வைச்ச பிரட்டல் நெடுகக் கிடக்கே மோனை?'' என்ற கேள்விதான் முருகையனுக்குப் பதிலாகச் சேதியிடமிருந்து கேட்டது.

வெளியே பனைமரக் காவோலைகளின் சரசரப்பை மிஞ்சிக் கொண்டு பெரு வாகனங்களின் இரைச்சல் கேட்டது.

''ஆமிக்காறங்கள் போறாங்கள் போலை கிடக்கு! வாத்தியாரை விட்டிட்டு வரப்போனவங்களை இஞ்சாலை வரக் காணேல்லை. சந்திபிலை கிந்தியிலை ஆமிக்காறன்றை கண்ணிலை பட்டிடுறாங்களோ தெரியேல்லை!'' என்று முருகையன் ஏக்கத்தைத் தெரிவித்தான்.

''சீச்சி! அப்பிடி ஒண்டும் நடக்காது!'' என்று முருகையனை ஆசுவாசப்படுத்தும் விதத்தில் கிட்டிணண்ணன் பேசினாரே தவிர அவரின் நெஞ்சுகூட இலேசாகப் பயங்கொண்டது. சற்றுத் தொலைவில் வெடிச் சத்தங்கள் நான்கைந்து கேட்டன.

சோற்றில் கையை வைத்துக் கொண்டே முருகையன் வெடி வந்த திசையில் காதைச் சாய்த்துக் கேட்க எத்தனித்தான்.

''சாய்! வெடி,சந்திப் பக்கம் கேக்கேல்லை; அங்காலை அற்பைச் சந்திப் பக்கம் போலை கிடக்கு!'' என்றார் கிட்டிணண்ணன். இது முருகையனுக்குச் சற்று ஆறுதலைத் தந்தது.



பின்பு வெடிச் சத்தங்களோ, வாகன இரைச்சல் சத்தங்களோ எதுவும் கேட்கவில்லை.

நாய்கள் தொலைவில் குரைத்துக் கொண்டிருந்தன. அந்த ஓசைகள் நாலாபுறமும் எழுந்தன. அவைகள் சின்னதாக, பெரியதாக, கீச்சானாகப் பலவிதங்களில்!

மனிதக் குரல்கள் எங்கும் கேட்டதாக இல்லை. மேற்குப் புறத்திலிருந்து றெயில் வண்டி ஒன்றின் ஊதல் குரல் கேட்டது.

இப்போது மணி பதினொன்றுக்கு மேலாகிவிட்டது. சரியாகப் பன்னிரெண்டுக்குத்தான் அந்த வண்டி காங்கேசன்துறை நிலையத்தைச் சென்றடையும். சீமெந்துத் தொழிற்சாலைக்கு முருங்கனிலிருந்து களி மண்ணை ஏற்றி வரும் வண்டி அது! அது இப்போது ஊதல்குரல் வைத்துக் கொண்டு சுன்னாக ஸ்ரேசனுக்கு அப்பால் போகிறது!

கிட்டிணண்ணனும் முருகையனும் சாப்பிட்டு முடித்து விட்டனர்.

அவர்களுக்கு முன்னால் இருந்த சிறுகால் விளக்கு எண்ணெய் குறைந்து சுடர் கட்டிகளைத் தன் தலையில் உருட்டி வைத்துக் கொண்டு எரிகிறது.

வெளியே யாரோ வரும் ஆரவாரம் கேட்டது.

''போனவங்கள் இப்பான் வாறாங்கள் போலை கிடக்கு!'' என்றான் முருகையன்.

அவன் சொன்னது போல குணசிங்கனும், லோகேஸ்வரனும், திருப்பதியானும்தான் வந்தனர்.

''தம்பியவை நாங்கள் நல்லாப் பயந்து போனம்! வெடிச் சத்தங்களும் கேட்டுது! ஆமிக்காற்றற்றை றக்கருகளும் சந்திப் பக்கம் இறைஞ்சு கேட்டுது!'' என்று சொன்னாள் சேதி!

''ஆமிக்காறர் போகேக்கை நாங்கள் சந்திக்கு வந்திட்ட மெணை! சந்தியிலை ராசரெத்தினத்தாற்றை மூத்தவனும், நாலைஞ்சு பேரும் நிண்டு ஏதோ நோட்டீசு ஒட்டினவங்கள். அப்ப நாங்களும் வந்திட்டம்; ஆமிக் காறற்றை லொறியளும் வந்திட்டுது! எல்லாருமா ஓடிப் போய் பிள்ளையார் கோயிலுக்குள்ள நிண்டிட்டம்! நல்ல காலம் ஆமிக்காறர் எங்களைக் காணேல்லை!'' என்றான் குணசிங்கன்.

''வெள்ளாம் பொடியளும் உங்களோடை கோயிலுக் குள்ளை நிண்டவங்களே?'' என்ற கேள்வியைக் கேட்டான் முருகையன்.

''நிக்காமல் என்ன செய்யிறது, ஆமிக்காறன் கண்டானெண்டா உயிரெல்லே போயிடும். அதாலை மூச்சுப்பேச்சில்லாமல் எங்களோடை ஒப்புக்கொண்டு கோயிலுக்கை நிண்ட்டிட்டாங்கள். மற்ற நேரத்திலை எண்டால் எங்களை உள்ளுக்குப் போயிருக்க விட்டிருப் பாங்களோ? எங்களோடை நிண்டிருப்பாங்களோ?

இப்படித் திருப்பதியன் உண்மை நிலையைத் தெளிவு படுத்தினான்.

கிட்டிணண்ணனுக்கு உள் மனதுக்குள் சிரிப்பு வந்தது.

## 41

மகன் கண்டியிலிருந்து வீட்டுக்கு வந்து சேர்ந்த போது இராசரெத்தினத்தார் அவனின் வரவு இப்படிப் பாரதூரமாக வருமென்று நினைக்கவில்லை. அவன் இப்போது திருப்பி சர்வகலாசாலைக்குப் போவதில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டான் என்பதும் அவருக்குத்



தெரிந்திருந்தது. ஊரில் உள்ள சர்வகலாசாலை மாணவர் களில் யாருமே திரும்பவும் போவதில்லை என்ற முடிவுடன் தான் இருக்கிறார்கள் என்பதும் அவருக்குத் தெரியும்.

இரண்டாண்டுகளுக்கு முன் மகன் சந்திரனைச் சர்வ கலாசாலைக்கு அனுப்பி வைத்தபோது அவர் கண்ட கனவுகள் எல்லாம் இப்போதைக்கு நிறைவேறப் போவ தாக அவருக்கு நம்பிக்கை இருக்கவில்லை. ஆனாலும் அவர் தனது அன்றையக் கனவுகளை வேறு விதங்களிலா வது நனவாக்கிவிடத்தான் முயற்சித்தார்.

இராசரெத்தினத்தாரின் ஒன்றுவிட்ட சகோதரியின் மகன் ஒருவன் இலண்டனில் டாக்குத்தராக இருந்தான். எப்படியாவது சந்திரனை அங்கே அனுப்பி அவனின் படிப்பைத் தொடர வைக்கலாம் என்று தீர்மானித்துக் கொண்டு அவனுக்கு ஒரு கடிதத்தை எழுதினார். மாதங் கள் மூன்றாகியும் இன்னும் அவனிடமிருந்து பதில் கிடைக்கவில்லை.

தென்னிந்தியாவில் அவருக்கு மிகவும் விருப்பமான ஒரு நண்பன் இருந்தான். அவனுக்கு ஒரு கடிதம் எழுதி விட்டுக் காத்திருந்த அவருக்கு நேற்றுத்தான் ஒரு கடிதம் வந்திருந்தது. பாடசாலைக்கு வேண்டிய சகலதுடனும், அத்துடன் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவரிட மிருந்து ஒரு சிபார்சுக் கடிதமும், மற்ற வழியாக ஒரு ஐயாயிரம் வரையில் அனுப்பி வைக்கும்படியும் அந்த நண்பனிடமிருந்து கடிதம் வந்திருந்தது. அத்துடன் ''இப்போதே ஒழுங்குகளைச் செய்து வைத்தால் சித்திரை யிலிருந்து சர்வகலாசாலை அனுமதி கிடைத்துவிடும்'' என்ற விசேஷ குறிப்பும் ஒன்று எழுதப்பட்டிருந்தது.

இது ஓரளவுக்கு இராசரெத்தினத்தாருக்கு மன நிம்மதி யைத் தந்தது.

''எப்படியும் சில மாதங்களை ஒருவிதமாகக் கழித்து விட்டான் என்றால் சித்திரையோடை பிடிச்சு அங்காலை

அனுப்பிப் போடலாம்!'' என்ற முடிவுக்கு அவர் வந்திருந்தார். இப்போது தை தான் பிறந்திருக்கிறது.

மழை ஒன்று வரும் போல இருந்தது.

வானம் இருட்டிக்கொண்டு மைமல்பொழுதில் மயக்க ஒளியை கருமுகில்கள் விழுங்கிக் கொண்டு வந்தன.

இருந்தாற்போல பொழுது இருட்டி விட்டது போன்ற இருள் படர்ந்துவிட்டது.

''என்னப்பா சந்திரன் இன்னும் வரேல்லையே? உவங்கள்— மற்றவங்கள் இன்னும் ரியூசனாலை வரேல்லையே? சகுந்தலை வந்திட்டாளே?'' என்று கேட்டுக்கொண்டே இராசரெத்தினத்தார் மில்லிலிருந்து வந்து சேர்ந்தார்.

வீட்டுக்குச் சற்றுத் தூரத்தில் இருந்த பெருங் காணிக்குள்தான் அவருடைய அரிசி மில் இருக்கிறது.

காலை எட்டு மணியிலிருந்து மில்லின் வேலையாட்களோடு கிடந்து மத்தியானம் வரை கத்திவிட்டு, வீடு வந்து, மத்தியான உணவருந்தி முடிந்து சரியாக இரண்டு மணி நேரம் அசந்து தூங்கி எழுந்து மறுபடியும் மில்லுக்குள் போவாராக இருந்தால் வீட்டு வளவுக்குள் அவர் காலடி எடுத்து வைக்க மணி எப்படியும் ஏழுக்கு மேலாகி விடும்! இந்த இடை நேரங்களில் பெரும்பாலும் அவரைச் சந்திக்க யாரும் வருவதில்லை. வேண்டியவர்களுக்கெல்லாம் இது தெரியும். அதனால் ஏழு மணிக்கு மேல்தான் அவரைச் சந்திக்க வீட்டுக்கு வருபவர்கள் வருவார்கள்.

இன்று அவர் வேளையோடு வந்துவிட்டார். ஆனாலும் அவர் மனைவிக்கு இது தெரியாது. இருளின் கணக்கை வைத்துக் கொண்டு அவள் இது எப்போதையும் போன்ற நேரந்தான் என்று நினைத்திருக்க வேண்டும். வழமைப்படி அவள் கற்கண்டுபோட்டுக் கலக்கிய பாலை— ஆடை மேல் பக்கம் அங்குமிங்கும் துண்டு துண்டாக மிதந்து நிற்க — கொண்டு வந்து கொடுத்தாள்.



இராசரெத்தினத்தார் குடிக்கும் பாலில் ஆடை இப்படித்தான் நிற்க வேண்டும்.

அப்படி நின்றால்தான் அவர் மனது நிறையும்.

இது அவர் மனைவிக்குத் தெரியும்!

''சந்திரன் மத்தியானம் வந்து சாப்பிட்டுட்டுப் போனவனை இன்னுங் காணேல்லை! ஏழு மணிக்கு மேலையாப் போச்சு; இன்னும் மற்றவங்கள் டியூசனாலை வரேல்லை! சகுந்தலையின்ரை கார் இன்னும் வரேல்லை!'' என்றாள் மனைவி அன்னலட்சுமி.

அவ்வேளை வாயிலில் இராசரெத்தினத்தாரின் மகள் சகுந்தலையை வீட்டு வாயிலில் இறக்கிவிட்டு இராசரெத்தினத்தாரின் கார் அதன் உள்ளே இருந்த செல்லக்கண்டரின் நடுவில் மகள் பூமணியை இறக்கிவிடப் போய் விட்டது.

''சகுந்தலா ஏன் மோனை பொழுதுபடுத்தனைக்கும் நிண்டனீ?'' என்று இராசரெத்தினத்தாரின் கேள்விக்கு,

''இல்லை அப்பா, இன்னும் நேரம் ஆறாகையல்லை'' என்று சொல்லிக் கொண்டே சகுந்தலை உள்ளே போய் விட்டாள்.

''ஓமோம், சொன்னாப்போலை மழைக்கால இருட்டு எண்டதை மறந்து போனன்!'' என்று பட்டும் தனக்குள்ளேயே இராசரெத்தினத்தார் சொல்லிக் கொண்டார்.

வெளியே வேறொரு கார் வந்து நின்றது. அதிலிருந்து, இளையதம்பியர் இறங்கி உள்ளே வந்தார்.

''வாருங்காணும், என்ன நேரம் இன்னும் ஆறு மணி ஆகேல்லை, அதுக்கிடையிலை கிறேசரைப் பூட்டிப் போட்டீரே?'' என்று கேட்டுக் கொண்டே இராசரெத்தினத்தார் அவரை வரவேற்றார்.

''ஓங்காணும், மழையும் ஒரு மாதிரிக் கிடந்துது, ஊருக்கை நிலவரமும் அவளவு நல்லாயில்லை. கட்டையன்

பகுதியிக்கை ஒரு செத்த வீடெண்டு வேலைக்காறரும் பின்னேரம் வரேல்லைப் பின்னை நிப்பாட்டிப் போட்டு இப்பிடி வாறன்!'' என்று அலுத்துக் கொண்டே இளைய தம்பியர் சாய்மனைக் கதிரையில் உட்கார்ந்து கொண்டார்.

''இஞ்சேரப்பா, இளையதம்பியரெல்லே வந்திருக்கிறார்; ஏதும் குடிக்கக் கிடிக்கக் குடுமன்!'' என்றார் இராசரெத்தினத்தார்.

''எனக்கொண்டும் வேண்டாம் பிள்ளை; நான் உவன் சுருளியனை உதிலை கண்டாப்போலை, அவனோடை மினக்கெட்டிட்டு வாறன்'' என்று இளையதம்பியர் தனது நிலையைச் சூசகமாக விளங்கப்படுத்திவிட்டார்.

சுருளியனோடை மினக்கெட்டுவிட்டு வருகிறன் என்றால் அதில் பல விஷயங்கள் அடக்கமாக இருக்கும். அவைகளில் நிச்சயமாக இருவரும் ஒரு போத்தல் உடைத்துப் பரிமாறிவிட்டு வந்திருப்பதென்பது நிச்சயமாக அடங்கி இருக்கும்.

''அது சரி காணும், உன்ரை மூத்தவன் சந்திரன்ரை போக்கு வலு பிழையாக் கிடக்கெண்டு கதையாக் கிடக்கு,'' என்று மெதுவாகக் கதையைத் தொடங்கினார் இளையதம்பியர்.

''என்ன காணும் சிந்திரனோ? அவன் இலேசிலை பிழை ஒண்டும் விடானே! உப்ப அவன் உங்கினை பட்டாளக்காறருக்கெதிராகச் செய்யிற விஷயத்தைச் சொல்லுகினமாக்கும்! அதிலை என்ன பிழை? தமிழுக்காக அவன் சாகட்டுக்கன்! அதுக்கென்ன?''

''அதிலை ஒரு பிழையுமில்லையப்பா! நான் சொல்ல வந்தது வேறை!'' என்றார் இளைய தம்பியர்.



# 42

சந்திரன் சர்வகலாசாலையை விட்டு ஊருக்கு வந்து சேர்ந்து ஐந்து மாதங்களுக்கு மேலாகிவிட்டது. இந்த ஐந்து மாத காலமும் அவன் பம்பரம் போலச் சுழன்று எதை எதை எல்லாமோ செய்து கொண்டிருந்தான்.

அதிகாலையோடு எழுந்து சயிக்கிளையும் எடுத்துக் கொண்டு போவான். நடுப் பகல் போசனத்திற்கு வருகிறானோ இல்லையோ என்பது திடமில்லை. இரவு ஒண்டு பாதிக்கு மேல் இரண்டொரு நண்பர்களுடன் திரும்புவான். அந்த அகால வேளையில் தாயாரை எழுப்பித் தனக்கும் வந்திருக்கும் நண்பர்களுக்கும் உணவு போடச் சொல்லுவான்; நண்பர்களையும் அழைத்துக் கொண்டு வீட்டின் பின்புறத்துத் தளபாட அறையில் தூங்கப் போவான்; ஆகவும் அதிகமானால் மூன்று நான்கு மணி நேரத் தூக்கந்தான். அதற்குப் பின்பு பொழுது வெளிப்பதற்கு முன் நண்பர்களோடு போய்விடுவான்.

முதலில் அவனின் இந்த வாழ்க்கையை இராசரெத்தினத்தாராலோ, அன்றி அன்னலட்சுமியாலோ ஒத்துக் கொள்ள முடியாமல் இருந்தது. ஐந்து பத்து நாட் செல்ல இது ஒத்துப் போகக்கூடியதாக வந்துவிட்டது.

மகன் சந்திரனுடன் வந்து போகும் அவனின் நண்பர்களை யார் எவர் என்று கூட அவர்களால் விசாரிக்க முடியவில்லை. சந்திரன் தாய் தந்தையரிடம் கூட மிகவும் அளவுக்களவாகவே பேச்சு வார்த்தைகளை வைத்துக் கொண்டான். அம்மா அன்னலட்சுமியிடம் அவன் பணங் கேட்டபோதெல்லாம் ஏன் எதற்கு என்று கேட்காமலே அவளும் கொடுத்து வந்தாள். ஒன்றிரண்டு சந்தர்ப்பங்

களில் ''தம்பி நீ என்னெண்டாலுஞ் செய், குமர்ப்பிள்ளை ஒண்டு வீட்டுக்கை இருக்கெண்ணிறதை மறந்து போகிடாதை! இந்த நாளையிலை வில்லங்கங்களைத் தேடிப் போட்டாயெண்டால் எங்கடை மானம் மரியாதை எல்லாம் போகிடும்! கண்ட கண்ட நேரத்திலை கண்ட கண்ட இளந்தாரிப் பொடியளை வீட்டை கூட்டிக் கொண்டு வாறாய்!'' என்று மட்டும் சொன்னாளே தவிர மகன் என்ன வேலைக்காகப் போகிறான், வருகிறான் என்பதைப் பற்றிய கவலை ஒன்றும் அவளுக்கு இருந்ததாகத் தெரியவில்லை.

இரண்டு சேர்வைக் காலத்துக்குத்தான் மார்க்கண்டன் இராசரெத்தினத்தாரின் மில் வளவுப் பனைகளைச் சேர்வை செய்வதற்காக வந்திருந்தான். அதற்கு முன்னதாக சுமார் இருபது ஆண்டுகள் வரை அவரின் வளவில் சேர்வைக்காரனாக இருந்தவனான மார்க்கண்டனின் அப்பன் வயிரவன். அந்த வயிரவனை சுன்னாகச் சந்தைக்குள் நடந்த ஒரு சாதிக் கைகலப்பில் குத்திக் கொன்றுவிட்டார்கள். அதிலிருந்து அப்பனின் வாடிக்கை மரங்களைச் சேர்வையாக்க வந்திருக்கிறான் அவன்.

இராசரெத்தினத்தாரின் மில் வளவில் இருக்கும் மரங்களில் தலைத் தெரிவானவற்றைத்தான் வைரவன் சேர்வையாக்குவான். பிரத்தியேகமாக வருடம் பூராவும், அவரின் வீட்டு வளவுக்குள் இருக்கும் பனைகளில் ஒன்றைச்சேர்வையாக்கி விட்டுப் பாவனைக்காக வைத்துவிட்டுப் போவது வயிரவனின் வழக்கம். இதற்கு ஏற்றாப்போல வீட்டு வளவில் உள்ள சுமார் இருநூறுக்கு மேலான பனைகளில் ஏதாவது மாறிமாறி ஒன்றோ இரண்டுக்கோ 'வம்பு'ப் பாளை வராமல் விடுவதில்லை.

தந்தையின் வழிமுறை தவறாது மார்க்கண்டனும் மிகப் பௌவியமாக இராசரெத்தினத்தாருடன் நடந்துகொண்டு, அவரின் நம்பிக்கையையும் பெற்றுவிட்டான்.



சந்திரன் கண்டிக்குப் போன இந்த இரண்டாண்டு காலத்தில் மூன்று தடவைகள்தான் ஊருக்கு வந்து போனான். அவன் வந்துபோன அந்த மூன்று தடவைகளிலும் அவன் மார்க்கண்டனுடன் அதிகமாகப் பேசியதில்லை; வழக்கமில்லா வழக்கமாக பழகியதில்லை. இம்முறை அவன் மார்க்கண்டனுடன் அளவளாவினான்; அத்துடன் அவனை நீர், என்று அழைக்கவும தொடங்கிவிட்டான்.

மார்க்கண்டனைத் தேடிக்கொண்டு அவன் மார்க்கண்டனின் குடிசை வரை போவதும் அவன் இல்லாத சந்தர்ப்பத்தில் அவன் குடிசைக்கு முன்னால் அவனுக்காகக் காத்திருப்பதும் உண்டு.

மார்க்கண்டனின் விதவைத் தாயாரோடும், மார்க்கண்டனின் தங்கைக் காரியோடும் அளவளாவுவான்.

மார்க்கண்டன் காலைச் சேர்வையால் வந்து சேர மணி பதினொன்றுக்கு மேலாகிவிடும். அதற்குப் பின்பு மார்க்கண்டனின் இப்போதைய வழக்கம் சந்திரனுடன் பேசுவதும், திரிவதும்தான்.

பின்னேரத்தின் சேர்வை முடித்துக் கொண்டு மார்க்கண்டன் வந்து சேர மணி எட்டுவரை ஆகிவிடும். அதற்குப் பின்பு தனக்காகக் காத்திருக்கும் சந்திரனுடன் போய்விட்டு சிலவேளைகளில் இரவு ஒன்று பாதிக்குத்தான் வருவான். அவனின் தாய் அவனுக்காகக் கண்விழித்துக் காத்திருப்பாள்!

''மோனை, எங்கையெடா தம்பி உந்தப் பொடியளோடை நெடுகத் திரியிறனி? கொஞ்ச நாளாய் உன்ரை போக்குச் சரியில்லை! உவங்கள் ஒரு அந்நியச் சாதி, உப்பிடித்தான் கொப்பரையும் கூட்டிக்கொண்டு திரிஞ்சவங்கள்! கடைசியிலை எல்லாருமாச் சேந்து அந்தாளைக் குத்திக் கொண்டு போட்டாங்கள்! உதிலை சந்தியிலை கிடக்கிற பிள்ளையார் கோயிலுக்கை போறனெண்டு

வெளிக்கிட்டதுக்காக பெருவடலிப்பக்கத்துப் பதினைஞ்சு இருவது வீட்டைச் சாம்பலாக்கினவங்கள்! உது நடந்து இன்னும் ஐஞ்சு வரிசங்கூட ஆகேல்லை! ஏன் கனக்க, வளவுக்கை இருந்து குடி எழும்பமாட்டனெண்டதுக்காக அவள் கைம்பெஞ்சாதியையும் ரெண்டு பாலன்களையும் வெளிப்படலையைக் கட்டிப்போட்டு அவளின்ரை கொட்டிலையும் சேத்து எரிச்சுச் சாம்பலாக்கினவங்கள்! அப்படிப்பட்ட ஒரு அந்நியச் சாதியடா உவங்கள்!''

இப்படி ஒரு நாள் தாயானவள் மார்க்கண்டனுக்குக் கூறியபோது, ''எணை, பேசாமல் இரெணை!'' என்று மட்டுந்தான் மார்க்கண்டன் தாய்க்குப் பதில் சொன்னான். அத்துடன் அவன் பற்றிய தொல்லை முடிந்தது!

மார்க்கண்டனுக்கு இப்போது வயது இருபது வரையில்தான் இருக்கும்.

அவனுக்குப் பதினாங்கு வயதாக இருக்கும்போது உள்ளூர் சைவப் பாடசாலையில் அவன் எட்டாவது வகுப்புப் படித்துக் கொண்டிருந்தான்.

வயிரவனுக்கு ஊருக்குள் ஒரு அளவான மரியாதை இருந்தது. அவன் உயர்ந்தவர்களுடன் பேசும் விதம், பழகும் விதம் மிகப் பணிவானது. இதனால் அவனுடன் பொதுவில் எல்லோருமே மதிப்புக் கொடுத்து நடந்து கொண்டனர். அதிலும் வயிரவன் இராசரெத்தினத்தாரின் நம்பிக்கைக்குரியவனாகவும் இருந்ததனால் அவன் மதிப்புக்குச் சற்றும் பங்கம் வந்துவிடும் சந்தர்ப்பங்கள் இருந்ததில்லை.

ஊருக்குள் நயினார்மாருக்குள் ஏதாவது பிணக்கு வந்துவிட்டால் வயிரவனே இடையில் நின்று அவைகளைப் பக்குவமாகத் தீர்த்து வைப்பான். இதனாலும் அவனை எல்லோருக்கும் தேவைப்பட்டது.

ஊருக்குள் இருந்தவரையில் படித்த கீழ் மக்கள் வரிசையில் மார்க்கண்டன்தான் முதல்வனாக இருந்தான். எட்டாம் வகுப்பென்றால் அது மெத்தப் பெரியது!



ஒருநாள் அவனின் சக மாணவர்களில் ஒருவன் அவனைப் பள்ளன் என்று சொல்லிவிட்டான். வந்தது வினை. இது முற்றிக் கைகலப்பில் முடிந்தது. கடைசியில் ஒருநாள் மார்க்கண்டனின் மாமன் முறையானவன் இது பற்றிய தகராறில் அடித்துக் கொல்லப்பட்டான்.

இத்துடன் மார்க்கண்டன் படிப்பு முடிந்தது.

இவை எல்லாம் மார்க்கண்டனுக்குத் தெரியும். ஆயினும் அவன் சந்திரனுடன் நட்பாக இருந்தான்.

# 43

''நான் சொல்ல வந்தது வேறை'' என்று இளைய தம்பியர் சொன்னபோதுதான் சந்திரனைப் பற்றிய ஏதோ ஒரு பாரமான விஷயத்தைச் சொல்லப் போகிறார் என்று தான் இராசரெத்தினத்தார் எதிர்பார்த்தார்.

இளைய தம்பியருக்குத் தான் சொல்லப் போகும் விஷயம் தாக்கமானதாகத்தான் இருந்திருக்க வேண்டும். அவர் சந்திரனுக்கும், மார்க்கண்டனுக்கும் இருந்த தொடர்பை நீட்டி, முடக்கி, அழுத்த வேண்டிய இடங்களில் அழுத்திச் சொல்லிக் கொண்டு வந்து கடைசியில், ''என்னதான் இருந்தாலுங் காணும் அவன் எங்கடை ஊருப் பள்ளன். வெளியிடத்தவங்களோடை எப்பிடியெண்டாலும், தோளிலை கையைப் போட்டுக் கொண்டு கூடத் திரியலாம்; உள்ளுக்கை மார்க்கண்டனோடை இப்பிடித் திரிஞ்சா மற்றவங்கள் மதிப்பாங்களா? சரி அதையும் விடுவம். அவன் மார்க்கண்டன்ரை தங்கையோடை இவனுக்கு அப்பிடி இப்பிடியெண்டு வாறத்துக்குக் கனநேரஞ் செல்லுமோ கேக்கிறன்?'' என்று ஒரு கேள்வியையும் முத்தாய்ப்பாக வைத்தார்.

இளையதம்பியர் பேசி முடிக்கு மட்டும் தலையை ஆட்டிக் கேட்டுக் கொண்டிருந்த இராசரெத்தினத்தார் ஒரு தடவை கனைத்துக் கொண்டே, ''வேசைக்கு மற்றப் பெண்களும் வேசை போலைப் படுகிறது போலை, நீர் நினைக்கிறீர் காணும்; அவன் என்ரை மோன்! அவன் சில வேளை இளையதம்பியற்றை மோனாக இருந்தால் பள்ளியைத் தேடினாலுந்தேடுவான்!'' என்று படக்கென்று கூறினார்.

இளையதம்பியருக்கு வெட்கம் வந்துவிட்டது.

அவர் சற்று வேளை பேசாமல் இருந்தார்.

''என்ன பேச்சுச் சிலமனைக் காணேல்லை?'' என்று உள்ளே இருந்து அன்னலட்சுமியின் குரல் வந்தது.

இளையதம்பியர் முகத்தில் அசடு வழிந்தது.

''ஏன் காணும் பேசாமல் இருக்கிறீர்? ஏதும் சொல்லு மன்!'' என்றார் இராசரெத்தினத்தார்.

''நான் என்னத்தைக் காணும் பேச? உள்ளதைச் சொன்னா உமக்குக் கோவம் வருகுது!'' என்று மட்டும் பேசினார் இளையதம்பியர்.

''பின்னையென்ன காணும்! காக்கைக்குக் கனவிலையும் பீ தின்னிற எண்ணம் போலை உமக்குச் சதா அதே நினைப்புத்தான்! நான் தெரியாமக் கேக்கிறன்; மார்க்கண்டனைப் போலை ஒரு தைரியசாலியை இந்த ஊருக்கை நீர் கண்டிருக்கிறீரே? இந்தச் சின்ன வயசுக்கை அவன்ரை தோற்றத்தையும் உடல் உறுதியையும் கண்டீரே? எங்கடை அவளவையும் பெத்துவைச்சிருக்கிறாளவை பிள்ளையளை! ஏன் உம்மடை மனிசியையுந்தான் சொல்லுறன்! எல்லாரும் நோஞ்சிப் பிள்ளையளையெல்லே பெத்து வைச்சிருக்கிறாளவை! ஒரு பொலிசுக்காறனெட்டைச் சரி, ஒரு பட்டாளக்காறனெட்டைச் சரி ஒரு அடி வேண்டத் தைரியமிருக்கே எங்கடை பொடியள்ளை? மார்க்கண்டனைப்



போலை இளந்தாரியளைச் சேர்த்தாத்தான் தமிழர் எடுத்த காரியங்களைச் சாதிக்கலாமோ இல்லையோ? அப்ப சந்திரன் அவனோடை தோள்ளை கை போட்டுத் திரியிறத்திலை என்ன பிழை இருக்குக் கேக்கிறன்? மற்றது இன்னொண்டை யோசிக்க வேணும் கண்டியோ! அவங்கடை ஆக்கள்தான் துணிஞ்ச காரியங்களைச் செய்து வந்திருக்கிறாங்கள்!''

இராசரெத்தினத்தார் சூசகமாக மகன் சந்திரன் மார்க்கண்டனுடன் உறவு வைத்துக் கொள்வதற்கான காரணத்தைச் சொல்லி நிறுத்திக் கொண்டார்.

''நீர் சொல்லுறது எனக்கும் விளங்குது காணும்! அப்ப நீர் சொல்லுறதைப் பார்த்தா நாளைக்குத் தமிழ் இராச்சியம் வந்திட்டா மார்க்கண்டனைப் போலை ஆக்களுக்கும் ஏதும் மந்திரிகிந்திரிப் பதவி குடுக்க வேணும் எண்டு வந்திடும் போலையெல்லோ கிடக்கு!''

இளையதம்பியர் மிகவும் அப்பாவித்தனமாகப் பேசினார். இந்தப் பேச்சைக் கேட்க இராசரெத்தினத்தாருக்கு உள் மனதில் சிரிப்பு வந்தது.

''உது சும்மா வராது காணும்! ஏதும் பெலி குடுத்தாத்தான் காணும் வரும், பிறகு மிஞ்சிறவங்களைப் பார்த்துத்தான் நீர் சொன்ன மந்திரிப் பதவியெல்லாம். கண்டவன் நிண்டவனெல்லாம் மந்திரியாய் வர படிச்ச எங்கடை தமிழர் தலைவர்கள் ஓமாமோ கேக்கிறன்! சரி அப்பிடித்தான் அவை ஓமெண்டிட்டினம் எண்டு வைச்சுக் கொள்ளுமன்; பிறகு எலெக்சன் வருந்தானே! எலெக்சனிலை நிண்டு வெண்டாத்தானே மந்திரியாய் வாறதுக்கு!''

இப்போதும் இராசரெத்தினத்தார் ஒரு தேவ இரகசியத்தை மெதுவாக விளங்க வைத்துவிட்டார், இளையதம்பியருக்கு மனதுக்குத் திருப்தி ஏற்படவில்லை.

''என்ன காணும் உவங்கடை அரசாங்கம் வந்தா கனக்கக் காணி பூமி வைச்சிருக்கிறவையின்ரை காணி

பூமியளை எடுத்து இல்லாதவங்களுக்குப் பங்கிட்டுக் குடுத்துடுவாங்கள் எண்டு கதையாக் கிடக்கு; கண்ட கண்டபடி சம்மந்த ஒம்மந்தம் செய்ய வேணும் எண்டும் சட்டம் வைப்பாங்களாம்! கோயில் குளம் எல்லாத்துக்கையும் எல்லாரையும் போகவிடுவாங்களாம்! எண்டெல்லாம் கதையாக் கிடக்கு..."

இளையதம்பியர் பேசி முடிக்கவில்லை.

"ஆர் காணும் உந்தப் பேய்க் கதையளைக் கதைக்கிறது? அப்பிடி அவங்கள் எழுத்துக் கணக்கிலை விட்டிருக்கிறாங்களோ? கதைக்கிறவை ஒருக்காக் காட்டட்டுக்கன் பாப்பம்! சரி ஒரு கதைக்கு வைச்சுக்கொள்ளுவம். உம்மடை மோனும் என்ரை மோனும் நாளைக்கு அரசாங்கத்திலை இருப்பாங்கள் எண்டு வைச்சுக்கொள்ளுவம்! அவங்கள் எங்கடை முதிசச் சொத்தைப் பிரிச்சுக் குடுக்கு ஓமாமோ? கதைக்கிறவன் விசரிலை கதைப்பானெண்டு உமக்கும் என்ன விசரே?"

மழை மேகங்கள் இருட்டிக் கொண்டு நின்றதே தவிர இன்னும் மழையை வருஷிக்கவில்லை.

"என்ன காணும் மழை வாறன்; இந்தா வாறன் எண்டு ஏமாத்திப் போட்டுது போலை கிடக்கு!" என்றார் இளையதம்பியர்.

அப்போது விறாந்தைக் கரை ஓரம் மார்க்கண்டன் இயனக்கூடு கிலுங்கப் போய்க்கொண்டிருந்தான்.

அவன் இப்போதுதான் ஐயா வீட்டுத் தேவைக்கான வம்புப் பாளையைச் சீவ வந்திருக்கிறான்.

இயனக் கூட்டுக் கிலுங்கல் ஓசை கரைந்து போய் விட்டது.

மார்க்கண்டன் இராசரெத்தினத்தாரின் குடும்பத் தேவைக்காகக் கள்ளிறக்கி வைத்துவிட்டுப் போக வந்திருப்பது இளையதம்பியருக்குத் தெரியும். நீண்ட பல



ஆண்டுகளாக வயிரவன் செய்ததையும், அவனின் தொடர்ச்சியாக மார்க்கண்டன் செய்து வருவதும் ஊருக்கே தெரிந்த இரகசியம்.

"இஞ்சர் காணும், நான் சொல்லுறனெண்டு என்னிலை சீறிப்பாயாதை! உன் மார்க்கண்டனை எப்பன் பொழுதோடை வந்துவிட்டுப் போகச் செய்தாயென்ன? குமர்ப் பிள்ளை ஒண்டை வீட்டோடை வைச்சுக் கொண்டு..."

இளையதம்பியர் பேச்சை இழுத்தபடியே நிறுத்தினார்.

இராசரெத்தினத்தார் ஒன்றும் பேசவில்லை.

இராசரெத்தினத்தாரின் அடுத்த இரு பையன்களும் அப்போதுதான் ரியூசனால் வந்து உள்ளே போகிறார்கள்.

சற்றுவேளை ஆயிற்று!

மார்க்கண்டனின் இயனக் கூட்டின் கிலுங்கள் ஓசை கேட்டது.

மார்க்கண்டன் வம்புப் பாளைச் சேர்வை முடிந்து வீட்டுத் தாழ்வாரத்தில் வைத்துவிட்டு வெளியே போகிறான்.

அவன் வரும்போதோ, போகும் போதோ, யாரிடமும் சொல்லிக் கொள்ள வேண்டியதில்லை.

அந்த வீட்டில் அவனுக்கு மட்டும்தான் இந்தச் சுதந்திரம்!

அத்துடன் அவன் எந்த நேரத்திலும் சேர்வையாக்க வரலாம்; போகலாம்!

வெளியே ஆமிக்காரனின் வாகனங்கள் இரைந்து கொண்டு ஓடின.

இளையதம்பியரும் விடைபெற்றுக்கொண்டு கிளம்பி விட்டார்.

''நீங்கள் குடுத்த இடந்தான்; கோவியப்பிள்ளை அறுதல் கதையள் கதைக்கிறதுக்கு!'' என்று கேட்டுக் கொண்டே அன்னலட்சுமி விறாந்தைக்கு வந்தாள்.

## 44

இளவேனில் பருவம் பிறந்துவிட்டால் காற்று விழுந்து, உலகம் ஒரு உலை முகத்துள் புகுவது போன்ற வெக்கைக்கு உட்பட்டு விடுகிறது.

கிட்டிணண்ணனைப் பல நாட்களுக்கு மேல் காணாத தினால் வாத்தியாருக்குப் பெரும் சோட்டையாகிவிட்டது. ''எப்படியும் அதிகாலையோடு எழுந்து கிட்டிணு சொன்ன குறிப்பின்படி ஆளைப் படுக்கையிலேயே வைத்துப் பிடித்து விடுவது'' என்ற முடிவுப்படி வாத்தியார் கண் மூடினார்.

புழுக்கமாக இருந்ததால் நித்திரை வரவில்லை.

மனதெல்லாம் கடந்த காலத்தை நோக்கியே உலாப் போய்க் கொண்டிருந்தது.

அந்தப் பாடசாலைப் படிப்புக் காலம்!

ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைக்குப் போய்ச் சேர்ந்த காலம்!

அந்த மோகினியானவளுடன் ஏற்பட்ட தொடர்பு, அந்தத் தொடர்புக்கிடையே வந்த மெதுமையான உணர்வுகள்...

ஒருநாள் அந்த மோகினிப் பெண் கேட்டாள்...'' நாங்க நாளைக்கு எங்கையெண்டாலும் போட்டு வருவம்'' என்று.



மறுநாள் நடுப்பகலோடு லீவு எடுத்துக் கொண்டு இருவரும் பஸ் எடுத்து யாழ்ப்பாணப் பட்டணத்திற்கு வந்துவிட்டார்கள்.

வின்சர் தியேட்டரில் சந்திரலேகாப் படம்.

அந்த நாட்களில்தான் இரண்டு மணிக்கான மேட்னி அறிமுகப்படுத்தப்பட்டது.

வாத்தியாரும் அந்த மோகினிப் பெண்ணும் முதலாம் கிளாஸ் டிக்கட் எடுத்துக் கொண்டு உள்ளே போய் விட்டார்கள்.

அருகருகே,

ஒருவரை ஒருவர் உரசிக் கொண்டு!...

பகல் காட்சிக்கும் அத்தனை ஜனநெரிசல்.

படம் பல காட்சிகளைக் கடந்துவிட்டது.

இடைநேரத்திற்குச் சற்று முன்னதாக...

அந்த மோகினிப் பெண் தனது கரத்தை வாத்தியாரின் கைமேல் வைத்து அழுத்தினாள்.

அவள் கரம் வாத்தியாருக்கு நெருப்பாய்ச் சுட்டது.

வாத்தியாருக்கு உடம்பு நடுக்கமெடுத்தது. ஆயினும் அந்தக் கரத்தின் தகிப்பை அவர் விரும்பினார்....

சற்றுவேளை ஆயிற்று.

அந்த மோகினிப் பெண் வாத்தியாரின் கரத்தைப் பற்றி இழுத்து தனது மார்போடு அழுத்தினாள்.

வாத்தியாரின் உடம்பெல்லாம் வெடவெடத்தது.

'' ஆரும் கவனிப்பினம்!''

அவள் காதுக்குள் அவர் மிக இரகசியமாகப் பேசினார்.

இடைவேளை விடப்பட்டது. வெளிச்சம் எரிந்தது; அப்போது வாத்தியார் அவள் முகத்தைப் பார்த்தார்.

அவள் முகம் வெயர்த்துக் கொட்டிக் கொண்டிருந்தது.

அவளின் கண்களைச் சந்திக்க வாத்தியார் கூசினார்.

இடைவேளை முடியும் நேரம்!

எதை எண்ணினாரோ வாத்தியார், எனக்குத் தலைச் சுத்தாக் கிடக்கு போவமே?'' என்று கேட்டார்.

இருவரும் மௌனமாக வெளியே வந்து விட்டனர்.

பஸ் நிலையத்தை நோக்கி நடந்து கொண்டிருக்கும் போது,

''நீங்கள் வலு பயந்தாங்கொள்ளி!'' என்று அவள் சொன்னாள்.

வாத்தியார் எதுவும் பேசவில்லை.

அந்த மோகினிப் பெண்ணுடன் அவர் தொடர்பு கொண்டிருந்த நான்காண்டு காலக் காதல் வாழ்க்கையில் குறிப்பிடக்கூடிய நிகழ்வுடைய இந்த நாள் அவர் நினைவுக்கு வருகிறது...

அந்த மோகினிப் பெண்ணை அவர் ஒரு நாள் தன்னும் தீண்டியதில்லை.

அவளை அவர் காதலித்தார்.

அவருடைய அகராதிப்படி அவர் காதல் என்று கணித்துக் கொண்டது இதைத்தான்.

ஒரு அடிகூட இதற்கு மேல் அவர் நகரவில்லை.

'அந்தப் பெண்ணுக்கு இது போதாமல் இருந்திருக்க வேண்டும்! அதனால்தான் தன்னை அவள் இப்படி விட்டுப் போயிருக்க வேண்டும்!'' என்று அவர் மனது ஒரு சந்தர்ப்பத்தில்கூட நினைத்ததில்லை....

''எனக்குக் கலியாணம் பேசுகினம்!''

''நீர் என்ன சொன்னனீர்?''

''அவர் ஒரு டாக்குத்தராம்!''



''நான் கேட்டதுக்கு மறுமொழி சொல்லும்! கலியாணம் பேசினவைக்கு நீர் என்ன மறுமொழி சொன்னீர்?''

''நான் இன்னும் ஒரு முடிவுஞ் சொல்லேல்லை!''

''அப்ப என்ன முடிவு சொல்லப் போறீர்?''

''ஐயா உங்களைப் பற்றி விசாரிச்சுப் போட்டாராம்! உங்கடை பேத்தியான ஒருத்தியை பள்ளன் ஒருதன் கொண்டோடினவனாம்!

''பேந்து...?''

''அதுதான் என்னை அந்த டாக்குத்தருக்குக் கலியாணம் பேசுகினம்!''

''அப்ப ஒண்டு செய்யுமன்!''

''என்ன செய்ய?''

''நீர் அந்த டாக்குத்தரைக் கட்டுமன்; நான் ஒரு பள்ளியைப் பாத்துக் கட்டிறன்!''

''.........''

''என்ன யோசிக்கிறீர்?''

''நீங்கள் பள்ளியைக் கட்டிறன் எண்டு சொன்னாப் பிறகு...''

''சொன்னாப் பிறகு...?''

''நான் டாக்குத்தரைத்தான் கட்டப் போறன்!''

.........

அந்த மோகினிப் பெண்ணுடன் அன்று நடந்த அந்தச் சம்பாஷனை இத்தனை வருடங்களுக்குப் பின்பும் அச்சுக் குலையாமல் நெஞ்சுவரை இன்று கேட்கிறது. அந்த மோகினிப் பெண்ணை இடையே அவர் நினைத்ததில்லை. இன்று அவளாகவே அவர் நெஞ்சுக்குள்ளே வந்து பேசிச் சிரித்து, சித்து விளையாட்டுக் காட்டிவிட்டு, கடைசியில் அந்த டாக்குத்தரோடு சயனிப்பதற்காகப் போய் விட்டாள்.

இப்போது இளையதம்பியர் வருகிறார்...

அந்தச் சின்னப்பொடியன் கறுப்பையன் வருகிறான்...

பாவம் அவன் தந்தை வேலுச்சாமி வருகிறான்...

சுருளியன் வருகிறான்...

பொலிஸ் அதிகாரி வருகிறான்...

சுருளியன் இரண்டு குடலை இறைச்சியை அந்த இஞ்சுப்பெக்ரர் அம்மாளிடம் கொடுத்துவிட்டுப் போகிறான்...

கிறேசர் வளவில் இரவோடிரவாக கிடங்கு ஒன்று தெரிகிறது...

அந்தக் கிடங்குக்குள்ளே சுருளியன் அந்தச் சின்னக் கறுப்பையனைத் தூக்கி அநாயாசமாகப் போட்டுவிட்டு மண்வெட்டியால் மண்ணை வாரி மூடுகிறான்...

இப்போது பூதி வருகிறாள். அவளுடன் இணைந்தாற் போலச் செல்லி வருகிறாள்...

செல்லி இப்போது துடுக்குத்தனப் பார்வையுடனும், குறும்புச் சிரிப்புடனும் வருகிறாள். அவள் தன் நீண்ட கூந்தலை வாரிச் சுருட்டி அநாயாசமாக கொண்டை போட்டுக் கொள்கிறாள். வெற்றிலைச் சாயத்தால் அவள் இதழ்கள் பளிச்சிடுகின்றன. அவள் நீண்ட நேரம் நிற்கச் சம்மதப் படாமல் விரைவில் போய்விடுகிறாள்...

இராசரெத்தினத்தார் வழமையான தனது பாய்ச்சல் நடையில் வருகிறார். கோயில் வாயிலில் அர்ச்சனைத் தட்டுடன் நிற்பவர்களைத் தடுத்து நிறுத்துகிறார். கை கலப்பு வருகிறது. பின்பு அவர் வீட்டுக்கு ஓடித் தனது துவக்கைத் தூக்கிக் கொண்டு......

முருகையனும், குணசிங்கனும், லோகேஸ்வரனும் திருப்பதியனும் வருகின்றனர்... வாத்தியாரின் அனுபவங் கண்டிராத விவகாரங்களையெல்லாம் கூறுகின்றனர்...



மார்க்கண்டன் இயனக்கூட்டுக் கட்டுடன் வருகிறான்...

இராசரெத்தினத்தாரின் மூத்தவனும், தனது மருமகன் விவேகானந்தனும் வருகின்றனர்...

ஆமி வாகனங்கள் அங்குமிங்குமாக இரைச்சலெடுத்துக் கொண்டு ஓடுகின்றன...

இப்போது கிட்டிணு வந்துவிட்டார். அவர் முகம் கண்ணுக்குள் நிறைவாக நிற்கிறது...

வாத்தியார் உறங்கிப் போய்விட்டார்.

சாமக்கோழி கூவுகிறது.

## 45

வாத்தியார் சயிக்கிளில் விசாரித்து விசாரித்து — கிட்டிணண்ணன் சொன்ன குறிப்புகளின்படி — நந்தாவில் சந்திப்பு, அதன் மேற்குப் பக்க சிறு றோட்டு — பெரிய புளிய மரத்தடிப் பிள்ளையார் கோவில் — பக்கத்து ஒழுங்கை — பனை வடலி ஒற்றை அடிப்பாதை— வெள்ள வாய்க்கால் — இதுவரை வந்து நில வடலிப் பரப்பைக் கடந்து கிட்டிணுவின் கொட்டில் முற்றத்திற்கு வந்தபோது, கொட்டில் முன்பக்கத் திண்ணையில் கிட்டிணண்ணனுடன் முருகையனும், குணசிங்கனும், லோகேஸ்வரனும் திருப்பதியனும் பேசிக் கொண்டிருந்தனர்.

கிட்டிணண்ணனின் இளைய வீமன் நாய் ஒரு தடவை வாத்தியாரைப் பார்த்துத் தனு வைத்துவிட்டு, அனுங்கி, முனகி ஓய்ந்தது.

''வாத்தியார் வாருங்கோ!'' என்று கிட்டிணண்ணன் வாத்தியாரை வரவேற்க மற்றைய நால்வரும். சற்று நகர்ந்து இருந்து வாத்தியாருக்கு மரியாதை செய்தனர்.

''என்ன தம்பியவை நீங்கள் எனக்கு முன்னம் வந்திட்டியள் போலை கிடக்கு? நீங்கள் வாறதெண்டு எனக்கு எப்பனும் தெரியாமப் போச்சு! தெரிஞ்சிருந்தா நான் அலைக்களியாமல் உங்களோடை வந்திருப்பன்!'' என்று வாத்தியார் கூறிக்கொண்டே சயிக்கிளை தாழ் வாரத்தில் சார்த்திவிட்டுப் பக்கத்தே உட்கார்ந்து கொண்டார்.

''தம்பியவங்கள் ராத்திரி வந்திட்டாங்கள் வாத்தியார்! இப்ப போகக வெளிக்கிட்டு நிக்கினம்; நீங்களும் வந்திட்டியள்!''

கிட்டிணண்ணன் வாத்தியாருக்குப் பதில் சொன்னார்.

ஒருவருக்கொருவர் ஊருப் புதினங்களை விசாரித்துக் கொண்டனர். புதினங்கள் அறியப்பட்டு, ஒரு இடத்தில் வந்து ஒரு விவாதமே தொடங்கி விட்டது.

இன்றைக்கு ஊருக்குள் இருக்கும் வகுப்புவாதக் கெடு பிடிகள் பற்றியதாகத் தொடங்கிய விவாதம், வாதப் பிரதி வாதங்களாக மாறிவிட்டது. வாத்தியார் வேண்டு மென்றே பல கேள்விகளைக் கிளப்பிவிட்டார்.

கிட்டிணண்ணன் வாத்தியாரின் கேள்விகளுக்கு அதிக மாகப் பதில் பேசவில்லை. முருகையனும், குணசிங்கனும், திருப்பதியனும், லோகேஸ்வரனுமே ஒருவர் மாறி ஒருவராக வாத்தியாரின் ஐயங்களான கேள்விகளுக் கெல்லாம் பதில் அளித்தனர்.

வாத்தியார் திடுக்குற்றுப் போனார்.

அவர்களிடமிருந்து பதில் மூலமாகக் கிளம்பிய அரசியல் நுணுக்கங்கள் அவரால் எதிர்பார்க்கப் படாதவை!



வாத்தியாரின் உள் இதயம் மகிழ்ச்சியால் விம்மியது.

தமிழர் விவகாரங்கள், சிங்களவர் விவகாரங்கள், இலங்கை விவகாரங்கள், பக்கத்து இந்திய நாட்டு விவகாரங்கள், சர்வதேச விவகாரங்கள் எல்லா வற்றையுமே அவர்கள் வாத்தியாரின் முன்னே குவித்து வைத்தனர். ஒரு தடவை வாத்தியார் பேசும்போது, ''எங்கடை தாய் நாடாகிய தென்னிந்தியாவிலை'' என்று எதற்காகவோ சொல்லிவிட்டார்.

''வாத்தியார், இது எங்கடை தாய்நாடு! எங்கடை நாடு ஆருக்கும் சேய் நாடில்லை; எங்கடை நாட்டுப் பிரச்சனையை நாங்கதான் தீர்க்க வேண்டும்! ஆரும் தலையிடுறதை நாங்கள் ஏற்கப்படாது!'' என்று முருகையன் படக்கென்று கூறினான்.

வாத்தியார் வாயடைத்துப் போய்விட்டார்.

மருமகன் விவேகானந்தனுடன் வாத்தியார் எத்தனையோ தடவைகள் அரசியல் பேசியிருக்கிறார். அவனிடமிருந்து இப்படியான அரசியல் எதையுமே அவர் கேட்கவில்லை.

தேர்தல் கால மேடைகளிலும், மற்றும் சில மேடை களிலும் பல அரசியல் காரியங்களை அவர் கேட்டிருக் கிறார். இப்படி ஒரு அரசியலை அவர் கேட்டதில்லை.

மணி எட்டுக்கு மேலாயிற்று.

கிழக்கு வாயில் கொட்டிலின் கூரைக்கு மேலாக வெய்யில் பிடித்து உள் வீட்டில் பரவி வந்த ஒளியைக் குறைத்துக் கொண்டு வந்தது.

''வாத்தியார் நாங்க வேலைக்குப் போகவேணும்; நீங்கள் இருந்து வாருங்கோ; பிறகு சந்திப்பம்!'' என்று சொல்லிக் கொண்டே குணசிங்கன் கிளம்பிவிட்டான்.

வீட்டின் கோடிப்புறம் சாத்தப்பட்டிருந்த இரு சயிக்கிள்களையும் எடுத்துக் கொண்டு நால்வரும் புறப்பட்டு விட்டனர்.

''போட்டு வாருங்கோ தம்பியவை! நான் எப்பன்
இருந்து வாறன்!'' என்று வாத்தியார் அவர்களுக்கு விடை
கொடுத்தனுப்பினார்.

''எப்பிடி வாத்தியார் பொடியள்?''

இப்படிக் கேட்டார் கிட்டிணண்ணன்.

''மறைக்காமல் சொல்லுறன் கிட்டிணு; உங்கினேக்கை
இப்ப பண்ணிப் படைச்சுப் போடுவம் எண்டு திரியிற
பொடியள் கொஞ்ச நாளைக்கு இந்தப் பொடியளொட்
டைப் பாடம் படிக்க வேணும்! எங்கைதான் உவளவத்
தையும் படிச்சு வைச்சிருக்கிறாங்களோ தெரியேல்லை!
அண்டைக்கு என்ரை மருமோன் ஒரு கதையிலை சொல்
லுறான் கிட்டிணு, கல்வியறிவில்லாத பாமர சனங்களைத்
தங்கடை இயக்கங்களோடை தலைமைக்குச் சேத்தா
எல்லாம் பழுதாப்போமாம் எண்டு! எப்பிடிக் கிட்டிணு
கதை? உந்தப் பொடியளொட்டை இருக்கிற அறிவிலை
ஆயிரத்திலை ஒண்டு கூட அவங்களொட்டை இருக்கு
மெண்டு நான் நினைக்கேல்லை!''

வாத்தியாரின் இந்தப் பேச்சுக் கிட்டிணண்ணரின் உள்
மனதைச் சிலிர்க்க வைத்துவிட்டது.

கிட்டிணண்ணர் அந்தச் சிறிய கொட்டில் வீட்டின்
அடுக்களைப் பகுதிக்குள் போய் அடுப்பிலிருந்த சுடு
தண்ணீருக்குள் கோப்பியைக் கலக்கி வந்து வாத்தயாருக்
குக் கொடுத்துவிட்டு, கிணற்றடிப் பக்கம் போனார்.

அப்போது ''கிட்டிணண்ணை இல்லையோ? என்று
கேட்டுக் கொண்டு நான்கு ஐந்து பேர்கள் வந்தனர்.

''அவர் உதிலை கிணத்தடியிலை நிக்கிறார்; இருங்கோ
தம்பியவை!'' என்று வாத்தியார் நகர்ந்திருந்து அவர்
களுக்கு இடம் விட்டார்.

கிட்டிணண்ணன் பின் பக்கத்து வடலிக்குப் போய்
வந்து, அடிக்கழுவியிட்டு விட்டடிக்கு வந்து சேரச் சற்று



வேளை ஆகிவிட்டது. அந்த இடைநேரத்தில் வந்தவர்கள் ஒருவருடன் ஒருவர் பேசிக்கொண்டதிலிருந்து வாத்தியார் சில விஷயங்களை அனுமானித்துக் கொண்டார்.

'ஊருக்குள் இரண்டு பகுதியினரிடையே சண்டை, அந்தச் சண்டையில் ஒரு பகுதியினர் குத்தகைக்குச் செய்து வந்த தோட்டப் பயிர்களை மற்றப்பகுதியினர் வெட்டி எறிந்து விட்டனர். வலுக்குறைந்த பகுதியினர் இது சம்பந்தமாக ஆலோசிப்பதற்குத்தான் கிட்டிணுவிடம் வந்திருக்கின்றனர்' என்பதை!

கிணற்றடியிலிருந்து கிட்டிணண்ணன் வந்தபோது வாத்தியாரைத் தவிர எல்லோருமே நகர்ந்து கிட்டிணண்ணனைக் கௌரவித்தனர்.

கிட்டிணண்ணன் வந்தவர்கள் எல்லோரிடமும் மாறி மாறி நடந்த விஷயங்களை விசாரித்தார். விசாரணையின் மாதிரிகளையெல்லாம் வாத்தியார் அணுவணுவாக அவதானித்துக் கொண்டிருந்தார்.

எல்லாவற்றையும் கேட்டு முடித்து இந்த விஷயமாக பாதிக்கப்பட்ட சகலரையும் கூட்டிக் கதைப்பதற்காக இரவு வருவதாகக் கூறி அனுப்பிவிட்ட கிட்டிணண்ணன் ''வந்தவையிலை பல சாதியும் இருக்கினம்; எல்லாரும் அண்டாடம் காய்ச்சியள். இல்லாத பொல்லாத இந்தச் சனங்களை ஒண்டு சேர்க்கிற வேலை பெரிய வேலை வாத்தியார்! இதைச் செய்யாமலுக்கு விடுதலையைப் பற்றிப் பேசிறதெண்டது பொய் வாத்தியார்!'' என்று கூறினார்.

வாத்தியார் ஒன்றும் பேசவில்லை. கிட்டிணரின் தொடர்ச்சியான பேச்சுக்காக அவர் காத்திருந்திருக்க வேண்டும்.

''வாத்தியார் உங்களுக்கு நான் கனக்கச் சொல்லத் தேவையில்லை. நிலம், நீர், நெருப்பு, காற்று, வெளி

எங்கிற பஞ்சபூதங்களாலை உண்டாகிய இந்த உலகத்தை, இந்தப் பஞ்ச பூதங்களாலை உண்டாகிய மனிசன் ஒவ்வொருதனும் தன்ரை தன்ரை எண்டு கக்கிவைச்சுக் கொண்டு வாயில்லாத மனிசரைக் கட்டி அவிழ்த்து வாறதை மறைச்சு வைச்சுக்கொண்டு பேசிற பாஷைக்காகச் சண்டைபிடிச்சு மனிசனுக்கு வாழ்வு எடுத்துக் குடுக்க முடியுமெண்டு சொல்லுறது வெறும் புறுடா வாத்தியார். இப்ப வந்திட்டு போறவையைப் போலை உள்ளவை ஒண்டாச் சேந்து, பஞ்ச பூதங்களினால் பிறந்த மனித இனத்துக்கு பஞ்ச பூதங்களாலை இந்த உலகத்தை மவண்டு எடுக்காத வரையிலை ஒண்டும் சரிவராது வாத்தியார். சுடுகுது மடியைப் பிடி எண்டது போலை இது ரெண்டொரு நாளையிலை செய்து முடக்கேலாது கண்டியளோ!''

கிட்டிணர் பேசி முடித்து வெகுநேரமாகியும் வாத்தியார் எதுவும் பேசவில்லை.

## 46

வெங்காயப் போகம் முடிந்த கையோடு சிறுபயிர் செய்யப்பட்டு அடுத்து மிளகாய்க் கண்டுத் தாழ்வுக்காக தோட்டத் தறைகள் கொத்திச் சாறி, அடிப்பசளையாகக் குழை தாழ்வு செய்யும் காலம் வந்துவிட்டது. ஏறக்குறைய பனிகாலம் கழிவதற்கிடையில்— இளவேனில் கடைசிக்குள் இந்த வேலைகள் யாவும் முடிந்து கண்டுத் தாழ்வுகளை நடத்திவிட வேண்டும். இடையே இருப்பதுவோ இன்னும் பதினைந்து நாட்கள் வரையில்தான். பின்பு முதுவேனில் பிறந்துவிடும்.

தோட்டத் தறைக் கமக்காரர்கள் தங்களுக்குத் தங்களுக்கெனக் கூலிகளைப் பிடிக்க அவசரப் பட்டனர்.



வெங்காயக் கிளறலின்போது சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு கூலிப் பெண்கள் உணவுப் பாத்திரக் கோரிக்கையை வைத்ததுபோல, கொத்துக்காரன்கள் ஏதாவது கோரிக்கையை வைத்து தோட்ட வேலைகளை ஸ்தம்பிக்க வைத்துவிடுவார்களோ என்ற பயம் கமக்காரர்களுக்கு,

தோட்டக்கூலிப் பெண்களுக்குத் தலைச்சியாகப் பூதி இருந்தது போல ஆண்களுக்குத் தலைச்சனாக வயதானவர்கள் யாரும் இல்லை. அதனால் அகப்பட்ட விதங்களில் அவரவர்களேதான் கூலியாட்களைப் பிடிக்க வேண்டியதாயிற்று.

முருகையனின் தந்தை கட்டையனுக்கு இளையதம்பியரின் கிறேசரில் தான் வேலை. ஆயினும் இப்படிப் பட்ட காலங்களில் இளையதம்பியர் கட்டையனையும், அவனுக் கூடாக வேறு பேர்களையும் தேடிக் கொண்டுதான் தோட்ட வேலைகளை நடத்தி வந்தார்.

''என்ன கட்டையன், குழை தாழ்ப்பு வேலையளும் வருகுது. உன்னைத்தான் பொறுப்பாவிடப்போறன். நாளையிண்டைக்கு நவமி கழியுது. தோட்ட வேலை துவங்க வேணும்; ஆக்களை அடுக்குப் பண்ணு!''

இப்படி இளையதம்பியர் கட்டையனைக் கேட்டபோது—

''இந்தக் கோசு பொடியள் முந்தின கோசுகள் மாதிரிக் கூலிக்குச் செய்யிறேல்லை எண்டு முடிவெடுத்திருக்கிறாங்கள்; எட்டு மணித்தியாலந்தான் செய்ய வேணும்; பொருள் பண்டங்களின்ரை விலை ஏறிப் போச்சு; முப்பத்தைஞ்சு ரூவா கூலியும் வேண்ட வேணும் எண்டு கதைச்சிருக்கிறாங்கள்! அது தானாக்கும்...?''

இப்படிக் கட்டையன் இழுத்தான்.

''என்னடா கட்டையன்! எட்டு மணித்தியாலந்தான் செய்வாங்களாமோ? கூலியும் முப்பத்தைஞ்சாமோ? ஓ,

இப்ப அந்தளவுக்கு வந்திட்டாங்களோ? எல்லாம் உவன் சுப்பையா வாத்தியின்ரை வேலை எண்டு எனக்குத் தெரியும்! வாத்தி உங்கடை பகுதியிக்கை சம்மந்தங் கலக்கப் போறான் போலை கிடக்கேடா கட்டையன்! அவன் ஆரையும் வைச்சிருக்கிறதெண்டா வைச்சிருக்கட்டன்; ஆனா ஊரைக் கலக்கிப் பிராந்துக்கு இரைகுடுக்கப் படாது உவன்! சிங்களவன்எல்லாரையும் சேத்து விழுங்கப் பாக்கையிக்கை இந்த வாத்திப் பரதேசி ஊரை ரெண்டு படுத்தப் பாக்கிறான்! ஒண்டு சொல்லிப் போட்டன், கட்டையன்! உவன் பரதேசியின்ரை சொல்லுக்கை பொடியள் கட்டுப்படுறதாயிருந்தா உங்களுக்கெல்லாம் அழிவு காலம் கிட்டடியிலை எண்டதை மறந்திடப் படாது!''

இளையதம்பியரின் பேச்சுக்குக் கட்டையன் பதில் சொல்லவில்லை.

இரண்டு நாட்கள் ஆயிற்று!

நவமிக்கு மறுநாளும் வந்தது.

இளையதம்பியரின் தறையைத் தவிர மற்றவர்களின் தறைகளுக்குள் எல்லாம் கொத்து வேலை அமளியாக நடந்தது.

கூலிக்காரர்களின் கோரிக்கைகளுக்கு மற்றத் தறைக்காரர்கள் எல்லாம் ஓரளவுக்கு இணங்கிப் போய்விட்டதாக ஊரில் கதை பரவிவிட்டது.

சுப்பையா வாத்தியாரும் கிட்டிண்ணனனும், குணசிங்கனும், முருகையனும், திருப்பதியனும் லோகேஸ் வரனும் நின்று கூலிக்காரர்களை ஒழுங்குப்படுத்தி, கட்டுப்பாட்டுடன் எல்லோரையும் வேலைக்கு அனுப்பி வைத்தனர்.

பூதியும், செல்லியும் அங்குமிங்குமாக உற்சாகமாக உலாவி எல்லோருக்கும் விடை கொடுத்து அனுப்பினர்.

இந்த இடைக் காலத்தில் பூதி இளையதம்பியர் கிறேசர் பக்கம் எட்டிக்கூடப் பார்க்கவில்லை.



பல சனிக்கிழமை முறைகள் இளையதம்பியருக்கு வெறுமனே கழிந்து போயின.

ஒரு தடவை இராசரெத்தினம் முதலாளியார் வாத்தியாரிடம் வந்து இளையதம்பியரின் தோட்டத் தறைக்கு கொத்துவதற்கு ஆள் அனுப்பும்படி கேட்டபோது, "'அதுக்கு நான் என்னப்பா செய்யிறது, நான் சொன்னா அவங்கள் கேட்பாங்களே? என்னாலை ஏலாது; தற்செயலாய் நான் கேட்டும் மாட்டன் எண்டு சொல்லிப் போட்டாங்களெண்டா என்னோடை அவங்கள் வைச்சிருக்கிற வாரப்பாடு இல்லாமல் போயிடும்!' என்று வாத்தியார் தட்டிக் கழித்து விட்டார்.

வாத்தியார் தட்டிக் கழிக்கிறார் என்பது இராசரெத்தினத்தாருக்குத் தெரிந்தது. ஆயினும் வாத்தியாரை இதற்குமேல் வற்புறுத்த அவருக்கு முடியவில்லை. இரண்டு மாதங்களுக்கு முன் கோவில் திறப்பது சம்பந்தமாக வந்த வாத்தியாரைத் தான் தட்டிக் கழித்தது அவருக்கு நினைவில் இருந்திருக்க வேண்டும்!

மூன்றாவது நாள் மாலை வாத்தியாரும் கிட்டிணண்ணனும் தலை வாயிலில் இருந்தபோதுவாத்தியாரின் மருமகன் விவேகானந்தனும், இராசரெத்தினத்தாரின் மகன் சந்திரனும், வேறு பெயர் தெரியாத ஒருவனும் வந்து சேர்ந்தனர்.

''உங்களோடைதான் ஒரு விஷயம் பேச வந்தனாங்கள்! என்றான் சந்திரன்.

வாத்தியார் அவர்களை உட்கார வைத்துப் பேசத் தொடங்கச் சொன்னார்.

''நீங்கள் ரெண்டுபேருமாச் சேந்து தமிழர்களை இப்பிடிப் பிரிக்கிறது சரியில்லை!''

''நாங்கள் தமிழர்களைப் பிரிக்கிறமோ?''

''ஓமோம், நாங்கள் சாதி சமயம், எல்லாத்தையும் விட்டிட்டுத் தமிழர்களை ஒண்டாச் சேர வேலை செய்

யேக்கை நீங்கள் சாதியைச் சொல்லி ஒரு பகுதி ஆக்களைப் பிரிச்சு வைக்கப் பாக்கிறியள்!''

''இன்னும் எனக்குச்சரியாய் விளங்கேல்லை! நேராகச் சொல்லும் தம்பி!''

''கிறேசர் இளையதம்பியற்றை தோட்டங்களிலை கூலி ஆக்களைக் கொத்தப் போகவேண்டாம் எண்டு மறிச்சிருக்கிறியள்!''

''ஆர் தம்பி இந்தக் கதையைச் சொன்னது; கொய்யா தானை?''

''எங்களுக்கு ஆருஞ் சொல்லத் தேவையில்லை. வெள்ளாம் வீடுகளுக்குத்தான் கூலி வேலை செய்ய வேணும்; கோவிய வீட்டுக்குச் செய்யக் கூடாதெண்டு மறிச்சிருக்கிறியள் கூலிக்காறங்களை! உப்பிடி வேலை இனிச் சரி வராது! தமிழ்ச் சாதியிக்கை உப்பிடிச் செய்யிறவையை நாங்கள் கவனிச்சு வாறம்! நாளைக்குக் கூலிக்காறங்களை அங்கை வேலைக்கு அனுப்பிப்போட வேணும்!''

''அனுப்பாட்டி!''

''அனுப்பாட்டி நாங்க அனுப்பிறமாதிரி அனுப்புவம்!''

''தம்பி, தமிழரைப் பிரிக்கிற வேலையை நாங்க பாக்கிறமெண்டு சொல்லுநீர்! உம்மடை ஐயாவெட்டைச் சொல்லி அவற்றை கோயிலைத் துறந்துவிடச் செய்து போட்டு வாரும் முதல்லை பாப்பம்!''

''நீங்கள் பிரச்சினையைத் திசை திருப்பப் பாக்கிறியள்!''

''உது வெறுங்கதை! நீங்கள்தான் விழுந்த பாட்டுக்குக் குறி சுடப் பாக்கிறியள்! அவன் இளையதம்பியன் ஒரு இரணியன்! அவன் செய்த காரியங்கள் உங்களுக்குத் தெரியாட்டாலும் சனங்களுக்குத் தெரியும்! கடைசியிலை பாவம் அந்த இந்தியாக்காறக் கறுப்பையனை அடிச்சுத்



தாட்டவன்! பொலிசுக்காறரைத் தன்ரை கையிக்கை வைச்சு, அவங்களுக்கு விருந்துகள் வைச்சுத் தன்ரை காரியங்களை மறைக்கிறவன். கிறேசரிலை வேலை செய்யிறவங்களுக்கு ஆன சம்பளம் குடுக்க மாட்டான்; கூலியைக் கூட்டித் தரச் சொல்லிக் கேக்கிறவங்களைத் தான் அடிக்கிறதுமல்லாமல், சுருளியனைக் கொண்டும், பொலிசுக்காறரைக் கொண்டும் வெருட்டிவிக்கிறவன். அவன்ரை பக்கத்துக்கு நியாயம் பேச வந்திருக்கிறியள். ஏதோ சோசலிசம் எண்ணிறியள்; உதுதான், உங்கடை சோசலிசமோ கேக்கிறன்! தெரியாமல் கேக்கிறன் சொல்லுங்கோ பாப்பம்!''

இதற்குமேல் சந்திரனுக்கும், வாத்தியாருக்கும் பேச்சு நீளவில்லை.

விவேகானந்தன் உட்பட மூவருமே பேசாமல் எழுந்து போய் விட்டனர்.

கிட்டிணண்ணன் பேச்சுக்களைக் கேட்டுக் கொண்டே மௌனமாக இருந்தார்.

## 47

வாத்தியாருக்குப் புதிய உற்சாகம் பிறந்துவிட்டது. அதே வேளையில் சந்திரன் பேசிய பேச்சின் விதம் அவருக்குச் சற்றுப் பயத்தையும் தந்தது.

கிட்டிணண்ணனோடு சேர்ந்து கொண்டு வாத்தியார் தனது காலத்தைக் கிராமங்களுக்குள்ளேயே கழிக்கத் தொடங்கினார்.

காலா காலத்திற்கு வீட்டுக்கு வருவதில்லை.

வேளா வேளைக்கு உணவு கொள்வதில்லை.

அகப்பட்ட இடத்தில் உணவு; அகப்பட்ட இடத்தில் படுக்கை!

மனைவியா? மக்களா?

எந்தவிதக் கால் கட்டும் இல்லாத சுதந்திரமான மனிதன் அவர்.

தங்கை சீதைக்கு அண்ணனின் புதிய போக்கு விசித்திர மாக இருந்தது. இத்தனை வருட வாழ்க்கையில் எல்லா வற்றையுமே அந்தந்த நேரத்திற்குச் செய்து வந்த அண்ணன் இப்போது இப்படி ஆகிவிட்டது அவளுக்கு விளங்காத ஒன்று. மகன் விவேகானந்தனின் போக்குக்கும் அண்ணன் வாத்தியாரின் போக்குக்கும் வித்தியாசத்தையும் அவளால் காணமுடியவில்லை. ஏமஞ்சாமத்தில் வாத்தி யார் வரும்போதும், அதேபோல மகன் விவேகானந்தன் வரும்போதும் அவர்களுக்கான சௌகரியங்களைச் செய்து கொடுப்பதில் அவள் இப்போது பழக்கப்பட்டுப் போனாள். அவள் கணவனோ இவைகளைப் பற்றி எல்லாம் அதிகம் அக்கறைப்படுவதில்லை. தோட்டம் உண்டு, அவர் உண்டு! குழந்தைகளுக்கோ இவர்களின் தரிசனம் இப்போது அதிகமாகக் கிடைப்பதில்லை. அனேகமாக மாமாவும், அண்ணனும் வரும்போதும் போகும்போதும் இவர்கள் நித்திரையிலேயே இருப் பார்கள்.

''வாத்தியார் கண்ட கண்ட வீடுகளில் சாப்பிடு கிறார்; கண்ட கண்ட இடங்களில் படுத்தெழும்புகிறார்; கண்ட கண்டவர்களுடன் எல்லாம் கொண்டாடித் திரிகிறார்'' என்ற செய்தி சீதையின் காதில் விழுந்தபோது தான் மகன் விவேகானந்தன் மீது இல்லாத ஒரு அருவருப் பைச் சீதை அடைந்தாள். ஆனால் அவள் இந்த அருவருப்பை வாத்தியாருக்கு எந்தவிதத்திலும் காட்டிய தில்லை. ஆனால் ஒருநாள் அண்ணனை இப்படிக் கேட்க வேண்டியதாயிற்று!



''அண்ணை, நீங்கள் பள்ள வீடு வளிய அடுகிடை படுகிடை கிடக்கிறாலை பள்ள வீட்டிலை சம்மந்தம் செய்யப் போறியளெண்டு எங்கடை ஊருக்கை கதையாக் கிடக்கு!''

தங்கைக்காரியின் இந்தப் பேச்சுக்கு வாத்தியார் வாய் திறக்கவில்லை.

''எடி பிள்ளை சீதை! உன்ரை கொண்ணன் இளைய தம்பியன்ரை வைப்பாடிச்சி பூதி வீட்டை நெடுக நெடுகப் போட்டு வாறாராமெடி! இளைய தம்பியனும் பூதியை விட்டிட்டானாம்!''

இப்படிப் பக்கத்து வீட்டு இலட்சுமிக் கிழவி சீதையைக் கேட்டு வட்டாள். இந்தக் கேள்வியின் பாரத்தைத் தாங்காமல்தான் சீதை அண்ணன்காரனை இப்படி ஒரு கேள்வியைக் கேட்டாள்.

''எனக்குத் தெரியும் அண்ணை! அவள் பூதி இங்கினேக்கை வந்து திரியேக்கை உப்பிடி நடக்குமெண்டு! அவள் இளையதம்பியரை விட்டிட்டு இப்ப உங்களைப் பிடிச்சுப் போட்டாள்!''

அந்தப் பேச்சுக்கும் வாத்தியார் வாய் திறக்கவில்லை.

''அவள் வாத்திப் பொம்பிளை உங்களை விட்டிட்டு முடிச்சாப் பிறகு அம்மா உங்களை எவ்வளவு வில்லங்கப் படுத்தினவை; எங்கையெண்டாலும் ஒருத்தியைப் பாத்துக் கட்டச் சொல்லி! வேண்டாம் வேண்டாமெண்டு கழுத்தை முறிச்சுப் போட்டு பென்சனும் எடுத்தாப் பிறகு இப்ப...''

சீதை பேச்சை முடிக்கும் வரை வாத்தியார் நிற்க வில்லை வெளியே போய்விட்டார்,

அண்ணன் ஒன்றும் பேசாமல் வெளியே போனபோது சீதை உள் மனத்துக்குள் அழுது கொண்டாள். ஆசை அருமையாய் பகல்வேளையில் வீட்டுக்கு வந்த அண்ண

னுக்குச் சாப்பாடு கொடுக்காமலே இப்படி நடந்துகொண்டதற்காக அவள் நெஞ்சு வெந்து கருகியது.

''என்னப்பா கொண்ணன் இண்டைக்குப் பகலோடை வந்திட்டுப் போறார்! முகமும் அவ்வளவு நல்லாயில்லை! சாப்பாடுகீப்பாடு குடுத்தனியே?'' என்று கேட்டுக் கொண்டே சீதையின் கணவன் கந்தையர் பகல் பாதிப் பொழுதைத் தோட்டத்துள் கழித்துவிட்டு மண்வெட்டியோடு வந்து சேர்ந்தார்.

சீதை ஒன்றும் பேசவில்லை. ஏங்கியபடியே முற்றத்தில் நின்றாள்.

''நீர் ஏதோ கொண்ணனோடை கொழுவுப்பட்டிட்டீர் போலை கிடக்கு! நானெல்லை நேத்தும் சொன்னனான்; கொண்ணர் பிழை விடார் எண்டு! அதுக்கிடையிலை அவசரப்பட்டுக் கதைச்சிருக்கிறீர்; அதுதான் அவர் கோவிச்சுக் கொண்டு திரும்பிப் போறார் போலை கிடக்கு!''

''என்ன இன்னமும் சொல்லுறியளோ அவர் பிழை விடார் எண்டு? அவள் பூதி வீட்டை போட்டுப் போட்டு வாறது கொய்யோ எண்டு போச்சு. அவள் இஞ்சையும் வாறாள்; ஊருக்கை தலை காட்டேலாமைக் கிடக்கு. பூதியும் இளயதம்பியரை விட்டிட்டாளாம்!''

கணவனின் பேச்சை சீதை வெட்டிப் பேசினாள்.

அவர் கிணற்றடிப் பக்கம் போய்விட்டார். மனைவியின் பேச்சுக்கு மறுப்புத் தெரிவிக்க அவரால்முடியவில்லை. மொத்தத்தில் வாத்தியார் ஒரு ''யோக்கியன்'' என்ற மட்டில தான் அவருக்கு ஒரு நம்பிக்கை! அவர் தவறுவதற்கான காரண காரியங்கள் எதைப் பற்றியும் அவருக்கு ஞானம் இல்லை.

வாத்தியாருக்கு மைத்துனனாய் வந்த இத்தனை ஆண்டு காலத்திலும் அவருடைய நிதானத்திலும், யோக்கியத்திலும் கொண்ட மதிப்பினால் ஒருநாள தன்னும்



அவருக்கு முன்னால் இவர் தலை நிமிர்ந்து பேசியதில்லை. ஒரு மாமனுக்குக் கொடுக்கும் மதிப்பை விடப் பன்மடங்கு மதிப்பை 'அவர்' வாத்தியாருக்குக் கொடுத்து வந்தார். இப்போதும் அந்தப் மதிப்பைக் கொடுக்காமல் விடும் அவசியம் எதுவும் இவருக்கு ஏற்பட்டதாகத்தெரியவில்லை.

அவர் மேல், கழுவி விட்டு நேராகக் குசினிக்குள் வந்து சேர்ந்தார்.

அவருக்காகச் சாப்பாட்டைத் தயாராக வைத்திருந்தாள் சீதை.

''மூத்தவன் இண்டைக்குச் சாப்பிடக்கீப்பிட வந்தவனே?'' என்று கேட்டார்.

''இல்லை'' என்று மொட்டையாகச் சொன்னாள் சீதை.

''இஞ்சேரப்பா! நான் மெய் மெய்யாத்தான் கேக்கிறன்! கொண்ணர் பிழை விடுகிற ஆளெண்டு நீர் மனசார நம்புறீரே? பிழை விடுகிற ஆளெண்டா இத்தினை வரிசத்திலை எத்தினை பிழை விட்டிருக்கும்! உண்ணாணை நெஞ்சிலை கையை வைச்சுச் சொல்லும் பாப்பம்! நான் உம்மைக் கலியாணம் முடிச்சு வரேக்கை என்னோடை என்ரை தங்கச்சியும் வந்து இஞ்சைதானை ஐஞ்சு வருஷமாய் இருந்தவள். கொண்ணன் ஏதும் பிழைகிழை விட்டவரோ கேக்கிறன்? வேறை ஒரு ஆம்பிளையெண்டா விடுவானோ சொல்லும் பாப்பம்! ஊரிலை ஆரும் விசர்க் கதையள் கதைப்பினமெண்டு நீரும் கதைக்கிறதே? அவர் பள்ள வீடுகளுக்குப் போனாப் பொம்பிளைக்குப் போறார் எண்டே நினைக்கிறது? நான் தெரியாமக் கேக்கிறன்; உம்மடை மூத்தவன் சாமம் ஏமம் வழிய திரிஞ்சு போட்டு வாறான்! அவனுக்கு இப்ப வயசும் இருவதுக்கு மேலை ஆகுது! போற இடங்கள்ளை பொம்பிளை பிடிக்க மாட்டான் எண்டு சொல்லேலுமோ கேக்கிறன்! நாயமெண்டா எல்லாருக்கும் ஒரு மாதிரியெல்லோ இருக்கவேணும்!''

கணவன் தலையைக் குனிந்தபடி சோற்றுக்கோப்பைக்குள் கையைப் புதைத்துக் கொண்டே பேசிக் கொண்டிருந்தபோது சீதையின் கண்களில் கண்ணீர் வடிந்தோடியது. பின்பு அவள் விம்மினாள். ஒரு மைத்துனன் மேல் ஒருவன் வைத்திருக்கும் மதிப்பின் உச்சம் அவளை அழ வைத்துவிட்டது. தனது மனப் பேதலிப்புக்காக அவள் பெரிதும் வெட்கப்பட்டாள். இத்தனை காலம் தசையும் நரம்புமாகி தன்னோடு வாழ்ந்த அண்ணனை இப்படி நோகப் பேசிவிட்டதில் அவள் வெந்தாள்.

நீண்ட நேரமாக அவள் பேசவில்லை.

கணவனும் இதற்குமேல் எதுவும் பேசாமலே உணவருந்திக் கொண்டிருந்தது, அவளை மேலும் சோதனைக்கு உட்படுத்தியது.

வெளியே குசினி வரிச்சு மட்டைக்கூடாக சீதை பார்த்தபோது வாத்தியார் முற்றத்துத் தலைவாயிலுள் நின்றார்.

சீதை சிந்திய கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். ஆயினும் விம்மலும் கண்ணீரும் நிற்கவில்லை.

''அண்ணை வாருங்கோ சாப்பிட!''

தள தளத்தக் குரலில் சீதை கேட்டாள் .

வாத்தியார் எதுவும் பேசாமலே குடத்தடிக்குச்சென்று வாய் அலம்பிவிட்டுக் குசினிக்குள் வரவும், மைத்துனர் உணவு முடித்துக் கொண்டு வெளியே வரவும் சரியாக இருந்தது.

சீதை அண்ணனுக்கு உணவு பரிமாறினாள்.

வாய் திறந்து ஒரு வார்த்தை ஏதும் பேசாமலே வாத்தியார் உணவருந்திக் கொண்டிருந்தார்.

சீதை இன்னும் கண்ணீர் விட்டுக் கொண்டும், விம்மிக் கொண்டுமே இருந்தாள்.

அவள் விம்மல் ஓசை வாத்தியாருக்குக் கேட்டது.



# 48

மார்க்கண்டனும், சந்திரனும், விவேகானந்தனும் செல்லி வீட்டுக்கு வந்து சேர்ந்தனர்.

இன்னும் நன்றாக நிலம் வெளுக்கவில்லை.

செல்லியின் தந்தை பேத்தை வயித்தியன் மிகவும் வேளையோடையே எழுந்து எங்கோ போய்விட்டான்.

பின்பனிக் கூதல் கொடு கொடுத்தது. செல்லி அப்போதுதான் கண் விழித்துவிட்டு மறுபடியும் பழந்துணிப் போர்வையால் மூடிக் குடங்கிக் கிடந்தாள்.

''சின்னமாமி; சின்னமாமி!'' என்ற குரல் குடிசை வீட்டுக்குள் வெளியே கேட்டது. அது மார்க்கண்டனின் குரல் என்று செல்லி சுலபத்தில் அனுமானித்துக் கொண்டு, போர்வையால் மூடிக் குடங்கிய பாவனையில் வெளி வந்தாள்.

மார்க்கண்டனுக்கு செல்லி ஒன்றுவிட்ட மாமி முறையானவள். தவிரவும் மார்க்கண்டன் என்றால் செல்லிக்கு மிகவும் வாரப்பாடு! மார்க்கண்டனின் தந்தை வயிரவனுக்கு செல்லி ஒன்றுவிட்ட கடைசித் தங்கை. அதனால் மார்க்கண்டனின் வயதுக்கும் செல்லியின் வயதுக்குமிடையே பத்து வரைதான் வித்தியாசமிருந்தது.

''என்ன தம்பி?'' என்று கேட்டுக் கொண்டே வெளியே வந்த செல்லி முற்றத்தில் நின்ற முகம் அறிமுகமில்லாத மற்ற இருவரையும் கண்டதனால் சற்று வெருட்சி அடைந்து அரையும் குறையுமான போர்வையைச் சரிப்படுத்திக் கொண்டாள்.

''இவர் எங்கடை சுப்பையா வாத்தியாற்றை மருமோன்; இவர் இராசரெத்தினம் முதலாளியாற்றை

மோன் மாமி! ஏதோ கதைக்க வேணுமெண்டு என்னையும் வரச் சொன்னவன்; அதுதான் வந்தனாங்கள்!''

மார்க்கண்டன் வந்தவர்களைச் சுருக்கமாக அறிமுகப் படுத்திவிட்டு வந்த விஷயத்திற்கும் பீடிகை போட்டு வைத்தான்.

''இப்ப என்னெண்டாப் பாருங்கோ, ஊருக்கை உலகத்திலை நடக்கிறதெல்லாம் கேள்விப்பட்டிருப்பியள். சிங்கள ஏகாதிபத்தியம் தமிழரை எல்லாம் அடக்கியாளப் பாக்குது! தமிழர் போராடத் துடங்கியிருக்கினம். இந்த நேரத்திலை எங்களுக்கை வித்தியாசம் காட்டப்படாது; அதுதான் நீங்களும் எங்களுக்கு உதவி செய்ய வேணு மெண்டு கேக்க வந்திருக்கிறம்!''

சந்திரன் பேச்சை இத்துடன் நிறுத்திக் கொண்டான்.

''அதுக்கென்ன தம்பியவை உதுகளுக்கு நாங்கள் மாறே? தமிழர் எல்லாம் சாதி சமய வித்தியாசம் பாக்கப் படா தெண்டுதானை நாங்களும் விரும்பிறம். இந்த விஷயத்திலை எங்கடை ஊரெல்லாம் உங்களோடை தான் நிக்கும்!''

செல்லியும் பேசி நிறுத்திவிட்டாள்.

''அதுதான் பாருங்கோ உங்கடை ஆக்கள் எல்லாருமா ஒத்துக்கொண்டு வெள்ளாளரை விடக் குறைஞ்ச சாதி எண்டதுக்காக இளையதம்பி முதலாளியின்ரை தோட்டக் கொத்துக்குப் போகாமை விட்டிட்டினம். இந்த நேரத் திலை எங்களுக்கை பிளவு இருக்கெண்டு காட்டினா அது தமிழருக்குத்தான் நட்டம் அதுதான் ஒருக்கா உங்கடை பொடியளுக்குஞ் சொல்லி...''

சந்திரன் பேச்சை முடிக்க முடியாமல் இழுத்தபோது செல்லிக்கு விஷயம் இப்போதுதான் புரிந்தது.

சமீப காலத்தில் மார்க்கண்டன் யார் யாரோடெல் லாம் கூட்டாளியாகத் திரிகிறான் என்ற கதை ஊருக்குள் பரவி இருந்ததைச் செல்லி அறிந்திருந்தாள். அதனால் தான் மார்க்கண்டனின் உதவியோடு இளையதம்பியருக் காக இவர்கள் வந்திருக்கிறார்கள் என்ற முடிவுக்கு வரு வதில் அவளுக்குச் சிரமம் இருக்கவில்லை.

''உப்ப கிட்டடியிலை உங்கடை ஊருக்கை நீங்கள் எடுத்த வெற்றிக்கு நீங்கள்தான் முன்னுக்கு நிண்டனீங் கள்! அதுதான் இதிலையும் முன்னுக்கு நிண்டு தமிழரை ஒண்டு சேர்ப்பியள் எண்ட நம்பிக்கையிலை வந்தனாங் கள்! மார்க்கண்டுவும் உங்களைத்தான் சொன்னவர்!''

வாத்தியாரின் மருமகன் விவேகானந்தன் இப்படிப் பேசினான்.

உடனடியாக இதற்கு என்ன பதில் சொல்வதென்றே செல்லிக்குத் தெரியவில்லை.

''நான் உதுக்கு ஒண்டுஞ் சொல்லேலாது தம்பியவை! எங்கடை பொடியளோடை யோசிச்சுத்தான் சொல்லு வள். எல்லாக் கமக்காறரவையும் கூலியைக் கூட்டித் தாறத்துக்குச் சம்மதிச்சிருக்கேக்கை இளையதம்பிக் கமக் காறன் ஏன் சம்மதிக்கேல்லை எண்டு அவரை ஒருக்காக் கேட்டுப் பாருங்கோவன் தம்பியவை!''

செல்லியின் இந்தப் பேச்சுக்குப் பதில் உடனே வர வில்லை.

சற்று நேரம் ஆயிற்று.

நன்றாக நிலம் வெளுத்து சூரியக் கிரணம் பனித் திரையைக் கிழித்துக்கொண்டு குத்திட்டு வந்தது.

''நாங்கள் அதையும் விசாரிச்சனாங்கள் பாருங்கோ! தன்ரை தோட்டங் கொத்துறவங்களுக்குக் கூலியைக் கூட்டிக் குடுத்தா கிறேசரிலை வேலை செய்யிறவங்களும் இருவதிலை இருந்து முப்பத்தைஞ்சு கேப்பாங்களாம்! அவர் சொல்லுற நாயத்திலையும் பிழை இல்லை எண்டு தான் எண்ணிறம். அதோடை அவர் எங்கடை இயக்கங்

களுக்கும் தேவையான நேரத்திலையெல்லாம் பாத்துப் பாராமல் அள்ளித் தாறவர்! பொன்முட்டை இடுகிற வாத்தை ஒரேயடியாக் கிறிக் கிழிக்கிறது பிழை பாருங்கோ! கிறேசரிலையும் கல்லுக் கிடங்குகளிலையும் வேலை செய்யிறவங்கள் முப்பது பேருக்கு மேலை வரும் பாருங்கோ! கொத்துக்கு வாற மூண்டு நாலு பேருக்காக அந்த முப்பது பேருக்கும் சம்பளத்தைக் கூட்டிக் குடுக்கிறது எங்களுக்குச் சரியெண்டும் படயில்லை!''

சந்திரனின் நீண்ட இந்தப் பதிலைச் செல்வி கேட்டுக் கொண்டே நின்றாள்.

''என்ன பொட்டை வேளையோடை வீட்டிலை 'பைம்ப'லாகக் கிடக்கு?'' என்று கேட்டுக் கொண்டே வடலி இடைவெளிக்கூடாக பூதி வந்தாள்.

''அது என்ரை மருமோன் மார்க்கண்டுவோடை வாத்தியாற்றை மருமோனும், மில்லு முதலாளியாற்றை மோனும் வந்திருக்கினம், பூதி அக்கை!'' என்று செல்வி பதில் சொல்லி முடிவதற்கிடையில் பூதி முற்றத்திற்கு வந்து விட்டாள்.

பூதியைக் கண்டதும் எல்லோரும் தங்களுக்குள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''என்னெடி பிள்ளை சின்ன நயினாரவையை நிக்க வைச்சே கதைச்சுக் கொண்டு நிக்கிறது? என்னவாமடி சின்ன நயினாரவை! எட பொடி மார்க்கண்டு நீயும் உவையின்ரை கட்சியிலை சேந்திட்டாயெண்டு ஊருக்கை கதைச்சவை! நான் நம்பேல்லை!''

பூதி பேச்சைத் தொடராமலே நறுக்கி விட்டாள்.

பூதி பேசிய மாதிரியில் அவள் கிண்டலாகத்தான் பேசுகிறாள் என்பது எல்லோருக்கும் புலனாகியது.

''இளையதம்பிக் கமக்காறன்ரை தோட்டக் கொத்துக்கு ஆக்களை அனுப்பச் சொல்லி வந்து நிக்கினம்



அக்கை! சிங்களவன் எல்லாரையும் சேத்து அடக்கி வைச்சிருக்கேக்கை எல்லாரையும் ஒண்டு சேர்க்க வேணுமெண்டு கேக்கினம். அதுதான் எங்கடை பொடியளோடை கதைச்சுப் போட்டுச் சொல்லிறன் எண்டு சொல்லிக் கொண்டு நிக்கிறன். அதுக்கிடையிலை நீயும் வந்திட்டாய்!' என்று செல்வி சொன்னாள்.

''மெய்யே தம்பியவை! நான் ஒண்டு கேக்கிறன் குறை நினைச்சுப் போடாதையுங்கோ! குந்தியிருக்கக் குடிநிலமில்லாமை எங்கடை சனங்கள் உங்கடை ஆக்களின்ரை வடலியள் வழிய குடியிருந்து கொண்டு பயந்த சீவியம் சீவிக்குதுகள்! உங்கடை கனபேர் பெரிய பெரிய காணிகளைச் சும்மா பத்தை பறுகு முளைக்க விட்டிட்டிருக்கினம்; அதிலை ஒவ்வொரு துண்டுக் காணியளை வாங்கிக் குடுத்து முதல்லை ஒற்றுமையாக்குங்கோ பாப்பம்! ஏன் கனக்க, ஐயாவின்ரை கோயிலுக்குள்ளை ஒருக்கா, வாற கொடியேத்தத்துக்கு விடச் சொல்லுங்கோ பாப்பம்! அவர் கோவியப்பிள்ளையை உங்கடை வெள்ளாமாக்களோடை ஒண்டாச் சேர்க்கப் பாக்கிறியள். அதை நான் பிழையெண்டு சொல்லேல்லை. சிங்களவன் நாக்கு வளைக்கிறான் எண்டு பயப்பிடுகிறியள்; இதுகளையும் திருத்துங்கோ பாப்பம்!''

பூதி மிக அவசர அவசரமாகப் பேசினாள்.

அவள் பேசி முடிந்ததும் மழை ஓய்ந்தது போல இருந்தது.

செல்வி பூதியின் பேச்சுக்குத் தலையை ஆட்டி ஆட்டிக் கொண்டிருந்தது அவள் சொல்வது அத்தனையும் ஆமோதிப்பது போல இருந்தது அது.

''அப்ப சீவலுக்கு நேரம் போச்சு மாமி, போட்டு வரட்டே?'' என்று கேட்டான் மார்க்கண்டன்.

பூதியின் பேச்சு அவனுக்குப் பிடித்ததோ இல்லையோ அவன் இதைக் கேட்டான்.

''அப்ப நாங்கள் போட்டு வாறம் பாருங்கோ. என்னவோ யோசிச்சுச் செய்யுங்கோ சொல்லிப் போட்டம்!'' என்று சந்திரன் சொல்ல மூவரும் திரும்பி விட்டனர்.

''என்ன பூதியக்கை மில் முதலாளியின்ரை சின்ன நயினார் 'ஏதோ சொல்லிப் போட்டம்!' எண்டு எச்சரிக்கை செய்து போட்டுப் போறார் போலை கிடக்கு!''

அவர்கள் சற்றுத் தூரம் போனதும் செல்லி இப்படிக் கேட்டாள்.

''அவற்றை வெருட்டு அவரோடை இருக்கட்டுக்கும் பொட்டை; நீ பேசாமல் இரு! இல்லாத பொல்லாத சனங்களின்ரை அலுவல்களைப் பாக்கக் காணேல்லை. இளையதம்பிக் கமக்காறனுக்குத் தரகு பேச வந்திட்டினம்! உவன் மார்க்கண்டனுமெல்லை வந்திருக்கிறான்; பேய்ப் பொடியன்! நயினாருக்கு ஆள் பிடிக்க!''

பூதியின் இந்தப் பேச்சுடன் இருவரின் பேச்சும் முடிந்தது.

''என்ன ஆனந்தன், உம்மடை மாமாவின்ரை கதையும், பூதியின்ரை கதையும் ஒண்டாருக்குப் பாத்தீரே!'' என்று போகும்போது சந்திரன் விவேகானந்தனை அர்த்த புஷ்டியுடன் ஒரு கேள்வியைக் கேட்டான்.

## 49

நிலவு தொடுவானப் பூமிக்குள் மறைந்துவிட்டது.

நவமி நாள்.



விவேகானந்தன் இரு நண்பர்களுடன் வீட்டிற்கு வந்திருந்தான்.

அவன் அகால வேளையில் யாராவது சில இளைஞர்களுடன் வருவான் என்பதற்காகச் சீதை இரண்டு சுண்டு அதிகமாகக் கூடச் சமைத்து வைப்பது வழக்கம்! அவன் வந்தாற் சரி! இல்லாவிட்டால் மறுநாள் பழஞ்சோற்றுக்கு அது இருக்கும். பழஞ்சோறென்றால் கணவனுக்கு மிகவும் விருப்பம் என்பது சீதைக்குத் தெரியும். அதனால் சோறு காத்திருப்பதில் அவளுக்குக் கவலை இருப்பதில்லை.

முற்றத்து தலைவாயிலில் வாத்தியார் படுக்கும் இடம் காலியாக இருந்தது. இதனால் மாமா வீட்டில் இல்லை என்ற முடிவுக்கு விவேகானந்தன் வந்தான்.

தம்பிமாரும், தந்தை கந்தையரும் உள்ளே வீட்டறையில் தூங்கி விட்டார்கள்.

மகனின் 'அசுகை' கேட்டு சீதை எழுந்து குசினிக்குள் சென்று சிமிலி விளக்கைத் தூண்டி மகனுக்கும் மற்ற இருவருக்கும் உணவு கொடுத்தாள். உணவருந்தி முடிந்ததும் மற்ற இருவரும் விடைபெற்றுப் போய் விட்டனர். அவர்கள் போய்ப் பத்து நிமிடங்கள் கூட இருக்காது; தொலைவில் நான்கைந்து வெடிச் சத்தங்களும், வாகனங்களின் இரைச்சலும் கேட்டன.

சீதையின் நெஞ்சுக்குள் அந்த வெடிகள் எதிரொலித்தன.

''பொடியளும் போக வெடியளும் கேக்குது தம்பி!'' இப்படி சீதை மகனின் காதுக்குள் சொன்னாள்.

''அவங்களையாவது ஆமிக்காறர் சுடுகிறதாவது!'' என்று தாய்க்குச் சொன்னான் மகன்.

''அம்மா எணை! மாமாவை எங்கையெண்டாலும் வேறை இடத்திலை போய் இருக்கச் சொல்லுங்கோணை!''

மகனின் இந்தப் பேச்சு சீதையின் தலையை விறைக்க வைத்தது.

''இதென்ன நாசமறுந்த கதை கதைக்கிறாய் தம்பி! மாமாவையோ? போகச் சொல்லெட்டோ?''

சீதை பதகளித்துக் கொண்டே மகனைக் கேள்விகளாக கேட்டாள்.

''ஓமெணை அம்மா! அவர் இஞ்சை இருக்கிறது எனக்கும் விருப்பமில்லை; என்ரை இயக்கத்துக்கும் விருப்பமில்லை; அவரை அனுப்பாட்டி நான் இயக்கத்தின்ரை கண்ணிலை முளிக்கேலாது! நாளைக்குப் போகச் சொல்லிச் சொல்லிப்போடு!''

''தம்பி உதுவும் ஒரு கதையெண்டு எனக்குச் சொல்லுறியோ? இஞ்சையிருந்து அவரைப் போகச் சொல்லச் சொல்லிக் கதைச்சா அவருக்கு வேறை ஆர் இருக்கினம்? பொண்டிலோ? பிள்ளையோ, அண்ணனோ தம்பியோ ஆர் இருக்கினம் சொல்லு பாப்பம்? எட தம்பி என்னத்துக்கெண்டு எனக்குச் சொல்லன்!''

சீதை பரிதாபமாக மகனைக் கெஞ்சும் பாவனையில் கேட்டாள்.

''உனக்குச் சொன்னா விளங்காதெணை! எண்டாலுஞ் சுருக்கமாச் சொல்லுறன். அவர் தமிழருக்குத் துரோகி! தமிழரை ரெண்டாக்கப் பாக்கிறார்! அவர் இனி இஞ்சை இருக்கப்படாது! இருந்தா உங்கடை இரகசியங்களை வெளியிலை போய்ச் சொல்லி எங்களைக் காட்டிக் குடுத்துப் போடுவார். அதுதான் அம்மா அவரை எங்கை யாலும் போகச் சொல்லு! இஞ்சை இருந்து அவர் இப்பிடிச் செய்து கொண்டிருந்தா எங்கடை இயக்கக் காறர் சுட்டுப் போடுவாங்கள்! பேந்து நானும் ஒண்டுஞ் செய்யேலாது!''

விவேகானந்தன் பேசி முடிக்கவில்லை!



குசினிப் படலையைத் தள்ளிக்கொண்டு கந்தையர் உள்ளே வந்தார்.

விவேகானந்தனின் சடை மயிர் அவர் கையில் வசமாக மாட்டிக் கொண்டது.

அவனை அவர் அல்லாக்காக வெளியே இழுத்தார்.

உழைத்து உழைத்து உரமேறிவிட்ட அந்தக் கரத்தின் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ள விவேகானந்தனுக்கு முடியவில்லை.

அவர் அவனை அடித்து உதைத்துக் குதறினார்.

சீதை திகைத்துப் போனாள்.

அந்த அர்த்த ஜாமத்தில் வாய்விட்டுக் கதற அவளுக்கு முடியவில்லை.

பாய்ந்து சென்று கணவனைத் தடுத்தாள்.

அவளால் அது முடியவில்லை.

''பரதேசி நாயே! என்னடா கொம்மாவுக்குச் சொன்னனீ? அந்தாளை வீட்டை விட்டுக் கலைக்கப் போறியோடா? சுட்டுத் தள்ளிப்போடு வாங்களோடா உன்ரை ஆக்கள்?''

கந்தையர் இப்படிக் குரல் வைத்துக் கொண்டே மகனை நையப் புடைத்தார்.

மூச்சுப் பேச்சில்லாமல் விவேகானந்தன் தந்தையால் தரப்பட்ட தண்டனையைப் பெற்றுக் கொண்டே இருந்தான்.

கந்தையரின் ஆத்திரம் ஓய்ந்து போக அவர் மகனை அல்லாக்காகத் தள்ளிவிட்டு மறுபடியும் படுக்கைக்குச் சென்று படுக்கையில் சாய்ந்துவிட்டார்.

அவரின் சுபாவம் அப்படி.

எதைச் செய்தாலும் அவர் அடக்கத்துடன் தான் செய்வார்; உடனடியாகவே அடங்கிப் போய்விடுவார்.

வெளி உலகுக்கு எந்தவித தகவலும் இன்றி இந்தக் காரியம் ஐந்து நிமிட வேளைக்குள் முடிந்துவிட்டது. அல்லாக்காக விழுந்த மகனைச் சீதை அணைத்துக் கொண்டு கண்ணீர் விட்டாள்.

விவேகானந்தனுக்கு அழுகை வரவில்லை. தாயின் அரவணைப்பிலிருந்து தன்னை விடுவிடுத்துக் கொண்ட அவன், தலைவாயில் மண்டபத்துக்குள் வந்து வாத்தியாரின் கட்டிலில் உட்கார்ந்து தலைக்குக் கைகொடுத்துக் கொண்டே குனிந்து இருந்தான்.

அவன் தலைமயிர் பரிதாபமாகக் கலைந்திருந்தது.

அவன் மேலங்கியில் செம்மண் புழுதி அப்பிக் கொண்டு கிடந்தது.

சீதை அழுதபடியே கைலாம்பை எடுத்து அவன் முகத்தைப் பார்த்தாள்.

அதற்குள் முகம் வீங்கிப் போய்விட்டது.

கீழ்ச் சொண்டால் இரத்தம் கசிந்தது.

''அம்மா நீ அழாதையெணை! நான் அனுபவிக்கிற இத்தண்டனை தமிழுக்காக!'' என்றான் அவன்.

அவன் குரல் இப்போதுதான் தளதளத்தது.

''அம்மா பேந்துஞ் சொல்லுறன் மாமாவைப் போயிடச் சொல்லு! நா அடி வேண்டிறத்தைப் பற்றிப் பரவாயில்லை; மாமாவை எங்கையெண்டாலும் போயிடச் சொல்லு!''

அவனே மீண்டும் சொன்னான்.

சீதை முன்தானையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்; குசினிக்குள் சென்றாள்; செம்பில் தண்ணீரை எடுத்து வந்து அவனின் முகத்தைக் கழுவி இரத்தக் கசிவு சொண்டுப் பகுதியை முன்தானையால் ஒத்தி விட்டாள்.



தலைவாயில் வீட்டுச்கு நடுவே சிமிலி விளக்கு நீண்ட நேரம் எரிந்து கொண்டிருந்தது.

நாடிக்கு மூண்டு கொடுத்தபடி சீதை தலைவாயில் குந்தில் இருந்தாள். அவளுச்குப் பெருமூச்சுகள் அடிக்கடி வந்தன.

''தம்பி, கொய்யாதானை அடிச்சது! மாமாவை வீட்டை விட்டுப் போகச் சொல்லிச் சொன்னாப்போலை அவருக்குக் கோவம் வந்திட்டுது, ரெண்டொருக்கா அடிச்சுப் போட்டார்!''

சீதை தன் பாட்டிலேயே பேசினாள்.

இப்போது விவேகானந்தன் விம்மினான்; இப்போது தான் அவனுக்கு விம்மல் வந்தது.

சற்றுவேளை மௌனத்தில் கழிந்தது.

மறுபடியும் மேற்கே இருந்து வெடிச்சத்தங்கள் இரண்டோ மூன்றோ கேட்டன; வாகனங்களின் இரைச்சல் கேட்டது.

வாகனங்களின் இரைச்சல் வீட்டுக்குச் சமீபமாக வருவது போல இருந்தது.

விவேகானந்தன் எழுந்து வீட்டின் பின்புறம் சென்றான்.

சற்று வேளை ஆயிற்று!

வாகன இரைச்சல் தொலைவுவரை சென்று கரைந்தது.

சீதையின் ஏக்கமும் கரைந்தது.

சிமிலி விளக்கை எடுத்துக் கொண்டு அவள் கோடிப் பக்கம் போனாள்.

விவேகானந்தன் கோடிப்புற வேலிக் கரையோடு நின்றான்.

அவன் கரத்தில் சின்னஞ்சிறிய றிவோல்வர் ஒன்று இருந்தது.

சீதை திடுக்குற்றுப் போனாள்.

அவனின் மறுகரத்தில் ஒரு உருண்டை வஸ்து இருந்தது.

அது என்ன என்பது அவளுக்கு விளங்கவில்லை.

அது கறுப்பாக வரி அடர்ந்ததாக இருந்தது.

''அம்மா போணை வாறன்!'' என்று அவன் மெதுவாகக் குரல் கொடுக்க, சீதை வந்துவிட்டாள்.

சற்று வேளைக்குள் விவேகானந்தன் வந்தான்.

அவனுக்காகச் சீதை கிழக்குப்புறத் தாழ்வாரத்தில் படுக்கை போட்டிருந்தாள்.

இரவில் நேரங்கெட்ட நேரம் வந்துவிட்டால் அவன் படுத்துக் கொள்ளும் இடம்தான் அது.

விவேகானந்தன் படுக்கைக்குப் போக, சீதை முன்தானைச் சேலையைப் பரவி விட்டு தலைவாயிலுக்குள் சாய்ந்து கொண்டாள்.

சிமிலி விளக்குத் தணிக்கப்பட்டது.

சீதை அன்று இரவுச் சாப்பாட்டை விட்டு விட்டாள்.

வயிற்றுக்குப் பசி தெரியவில்லை.

கந்தையரின் இருமல் ஓசைகள் உள்வீட்டுக்குள் இருந்து எழுந்தது.

உலகின் அமைதி தொலை தூரத்தில் கேட்கும் நாய்களின் குரைப்புகளுடன் சங்கமமாகி இருந்தது.



## 50

பின்பனிக் காலம் போய் இளவேனில் காலம் என்றால் வெள்ளாப்புக் கண்டு சிறிது வேளைக்குள் பொழுதின் கதிர்கள் கண்களில் பட்டென்று படும்.

சீதை கண்விழித்தபோது விவேகானந்தனின் படுக்கை வெறுமனே இருந்தது.

''கணவன் எழுந்து விட்டாரா?'' என்று அவள் பார்க்க வேண்டியதில்லை. வழமையில் வெள்ளாப்புக் காணு வதற்கு முந்தியே அவர் தோட்டத்திற்குப் போய் விடுவார்.

மற்றப் பிள்ளைகள் இன்னும் எழுந்திருக்கவில்லை.

வெளிப்பக்கத் தகரப்படலையைச் சயிக்கிள் முன் சில்லால் படாரெனத் திறந்துகொண்டு லோகேஸ்வரன் வந்தான்,

அவன் வந்த வரத்துச் சீதைக்கு ஒரு மாதிரியாக இருந்தது.

''வாத்தியாரை ஆரோ பரதேசியள் ராத்திரி அடிச்சுப் போட்டு விளாத்தியெடிச் சந்தியிலை போட்டுட்டுப் போட்டாங்கள்; அவரை ஆசுப்பத்திரிக்குக் கொண்டு போகவேணும்; முருகையன் கார் பிடிக்கப் போட்டான்!'' என்று சீதையைப் பார்த்துக் குரல் கொடுத்துவிட்டு லோகேஸ்வரன் வந்தவேகத்தில் வெளியே போய் விட்டான்.

''ஐயோ அண்ணை; ஐயோ என்ரை அண்ணை!'' என்று சீதை குரல் வைத்தாள்.

சீதையின் குரல் கேட்டு பக்கத்து வீட்டு இலச்சுமி கிழவியும் பொடி பொட்டைகளும் ஓடி வந்தனர்.

சீதை அவர்களுக்காகக் காத்திருக்கவில்லை.

லோகேஸ்வரனுக்குப் பின்னால் அவள் ஓடினாள்.

விளாத்தியெடிச் சந்தி அரை மைல் தூரம் இருக்கும். சீதை விளாத்தியெடிக்கு வந்து சேர்ந்தபோது சந்தியில் சனக்கூட்டம் நின்றது.

வாத்தியாரின் தலையை மடியில் தூக்கி வைத்து அவரின் முகத்தில் வழிந்த இரத்தத்தைத் துடைத்துக் கொண்டிருந்தான் குணசிங்கன்.

பூதியும், செல்லியும் அவரின் தலைப்புறத்தில் குந்திக் கொண்டிருந்தனர்.

''என்ரை அண்ணை!'' என்று குரல் வைத்துக் கொண்டே சீதை வாத்தியாரை அணைத்துக் கொண்டு கண்ணீர் வடித்தாள்.

''அவருக்கு ஒண்டுமில்லை, நாச்சியார்! ஏன் குரல் வைக்கிறியள்? இப்பதான் கதைச்சுக் கொண்டிருந்தவர்; அசதி வந்திட்டுது கிடக்கிறார்!''

பூதி சீதையை ஆசுவாசப்படுத்தும் தோரணையில் பேசினாள்.

''போடி தேவடியாள்! உன்னாலைதானடி அண்ணைக்கு இப்பிடி வந்தது!'' என்று பட்டென்று சொல்லிவிடவேண்டும்போல சீதைக்குப் பட்டது. ஆனாலும் அவள் வாய் திறக்கவில்லை; அழுகையை அடக்கி அடக்கமாக விம்மிக் கொண்டிருந்தாள்.

வாத்தியாரின் வெறும் உடம்பில் அங்குமிங்குமாக அடி காயங்கள்! அவை வாத்தியாரின் சிவப்புக்கு மேல் சிவப்பாகத் தெரிந்தன.

மண்டையில் ஒரு சிறு வெடிப்பு! அதிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.



அவர் இடக் கன்னம் ஊதிப்போயிருந்தது; அதனால் கடவாயிலிருந்து உமிழ் நீருடன் கலந்து இரத்தப் பசை வடிந்தது.

அவரின் அனுங்கல் கேட்டது.

''அண்ணை என்னண்ணை செய்யுது? உந்த வேலையைச் செய்தவங்கள் ஆரெண்டு தெரியுமே அண்ணை?''

சீதை அழுதுகொண்டே கேட்டாள்.

வாத்தியார் கண்களைத் திறந்துபார்த்தார்; தங்கைக்கு எதையோ சொல்ல முனைந்தார்; முடியவில்லை. அலகு திறக்க முடியாததினால் மறுபடியும் முயன்று பார்த்துச் சோர்ந்து போனார்.

''காருக்குப் போன முருகையனை இன்னும் காணேல்லை!'' இப்படிச் சிலர் அலுத்துக் கொண்டனர்.

முருகையன் சைக்கிளுடன் வந்தான்.

''கார் வருகுதே தம்பி?''

செல்லி கேட்டாள்.

''இல்லை அக்கா; சந்தியிலை ஒருத்தரும் கார்விட மாட்டன் எண்டிட்டாங்கள்! எங்கடை ஆக்களுக்கில்லை; வாத்தியாருக்கு எண்டு கூடக் கேட்டுப் பாத்தன்; மாட்டன் எண்டிட்டாங்கள்; அதுதான் எங்கடை பெரிய குஞ்சியின்ரை திருக்கல் வண்டிலைக் கட்டிக் கொண்டு வரச் சொல்லிப்போட்டு வாறன்!''

இப்படி முருகையன் பதில் சொன்னான்.

''ஆவத்துஞ் சந்தானத்துக்குக் கார் விடமாட்டன் எண்ணிற உவங்களும் ஒரு மனிசரே?''

செல்லி ஆத்திரப்பட்டாள்.

''உரும்புராய்ச் சந்திமட்டுங் கொண்டுபோட்டா அங்காலை அதிலை ஒரு காரைப் பிடிச்சுக் கொண்டு பெரியாசுப்பத்திரிக்குப் போய்ச் சேர்ந்திடலாம்!''

இப்படிக் கூட்டத்தில் ஒருவன் சொன்னான்.

மாட்டின் சதங்கை ஒலி கேட்டது.

திருக்கல் வண்டில் வந்துவிட்டது.

வண்டித்தட்டுக்குள் வைக்கோல்போட்டு, அதற்குமேல் புற்பாய் ஒன்று விரிக்கப்பட்டிருந்தது. செல்லி பக்கத்து வீட்டுக்கு ஓடி ஒரு சேலைச் சுருளை எடுத்து வந்து வைக்க, வாத்தியார் பக்குவமாக அதற்குள் ஏற்றப்பட்டார்.

முருகையனும், லோகேஸ்வரனும் திருப்பதியனும் வண்டிக்குள் ஏறிக் கொண்டனர். குணசிங்கன் எதையோ நினைத்துக் கொண்டு நின்றுவிட்டான்.

வண்டி புறப்படத் தயாரானபோது கந்தையர் வியர்க்க களைக்க ஓடிவந்தார்.

அவரின் கொடுக்குக் கட்டுக் கட்டியபடியே இருந்தது.

கையில் குளை வெட்டுக் கத்தி இருந்தது.

அவர் தோட்டத்துக்குள் நின்று அப்படியே வருகிறார்.

அவர் ஒன்றும் பேசவில்லை.

சீதை அவரைப் பார்த்து அழுதாள்.

''எல்லாம் பிறகு வந்து பாக்கிறன். நீர் போம் வீட்டை, நானும் போட்டு வாறன்!'' என்று கூறிக் கொண்டே கந்தையரும் வண்டிக்குள் ஏறிக்கொண்டார்.

வண்டி பறப்பட்டு விட்டது.

செல்லியும், பூதியும் சீதையை அழைத்துக் கொண்டு அவள் வீடு வரை வந்தனர்.

''புள்ளை நாச்சியார், வாத்தியாருக்கு ஒண்டும் வரா தெணை பயப்பிடாதை எணை!'' என்று போகும்போது பூதி மறுபடியும் சீதையை ஆசுவாசப்படுத்தினாள்.

''எல்லாம் உன்னாலை வந்ததெடி, உன்ரை புரியன் புடிப்பிலை! அண்ணை உன்னெட்டை வந்திட்டு வரேக்கை



ஆரோ உன்ரை ஆக்கள்தானெடி ஒழிச்சிருந்து இப்பிடிச் செய்து போட்டாங்கள்!''

சீதை ஆத்திரத்துடன் பேசிவிட்டாள்.

பூதி திடுக்குற்றுப் போய்விட்டாள்.

செல்லிக்கு உடம்பெல்லாம் கொதித்தது.

ஆனாலும் இருவரும் எதுவும் பேசவில்லை.

வாத்தியார் வீடுவரை வந்து அவளை விட்டுவிட்டுத் திரும்பினர்.

சீதையை விட்டுவிட்டு செல்லியும் பூதியும் மௌன மாகவே நடந்து கொண்டிருந்தனர்.

பூதியின் மேல் வந்த பழியை எண்ணி எண்ணிச் செல்லி மனதுக்குள் குமைந்தாள்.

இயனக் கூடு கிலுங்க மார்க்கண்டன் அவசர அவசர மாக எதிரே வந்து கொண்டிருந்தான்.

''என்ன பூதி ஆச்சி! வாத்தியாரை ஆரோ அடிச்சு முறிச்சுப் போட்டாங்களாம்! விளாத்தியெடியிலை கிடக்கி றாராம்!'' என்று பரபரத்துக் கொண்டே மார்க்கண்டன் கேட்டு, இவர்களை விலத்திக் கொண்டே விளாத்தியெடிப் பக்கம் போக அவசரப்பட்டான்.

''ஓமடா தம்பி; உன்ரை ஆக்கள் அடிச்சு முறிச்சுப் போட்டாங்கள்! வாத்தியார் பள்ளவீடு தின்னி எண்டு சொல்லிக் கொண்டு திரிஞ்சவன்கள் வாத்தியாருக்கு நல்ல பழக்கம் பழக்க அடிச்சு முறிச்சுப் போட்டாங்கள்! எங்க ளெட்டைக் கதை விடுறாய் என்ன?''

இப்படிச் சொல்லிவிட்டு அவனை விலத்திச் செல்லப் பூதி எத்தணித்த போதுதான் மார்க்கண்டனுக்குப் பூதியின் குத்தல் விளங்கியது.

மார்க்கண்டனால் பூதிக்குப் பதில் கூற முடியவில்லை.

''ஆச்சி! என்னிலை நீ ஐமிச்சப்படுறாய்? நான் வாத்தியாருக்கு அப்பிடிச் செய்வன் எண்டு சொல்லிறியோணை? இந்தத் தளனாரைக் கடந்து கொண்டு சொல்லுறன் ஆச்சி எனக்கு ஒண்டுந் தெரியாது!''

மார்க்கண்டன் இயனக்கூட்டில் தொங்கப் போட்டிருந்த தளைநாரை எடுத்து அதை நிலத்தில் போட்டுக் கடந்து அதற்கு மேல் சத்தியம் வைத்தான்.

''நானும் ஆயிரங்கோயில்லை சத்தியம் செய்வன்! உவன் இளையதம்பியனும், உன்ரை சினேகிதப் பொடியளும் சேந்துதான் உதைச் செய்திருப்பாங்கள் எண்டு! இளையதம்பியனுக்கு ஆள்பிடிக்க நீயும் வந்தனியெல்லே!''

மார்க்கண்டன் வாய் அடைத்துப் போய் நின்றான்.

பூதியின் தர்க்க ரீதியான பேச்சுக்கு அவனால் பதில் கூற முடியவில்லை.

அவன் நின்றபடியே நிற்க, பூதியும், செல்லியும் போய்க் கொண்டிருந்தனர்.

# 51

வண்டி, கட்டுவன் சந்திப்புக்கு வந்தபோதுதான் கந்தையர் வாய் திறந்து பேசினார்.

''என்ன பொடியள்! ஒரு காரைக் கீரைப் பிடிக்க முடியாமல் போச்சே? சந்திக் காரிலை ஒண்டைப் பிடியாதையுங்கோவன்!''

கந்தையரின் இந்தப் பேச்சுக்கு, ''நானும் கேக்கு மட்டும் கேட்டுப் பாத்தனான் பாருங்கோ! ஒருதரும் மாட்டன் எண்டிட்டினம்; பள்ளனுக்கெண்டாச் சம்மதிக்க மாட்டினமெண்டிட்டு, சுப்பையா வாத்தியாருக்கு



எண்டுகூடக் கேட்டுப் பாத்தன்! வாத்தியாரெண்டா என்னடா எங்களுக்குத் தலைப்போ, பள்ளியளுக்குந் தான்ரா அவன் தலைப்பு!'' எண்டு சொல்லிப் போட்டு மாட்டன் எண்டிட்டாங்கள். உங்கடை அண்ணற்றை மோன் கணேசுவரன் தம்பியெட்டையும் கெஞ்சிப் பாத்தன்; வாத்தியாருக்கு ரெத்தம் போகக்கு முன்னம் பெரியாசுபத்திரிக்குக் கொண்டு போகவேணும் எண்டும் கேட்டுப் பாத்தன்; அவரும் மாட்டன் எண்டிட்டார்'' என்று முருகையன் பதில் கூறினான்.

சந்திப்பு வந்து விட்டது.

கந்தையர் கொடுவாக் கத்தியுடன் சந்திப்பில் வண்டியை நிற்கச் சொல்லிவிட்டுக் குதித்தார்.

கையில் உயர்த்திப் பிடித்த கத்தியுடன், வெறும்மேல் கொடுகுக் கட்டுடன் ருத்திரமூர்த்திபோல ஆவேசத்துடன் அவர் குதித்த குதிப்பைப் பார்த்து சந்திப்புக் கலகலத்துவிட்டது.

கந்தையரின் கண்ணில் முதலில் பட்டவன் அவரின் அண்ணனின் மகன் கணேஸ்வரன்தான்.

''டேய் கணேசு! வாத்தியாரை ஆசுபத்திரிக்குக் கொண்டு போகக் கார் விடமாட்டன் எண்டனியாமாடா; எடடா காரை! ஏத்தடா வாத்தியாரை!'' என்று கந்தையர் உரக்கக் கூவினார்.

கணேசன் தயங்கிப் போய் - ஏங்கிப்போய் நின்றான்

''டேய் கழுத்து வெட்டிப்போடுவன் எடடா காரை!'' என்று கூவிக்கொண்டே கந்தையர் ஓங்கிய கத்தியுடன் அவனை நெருங்கினார்

கணேஸ்வரன் இயந்திரப் பாவை போல காரின் கதவைத் திறந்து விட்டான்.

''பொடியள்! வாத்தியாரைக் காரிலை ஏத்துங்கோடா!'' என்று கந்தையர் குரல் வைத்ததுதான் தாமதம் வாத்தியார் காரில் ஏற்றப்பட்டார்.

கந்தையர் கத்தியுடன் முன் சீற்றில் ஏறினார்; லோகேஸ்வரனும், முருகையனும் வாத்தியாரின் பக்கமாக ஏறிக் கொண்டனர்.

மற்றக் கார்க்காரர்களும் சந்திப்பில் நின்றோர்களும், கடைக்காரர்களும் ஏங்கிப்போய் நிற்க, கணேஸ்வரன் காரைச் செலுத்திக் கொண்டு சென்று மறைந்தான்.

''எண்டாலும் அவர் வந்து சண்டித்தனம் காட்டிக் கார் கேக்கையிக்கை கணேஸ்வரன் மடையன் விட்டிருக்கப் படாது.''

''அவன்ரை சிறியதேப்பன் வந்து கத்தியைக் காட்டிக் கேக்கையுக்கை அவன் விடாமல் என்ன காணும் செய்யிறது?''

''ஓமோம், தம்பி சொல்லுறதுஞ் சரி, அவை ஒண்டுக்கை ஒண்டு மற்றவை தலையிடேலுமோ?''

''என்னத்தான் ஒண்டுக்கை ஒண்டெண்டாலும் கொஞ்சம் முந்தி எல்லாரும் ஒத்தாப்போலை மாட்டான் எண்டு சொல்லிப் போட்டு இப்ப அவற்றைக் கத்திக்குப் பயந்து விட்டது மரியாதையில்லை; இந்த மரியாதை கேடு சந்தியிலை கார் வைச்சிருக்கிற எல்லாருக்குந் தான்!''

''அவங்கள் மூண்டு பள்ளர் உதவிக்கிருக்கிறாங்கள் எண்ட துணிவிலை எல்லோ உதர் சண்டித்தனம் விட்டிட்டுக் காரைக் கொண்டு போறார்; கணேஸ்வரனைப் போலை நானாயிருக்கவேணும், அவருக்குப் படிப்பிச்சுக் காட்டுவன்!''

''நாளைக்குப் பள்ளர் எங்களை மதிப்பாங்களோ சொல்லுங்கோ பாப்பம்!''

''உப்ப என்ன மதிக்கிறாங்களே? எங்கடை வழிசலுகள் பள்ளவீடு வழிய திண்டு குடிச்சு, படுத்தெழும்பி, வைப்புகளையும் வைச்சிருக்கேக்கை கெடாத மதிப்பு இனியே கெடப்போகுது!''



''ஓமோம், அவள் பூதிப் பள்ளியை இளையதம்பியர் விட்டிட்டாராம்; வாத்திதான் இப்ப மேய்க்கிறானாம்!''

''எண்டு எல்லாருங் கதைக்கினந்தான்! முந்தநாள் இளையதம்பியரே வெக்கத்தைவிட்டுச் சொல்லிப் போட்டார், எண்டாலும் நான் நம்பேல்லை. பெஞ்சன் எடுத்தாப்போலையும் வாத்திக்கு உந்த ஆசை இருக்குமெண்டு நான் நினைக்கேல்லை!''

''பெஞ்சனுக்கும் பொம்பிளை பிடிக்கிறதுக்கும் ஏதும் தொடசல் இருக்கே? அது வேறை இது வேறை!''

''வாத்திக்கு ஆர்காணும் அடிச்சிருப்பாங்கள்?''

''பள்ளர்தான் ஆரோ அடிச்சிருக்கிறாங்கள்!''

''சாய்! அவங்கள் அப்பிடி வாத்திக்குச் செய்திருக்காங்கள்!''

''வாத்தியார் தமிழ் இயக்கங்களுக்கு மாறெண்டு உங்கினைக்கை பொடியள் கதைச்சவங்கள் எண்டு கேள்வி!''

''பொடியள் செய்தா இப்பிடிச் செய்யாங்கள். மாறான ஆள் எண்டு தெரிஞ்சுதோண்டா முடிச்சுப் போடுவாங்கள்!''

''ஓமோம், அண்ணை சொல்லுறதுதான் சரி! அவங்களெண்டா விடாங்கள். உங்கை எத்தினை பேரை இது வரையிலை முடிச்சுப் போட்டுக் கழுத்திலை மட்டையும எழுதிக் கட்டியிருக்கிறாங்கள்! உது இளையதம்பியற்றை வேலையாத்தான் இருக்க வேணும்! நேத்தைக்குச் சுருளியனையும் நாலைஞ்சு பேரையும் இளையதம்பியர் வீட்டுப் படலைக்கை கண்டனான்!''

''இஞ்சை சும்மா உந்த விசர்க்கதையளை விடுங்கோ! ஆர் கண்டது ஆர் செய்தவை எண்டு? எக்கணம் இளைய

தம்பியரும் அறிஞ்சாப் பழியாயத் தான் வந்து சேரும்! இந்தியாக்காறப் பொடியளை முடிச்சுப் போட்டார் எண்ணிற கதை இன்னும் தூந்தபாடில்லை. அதுக்கிடையிலை உதையும் கதைக்கலாமே விடுங்கோ!''

கடைசியில் செய்யப்பட்ட இந்த எச்சரிக்கைக்குப் பின் இந்தப் பேச்சுக்கள் சந்திப்பில் நின்று போய் விட்டன.

கார்க்காரர்களும் சந்தியைச் சூழ்ந்து நின்றவர்களும் இந்தச் சம்பாஷனையில் பங்கெடுத்துக் கொண்டதனால் இருந்த சலசலப்பு ஓய்ந்து போய்விட்டது.

ஆஸ்பத்திரிக்கு வாத்தியாருடன் செல்லாமல் நின்று விட்ட குணசிங்கன், வாத்தியார் வீழ்ந்து கிடந்த விளாத்தியடிச் சந்தியைச் சுற்றித் தகவல்களைச் சேகரிக்க முயன்றான்.

விளாத்தியடி, பள்ளர்கள் வாழும் ஓரப்புறப் பகுதிக்குள்ளேயே இருக்கிறது.

அன்று மாலை இருட்டியபோது சுருளியனும் வேறு நால்வரும் அந்த விளாத்தியடிச் சந்தியைத் தாண்டிப் போகும்போது பார்த்ததாக நான்கைந்து பேர் சொன்னார்கள்.

தாங்கள் கல்லுக் கிறேசர் வேலை முடிந்து வர நேரம் இருட்டிவிட்டதென்றும் அப்போதுதான் சுருளியனும் வேறு நால்வரும் இளைய தம்பியரைத் தேடிக் கிறேசருக்கு வந்ததாகவும் வேறு சிலர் சொன்னார்கள்.

இரவு பத்து மணிவரை நான்கைந்து சயிக்கிள்கள் விளாத்தியடிப் பக்கத்தால் இரண்டு மூன்று தடவைகள் சுற்றிச் சுற்றி வந்ததாக இன்னும் சிலர் சொன்னார்கள்.

குணசிங்கன் நேராக பூதி அக்கை வீட்டுக்குச் சென்றான்; அங்கே பூதி இல்லை.

அவன் செல்லி வீட்டுக்குப் போனான்; அங்கு பூதி இருந்தாள்.



பூதியைப் பார்த்தபோது அவள் எங்கோ வெளியே போவதற்கான அலங்காரங்களுடன் இருந்தாள். செல்லி கொட்டிலின் உட்புற அடைப்புக்குள் உடுப்பு உடுத்திக் கொண்டிருந்தாள்.

''எங்கை பூதி அக்கை துலைக்கே வெளிக்கிடுகிறியள்?'' என்று குணசிங்கன் கேட்டான்.

''வாத்தியாருக்கு என்ன பாடாக் கிடக்கெண்டு பாத்திட்டு வரப் போறமடா தம்பி!'' என்று பூதி பதில் சொன்னாள்.

செல்லியும் உடுத்திக் கொண்டு வெளியே வந்தாள்.

வட்டக் கழுத்து மேல் சட்டை!

தொங்கு தாவணி!

எண்ணெய் வழுவழுப்புடனான தொங்கு குடும்பி.

இலேசான பௌடர்ப் பூச்சு!

இப்படிக் கோலத்தில் செல்லியை குணசிங்கன் என்றும் கண்டதில்லை.

சமீபகாலமாக செல்லி தன்னை அழகாக வைத்திருக்க விரும்புகிறாள் என்ற இரகசியம் பூதிக்கு மட்டுந்தான் தெரிந்திருந்தது.

''உங்களோடை யோசிப்பம் எண்டிட்டுத்தான் வந்தனான்; வாத்தியாருக்கு ஆர் அடிச்சிருப்பாங்கள் எண்டு தான் கேப்பம் எண்டிட்டு வந்தனான்!'' என்று கதையைத் தொடங்கி வைத்தான் குணசிங்கன்.

ஏறக்குறைய அரை மணி நேரம் வரை அந்த ஆய்வு நடந்தது.

இரவு வாத்தியார் அந்தப் பக்கம் வரவில்லை என்ற பூதியினதும், செல்லியினதும் தகவலையும் எட்டு மணிக்கு மேல் வாத்தியார் முருகையனைத் தேடிக்கொண்டு அவன் வீட்டுக்கு வந்து முருகையனைக் காணாது போகவே

திரும்பிவிட்டதான முருகையனின் தகவலையும் சேர்த்துக் கொண்டு பார்த்தபோது குணசிங்கனுக்கு ஒன்றும் புரிய வில்லை.

''தம்பி நான் சொல்லுறன்; பேந்தெப்பவெண்டாலும் கேள்விப் படுவாய்; உது இளைய தம்பியன்ரை ஏவல் பிசாசுகள் செய்த வேலை எண்டு'' என்று பூதி கூறினாள்.

# 52

மார்க்கண்டனை ஒரு தடவை பார்க்க வேண்டு மென்று குணசிங்கனுக்குப்பட்டது.

மார்க்கண்டன் வீட்டுக்கு அவன் போனபோது மார்க் கண்டன் கொட்டில் தாழ்வாரத்தோடு படுத்திருந்தான்.

இந்த நேரம் மார்க்கண்டன் படுக்கையில் இருப்பான் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. எந்த வேளையிலும் ஏதாவது ஓய்ச்சல் ஒழிச்சலின்றிச் செய்து கொண்டிருப் பவன் இப்படிப் படுத்துக் கிடக்கிறான்!

கோப்பிறேசனுக்கு கள்ளைக் கொடுத்து விட்டு வருபவன், மத்தியானச் சாப்பாடு வரையில் பாளை வரிச் சலுக்கான நார் வார்ந்தோ, அல்லது தூண முட்டிகளுக்கு நார் இணைத்தோ, அல்லது இயனக் கூட்டின் திருத்த வேலைகளைச் செய்தோ, அல்லது பாளைக் கத்தி களைத் தீட்டியோ கொண்டுதான் இருப்பான். அவன் இன்று முகக் குப்புறக் கிடப்பது குணசிங்கனுக்கு ஆச்சரி யத்தைத் தந்தது.

''என்ன மச்சான் படுத்திருக்கிறாய்? எதும் சுகமில் லையே?'' என்று கேட்டுக் கொண்டே அவன் வந்தான்.



குணசிங்கனின் வரவை இந்த வேளையில் மார்க் கண்டன் எதிர்ப்பார்க்கவில்லை. திடுக்குற்றுக்கொண்டே அவன் வந்தான்.

அவன் கண்கள் சிவப்பாகி, முகம் உப்பி, கண்ணீர்ப் பசை கன்னத்தில் காய்ந்திருந்தது.

''ஒண்டுமில்லை மச்சான் நானும் என்ரை சினேகிதப் பொடியளும் சேந்துதான் வாத்தியாரை அடிச்சு முறிச்சுப் போட்டம் எண்டு ஊரெல்லாம் கதைக்கினம் மச்சான்! நீ இதை நம்பிறியே?''

இந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டு மார்க்கண்டன் குணசிங்கனின் முகத்தையே நோக்கியபடி இருந்தான்.

ஏதும் பேசாமலே குணசிங்கன் ஒட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டான்.

''என்ன மச்சான் பேசிறாயில்லை? நீயும் நம்பிறாய் போலை கிடக்கு!'' என்று மறுபடியும் கேட்டுவிட்டு மார்க்கண்டன் விம்மத் தொடங்கினான்.

குணசிங்கன் அப்போதும் எதுவும் பேசவில்லை.

''தம்பி, உவன் காலமை துவக்கம் தண்ணி வெண்ணி குடியாமலுக்கு சேர்வையாலை வந்து குப்புறக் கிடக் கிறான்; கேக்க ஒண்டுஞ் சொல்லுகிறானில்லை; நீயெண் டாலும் என்னெண்டு கேள் மோனை!''

இந்தக் குரல் அடுக்களைக்குள்ளிருந்து கேட்டது. மார்க்கண்டனின் தாயின் குரல்!

அப்போதுதான் மண் குடத்தில் தண்ணீர் எடுத்து இடுப்பில்ஏற்றிக் கொண்டு மார்க்கண்டன் தங்கை வந்து சேர்ந்தாள்.

''எடி பிள்ளை,இஞ்சை குணசிங்கம் மச்சான் வந்திருக் கிறான்; வா பிள்ளை எப்பன் தண்ணி கலக்கிக் குடு!'' என்ற தாயின் குரல் மறுபடியும் கேட்க, குடத்தை முற்றத்

தில் கிடந்த பொச்சு பட்டை வளைவடுக்குக்கு மேல் வைத்துவிட்டு கீழ்க் கண்ணால் குணசிங்கனைப் பார்த்துக் கொண்டே அவள் அடுக்களைக்குள் போனாள்.

''மாமி, மச்சான் ராத்திரி என்னேரம் வீட்டை வந்தவன்?''

குணசிங்கன் மாமியாரைக் கேட்டான்.

''எங்கையோ போட்டு விடியப்புறமாத்தான் வந்தவன் தம்பி!''

மாமியார் பதில் சொன்னாள்.

குணசிங்கன் மார்க்கண்டனின் முகத்தை அர்த்த புஷ்டியோடு பார்த்தான்.

''மச்சான், என்ரை ஒரே ஒரு தங்கச்சியானைச் சொல்லுறன், நான் ஏறிற தளநாரானைச் சொல்லுறன்; வாத்தியாற்றை விஷயம் எனக்குத் தெரியாது மச்சான்! நானும் சந்திரனும் வாத்தியாற்றை மருமோனும் நோட்டீசுகள் ஒட்டப் போனனாங்கள் மச்சான்! காங்கேசன் துறை வரையிலை ஒட்டிப்போட்டு விடியப்புறந்தான் வந்தனாங்கள் மச்சான்! வாத்தியாரை நான் கடவுள் மாதிரி நினைக்கிறனான்; உன்னானைச் சொல்லுறன் வாத்தியாருக்கு உந்தவேலை செய்தவங்களை நான் சும்மா விடமாட்டன்; நீ இருந்து பார்!''

மார்க்கண்டனின் பேச்சுக்குப் பின்பு அமைதி நிலவியது.

மாமிக்காரி கலந்த தேநீரைக் கொண்டு வந்து இருவருக்கும் முன்னே இரு அலுமினியக் கிண்ணங்களில் வைத்தாள்.

''இப்ப எனக்கு எல்லாம் விளங்குது மச்சான்; இப்ப நீ தேத் தண்ணியைக் குடி!'' என்று குணசிங்கன் கூறிய போதுதான் மார்க்கண்டனின் நெஞ்சுப் பாரம் இறங்கியது.



''அது சரி மச்சான், ஆர் வாத்தியாருக்கு உந்த வேலையைச் செய்திருப்பாங்களெண்டு நீ நினைக்கிறாய்?'' என்று தேனீர் குடிக்கும்போது குணசிங்கன் கேட்டான்.

மார்க்கண்டன் தன் மனதுக்குத் தெரிந்ததை ஒழிவு மறைவின்றிக் கூறினான்.

பூதியக்கை வைத்திருந்த குறியைத்தான் அவனும் வைத்திருந்தான்.

மார்க்கண்டன் வைத்த குறியோடு பேச்சு ஓரளவுக்கு சமப்பட்டு விட்டது.

'மச்சான் நேரங் கிடந்தா வாவன் பட்டணத்துக்குப் போய் வாத்தியாரைப் பார்த்துக் கொண்டு வருவம்! பின்னேரச் சீவலுக்கு வந்திடலாம்!'' என்று குணசிங்கன் கேட்கவே மார்க்கண்டன் மேல் கழுவுவதற்காகக் கிணற்றடிப் பக்கம் போய்விட்டான்.

''தம்பி, நீங்கள் கதைச்சது எனக்கும் கேட்டதடா மோனை! நானும் சொல்லுறன் வாத்தியாருக்கு இளைய தம்பியன்தான் ஆள் வைச்சு அடிப்பிச்சிருக்க வேணும் எண்டு! பூதியக்கையும் இப்ப அவனெட்டைப் போறயில்லை எண்டு அவனுக்கு அழல். அதோடை தன்ரை தோட்டத்தறைக் கொத்துக்கு ஆக்களைப் போகவிடாமல் செய்தது வாத்தியார்தான் எண்டதும் அவன்ரை எண்ணம்! அதோடை இந்தியாக்காறப் பொடியனை அவன் சரிக்கட்டின சங்கதியை வாத்தியார்தான் பரப்பிக் கொண்டு திரியிறார் எண்டும் அவன்ரை யோசினை! எல்லாத்தையும் வைச்சு வாத்தியாரைச் சரிக்கட்டப் பாத்திருக்கிறான். ஏதோ நல்ல காலம் வாத்தியார் தப்பியிட்டார்.''

மாமிக்காரி அடுக்களைக்குள் இருந்தபடியே குணசிங்கத்துடன் பேசினாள்.

குணசிங்கன் அடுக்களைப் பகுதிக்கு வந்தான். அடுப்பில் கீரைக்கறி அவிந்து வாசனை வீசியது.

மச்சாள்காரி குணசிங்கன் உள்ளே வந்ததும் வெட்கத்துடன் ஒதுங்கிக் கொண்டாள்.

''ஓம் மாமி அப்பிடித்தான் நானும் நினைக்கிறான்; மச்சானும் அதைத்தான் சொல்லுறான்; பூதி அக்கையும செல்லி அக்காளும் உப்பிடித்தான் சொல்லுகினம்! உது வாத்தியாருக்கு அடிச்ச அடியில்லை மாமி! எங்கடை ஆக்கள் எல்லாருக்கும் அடிச்ச அடி! அதோடை பாவம் அந்த மனிசனுக்கும் பூதி அக்கைக்கும் தொடசல் எண்டு ஊருக்கை கதையையும் கட்டி விட்டிருக்கிறான். பாப்பம் எவ்வளவு காலம் உதைச் செய்யப் போறானெண்டு!' குணசிங்கன் மாமிக்காரிக்குக் கதை சொல்லி முடிந்தபோது 'மார்க்கண்டு!' என்ற குரல் படலையெடியிலிருந்து கேட்டது.

''ஆரோ கூப்பிட்டுக் கேக்குது மாமி!'' என்றான் குணசிங்கன்.

''அது சந்திரன் தம்பியின்ரை குரல் போலக் கிடக்கு!'' என்று மாமிக்காரி பதில் சொல்வதற்கிடையில் சந்திரன் முற்றத்திற்கு வந்து விட்டான்.

மச்சாள்காரிக்கு குணசிங்கனைப் பார்த்த போது ஏற்பட்ட வெட்கம் இப்போது போய்விட்டது. அவள் முற்றத்திற்கு வந்து ''அண்ணை கிணத்தடியிலை நிக்கிறார்!'' என்று பதில் சொல்லவே சந்திரன் கிணற்றடிப் பக்கம் போனான்;

சந்திரனுக்கு அந்த வீட்டில் இப்படி நெருக்கம் இருக்கென்பதை இன்றுதான் குணசிங்கன் கண்டான்.

''மார்க்கண்டு'' என்று அழைத்துக் கொண்டு அவன் முற்றம்வரை வந்தவரத்து, குரலை மட்டும் கொண்டு அது அவன்தான் என்று மாமிக்காரி அனுமானித்துக் கொண்டது, மச்சாள்காரி அவனுக்குக் கிட்டப் போய் அண்ணன் கிணற்றடியில் என்று சொன்னது. அவன் எந்த வித தங்கு தடையுமின்றிக் கிணற்றடிவரை சென்றது



எல்லாவற்றையும் குணசிங்கன் ஒரே வேளையில் அவதானித்துக் கொண்டான்.

சற்றுவேளைக்குப் பின் சந்திரனும் மார்க்கண்டனும் கிணற்றடியில் நின்று வந்தனர்.

''அப்ப நான் வாறன் மார்க்கண்டு!'' என்று கூறிக் கொண்டே சந்திரன் போய் விட்டான்.

அவன் அடுக்களைக்குள் நின்ற குணசிங்கனைக் காணவில்லை.

சற்று வேளைக்குள் உடுப்பை மாற்றிக் கொண்டு மார்க்கண்டன் குணசிங்கனுடன் செல்லத் தயாராகி விட்டான்.

இருவரும் வெளியே வந்தனர்.

''அப்ப பத்திரமாப் போட்டுவாருங்கோ பொடியள்!'' என்று அடுக்களைக்குள்ளிலிருந்து குரல் கேட்டது.

குணசிங்கனின் சயிக்கிளில் மார்க்கண்டன் ஏறித் தொற்றிக் கொள்ளச் சயிக்கிள் பட்டணத்தை நோக்கிப் புறப்பட்டுவிட்டது.

குணசிங்கன் நிமிர்ந்து மேலே பார்த்தான்.

பொழுது இன்னும் மதியத்துக்கு வரவில்லை.

பன்னிரெண்டு மணிக்கிடையில் போய்விடலாம் என்ற எண்ணத்தோடு சயிக்கிளை அவன் அவசர அவசரமாக மிதித்தான்.

''மச்சான் கேக்கிறன் எண்டு குறை நினைக்காதை! மில் முதலாளியின்ரை மோன் ஏன் மச்சான் வந்திட்டுப் போறான்?''

குணசிங்கன் கேட்டான்.

சற்றுவேளை மார்க்கண்டன் பேசவில்லை; பின்பு பேசினான்.

''மச்சான் அதைக் கேக்காதை மச்சான்; நான் சொல்லக்கூடாது! சொல்லுறதுஞ் சரியில்லை.''

## 53

மார்க்கண்டனும் குணசிங்கனும் ஆஸ்பத்திரி வாயிலுக்கு வந்து சேர்ந்தபோது ஆஸ்பத்திரிப் பெருங் கதவு இன்னும் திறந்துவிடப்படவில்லை.

வெளியே இருந்த வாகை மர நிழலுக்குள் பெண்கள் கூட்டமும், உள்புற நிழலுக்குள் ஆண்கள் கூட்டமும் மதிய நேரப் பார்வைக்காகக் கூடி நின்றது.

பெண்கள் கூட்டத்தை குணசிங்கன் நோக்கியபோது கூட்டத்தோடு சேர்ந்தாற்போல பூதியையும் செல்லியையும் ஒருபுறமாகவும், சீதையை மறுபுறமாகவும் அவன் கண்டான்.

மணி அடித்தது.

எல்லோரும் குமைந்து கொண்டு உள்ளே சென்றனர்.

''எந்த வாட்டிலையாமெடா தம்பி?'' என்று பூதி கேட்டாள்.

''உள்ளுக்கை போய் விசாரிச்சுப் பாப்பம்!'' என்று கூறிக் கொண்டே குணசிங்கன் நடக்க, அவனுக்குப் பின்னால் மார்க்கண்டன் வர, மார்க்கண்டனுக்குப் பின்னால் பூதியும் செல்லியும் வர, கடைசியாகத் தன் சீதை பின்னால் வந்தாள்.

எல்லோரும் உள்ளே சென்றபோது முருகையன் குறுக்கே வந்தான்.

அவன் முகம் வாடிப் போய் இருந்தது.



''அண்ணைக்கு என்னவாந் தம்பி?'' என்று சீதை முருகையனைக் கேட்டாள்.

''வாத்தியாருக்கு ரெத்தம் ஏத்த வேணுமாம்: டாக்குத்தர் ரெத்தம் குடுக்கிறத்துக்கு ஆள் வேணுமாம்!'' என்று முருகையன் பதில் சொன்னான்

''அதுக்கேன் முருகையா யோசிக்கிறாய்? குடுக்கிறது தானை!'' என்றான் குணசிங்கன்.

''மச்சான் நான் குடுக்கிறன்!'' என்றான் மார்க்கண்டன்.

''ரெத்தமும் பொருந்த வேணுமெண்டு சொல்லுறவை; என்ரை ரெத்தத்தை ஏத்தலாமெண்டு கேள் குணசிங்கன்!'' என்றாள் செல்லி.

''ஏன் ஆளுக்காள் அடிபடுகிறியள்! முதல்லை உள்ளுக்கு வாருங்கோ; அவையைக் கேப்பம்!'' என்று கூறிக் கொண்டே முருகையன் வழிகாட்ட எல்லோருமே வாத்தியாரின் கட்டிலுக்கு வந்துவிட்டனர்.

வாத்தியாருடன் லோகேஸ்வரன் நின்றான். திருப்பதியானும் நின்றான்.

சீதை அழுதாள்.

செல்லியும் அழுதாள்.

''உதென்ன அழுகை? வருத்தக்காறனுக்கு முன்னாலை அழுகிறதோ?'' என்று பூதி இருவரையும் பார்த்துக் கொண்டே கூறினாள்.

வாத்தியார் நீட்டி நிமிர்ந்து கிடந்தார்.

அவரின் கண்கள் மூடிக் கிடந்தன.

அவருக்குச் சுயநினைவு இல்லை!

''கனக்க ரெத்தம் போட்டுதாம்; அதுதான் ரெத்தம் குடுக்க வேணுமாம்; நான் என்ரை பேரைக் குடுத்திட்டு

வாறன்!'' என்று கூறிக் கொண்டே கந்தையர் நேர்ஸ் அறையிலிருந்து வந்தார்.

அவர் கொடுக்குக் கட்டுடன் இப்போது இல்லை.

அவரின் கொடுவாக் கத்தி கட்டிலுக்குக் கீழ் இருந்தது.

''ஒருதரும் குடுக்கத் தேவையில்லை; நான்தான் குடுப்பன்!''

மார்க்கண்டன் அடித்துக் கூறினான்.

முருகையன் குணசிங்கனை அழைத்துக் கொண்டு விறாந்தைக்கு வந்து ''என்ன குணம் உவனைக் குடுக்க விடுகிறதோ? தோழன் சூத்திரமாகச் செய்துபோட்டு இப்ப ரெத்தம் குடுக்க வந்திட்டான்!'' என்று கூறினான்.

''நீர் நினைக்கிறது போலை இல்லை முருகையா! அதெல்லாம் பேந்து நான் சொல்லுறன்; அவனைத்தான் குடுக்க விடுவம்!'' என்று கூறிக் கொண்டே முருகையனையும் அழைத்துக் கொண்டு குணசிங்கன் காரியாலயத்துக்குள் போனான். கந்தையரின் வயதான நிலையைச் சொல்லி மார்க்கண்டனையே கொடுக்கும் ஆளாகப் பதிவு செய்து கொண்டான்.

மார்க்கண்டனை இரத்தம் எடுக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றனர் உதவியாளர்கள்.

சீதையையும், செல்லியையும் வெளியே அழைத்துச் செல்லும்படி ஒரு நேர்ஸ் பெண் சொன்னாள்.

அவர்களை அழைத்துக் கொண்டு கந்தையர் விறாந்தைக்கு வந்து விட்டார்.

சற்று வேளைக்குப் பின் குணசிங்கன் விறாந்தைக்கு வந்தான்.

''நானும் முருகையாவும் திறப்பதியும் நிக்கிறம்; ராவைக்கு உங்கினை கடையிலை சாப்பிட்டுப் போட்டு



மாறி மாறி நிற்கிறம்; மணியடிக்கப் போகுது. நீங்கள் போங்கோவன்!'' என்று சொன்னான் அவன்.

மறுபடியும் ஒரு தடவை எல்லோரும் உள்ளே போனார்கள்.

வாத்தியாருக்கு ரெத்தம் ஏற்றுவதற்கான ஒழுங்குகள் நடந்து கொண்டிருந்தன.

''மார்க்கண்டு மச்சானையும் கூட்டிக்கொண்டு நான் வாறன்; நீங்கள் போங்கோ'' என்றான் குணசிங்கன்.

வெளியே மணி பலமாக அடித்தது.

இனிப் பார்வையாளர்கள் போய்விட வேண்டும்.

கந்தையர் முன்னே வர, கந்தையருக்குப் பின்னால் சீதை வர, சீதைக்குப் பின்னால் பூதி வர, கடைசியாக வாட்டின் வாயிலில் நின்று வாத்தியார் மேல் பார்வையைச் செலுத்திவிட்டுச் செல்லி வந்தாள்.

வெளியே வந்த கந்தையர், ''எட கத்தியை விட்டிட்டு வந்திட்டன்'' என்று கூறிக் கொண்டே மறுபடியும் உள்ளே வந்து கட்டிலுக்குக் கீழ் இருந்த கத்தியை எடுத்து தோளிற் துண்டால் சுற்றிக் கக்கத்துள் வைத்துக் கொண்டே வெளியே வந்தார்.

அங்கிருந்து கால்நடையில் நிரைக்கு நடந்து, பஸ் நிலையத்திற்கு வந்து பஸ்சைப் பிடித்து ஏறிக் கட்டுவன் சந்திப்புக்கு வந்து இறங்கும் வரையில் ஒருவருடன் ஒருவர் பேசவில்லை.

பஸ் கண்டக்டர் இடையில் பணம் கேட்டபோது பூதியும், சீதையும் போட்டி போட்டுக் கொண்டே பணத்தைக் கொடுக்க முற்பட்டனர்

பூதி, எக்கத்துள் இருந்த மடிப் பெட்டியை எடுத்து அதன் அறையை நீக்கி, பணத்தை வெளியே எடுப்பதற்கிடையில் சீதையே நால்வருக்கான பணத்தையும் கொடுத்துவிட்டாள்.

கடுமையான வெய்யில்!

சந்திப்பில் அதிகம் சனக் கூட்டம் இல்லை.

பஸ்ஸிலிருந்து நால்வரும் இறங்கியபோது சுருளியனும் இன்னும் இரண்டு பேர்களுந்தான் நின்றனர்.

கடைக்காரர்கள் கடைகளோடு இருந்தனர்.

''உங்கை பாரன் வாத்தியின்ரை துடக்குருத்துக்காறர் எல்லாரும் ஒண்டாகச் சேந்து போற வடிவை!'' என்ற குரல் கேட்டு கந்தையர் திரும்பிப் பார்த்தார்.

இது சுருளியனின் குரல்தான் என்பதை அவர் நிதானிப்பதற்கிடையில் சுருளியன் தாக்கமாகக் காறித் துப்பினான்.

அவனின் சுபாவம் அது.

யாரையாவது அவன் நக்கல் செய்வதாக இருந்தால் இப்படித்தான் செய்வான்.

''சுருளியன்தான் இளையதம்பியருக்காக உந்தவேலையைச் செய்திருப்பான்!'' என்று ஆஸ்பத்திரிக்குள் வைத்து குணசிங்கன் சொன்ன சொல்லு இப்போது கந்தையரின் புலன்களில் எழுந்து சிரசு வரை ஓடி எதிரொலித்தது.

கந்தையர் கக்கத்தில் துணிக்குள் இருந்த கொடுவாக் கத்தியை துணியைவிட்டு அகற்றினார்; சுருளியனை நோக்கி ஓடினார். ''என்னடா நாயே சொன்னனி?'' என்று குரல் வைத்துக் கொண்டே ஓடினார்.

சுருளியன் வெலவெலத்துப் போய்விட்டான்.

அவனுக்கு அந்தக் கணத்தில் வெறிமுறிந்திருக்க வேண்டும்.

சுன்னாகம் குறுக்கு றோட்டில் திரும்பி அவன் ஓடினான்.

கந்தையரும் ஓங்கிய கத்தியுடன் அவனைத் துரத்திக் கொண்டே ஓடினார்.



சீதையும், பூதியும், செல்லியும் திகைத்துப் போய் நின்றனர்.

சந்திப்பில் நின்றவர்களுக்கு சுன்னாகம் றோட்டுப் பக்கமாகப் பார்த்துக் கொண்டு நிற்பதைத் தவிர வேறொன்றும் தெரியவில்லை.

சுருளியனுக்கும் கந்தையருக்கும் இடையே இருந்த இடைவெளித் தூரம் ஒரு பத்து யார் வரையில் தான் இருக்கும்.

இளையதம்பியரின் கிறேசர் கதவுக்கு இன்னும் சிறிது தூரந்தான் இருந்தது.

சுருளியன் மூச்சைப் பிடித்துக் கொண்டு தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடினான்.

சுருளியன் இளையதம்பியரின் கிறேசருக்குத்தான் ஓடுகிறான் என்பதை கந்தையர் புரிந்து கொண்டு அந்த இடைத்தூரத்துக்கிடையில் அவனைப் பிடித்து விடலாம் என்ற நம்பிக்கையோடு ஓடினார். ஆசானுபாகுவான அந்த உடம்பைத் தூக்கிக் கொண்டு ஓடுவதில் அவருக்குச் சிரமம் எதுவும் இருக்கவில்லை.

பத்து யார் தூரம் ஒன்பதாகி, எட்டாகி, ஏழாகி, ஆறாகி, ஐந்தாவதற்கிடையில் சுருளியன் அகலத் திறந்து கிடந்த கிறேசர் கதவைத் தாண்டி உள்ளே ஓடிவிட்டான். ஆனாலும் கந்தையர் விடவில்லை. அவரும் உள்ளே வந்துவிட்டார்.

சுருளியன் ''ஐயோ! ஐயோ!'' என்று கத்தினான்.

கிறேசர் ஓசை ஓய்ந்த வேளை.

அவனின் கதறல் தெளிவாகக் கேட்டது.

''என்னடா சுருளி!'' என்று கேட்டுக் கொண்டே இளையதம்பியர் அறையை விட்டு வெளியே வருவதற்கிடையில் சுருளியன் அறைக்கு உள்ளே சென்று கதவைத் தாழ்ப்பாள் இட்டுக் கொண்டான்.

# 54

வாத்தியார் வைத்திய விடுதியிலிருந்து வீடு திரும்பிய இந்த இடைப்பட்ட நாட்களில் ஊரில் பல காரியங்கள் நடந்து விட்டன.

கந்தையர் சுருளியனைத் துரத்திச் சென்று திரும்பி விட்ட அன்று சாயந்தரம் அவர் ஆஸ்பத்திரிக்கு முருகையனுக்கும் குணசிங்கனுக்குமான இரவுச் சாப்பாட்டைக் கொண்டு வந்து சந்திப்பில் பஸ்சுக்காகக் காத்து நின்றபோது ஜீப்பில் வந்த பொலிசார் சந்தியில் வைத்தே அவருக்கு நாலு உதை உதைத்துவிட்டு ஜீப்பில் தூக்கிப் போட்டுக் கொண்டு சென்று, ஒரு இரவும், ஒரு பகலும் பொலிஸ் ஸ்ரேசனில் வைத்து நையப்புடைத்து விட்டு, மறுநாளைக்கு மறுநாள் மல்லாகம் கோட்டுக்குக் கொண்டு சென்று ஒப்படைத்தனர். அவர் மீது சுமத்தப் பட்ட குற்றச்சாட்டு; ''சுருளியனைக் கொலை செய்யும் நோக்கத்தோடு அவனைக் கத்திக்கொண்டு துரத்தியது'' என்பதுதான். நீதிபதி அவருக்குப் பதினான்கு நாள் விளக்க மறியல் தீர்த்து விட்டதும்; ஐந்தாவது நாள் சீதை செல்வாக்குடைய நடராசாப் பிரக்கிராசியாரை ஏற் படுத்தி 'மோசன்' போட்டு ஐயாயிரம் ரூபா உறுதிப் பிணையில் எடுத்ததும் சேர்த்து ஒன்று.

பூதியின் குடிசை எரிந்து சாம்பலாகிவிட, சுருளியனும், அவனுடன் அவனின் கையாட்களும் சேர்ந்து செய்ததைக் கண்கண்ட சாட்சிகள் பொலிசுக்கு முறைப்பட்டதும், பொலிஸ் இதுவரை ஒன்றுமே செய்யாமல் இருந்ததும் இளையதம்பியரின் கிறேசரிலும், கல்லுக் கிடங்குகளிலும் வேலை செய்தவர்கள் வேலைக்குப் போகாமல் இருந்ததும்,



வெளியிலிருந்து கூலி ஆட்களைக் கொண்டு வர இளைய தம்பியர் எடுத்த நடவடிக்கைகள் தோற்றுப்போனது மட்டும் அல்லாமல் ஆள்பிடிக்கக் கல்லாக் கட்டுவன் பகுதிக்குச் சென்ற சுருளியனையும், அவனின் சண்டித்தனக் காரரையும் கல்லாக் கட்டுவனார் கற்களால் எறிந்து வீழ்த்தி உதைத்ததும் சேர்த்து இன்னொன்று.

அற்பைச் சந்திக்குப் பக்கத்து சிறு றோட்டு மூலையில் வைத்து, பட்டாளக்காரர்கள் இரண்டு பேர்களை இரண்டு நாட்களுக்கு முந்திய இரவு சுட்டுக் கொன்றதும், பக்கத்து வீடுகளை எரித்துப் பொசுக்கியதும் சேர்த்து வேறொன்று

நேற்று இரவு புத்தூர் நிலாவரைச் சந்திப்புக்குப் பக்கத்தே இருந்த மின்கம்பத்தில் இனம் காணப்படாத ஒரு வாலிபனைக் கட்டி வைத்துச் சுட்டுக் கொன்றதும் ''சமூக விரோதி'' என்று கழுத்தில் அட்டை கட்டித் தொங்கவிட்டதும் சேர்த்து மற்றுமொன்று.

இவைகளைவிட வைத்திய விடுதியில் ஒரு பெரும் புதினமும் நடந்தது.

விளக்கமறியலிலிருந்து வந்ததும் கந்தையர் அங்கு போனார்.

அவர் போன நேரம் இருட்டும் வேளை.

இத்தனை நாட்களும் வாத்தியாருடன் மாறிமாறி நின்றவர்களுக்காகவெல்லாம் — இன்று தான் நிற்கப் போவதாகக் கூறிக் கொண்டுதான் அவர் அங்கு சென்றார்.

அன்று முருகையனின் முறை!

வாத்தியாருக்கு இப்போது சகலவித தெம்பும் திராணி யும் இருந்தது.

ப—20

''தம்பி முருகையா, இண்டைக்கு மச்சான் நிக்கப் போறனெண்ணிறார்; நீர் வீட்டைப் போட்டு நாளைக்கு வாருமன்!'' என்றார் வாத்தியார்.

''அதுக்கென்ன வாத்தியார்; அவரும் நிக்கட்டுக்கன்; நானும் நிக்கிறன். மாறி மாறி நிப்பம்!'' இப்படி முருகையன் கூறினான்.

இருவரும் மாறிமாறி நிற்பதாகவே முடிவாயிற்று.

மாலைப் பொழுதின் மணி அடிக்கும் வேளை!

செல்லி அவசர அவசரமாக வந்து சேர்ந்தாள்.

முருகையனுக்காக அவள் இரவுச் சாப்பாட்டை எடுத்து வந்தாள்.

கந்தையரைக் கண்டதும் அவளுக்குக் கூச்சமாக இருந்தது.

''வாத்தியாற்றை மச்சானும் நிக்கப் போறாராம் செல்லி அக்கா; நான் வெளியிலை போய் அவருக்கு ஏதும் வாங்கியாறன்'' என்று கூறிக் கொண்டே முருகையன் வெளியே போய்விட்டான்.

''எட தம்பி, இந்தாடா தம்பி காசு, இதைக் கொண்டு போ!'' என்று கந்தையர் சொல்லிக் கொண்டே முருகையனுக்குப் பின்னால் நடந்தார்.

போனவர் திரும்பி வரவில்லை. முருகையனைக் காசு கொடுக்க விடக் கூடாது என்பதற்காக அவரும் அவனுடனேயே போய்விட்டார்.

செல்லி வாத்தியாருக்கு நேருக்கு நேராக நின்றாள்.

அவளால் பேசமுடியவில்லை.

''செல்லி என்ன ஒண்டும் பேசாமல் நிக்கிறீர்?''

இப்படி வாத்தியார் கேட்ட கேள்வி செல்லியைச் சிலிர்க்க வைத்துவிட்டது.



இதுவரை செல்லியுடன் வாத்தியாருக்கு நிதானித்துப் பேசும் சந்தர்ப்பமோ அன்றி வாத்தியாருடன் செல்லிக்கும் நிதானித்துப் பேசும் சந்தர்ப்பமோ கிடைத்ததில்லை.

''உம்மட்டை ஒண்டு கேக்க வேணும் கேக்க வேணுமெண்டு கன நாளா யோசிச்சனான்; எண்டாலும் கேக்க முடியேல்லை; இப்பிடிக் கிட்ட வாரும்!''

வாத்தியாரின் இந்த அழைப்புக்கு, பதுமைபோல நகர்ந்து செல்லி வாத்தியாரின் முகத்துக்கு நேராக வந்துவிட்டாள்.

''நான் உம்மைக் கலியாணங் கட்டலாமெண்டு யோசிக்கிறன்; உமக்கு விருப்பமோ?''

வாத்தியார் தடங்கல் எதுவுமில்லாமலே நேராகக் கேட்டு விட்டார். இதுவரை ஒரு பெண்ணிடம் அவர் இப்படித் துணிவாகப் பேசியதில்லை.

செல்லி திடுக்குற்றுப் போனாள். எதை நினைத்தாளோ அவளுக்கு அழுகை வந்தது.

அவள் விம்மினாள்.

இப்போது வாத்தியார் திடுக்குற்றுப் போய்விட்டார்; அவருக்குப் பயம் வந்தது.

''காசு குடுக்கக் குடுக்கப் பொடியன் நெடுகிலும் வேண்டா மெண்டிட்டுப் போறான்'' என்று சொல்லிக் கொண்டே கந்தையர் வந்து சேர்ந்தார்.

கந்தையருக்குப் பின்னால் கிட்டிணண்ணன் வந்தா

''என்ன கிட்டிணு ரெண்டு மூண்டு நாளா ஆளைக் காணயில்லை? இளையதம்பிக்கு எமனா நீரும் கட்டுவனுக் கைதான் சுத்திக் கொண்டு நிக்கிறீர் எண்டு பொடியள் சொன்னதுகள்!'' என்றார் வாத்தியார்.

''ஓமோம் வாத்தியார். இதைவிடப் புண்ணிய காரியம் வேறை கிடக்கோ?'' என்று கேட்டுக் கொண்டே

கிட்டிணண்ணன் செல்லியை நோக்கினார். செல்லி முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டதைக் கிட்டிணண்ணனின் கண்கள் கண்டன.

''ஏன் செல்லி அழுகிறீர்; வாத்தியாருக்கு இப்ப நல்ல சுகமாக் கிடக்கு!'' என்று மட்டுந்தான் அவரால் செல்லிக்குக் கூற முடிந்தது.

முருகையன் சாப்பாட்டுப் பார்சலுடன் வந்து சேர்ந்தான்.

வெளியே மணி அடிக்கும் ஓசை கேட்டது.

''கிட்டிணர், இவள் பொட்டையையும் கொண்டுபோய் வசு ஏத்திவிட்டுப் போம்!'' என்றார் கந்தையர்.

செல்லி புறப்பட்டு விட்டாள்.

''நான் நாளைக்கு மட்டிலை வாறன் வாத்தியார்; நானும் இப்ப கட்டுவனுக்குத்தான் போகப் போறன்; கிறேசருக்கு வேலைக்குப் போகாத ஆக்கள் ராவைக்கு ஏதோ கூடிக் கதைக்கப் போறம் எண்டு சொன்னவை'' என்று சொல்லிக் கொண்டே கிட்டிணண்ணனும் புறப் பட்டு விட்டார்.

இரவு வந்துவிட்டது.

சற்று வெளியே போன கந்தையர் வாட் கங்காணிக்கு ஏதோ கொடுத்துவிட்டு வருவது முருகையன் கண்களுக்குத் தெரிந்தது.

''நான் கங்காணியைச் சரிக்கட்டிப் போட்டு வாறன்; ஒரு பாசிலை ஒரு ஆள்தான் நிக்கலாமெண்டவன்; இப்ப சரி'' என்று சொல்லிக் கொண்டே வந்தார் கந்தையர்.

முருகையன் செல்லிக் கொண்டு வந்த பார்சலைத் திறந்து அதற்குள் இருந்த சிறு பார்சல் ஒன்றை எடுத்து வாத்தியாருக்காக வைத்துவிட்டு, பக்கத்திலே வெறுமனே கிடந்த கட்டிலுக்குப் பக்கமாக கந்தையரை அழைத்து அவரின் பார்சலை அவரிடம் நீட்டினான்.



இருவரும் உட்கார்ந்து கொண்டனர்.

''தம்பி முருகு, அதிதெண்டு பாக்காதை மோனை; ரெண்டையும் போட்டு ஒண்டாக் குழையும்.''

கந்தையரின் இந்த முடிவை முருகையன் எதிர்பார்க்க வில்லை.

மைத்துனர் கந்தையரின் இந்த வார்த்தை வாத்தியா ரின் காதில் படவே அவரின் நெஞ்சு விம்மியது.

தலையைச் சரித்தபோது முருகையன் இரண்டு பிரிவு களையும் சேர்த்துக் குழைப்பதையும், அது குழைத்து முடியும்வரை கந்தையர் நீட்டிய இலையுடன் இருப்பதை யும் அவர் கண்கள் கண்டன.

அவர் நெஞ்சு இதன் பூரிப்பைத் தாங்கவில்லை. அது உள்ளுக்குள்ளே பொருமிப் புடைத்துக் கொண்டே இருந்தது.

''வாத்தியார், நீங்கள் இருந்து பாருங்கோ, உங்கடை மச்சான் போலை கமக்காறரும், முருகையன் போலை ஆக்களும் ஒரு சட்டியிலை தின்னிற காலம் வராட்டா? அப்பிடி வாறவரையிலை நானும் இருப்பன்; நீங்களும் இருப்பியள்!''

இப்படி என்றோ ஒருநாள் கிட்டிணண்ணன் சொன்ன வார்த்தைகள் வாத்தியாரின் செவிகளுக்குத் தொடர்ச்சி யாகக் கேட்கிறது.

இவைகள் எல்லாம் கூட்டுச் சேர்ந்தால் இது மிக முக்கியமான ஒரு புதினந்தான்.

இதற்குப் பின் பத்து நாட்கள் கழித்து வாத்தியார் வீட்டுக்கு வந்து சேர்ந்துவிட்டார்.

கன்னத்து அதைப்பு இன்னும் முற்றாகத் தீரவில்லை.

சீதை அண்ணனுக்கு வெந்நீர் வைத்துக் குளிக்க வைத்தாள்.

அவர் உடம்பு இப்போது சற்று உப்பி இருந்ததால் புதியதொரு நிறம் உடம்பெங்கும் தெரிந்தது.

உறவினர்கள் என்று யாரும் அவரை வீட்டில் வந்து பார்க்கவில்லை. மற்றப்படி செல்லியையும், பூதியையும் தவிர ஊரே வந்து வந்து பார்த்துச் சென்றது.

# 55

இளவேனில் காலம் முடிந்து முதுவேனில் தொடங்கி விட்டது.

தோட்டத் தறைகள் எங்கும் கண்ணுக் கெட்டாத தூரம் வரை பச்சைப் பசலென இருந்தது.

மிளகாய்க் கண்டுகள், கத்தரிக் கண்டுகள், வெண்டிக் கண்டுகள், புகையிலைக் கண்டுகள், வரம்புக் கரைகளோடு சேர்ந்த சேர்ந்தாற்போல இராசவள்ளிக் கொடிகள், பயித்தங்கொடிகள் இப்படிப் பலவிதப் பயிர்களாலும் நிலப்பரப்புப் பச்சையாகிவிட்டது. இந்தப் பச்சைப் பசேலுக்குள் வாழ்விழந்து கிடந்த இளையதம்பியரின் பத்துப் பாத்தித் தோட்டத் தறையை மேலோட்டமாகப் பார்த்துக் கண்டுகொள்வது கடினம்.

முதுவேனில் காலத் தொடக்கத்தில் கட்டுவன் பிரதேச தோட்டத் தறைகளென்றால் இப்படித்தான் இருக்கும்.

வரம்புகள் பார்த்தல், வாய்க்கால்கள் திருத்தல், தண்ணீர்ப் பாய்ச்சுதல், புல்லுக் கிளறல், உரந்தூவல், இப்படி வேலைகளுக்காக வெல்லாம் கூலிகள் தோட்டங்கள் எங்கும் பரவலாகக் காணப்படுவர்.

தோட்டக் கூலிப் பெண்களுக்கெல்லாம் கிராக்கியான காலம் இது.



பூதியைப் போலச் செல்லியும் இம்முறை ஒரு கூட்டம் இளங்கூலிப் பெண்களுக்கு வேலை வழிகாட்டியாக ஆகிவிட்டாள்; இதைப் பூதியின் ஆசியுடன்தான் அவள் ஆரம்பித்தாள். சரியாகச் சொன்னால் பூதிக்குக் கீழான உதவியாள் என்ற அந்தஸ்துதான். இதற்காக செல்லிக்கு அதிகப்படியான வருவாய் என்பதில்லை. ஒரு கௌரவப் பதவி—அவ்வளவுதான்!

வீடு எரிக்கப்பட்டதுடன் பூதி செல்லி வீட்டோடேயே குடித்தனம் போய்விட்டாள். எரிந்துபோன வீட்டை அதே இடத்தில் திரும்பவும் கட்டிக் கொள்வதற்கு இளைய தம்பியர் அனுமதிக்கவில்லை. அது அவருக்கான நிலம்!

இளையதம்பியரின் கிறேசர் இப்போது ஓடுவதில்லை.

இளையதம்பியரின் கல்லுக் கிடங்குகளில் வேலை செய்பவர்கள் இல்லாமல் அவைகள் வெறுமனே கிடந்தன.

கல்லுக் கிடங்குகளிலும், கிறேசரிலும் வேலைசெய்யப் பல ஊர்களிலெல்லாம் ஆள் பிடிக்க இளையதம்பியர் முயன்று முயன்று தோற்றுப் போனார். அவர் போன இடங்களுக்கெல்லாம், வேளையோடேயே கிட்டிணன்னன் போய் வந்து விட்டார்.

கல்லாக்கட்டுவனில் சுருளியனும் அவனது ஆட்களும் கல்லெறிக்கு இலக்கானதைப் போல அல்லாவிட்டாலும், இளையதம்பியர் போன இடமெல்லாம் அவருக்குக் கிண்டல் கதை சொல்லி அனுப்ப அந்தந்த ஊரவர்கள் தவறவில்லை. ஆனாலும் இளையதம்பியருக்குத் தெம்பு கூறிவந்தவர் மில்கார இராசரெத்தினத்தார்தான்! அவருக்கும் ஒருநாள் சோதனைக் காலம் வந்துவிட்டது.

ஏறக்குறைய பதினைந்து பேர்கள் வரை அவரின் மில்லில் வேலை செய்தார்கள். அவர்களில் பெரும்பான்மையினர் உள்ளூரவர்கள். குணசிங்கனின் தகப்பன் நல்லானைத்தான் அவர் தனது விசுவாசத்துக்குரியவன்

என்று கருதியதால அவனுக்கு மதிப்பளிப்பவர்போல நடந்து வந்தார்.

ஒருநாள் நல்லான் கூலிக்காரர்கள் கூலியை உயர்த்தித் தரச் சொல்லிக் கேட்டதான தகவலை அவர் காதில் போட்டான்.

உடனடியாக இதற்கு மறுப்புச் சொல்லும் துணிச்சல் அவருக்கு வரவில்லை. இளையதம்பியர் கூலியாட்களுக்காகத் தலையால் நடந்து பார்ப்பது அவருக்குத் தெரியும். அத்துடன் இம்முறை தோட்டத்தறைகளை குத்தகைக்கு விட்டிருந்ததனால் தோட்டக் கூலிகளுக்குக் கொடுக்கப்படும் கூலிகளைப் பற்றியும் அவருக்கு அக்கறையுமிருக்கவில்லை. இதனால் எல்லாம் இந்தத் தகராறில் தன்னை உட்படுத்திக் கொள்ள அவர் விரும்பாதிருந்தார். "எல்லாம் பாப்பம் நல்லான்!" என்று ஒன்றிரண்டு தடவைகள் சொல்லிச் சொல்லிப் பிரச்சனையைப் பின் தள்ளி வந்தார்.

நல்லான் விடவில்லை.

சதா அவரை அருட்டிக் கொண்டே இருந்தான்.

கடைசியில் ஒரு நாள் ஐந்து ரூபாய் கூலியைக் கூட்டித் தரச் சம்மதித்து விட்டதனால் இளையதம்பியரே தனிக் கட்டை ஆக வேண்டியதாயிற்று.

"இவங்களெல்லாம் ஆர்? தமிழர், எங்கடை ஆக்கள்! நான் திண்டாலென்ன அவங்கள் திண்டாலென்ன நல்லான்!" என்று ஒரு நாள் இராசரெத்தினத்தார் திருவாய் மலர்ந்தருளிவிட்டார்.

இதன் மூலம் அவர் தனது இனப் பற்றையும் ஊர் அறியப் பிரகடனப் படுத்தி விட்டார்.

இளையதம்பியர் கடைசித் துடுப்பையுமே இழந்து விட்டார்.



இராசரெத்தினத்தார் இப்போது இளையதம்பியருடன் கொண்டிருந்த தொடர்பையே குறைத்துக் கொண்டார்.

இளையதம்பியரைக் காண அவர் மனதால் வெட்கப்பட்டார்.

கடைசியில், தான் கூலிக் கூட்டத்திற்குப் பணிந்து போய்விட்டதான அவரின் உள் நினைப்பு இளையதம்பியரைக் காணுவதற்கான வெட்கத்தை அவருக்கு வருவித்து விட்டிருக்க வேண்டும்.

வாத்தியாரை அடித்து விழுத்திவிட அவரின் இடத்திற்கு 'கிட்டிணு' என்ற ஒருவன் வந்துவிட்டது இளையதம்பியருக்குத் தெரிய வந்தபோது, "இந்தக் கிட்டிணனை முடிவெடுத்துவிட்டால் எல்லாப் பிசகும் தீர்ந்த மாதிரித்தான்!" அவர் முதலில் இப்படித்தான் நினைத்தார். ஆனால் கிட்டிணண்ணனைத் தீர்த்துக் கட்டுவது முடியாத ஒன்றாக அவர் மனதுக்குள் முடிவு வர நீண்ட நாட்கள் ஆகவில்லை.

தான் செல்லும் இடமெல்லாம் இந்தக் கிட்டிணண்ணனின் செல்வாக்குத் தன்னை முந்திக்கொண்டே சென்று விடுவதை அனுபவங்கள் அவரின் மூளைக்கு அறிவித்துவிட்டன. இத்தனைக்கும் கிட்டிணண்ணன் தனது சாதியினன், சொந்தக்காரன் என்பதும் அவருக்குத் தெரிந்தும் இருந்தது. ஆயினும் உறவுமுறை கொண்டாடிக் கொண்டு பரதேசி வாழ்வு நடத்தும் கிட்டிணண்ணனிடம் அவனின் குடிசைக்குத் தலை தாழ்த்திச் செல்ல அவர் விரும்பவில்லை.

அரசியல் காரணங்களைச் சொல்லிக் கிட்டிணண்ணனை பொலிசில் மாட்டிவிடவும் அவர் முயன்று பார்த்தார். அதுவும் ஈடேறவில்லை. இன்று அரசின் சிம்ம சொற்பன நிலையிலிருப்பதாகத் தோற்றமளிக்கும் இயக்கங்களுடன் கிட்டிணண்ணனுக்குத் தொடர்புகள் இருப்பதாக நியாயப்படுத்தவும் முடியவில்லை.

இளையதம்பியர் களைத்துப் போனார்.

வீட்டைவிட்டு வெளியே வருவதற்கே கூசினார்; பெரிதும் வெட்கப் பட்டார்.

இப்போது அவருக்கு பழைய நினைவுகள்—குறைகள் தான் அடிக்கடி மனதுக்கு வரும்.

''பூதியைக் கைவிடாமலே வைத்துக் கொண்டு செல்லியை ஒரு மாதிரி பிடித்திருந்தால் இந்த இரண்டு பேரின்ரை கையிக்கையும் பள்ளரை வசப்படுத்தி வைச்சிருக்கலாம்... செல்லியையும்...''

''மருதப்பரையும், வாத்தியையும் தேவையில்லாமல் பகைக்கப் போனதாலை...''

''பொலிசுக்காறரோடை சிநேகிதம் வைச்சிருக்கிறதாலை இயக்கப் பொடியளும் ஒரு மாதிரி யோசிக்கிறாங்கள்! நல்ல காலம் அவங்கள் கேக்கிற நேரமெல்லாம் நோட்டாக் காசு குடுத்திருக்காட்டிலும், என்ரை மூத்தவனை அவங்களோடை சேரவிடாமலும் இருந்தனெண்டா இத்தறுதியிலே என்னை முடிச்சிருப்பாங்கள்...''

''பேய் வேலை செய்து போட்டன்; இராசரெத்தினம் போலை சேந்தோடியிருந்தாத் தப்பியிருப்பன்...மதிப்பாயுமிருந்திருப்பன்... பள்ளரையும் நில்லெண்ட இடத்திலை நிக்கச் செய்து கொண்டு...''

''கறுப்பையனைச் சரிக்கட்டித் தென்னம் பிள்ளையிக்கை தாட்ட சங்கதி வெளியிலை வந்திருக்காட்டி அதிலை இருந்து உதுகள் தொட்டிருக்காது! உவன் சுருளியனை நம்பி...! முந்தியும் ரெண்டு செய்யேக்கையும் அவனை நம்பித்தான் செய்ய விட்டனான். அப்ப ஒண்டும் வெளியிலை வரேல்லை; கறுப்பையன்ரை விஷயத்திலை இப்பிடி வருமெண்டு ஆர் கண்டினம்! எல்லாம் காலப் பகை காலம் பகைச்சு வரேக்கை எதையும் கேக்காது...''



''பேந்தும் பேந்தும் உவன் சுருளியனிலை தான் கோவங் கோவமா வருகுது! எட கடைசியிலை செய்யிறதை யெண்டாலுஞ் சரியாச் செய்தானே? வாத்தி செத்துப்போனான் எண்டு நினைச்சுக் கொண்டு பள்ளற்றை விளாத்தியடிச் சந்தியிலை கொண்டுபோய் போட்டிட்டு வந்து சொன்னாங்கள் 'வாத்தி சரி' எண்டு:... மடையன்...''

''சரி உதுகளைத்தான் விடுவம்! உவன் என்ரை அவளெண்டாலும் என்னை இப்ப மதிக்கிறாளே! கழுத்துத் தாலியை அறுத்து முகத்திலை எறிஞ்ச நாளையிலை இருந்து 'ஆணவாவிலை' முகம் ஒட்டிறாளில்லை; பூதியும் விட்டிட்டாள்; பூதி வாத்தியோடை இருக்கிறாள் எண்ட கதையை நான் கட்டியிராவிட்டால் பூதி என்னை விட்டிருக்க மாட்டாள்; அவள் செல்லியை வளைச்சுத் தந்திருப்பாள்... சை!''

இளையதம்பியரின் நினைவுத் தொடர்புகளுக்கூடாக எழுந்தெழுந்து மடிந்து கொண்டிருந்த எண்ணங்கள் குரல்களாகி அவரின் மனம், வாக்குக் காயம் ஆகியவற்றை வதம் செய்து கொண்டே இருக்காத நாட்கள் மிகச் சிலவாகவே இருந்தன.

இப்போது முதுவேனில் காலமும் முடியப் போகிறது.

## 56

வாத்தியாருக்கு உடம்பு தேறி வந்துவிட்டது.

கிட்டிணண்ணனும், அவருடன் அவருக்கு வேண்டிய பலரும், திருப்பதியன், குணசிங்கன், லோகேஸ்வரன், முருகையன் ஆகியோரும் அடிக்கடி வந்து போயினர்.

கூட்டாகவும் தனியாகவும் இவர்கள் வந்து போன ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் புதுப்புதுத் தகவல்களை வாத்தியாருக்குச் சொல்லிப் போயினர்.

அடுத்த மழை காலத் தொடக்கத்தோடு பல அயல் கிராமங்களில் உள்ள தோட்டக் கூலிகள் தங்கள் கூலி களைக் கூட்டித் தரும்படியும், கட்டுவனில் உள்ளது போல வேற்று ஏதனங்களில் உணவு தரும்படிக் கோரிக்கைகள் வைக்கப் போவதாகவும் கிடைத்த தகவல்கள் வாத்தி யாரின் மனதை உற்சாகப் படுத்துவதாக அமைந்திருந்தன.

கிட்டிணண்ணனும் மற்றவர்களும் கூட்டுச் சேர்ந்து, புத்தூர், சிறுப்பிட்டி, நிலாவரையடி, குரும்பசிட்டி, ஆவரங்கால் ஆகிய இடங்கள் உட்பட அச்சுவேலி வரை தங்கள் கைகளை அகல விரித்துக் கொண்டே போகி றார்கள் என்பதை மற்றவர்களுக்கூடாகக் கேட்டபோது வாத்தியார், தானும் இதில் கலந்து கொள்ள முடியாமல் இருக்க வேண்டியதாயிற்றே என்று கவலையும் பட்டார்.

இப்போது வாத்தியாருக்கு பழையபடி உடல்நிலை ஆகிவிட்டது. இரண்டொரு நாளில் தன் பங்கையும் செய்ய வேண்டுமெனத்தான் அவர் முடிவு செய்திருந்தார். அதற்கிடையில் ஒரு நாள் இப்படி நடந்துவிட்டது!

வாத்தியாரைப் பார்க்க பூதி வந்தாள்.

மத்தியான வேளை.

அடுத்தவீட்டு இலட்சுமிக்கிழவியிடம் ஏதோ தேங் காயோ மாங்காயோ கடன் வாங்க சீதை போயிருந்தாள்.

கந்தையர் தோட்டத்திற்கு.

பிள்ளைகள் பாடசாலைக்கு.

மூத்தவன் விவேகானந்தன் வீட்டை விட்டுப் போய் பதினைந்து நாட்களுக்கு மேலாயிற்று.

பூதி வந்தாள்.



''எங்கை பூதி உன்னை இஞ்சாலுப் பக்கங் காணேல்லை?'' என்று கேட்டுக் கொண்டே வாத்தியார் பூதியை வரவேற்றார்.

பூதி தலைவாசல் வாயில்படிக் குந்தில் இருந்தாள்; அவள் முகம் அவ்வளவு குளிர்ச்சியாக இல்லை.

அவள் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

குசினியையும் பார்த்தாள்.

எங்கும் ஆரும் இல்லை என்பதையும் கணக்கெடுத்துக் கொண்டாள்.

பூதி பேசும்வரை வாத்தியார் காத்திருக்கவில்லை. ''எப்பிடிப் பூதி ஊருக்கை எல்லாரும் சுகமாயிருக்கிறி யளோ? உன்ரை வீட்டையும் எரிச்சுப் போட்டாங்கள் எண்டு ஆசுப்பத்திரியிலை இருந்து கேள்விப்பட்டனான்; செல்லி வீட்டைதான் இருக்கிறாய் எண்டும் சொல்லிக்கினம்...''

வாத்தியார் பேசி முடிக்கவில்லை.

''அதுசரி வாத்தியார், நான் தெரியாமைக் கேக்கிறன்; பள்ளியளை நீங்கள் என்னெண்டு நினைச்சிருக்கிறியள்; எல்லாப் பள்ளியளையும் எல்லா நயினார்மாரும் வைப் பாடிச்சியளாய் வைச்சிருக்கலாமெண்டே நினைச்சுக் கொண்டியள்?''

பூதியின் ஆவேசமான இந்தக் கேள்விகள் வாத்தி யாரைக் குலுக்கி விட்டது.

''ஏன் பூதி ஆத்திரப்படுகிறாய்? விஷயத்தை விளங்கச் சொல்லன்!''

வாத்தியார் நேராகவே கேட்டார்.

''நீங்கள் செல்லியெட்டை ஆசுப்பத்திரியிலை என்ன கேட்டனீங்கள்?''

பூதியின் அடுத்த கேள்வியும் நேராகவே இருந்தது.

வாத்தியார் பேசவில்லை.

''என்னை இளையதம்பியன் வைப்பாடிச்சியாக வைச்சிருக்க விட்டிட்டன் எண்டதுக்காக ஊரிலை இருக்கிற பள்ளியள் எல்லாம் அப்பிடி விட்டிடுவாளவை எண்டோ நினைச்சுக் கொண்டியள்? புருசனை விட்டிட்டும், புருசன் செத்து இண்டைய வரையிலை கட்டுப்பெட்டி மாதிரி இருக்கிறவளை வைப்பாடிச்சியாய் வைச்சிருக்கப் போற னெண்டு நீங்க கேட்டதை இண்டைய வரையிலை என்னை விட அவள் வேறை ஆரெட்டையும் சொல் லேல்லை. சொல்லியிருந்தாளெண்டா நீங்க ஊரிலை திரியேலுமோ கேக்கிறன். இளையதம்பியன் சொல்லிக் கொண்டு திரியிறான்; வாத்தியாரைப் பூதி வைச்சிருக்கிறா ளெண்டு! நீங்கள் என்னெடாண்டா செல்லியை வைச் சிருக்கப் பாக்கிறியள்! வெள்ளியிட்ட காலுக்கு வெறுங் கால் அடிமையாய் வராது!...''

பேச்சை முடிக்காமலே பூதி புறப்படுவதற்காக எழுந்துவிட்டாள்.

அவள் முகம் குபீரென்று இருந்தது.

குடுமியை ஒருதடவை குலைத்து அவள் முடிந்து கொண்டாள்.

இப்போது வாத்தியார் பேசித்தான் ஆக வேண்டும். தவறினால் பூதி போய்விடுவாள்.

''பூதி, நான் சொல்லுறதையுங் கேட்டுப்போட்டுப் போ! செல்லியைச் சரியாக் கேள்; நான் என்ன கேட்ட னான் எண்டு! 'நான் உன்னைக் கலியாணங்கட்ட விரும் பிறன் உனக்குச் சம்மதமோ' எண்டுதான் கேட்டனான். வைப்பாடிச்சியாய் வைச்சிருக்கச் சம்மதமோ எண்டு கேட்டனோ எண்டு கேட்டுப்பார்! இப்பவும் உனக்குச் சொல்லுறன்! என்னையும் இளையதம்பியன் எண்டு



எண்ணிப் போடாதை! நான் ஒரு பள்ளியைத்தான் முறைப் படி கலியாணம் கட்ட விரும்புறன். அதுவும் செல்லியைத் தான் கட்ட விரும்பிறன்! செல்லியெட்டைச் சொல்லிவிடு. நாளைக்குக் காலமைக்குப் பத்து மணிபோலை கச்சேரிக்கு கலியாணம் றிசிஸ்ரர் பண்ணப்போறத்துக்கு அடுக்காய் வருவன்; விருப்பமெண்டா வெளிக்கிட்டு நிக்கச் சொல்லு! விருப்பம் இல்லை எண்டா நான் தெண்டிக்கேல்லை!''

வாத்தியாரின் இந்தப் பேச்சு பூதியைச் சிலையாக்கி விட்டது.

திரும்பிப் போக எண்ணியவள் அப்படியே சிலை ஆகி விட்டாள்.

அவளின் உடம்பெல்லாம் காரணமின்றி நடுங்கியது

வாத்தியாரின் முகத்தை நிமிர்ந்து கூடப் பார்க்க அவளுக்குத் தெம்பு இருக்கவில்லை.

உடம்புக்குள்ளே அவளின் ஜீவ உறுப்புக்கள் யாவும் விம்மிப் பொருமின.

இத்தனை ஆண்டுகால வாழ்க்கையில் என்றுமே அவள் இப்படி ஒரு லய உணர்வுக்கு ஆட்பட்டதில்லை.

வாத்தியார் கட்டிலில் இருந்தபடியே இருந்தார்.

வெளியே தகரப்படலை அடிபடும் சத்தம் கேட்டது.

கையில் தேங்காய் ஒன்றுடன் சீதை வந்துகொண்டிருந்தாள்.

''ஆரெடி பூதி போலை கிடக்கு?'' என்று கேட்டுக் கொண்டே அவள் வந்தாள்.

பூதி வாய் திறக்கவுமில்லை; நின்ற இடத்தைவிட்டு நகரவுமில்லை.

''ஏனெடி பூதி! இஞ்சையும் ஆக்களில்லாத நேரத் திலை வேசையாடவையெடி வந்தனி? அவரைச் சாக் கொல்லவையெடி வந்தனி?''

சீதையின் அடுக்கடுக்கான இந்த இரண்டு கேள்விகள் கூடப் பூதியை அசைக்கவில்லை.

அவள் பேசவுமில்லை; நகரவுமில்லை.

''வேசை, உனக்கு வெக்கம் இல்லையேடி? மானம் இல்லையேடி? ரோசமில்லையேடி?''

சீதையின் அடுக்கடுக்கான இந்த மூன்று கேள்விகள் கூட பூதியை அசைக்கவில்லை.

அவள் பேசவுமில்லை; நகர வுமில்லை.

''பூதி நீ போ; நான் சொன்னதைச் சொல்ல மறந்திடாதை!''

பூதி இப்போது அசைந்தாள்; நகர்ந்தாள்; போய் விட்டாள். தகரப்படலை அடிபடும் சத்தம் கேட்டது.

சீதை குசினிக்குள் புகுந்துவிட்டாள்.

சற்றுவேளை ஆயிற்று!

உள்ளே தேங்காய் உடைத்துக் கேட்டது.

வாத்தியார் எழுந்து குசினிக்குள் சென்றார்.

சீதை விம்மியபடி தேங்காய் துருவிக் கொண்டிருந்தாள்; அண்ணனைக் கண்டதும் முந்தானையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

''தங்கச்சி! நாளைக்கு என்ரை கலியாணம்; முறைப்படி உனக்குஞ் சொல்லுறன்; என்ரை கட்டைை அது!''

சீதை தலை நிமிர்ந்து அண்ணனின் முகத்தையே ஊடுருவிப் பார்த்தாள். ''நீங்க சொல்லுறது உண்மையோ?'' என்று அந்தப் பார்வை வாத்தியாரைக் கேட்பது போலிருந்தது.

''நான் பொய் சொல்லேல்லைத் தங்கச்சி! பொம்பிளை ஆரெண்டு நீ இன்னும் கேக்கேல்லை! பேத்தை வைத்தியன்ரை மோள் செல்லி! நாளைக்குக் கச்சேரியிலை எழுத்து எழுதிறதெண்டு இருக்கிறன்!''



இதற்குமேல் வாத்தியார் குசினிக்குள் நிற்கவில்லை. வெளியே தலைவாசல் கட்டிலுக்கு வந்துவிட்டார்.

மறுபடியும் தகரப்படலை அடிபட்டது.

இப்போது கந்தையர் தோளில் மண் வெட்டியுடன் தோட்டத்தில் நின்று வருகிறார்; வந்தவர் மண் வெட்டியைப் பச்குவமாக வைத்துவிட்டு கிணற்றடிக்குப் போய் விட்டார்.

மறுபடியும் தகரப்படலை அடிபட்டது.

இப்போது சிறுவர்கள் பாடசாலையால் வருகின்றனர்; வந்ததும் புத்தகங்களை வைத்துவிட்டு மாமாவின் பக்கம் வந்து செல்லமாக அவரைத் தட்டி விட்டு குசினிக்குள் போய்விட்டனர்.

பின்பும் தகரப்படலைச் சத்தம் கேட்டது.

இப்போது விவேகானந்தன் முன்னே வர, அவனைத் தொடர்ந்து இரண்டு புதிய இளைஞர்கள் அவசர அவசரமாக வருகின்றனர்.

விவேகானந்தனின் கையில் ஒரு சாக்குப்பை இருந்தது; அதை அவன் தாழ்வாரம் பக்கம் கொண்டு சென்றான். பின்பு வெறுங்கையோடு திரும்பினான்; நண்பர்களையும் அழைத்துக் கொண்டு போய்விட்டான்.

தகரப்படலை அடிபடும் ஓசை கேட்டது.

## 57

இன்றோ நாளையோ மறுபடியும் கார்காலம் பிறக்கப் போகிறது. முதுவேனிலின் வெட்கையும், கார்

காலக் குளிர்ச்சியும் கலந்த ஒரு வகை மதமதப்பு நிலையைக் கடந்து, குளிர்மையில் ஆதிக்கம் மேலோங்கி இருந்த இரவின் வர க்குப் பின் நீண்டநேரம் மார்க்கண்டனுக்காக சந்திரன் மார்க்கண்டன் வீட்டு ஒட்டுத் திண்ணையில் காத்திருந்தான்.

சிறு போத்தல் விளக்கு ஒன்று சற்று ஒதுக்குப்புறமாக வைக்கப்பட்டிருந்தது. அதன் ஒளி வராத இடத்தில் சந்திரன் இருந்தான்.

''ஏன் சின்ன நயினார் இருட்டுக்கை இருக்கிறீர்? உட்பிடி வெளிச்சித்திலை இருமன்'' என்று கூறிக் கொண்டே மார்க்கண்டனின் தாயார் அடுக்களைக்குள் போய்விட்டாள்.

மார்க்கண்டனின் தங்கையும் அடுக்களைக்குள்ளேயே இருந்து உலையில் நீத்துப்பெட்டியை ஏற்றி இலைக்கறியும், அயிரைமீனும் கலந்த குரக்கன் பிட்டை அவித்தெடுத்துக் கொண்டிருந்தாள்.

குரக்கன் மாவும், முசுட்டை இலைக்கறியும், அயிரைமீனுங் கலந்த குரக்கன்பிட்டின் வேகல் வாசனை வெளியே இதமாக வந்து கொண்டிருந்தது.

இரவுச் சாப்பாட்டுக்குக் குரக்கன் பிட்டென்றால் மார்க்கண்டனுக்கு மிகவும் விருப்பம்.

''என்னெணை ஆத்தை குரக்கன் பிட்டவிக்கிறாய் போலை கிடக்கு. வாசினை மூக்கைப் பிடுங்குது?'' என்று கேட்டுக் கொண்டே மார்க்கண்டன் முற்றத்திற்கு வந்தான். அவன் உடையில் நீர் நனைந்து சொட்டிக் கொண்டிருந்தது.

ஏறக்குறைய இந்த நேரம் முன்னேற்பாட்டின்படி சந்திரன் தன்னைத் தேடி வருவான் என்பது மார்க்கண்டனுக்குத் தெரியும்; ஆயினும் முன்கூட்டியே அவன் வந்து தனக்காக ஒட்டுத் திண்ணையில் காத்திருப்பான் என்று அவன் நினைக்கவில்லை.



''என்ன தம்பி வெள்ளனவே வந்தனீர்? நேரஞ் செண்டு போச்சுப் போலை கிடக்கு; உங்கடை வளவுக்கை இருந்து செல்லக்கண்டர் வீட்டு இளம்பாளையை அறுத்துப் போட்டு வருவம் எண்டிட்டுப் போனன்; செல்லக்கண்டற்றை மூத்த மோளின்ரை கடைசிப் பெட்டை கிணத்துக்கை விழுந்து போச்சு; நல்லகாலம் நானும் போகப் பெட்டையுங் கிணத்துக்கை விழுந்ததாலை கிணத்துக்கை குதிச்சுப் பெட்டையை எடுத்துப் போட்டன்'' என்று நடந்த விஷயத்தை சந்திரனுக்கு விளக்கினான் மார்க்கண்டன்.

''என்னடா தம்பி பொட்டை கிணத்துக்கை விழுந்து போச்சோ? நீ கிணத்துக்கை குதிச்சு எடுத்துப் போட்டியோ?'' என்று கேட்டுக்கொண்டே மார்க்கண்டனின் தாய் அடுக்களைக்கு வெளியே வந்தாள்.

''உமக்கேதும் காயம் கீயமே?'' என்று சந்திரன் கேட்டான்

''சீ அப்பிடி ஒண்டுமில்லை; பெட்டைக்கும் ஒண்டுமில்லை'' என்று மார்க்கண்டன் பதில் சொன்னான்.

''நீ கிணத்துக்கை குதிச்சுப் பொடியைத் தூக்கிப் போட்டாய் மோனை; இனி அவருக்கெல்லோ சிலவு'' என்றாள் தாய்.

இந்தப் பேச்சு சந்திரனுக்கு விளங்கவில்லை. ''நீங்கள் சொல்லுறது விளங்கையில்லை ஆச்சி!'' என்றான் அவன்.

''என்ன சின்ன நயினார், குழந்தைப்பிள்ளை மாதிரிக் கேக்கிறீர்? அவை மச்சம் மாமிசம் தின்னாத ஆக்கள்; நாளைக்கு கிணறு இறைக்கிறவங்களைத் தேடிப் பிடிக்க வேணும்; இறைச்ச கையோடை ஐயரைக் கூட்டியந்து சண்டாளப் பிராத்தனை செய்ய வேணும்; இந்த நாளையிலை இதெல்லாம் சும்மாவே தம்பி? ஊர்ப்பட்ட கனகாசெல்லை போகும்!''

மார்க்கண்டனின் தாயார் சொல்லி முடித்ததும் சந்திரன் பேசாமல் இருந்தான்.

''ஏன் சின்ன நயினார், இளையதம்பியற்றை கல்லு மிசின் கிடக்கிற வளவுக்கை வேறை சாதியள் கனக்கப் புழங்கிறத்தாலை, தங்களுக்குத் தெரியாமல் தண்ணி கிண்ணி அள்ளியிருப்பாங்கள் எண்டதாலை ரெண்டு மூண்டு மாதத்திலை ஒருக்கா ஐயரைக் கொண்டு வந்து சண்டாளப் பிராத்தினை செய்து கிணத்துக்குச் சாம்பிறாணிப் புகை காட்டிறவை! தெரியாதை சின்ன நயினார்?''

அவளின் தொடர்ந்த இந்தப் பேச்சு சந்திரனை வாய் அடைக்கச் செய்துவிட்டது. என்றாலும் முறைக்கு அவன் ஏதும் பேச வேண்டும்! ''இந்த வில்லங்கங்களெல்லாத்தையும் தீர்க்கிறதுக்குத்தான் பாருங்கோ நாங்கள் தமிழ் ராச்சியம் பெறவேணு மெண்ணிறம்!'' என்று அவன் சொன்னான்.

மார்க்கண்டன் இயனக் கூட்டைக் கழற்றிவிட்டுக் கிணற்றடிக்குச் சென்றுவிட்டான்.

''உப்பிடித்தான் நயினார் முந்தி முந்தியும் புள்ளடி கேட்டவை வந்து வந்து சொல்லிப்போட்டுப் போனவை! நானும் என்ரை வயதுக்கை எட்டுப் பத்துத் தரத்துக்கு மேலே புள்ளடி போட்டிட்டன். இன்னும் ஒண்டையுங் காணேல்லை. இப்ப சின்ன நயினாரும் அதைத்தான் சொல்லுது!''

சற்று வேளைக்குப்பின் அடுக்களைக்குள்ளிருந்து அவளின் குரல் இப்படி வந்தது.

மார்க்கண்டன் கிணற்றடியிலிருந்து வந்து சேர்ந்து விட்டான்.

''என்னவாந் தம்பி ஆத்தை?'' என்று அவன் சந்திரனைக் கேட்டான்.



''நீரும் உம்மடை மனதிலை இருக்கிற சந்தேகங்களைக் கேக்கிற மாதிரி அவவுங் கேக்கிறா; அதுதான் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறன்!'' என்றான் சந்திரன்.

ஆத்தையின் கேள்விகளுக்கு சந்திரன் பதில் சொல்லவில்லை என்று மார்க்கண்டன் நினைக்கவில்லை.

மார்க்கண்டன் புறப்பட்டுவிட்டான்.

''தம்பி பேந்து எந்நேரம் வாறியோ தெரியேல்லை; எக்கணம் குரக்கன் புட்டு விறைச்சுப் போகப் போகுது; சுடச்சுட எப்பன் திண்டிட்டுப் போவன்!'' என்ற தாயின் குரல் அடுக்களைக்குள்ளிருந்து கேட்டது.

''வேண்டாமெணை! நான் வந்து தின்னிறன்; என்ரை புட்டை உறியிலை வச்சுவிடு?'' என்று கூறிக்கொண்டே சந்திரன் சயிக்கிளை மிதிக்க மார்க்கண்டன் முன் வாரில் இருந்து கொண்டான்.

இருளுக்குள் சயிக்கிள் வேகமாக ஓடியது.
முதலில் ஒரு பெருவடலியின் அடிப்பாதை,
பின்பு தோட்டப் பரப்புப் பெருவரம்பு.
அதற்குப் பின்பு ஒரு கல்லு வீதி.
அப்புறம் ஒரு சிறு ஒழுங்கை,
பின்பு ஒரு நிலவடலிப் பரப்பு,
அதற்கும் அப்பால் ஒரு பெருவீதி நாற்சந்தி.
அதிலிருந்து ஒரு ஒற்றை அடிப்பாதை!

இப்படியே ஓடி ஓடிப்போன சயிக்கிள் கடைசியில் ஒரு கோயில் மண்டபத்தின் பின் மடப்பள்ளிக்குள் வந்து நின்றது.

ஏறக்குறைய ஒரு மணி நேரப் பிரயாணம்.

இந்த இடைநேரத்தில் இரண்டே இரண்டு தடவைகள்தான் குரலைத் தாழ்த்தி மார்க்கண்டன் இரண்டு கேள்விகளைக் கேட்டான்.

ஒரு சந்தர்ப்பத்தில் தோட்டக் கரைப் பெருவரம்பி லிருந்து சயிக்கிள் ஒரு பள்ளத்தில் விழுந்து எழுந்தபோது சந்திரனின் வயிற்று எக்குக்குள் இருந்த ஏதோ ஒன்று மார்க்கண்டனின் முதுகில் முண்டியது. ''என்ன தம்பி முதுகிலை ஏதோ இடிக்குது, மடியிக்கை என்ன கிடக்கு?'' என்று மார்க்கண்டன் கேட்க, ''அது ஒரு சாமான் மார்க்கண்டு?'' என்று மட்டுந்தான் சந்திரன் பதில் சொன்னான்.

அடுத்த சந்தர்ப்பத்தில் ''தம்பி இண்டைக்கு என்ரை மனதிலை இருக்கிற ஐமிச்சங்களை நான் தலைவரெட்டை கேக்கப் போறன்; கேக்கலாமே?'' என்ற மார்க்கண்டனின் கேள்விக்கு, ''ஓம்மோம் கேளுமன்; ஆனால் என்னெட்டைக் கேக்கிற மாதிரிக் கேக்காமல் சந்தர்ப்பத்தைப் பாத்து நைசாக் கேளும்!'' என்றுதான் சந்திரன் பதில் சொன்னான்.

மடப்பள்ளிக்குள் பலர் கூடி இருந்தனர்.

நட்டுக்கு நடுவே கோவிலின் நெடிய குத்துவிளக்கு ஒன்று மூன்று திரிகளில் எரிந்து கொண்டிருந்தது.

அந்தத் திரிகளின் மஞ்சள் சிவப்புக் கலந்த ஒளியில் உள்ளே இருந்தவர்களின் முகங்களை மார்க்கண்டனால் முற்று முழுதாக அனுமானிக்க முடியவில்லை. ஆனாலும் அடையாளம் கண்டு கொண்ட வரையில்...

பல ஆண்டுகளுக்கு முன் தந்தை வயிரவனுடன் சினேகிதமாக இருந்துவிட்டு ஊருக்குள் ஏற்பட்ட சாதித் தகராறில் வயிரவனைச் சுன்னாகம் சந்தையடியில் வைத்துக் குத்திக் கொன்றவனான சின்னத்துரையனின் மகன்...

தன் மூலமாகப் பாடசாலையில் எழுந்த தகராறில் தனது தாய் மாமனை உலக்கையால் அடித்துக் கொன்றவனின் மருமகன்...



தனது சிறிய தகப்பனார் இருந்த நிலத்தை ஈட்டுக்கென ஒப்பத்தைப் பெற்று, கடைசியில் அந்தக் கையெழுத்தை அறுதி உறுதிக்கான கையெழுத்தாக மாற்றி அதைத் தனக்காக்கிக் கொண்ட நல்லதம்பிப் பிரக்கிறாசியார்...

சந்திப்புப் பிள்ளையார் கோவிலுக்குள் பிரவேசம் செய்ததற்காகத் தன்னை அடித்து நொறுக்கியும், வடலிக் காணிக்குள் குடியிருந்தவர்களின் குடிசைகளுக்கு நெருப் பிட்டு அவர்களை வெளித் தெருவில் விட்டதன் மூலகர்த்தா காசிப்பிள்ளையரின் நடுவிலான்...

சுருளியனின் தம்பி...

இளையதம்பியரின் மூத்த மகன்...

ஆகியோர்கள் மட்டுந்தான் புலன்களுக்கும் கண் பார்வைக்கும் உட்பட்டவர்களாக இருந்தனர்.

மார்க்கண்டன் மடப்பள்ளி வாசலில் நின்றான்.

''இஞ்சை நாங்கள் உதுகள் ஒண்டும் பாக்கிறேல்லை; உள்ளுக்கு வாரும்!''

சந்திரனின் இந்தப் பேச்சு மார்க்கண்டனின் செவிப் புலன்களில் பட்டதோ இல்லையோ அவன் நகர்ந்து உள்ளே வந்துவிட்டான்.

கூட்டம் முழுவதின் கவனமெல்லாம் இப்போது மார்க்கண்டனதும், சந்திரனதும் மேல்தான் இருந்தது.

மார்க்கண்டனின் கால்கள் நடுங்கின. அவனின் நெஞ்சுக்கு மேல் ஒரு பெரும் பாரம் வைக்கப்பட்டது போன்றிருந்தது.

கூட்டத்திற்கு நடுவே அவனை உட்கார வைத்துவிட்டு சற்றுத் தள்ளி விளக்குக்குப் பக்கமாகச் சந்திரன் உட்கார்ந்து கொண்டான்.

மடப்பள்ளி வெளிக்கூடாகக் கிழக்கே உதித்து வந்த நிலாப்பாதியின் வெளிச்சம் தெரிந்தது.

மிகத் தொலைவில் செல்லும் வாகனங்களின் இரைச்சல் இலேசாகக் கேட்டது.

நேரமும் போய்க் கொண்டிருந்தது.

எல்லோருமே மௌனத்தில் புதைந்து யாருக்காகவோ காத்திருந்தனர்.

மேற்கே வெகு தொலைவில் றெயில் வண்டி ஒன்று பெருங்குரல் வைத்துக் கொண்டு கிளம்பியது.

அந்த ஓசை கிளம்புமானால் மணி சரியாகப் பதினொன்றாகத்தான் இருக்கும்.

அந்த வண்டி சுன்னாகத்தில் தரித்துக் கிளம்புவது சரியாகப் பதினொன்றுக்குத்தான்.

மடப்பள்ளிக்கு வெளியே இரண்டொரு சயிக்கிள்கள் வரும் ஓசை கேட்டது.

சயிக்கிள்களை வெளியே வைத்துவிட்டு நால்வர் உள்ளே வந்தனர்.

ஒருவனை மார்க்கண்டன் இனங் கண்டு கொண்டான்.

அவன் வாத்தியாரின் மருமகன் விவேகானந்தன்.

அவனுக்குப் பின்னால் இன்னொருவர் வந்தார்.

அவர் கறுப்புக் கண்ணாடியுடனும், சீருடை போன்ற சேட்டுச் சூட்டுடனும் வந்தார். பார்வைக்குச் சற்று முதுமைத் தோற்றம்.

அவரின் நடைபாவனை மார்க்கண்டனுக்கு அறிமுக மான நடைபாவனையாக இருந்தது. ஆயினும் அவரை இனங்கண்டு கொள்ள அவனுக்கு முடியவில்லை.

அதற்குப் பின்னால் இருவர் வந்தனர்.

அவர்களும் எடுப்பாக இருந்தனர்.

இந்தச் சேட்டுச் சூட்டுக்காரருக்கு அவர்கள் மெய்க் காவலர்களாக இருக்க வேண்டும்!



அவர்கள் தங்கள் இரு கைகளையும் இரு புறத்துக் காற்சட்டைக்குள் செருகி இருந்தனர்.

கூட்டம் அவர்களுக்கு மரியாதை செய்யும் நோக்கோடு எழுந்து நின்றது.

மார்க்கண்டனும் எழுந்தான்.

கறுப்புக் கண்ணாடிக்காரர் மரியாதைகளை ஏற்றுக் கொள்ளும் பாவனையுடன் எல்லோருக்குமாகக் கையமர்த் தினார். கூட்டம் இருந்து கொண்டது.

சந்திரன் எழுந்தான்.

"தோழர்களே, இப்போது எமது பிரதேசத் தலைவர் இன்று சத்தியப்பிரமாணம் செய்ய வந்துள்ள புதிய உறுப்பினர்களுக்குச் சில காரியங்களை விளங்க வைப்பார். அதைத் தொடர்ந்து சத்தியப் பிரமாண நிகழ்ச்சி நடைபெறும்."

இப்படிக் கூறிவிட்டு அமர்ந்து கொண்டான்.

கண்ணாடிக்காரர் எழுந்தார்.

"இப்போது நீங்கள் எம்மோடு இணைந்து கொள்ளும் சத்தியப் பிரமாணம் செய்துகொள்ளப் போகிறீர்கள்; எதற்காகச் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொள்ளப் போகிறீர்கள் என்பதை நீங்கள் முதலில் அறிந்துகொள்ள வேண்டும். ஒரு காலத்தில் இந்த நாட்டை ஆண்ட பரம் பரையில் வந்தவர்களாகிய நாங்கள் ஆளப்படுபவர்களாக — அடிமைகளாக இருக்கிறோம். எப்படியெனில்...

ஒன்று; நாம் பரம்பரையாக வாழ்ந்து வந்த எமது பிரதேச நிலம் அரசினரால் பறிக்கப்பட்டு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நடத்தப்படுகிறது...

இரண்டு; எமது மாணவர்கள் பத்தாவது வகுப்புக்கு மேல் போக முடியாத அளவுக்கு தரப்படுத்தல் என்ற விதி விதிக்கப்படுகிறது...

மூன்று; தட்டித் தவறிப் பத்துக்கு மேல் போடப்படும் தடைகளையும் தாண்டிப் படித்து முடித்துவிட்ட நமது இளைஞர்கள் அரச உத்தியோகங்களுக்குள் சென்று விடாமல் ஆங்காங்கே பல தடைக் கற்கள் போடப்படு கின்றன.

நான்கு; இந்த நாட்டின் பொது மொழியாக இருந்த ஆங்கிலத்தை நீக்கி, தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்ததன் மூலம் எமது வாழ்வெல்லாம் பறிக்கப்படு கிறது.

ஐந்து; சிங்கள ஏகாதிபத்தியத்தால் நாங்கள் தீண்டப் படாதவர்கள் ஆக்கப்பட்டு விட்டோம்.

மேலே கூறப்பட்ட இந்த ஐந்து மிலேச்சத்தனங் களையும் எதிர்த்து உயிருள்ளவரை போராட நாம் சத்தியப்பிரமாணம் எடுக்கப் போகிறோம்...''

கண்ணாடிக்காரர் பேசி முடிக்கவில்லை.

''நான் சில காரியங்கள் கேக்கப்போறன்; கேக்க லாமோ?''

இப்படி மார்க்கண்டன் கேட்டான்.

கண்ணாடிக்காரர் சம்மதிக்கும் பாவனையில் தலை அசைத்தார்.

''நான் கேக்க வந்தது என்னெண்டால் நீங்க சொன்ன இந்த ஐஞ்சு காரியமும் நடக்குது எண்டதை ஒத்துக் கொள்ளிறன்; அதே நேரத்திலை என்ரை கேள்வி என்னெண்டா, இண்டைய சிங்கள அரசாங்கம் செய்யிறது போலை இந்த ஊருக்கை ஒரு பகுதித் தமிழ் மக்களுக்குப் பெரிய ஆக்கள் இவ்வளவையுஞ் செய்யினம்; அவையின்ரை நிலங்கள்ளை இருந்து அவையைக் குடி எழுப்புகினம்; பத்தாம் வகுப்புக்கு மேலே அவையைப் படிக்க விடா மலுக்கு வில்லங்களை உண்டாக்குகினம்; பத்தாம் வகுப்பு வரையிலை படிக்கேலாமை இருக்கிறவைக்கு, உதுக்கு



மேலை உத்தியோகத்தைப் பற்றி யோசிக்கேலுமோ? பெரியாக்களைப் போலை இவை இங்கிலீசிலை படிச்சிருந் தாத்தானை அவை சிங்களம் வருகுது எண்டு கவலைப் படுவினம்; சரி கஞ்சியுக்கை பயறு போட்டது மாதிரி இதுகளுக்காலை படிச்சு உத்தியோகத்துக்குப் போற அந்தச் சனங்களின்ரை பிள்ளையளை இருக்கிற இடம் வளியவெண்டாலும் நிம்மதியாய் இருக்க விடுகினமோ பெரியாக்கள்? அவையளைத் தீண்டாச் சாதி ஆக்கி வைச்சிருக்கினம்; குண்டீக்கை போட்டுக் கஞ்சி வடிக்கினம்! ஏன் கனக்க வேண்டாம்; அவைக்கு உள்ளூருக்கை இருக்கிற கோயிலுகளையெண்டாலுத் துறந்துவிட்டு தமிழரோடை ஒண்டாச் சேக்கிறத்துக்கு ஏதெண்டாலும் ஒரு வழி காட்டுங்கோ பாப்பம்? என்ரை கண்ணுக்குத் தெரியக்கூடியதாக இதுக்கை எத்தனைபேர்...''

மார்க்கண்டனும் பேசி முடிக்கவில்லை.

சந்திரன் எழுந்து மார்க்கண்டனுக்குப் பக்கமாக வந்தான்.

மார்க்கண்டன் பேசி முடிக்கும் வரையில் கண்ணாடிக் காரர் காத்தபடியே நின்று கொண்டிருந்தார்.

கூட்டத்தில் சிறிது பரபரப்பு!

''உவனை ஏன்ரா இஞ்சை கொண்டு வந்தவங்கள்?''

இப்படி ஒரு அடக்கமான குரல்!

''உவங்கள் சரிவராங்கள்! உந்தச் சாதி எப்பவும் இப்பிடித்தான்; சிங்களவனுக்குக் காட்டிக் குடுக்கிற சாதி!''

இப்படி வேறோர் குரல்!

''உதுதான் நான் நெடுகச் சொல்லுறனான். படிப்பறி வில்லாதவங்களை உந்த இயக்கங்கள்ளை சேர்க்கப்படா தெண்டு!''

இது மூலையோடிருந்த பிரக்கிராசியாரின் குரல்.

சந்திரன் மார்க்கண்டனின் காதுக்குள் எதையோ சொல்லிக் கொண்டிருந்தான்.

கண்ணாடிக்காரர் எல்லோரையும் பேசாமல் அடக்கமாக இருக்கும்படி கையமர்த்தினார்.

கூட்டம் அமைதியாகியது.

''யாரும் ஆத்திரப்படத் தேவையில்லை. அவருக்குத் தனது கருத்தைச் சொல்ல உரிமை இருக்கிறது; அவர் சொன்ன நியாயம் பிழையானது என்று சொல்லிவிட முடியாது. ஆனால் எந்த வேளை எதைச் செய்வது என்று தீர்மானிக்கவேண்டியது இயக்கந்தான். எதை முதலில் செய்வது எதைப் பின்பு செய்வது என்பதனை அவர் உணரவில்லை. எமது இலக்கை நாம் அடைந்த பின்பு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இந்த உரிமைகள் யாவும் கிடைக்க வழி செய்யப்படும் என்பதை மட்டுந்தான் இப்போது சொல்ல முடியும்.''

கண்ணாடிக்காரர் சொல்லி முடித்துவிட்டு உட்கார்ந்துகொண்டார்.

மார்க்கண்டன் எழுந்தான்; மடப்பள்ளிக்கு வெளியே வந்தான்.

சந்திரன் எழுந்தான்; வெளியே வந்தான். ''மார்க்கண்டு; நில்லு மார்க்கண்டு'' என்று கூறிக் கொண்டே மார்க்கண்டனைத் தொடர்ந்தான்.

சற்றுத் தூரம் வரை இருவரும் சற்று இடைவெளி தூரத்தில் சென்றது மடப்பள்ளிக்குள் இருந்தவர்களுக்கு நிலவொளியில் தெரிந்தது.

சிறிது வேளைக்குப் பின் இரண்டு மூன்று வெடிச் சத்தங்கள் கேட்டன.

அந்தப் பக்கத்தில் ராணுவ வாகனங்கள் இரைந்து சென்ற ஓசையும் எழுந்தது; கரைந்தது!



# 58

மச்சாள் பெரிய கறுப்பி வீட்டு வாடிக்கையை முடித்துக்கொண்டு பூதி செல்லி வீட்டுக்கு வர நேரம் ஏறக்குறையப் பத்துக்கு கிட்டவாயிற்று.

குளிர்மையின் ஆதிக்கம் மேலோங்கி நின்ற இரவின் வரவிற்குப் பின்பு நீண்டநேரம் மச்சாள் காரியிடம் பேசிக் கொண்டு இருந்துவிட்டு அவள் இப்போதுதான் வந்தாள்.

''பூதிப்பொட்டை இண்டைக்கு நான் ஒருக்காச் சுதுமலைப் பக்கம் போட்டுவரப் போறன்; அவன் என்ரை மச்சானுக்குச் சுகமில்லையாம்; அதுதான் நீ வேளையோடை வந்திடு'' என்று செல்லியின் தகப்பன் பேத்தை வயித்தியன் மத்தியானம் போலக் கூறிவிட்டுப் போனதைப் பூதி தீர மறந்து போய் அவ்வளவு நேரம் இருந்துவிட்டாள்.

தனது கொட்டில் எரிக்கப்பட்ட நாளையிலிருந்து செல்லி வீட்டோடுதான் பூதி தஞ்சம் கையில் அகப்பட்டதைச் செல்லியிடம் கொண்டு வந்து கொடுத்து ஒரு பானைக் கஞ்சியாகவே வாழ்க்கையை ஓட்டி வருகிறாள்.

பூதி தனது வீட்டோடு வந்துவிட்டது செல்லிக்கு மிகவும் திருப்தி. தனது பேச்சுத் துணைக்கு ஆமான ஒரு ஆசான் அகப்பட்டது அவள் மனதுக்கு மகிழ்வாகவே இருந்தது. ஒவ்வொரு நாளும் மச்சாள் வீட்டு வாடிக்கையை முடித்துக் கொண்டு அவள் வந்து, அந்த உசார் முடியும்வரை பேசிப் பேசி, செல்லியால் தரப்படும் உணவை உண்டுவிட்டுத் தன் பாட்டிலேயே கொட்டிலில் ஒரு மூலைக்குள் சுருண்டு கொள்வாள். இதனால் செல்லிக்கு ஒரு சுமையும் பூதியால் இருப்பதில்லை.

அன்று பகல் பூதி அவசரம் அவசரமாக ஓடிவந்து வாத்தியாரின் தகவலைச் சொல்லி, தனது மனச்சுமையையும், அதன் எதிரொலிகளையும் கொட்டி அளந்து விட்டுப் போனவள், தோட்டத்திலிருந்து அப்படியே மச்சாள் வீட்டு வாடிக்கைக்காகப் போய்விட்டு இப்போதுதான் வருகிறாள்.

செல்லி மத்தியானத்திற்குப் பின் பின்னேர வேலைக்குத் தோட்டத்திற்குப் போகவில்லை.

அவள் மனது போகும் நிலையிலும் இல்லை.

''வாத்தியார் தன்னை ஒரு வைப்பாக வைத்திருப்பதற்காகவே ஆஸ்பத்திரியில் வைத்துக் கேட்டுள்ளார்'' என்று எண்ணியிருந்தவளுக்கு வாத்தியார் பூதி மூலமாக சொல்லி அனுப்பிய செய்தி திடுக்குற வைத்துவிட்டது.

வாத்தியாரின் இந்த முடிவு அவள் எதிர்பார்க்காதது.

''நாளைக் காலை கச்சேரிக்கு கல்யாண எழுத்துக்காகப் போவதற்குத் தயாராக இருக்க வேண்டும்'' என்று அவர் சொல்லிவிட்டிருக்கிறார்.

செல்லிக்கு மனது எதிலும் நிலைப்படவில்லை.

அவள் மனதுக்கு வாத்தியார் மிகவும் பெரும் மனிதராகத் தெரிந்தார்.

அவர் இப்படி ஒரு முடிவு எடுப்பதற்கான காரணத்தை அவளால் ஊகிக்க முடியவில்லை.

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் வாத்தியாரின் மனதை மயக்கும்படியான எந்தச் சூழ்நிலைக்கும் தான் ஆளாக்கப்பட்டதாக அவளுக்கு நினைப்பில்லை.

தன்னிடம் ஒரு குமரிக்கு இருக்கக்கூடிய எடுப்புச் சாய்ப்புகளில் எதுவும் இருப்பதாக அவள் நினைக்கவில்லை. இப்போது அதை ஒரு தடவை நினைத்துப்



பார்த்தாள். ஒரு அளவுக்கு மேல் நினைப்பைக் கொண்டு செல்ல அவள் மனது மறுத்தது.

வாத்தியாரை நினைத்து அவள் பயந்து நடுங்கினாள்.

அப்படி நடந்துவிட்டால் ஊரில் உள்ள நயினார்மார்கள் வாத்தியாரை வைத்திருக்க மாட்டார்கள் என்று அவள் முடிவுக்கு வந்தாள்.

அறிவறிந்த காலத்திலிருந்து இன்றுவரை ஊரிலும், மறு ஊர்களிலும் நடந்த பல சம்பவங்கள் அவள் நினைவுக்கு வந்தன.

ஊரின் பெரிய மனிதர் மருதப்பரின் அண்ணனின் மகன் ஆறுமுகம் ஊரெழு பள்ளி ஒருத்தியைக் கூட்டிக் கொண்டு ஓடியது... எங்கோ வன்னிக் காட்டில் அவளை வைத்திருந்து பின்பு பிள்ளையுந் தாயுமாக அவளை அழைத்து வந்து பள்ள பகுதிக்குள்ளேயே ஒரு வீட்டில் இருந்தது...... ஒரு நாள் ஆறுமுகத்தின் உடல் ஆலெடிச் சுடலை மடத்து வளையில் தூங்கியது...

இது ஒன்று.

பக்கத்துச் சிறுப்பிட்டியில் செல்லத்துரை ஓவசியரின் மகள் சரசுவதி கள்ளுச் சீவும் கந்தப்பனுடன் வீட்டை விட்டு ஓடியது... ஒருநாள் அந்தச் சரசுவதியை எங்கோ வைத்து அவர்கள் பிடித்துவந்தது... நான்கு நாட்களுக்குப் பின்பு ஒருநாள் அந்தச் சரசுவதி மண்டையில் காயத்துடன் வளவுக் கிணற்றில் விழுந்து கிடக்க, மறுநாள் கள்ளுச் சீவல் கந்தப்பன் முகம் கருக்கப்பட்ட நிலையில் கரந்தன் காட்டுக்குள் சாக்கோடு கட்டப்பட்டுக் கிடந்தது...

இது இரண்டு.

சின்னக்கண்டன் என்றவனைச் செல்லிக்கு நன்கு தெரியும். ஒரு வழியில் அவன் செல்லிக்கு சொந்தக்காரன்.

அவன் சின்னத்துரை எஞ்சினியர் வீட்டின் தொட்டாட்டு வேலைக்காரனாக இருந்தான்.

அவனுக்கு வயது பதினெட்டுக்கூட இருக்காது.

இஞ்சினியரின் நடுவிலாளுக்கும் சின்னக்கண்டனுக்கும் எப்படியோ 'காதல்' என்பது வந்துவிட்டது.

சின்னக் கண்டனுக்கு எழுதப் படிக்கத் தெரியாது.

நடுவிலாள் வீட்டு வேலைக்காரச் சில்வாவிடந்தான் சின்னக்கண்டனுக்கான தகவல்களை எழுதிக் கொடுத்தனுப்புவாள்.

சின்னக்கண்டன் அந்தக் கடிதங்களைக் கொண்டு வந்து செல்லியிடந்தான் படிக்கக் கொடுப்பான்.

செல்லி எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். சின்னக்கண்டன் கேட்கவில்லை.

சின்னக்கண்டனுக்குக் கடிதம் எழுதிக் கொடுக்கும் வேலையில் செல்லி ஈடுபடவில்லை. நடுவிலாள் எழுதும் கடிதங்களை மட்டும் படித்துச் சொல்வாள்.

அந்தக் கடிதங்களில் எல்லாம், இன்றைக்கு இன்ன இடத்துக்கு வா, இன்ன இடத்தில் நில் என்ற கட்டளைகளாகத்தான் இருந்தன.

ஒருநாள் சின்னக்கண்டன் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்தான்.

''இன்றைக்குக் கடைசி பஸ் போனதற்கு மேல் மேற்குப் பக்க வேலிப் பொட்டுக்கால் பூந்து வா!'' என்று எழுதியிருந்தது.

இந்த எழுத்து முன் போன்ற எழுத்துக்களாகச் செல்லிக்குப் படவில்லை.

''எடதம்பி, இது பொட்டையின்ரை எழுத்துப் போலை காணயில்லை. சில்வாதான் கொண்டுவந்து தந்திட்டுப் போறான் எண்டுஞ் சொல்லுறாய்! எனக்கு



என்னவோ ஐமிச்சமாக்கிடக்கு. உதை விட்டிடடா தம்பி!'' என்று செல்லி சொல்லிப் பார்த்தாள்.

சின்னக்கண்டன் கேட்கவில்லை.

மறுநாளைக்கு மறுநாள் தலை சிதறிய நிலையில் உருவந்தெரியாத சின்னக்கண்டனின் உடல் நீர்வேலி பறுகுக் காட்டுக்குள் கிடக்கக் காணப்பட்டது.

ஊரில் உள்ளவர்களுக்கெல்லாம் சின்னக்கண்டனின் மரணம் இஞ்சினியர் வீட்டில்தான் நடந்திருக்க வேண்டும் என்று சந்தேகம் இருந்தது. ஆனால் செல்லிக்கு மட்டும் அதில் சந்தேகம் என்பது இருக்கவில்லை— உறுதி! அவளுக்குந்தான் எல்லாம் தெரியுமே! அதை— தனக்குத் தெரிந்தவைகளை அவள் யார் காதுகளிலும் போட்டுவிட முடியாது.

அப்போதுதான் செல்லி கணவன் பொன்னனை விட்டு விட்டு வீட்டோடு வந்திருந்தாள். அந்தக் காலத்தில் இப்படித் தனக்குத் தெரிந்த தகவலை அவள் யாருக்கும் சொன்னால் ஊர் அவளை எப்படி நினைத்திருக்கும். சின்னக்கண்டனின் வரலாற்றை அப்படியே மனதுக்குள் அடைவைத்துக் கொண்டு அவள் இருந்துவிட்டாள்.

சில நாட்களுக்குப் பின் சிறிது சிறிதாகக் கதை பரவியது.

இளையதம்பியரின் தலைமையில்தான் சின்னக்கண்டனின் கணக்கு முடிக்கப்பட்டதென்பது...சுருளியன்தான் வேலிப்பொட்டுக்கால் தலையை நீட்டிய சின்னக்கண்டனின் தலையைக் கோடாலிப் பிடங்கால் சிதறடித்தான் என்பது...

இப்போது செல்லி அந்தச் சின்னக்கண்டனை நினைத்துப் பார்க்கிறாள்.

இளையதம்பியரை நினைத்துப் பார்த்தாள்.

சுருளியனை நினைத்துப் பார்த்தாள்.

அவள் உள் உறுப்புக்கள் யாவும் நடுங்கின.

உள்ளங்காலிருந்து பிறங்கால் தசைப்பற்றுக்கூடாக ஒரு நரம்புணர்வு வெறி நாய் போலச் சிரசுவரை ஓடி மறைந்தது.

விளாத்தியடிச் சந்திப்பில் வாத்தியார் உணர்வற்ற நிலையில் கிடந்தது, அவள் கண்களுக்கு முன்னால் வந்தது.

தலையிலிருந்து இரத்தம் கசிந்து ஊறிச் சிந்த...

கன்னங்கள் ஊதிப் புடைத்து நிற்க...

தங்கை சீதையைப் பார்த்துப் பேச முயன்று முடியாமல் போகவே தலை சோர்ந்து மடிய...

கண் விழிகள் மிரள மிரள...

இந்தக் காட்சிகளை மறுபடியும் ஒரு தடவை நினைத்துப் பார்க்க அவளால் முடியவில்லை.

எட்டுப் பத்து வருடங்களுக்கு முன் அல்வாயில் அன்னத்தின் புருஷன் செல்லத்தம்பியனுக்கு நடந்த காரியம் அவளுக்குத் தெரியும்.

அப்போது செல்லி குமரி.

அல்வாய் அன்னம் இவளுக்கு உருத்துக்கா—சின்ன வயதோடு தாரம் இழந்தவள்.

செல்லத்தம்பியன் கள்ளுக்காக அவள் வீட்டுக்குப் போய் வந்ததனால் அவளோடு நட்பாகிவிட்டான்.

ஒரு நாள் அவளை இழுத்துச் சென்று திருமணப் பதிவும் செய்து கொண்டான்.

சில நாட்களுக்குப் பின்பு மகனையும் மருமகளையும் வீட்டுக்கு வரும்படி அவனைப் பெற்ற தாயும் தந்தையும் அழைத்து... அன்னம் நித்திரையில் இருந்தபோது குசினிக்குள் வைத்து அவனின் சகோதரி அவன் கண்களுக்குள்



பொரிமாத்தூள் எறிய— அவள் புருஷனும் வேறு சிலரும் சேர்ந்து அவனை அடித்து... இரவோடிரவாக டிரக்ரரில் ஏற்றி...உப்புறோட்டு இரும்பு மதவுக்குள் —'இனந்தெரியாத — விதத்தில் முகத்தைக் கருக்கிவிட்டு போட்டுச் சென்றது... பின்பு அவனைப் பெற்றவர்கள் அவனை தங்கள் மகன் அல்ல என்று பிணத்தைக்கூட ஏற்க மறுத்தது......

அந்த அன்னத்தைத் தன்னோடும், வாத்தியாரை அந்தச் செல்லத் தம்பியனோடும், அந்தச் செல்லத்தம்பியனின் அக்காளை வாத்தியாரின் தங்கை சீதையோடும், வாத்தியாரின் மைத்துனர் கந்தையரை அந்தச் செல்லத்தம்பியனின் மைத்துனனோடும் இளையதம்பியரையும், சுருளியனையும் அந்தச் செல்லத்தம்பியனை முடிக்க உதவியாக இருந்த மற்றவர்களோடும் செல்லி ஒப்பிட்டுப் பார்த்தாள் 'ஐயோ வேண்டாம்!'' இப்படி அவளின் மனதுக்குள் மறுபடியும் ஒரு குரல் எழுந்து மடிந்தது.

செல்லி தந்தை வைத்தியனை எண்ணிப் பார்த்தாள்.

'அப்பிடி நடந்துவிட்டால் வயதுபோனநேரத்திலை அப்புவைக் கண்ட இடங்களிலை வைச்சு அடிப்பாங்கள்...'

''தோட்டந் துரவுகளுக்கை வேலை செய்ய விடமாட்டாங்கள்...''

''வீட்டுக்கும் நெருப்பு வைச்சுத் தெருவிலை விட்டிடுவாங்கள்...''

ஊர் நிலவரத்தை செல்லி எண்ணிப் பார்த்தாள்.

''இரவலுக்கை குடியிருக்கிறதுகளைக் குடி எழுப்பிக் கலைப்பாங்கள்...''

''வேலை வெட்டிக்குப் கூப்பிடமாட்டாங்கள்...''

''பொடியள் எதிர்த்துச் சண்டை பிடிப்பாங்கள் தான்...''

''எண்டாலும், பொலிசு, விதானை, கோடு, கச்சேரி எல்லாம் அவங்கடை பக்கத்துக்குத்தான் நிக்கும்...''

''தாங்கள் நேரை நிண்டு சண்டை பிடிக்காட்டாலும் பொலிசுக்காறரைக் கொண்டு அடிச்சுக் கொண்டு போடு வாங்கள்...''

''ம்... தமிழரெல்லாரையும் ஒண்டாச் சேர்க்கோணும் எண்ணிற பொடியள் ஏதெண்டாலும் உதவி செய்வாங் களெண்டால்...''

''மார்க்கண்டன் அவங்களோடை திரியிறவன், அவனுக்காக எண்டாலும்...''

''சாய் நம்பேலாது! இண்டைய வரையிலை, அவங்கள் எங்களுக்ாக ஒண்டுஞ் செய்யேல்லை...''

பகல் பொழுதெல்லாம் எதை எல்லாமோ மனத்துக் குள் போட்டுக் கொண்டு அவஸ்தைப்பட்ட செல்லி பூதிக் காகக் காத்திருந்துவிட்டு சுருண்டு படுத்துக் கொண்டாள். போத்தில் விளக்குச் சுடர்விட்டு எரிந்து கொண் டிருந்தது.

''என்னெடி மோனை படுத்திட்டாய் போலை கிடக்கு?'' என்று கேட்டுக் கொண்டே பூதி வந்தாள்.

''இப்பாணெணை இதிலை சரிஞ்சனான்; வீட்டிலை அட்புவும் இல்லை—எண்டு தெரியும்; இவ்வளவு நேரமும் மச்சாளோடை மசெல்லங் கொஞ்சிப் போட்டு இப்பான் வாறாய் என்ன?'' என்று கேட்டுக் கொண்டே செல்லி எழுந்திருந்தாள்.

''ஓமெடி பிள்ளை கொப்பர் சொல்லிப் போட்டுப் போனதை நான் தீரமறந்து போனன்! எண்டாலும் நேரம் செல்லேல்லை. நிலவும் காலிக்கேல்லை!'' என்று சொல்லிக் கொண்டே பூதி ஒட்டுத் திண்ணைக்கு உள்ளே வந்து விட்டாள்.



செல்லி ஒன்றும் பேசவில்லை.

''அடி பிள்ளை ராத்தின் திண்டிட்டியே?'' என்று பூதி கேட்டாள்.

''நல்ல கேள்வி கேக்கிறாய் என்ன? எப்பெண்டாலும் உன்னை விட்டிட்டு நான் சாப்பிட்டிருக்கிறனோ சொல்லு பாப்பம்!'' என்று செல்லி சற்றுக் கோபமாகக் கேட்டாள்.

''எடி எடி கோவியாதையெடி! என்னைக் காணேல்லை எண்ட கோவத்திலை திண்டிருப்பாய் எண்டு தான் கேட்டன்!'' என்று சமாதானம் சொல்லிக் கொண்டே ''வா! எழும்பு திம்பம்! என்ன சமைச்சனி?'' என்று மேல் கேள்வியையும் கேட்டாள் பூதி.

''அப்புவுமில்லையெணை! கறி புளியும் வேண்டே லாமைப் போச்சு, ஐஞ்சாறு தினை அரிசி கிடந்தது; தோட்டக்கரையிலை பசளியும் கிள்ளிப் போட்டு அவியல் கஞ்சி காய்ச்சினனான்!' என்றாள் செல்லி.

விளக்கை அடுக்களைப் பக்கம் அரக்கி வைத்துவிட்டு செல்லி ஒரு சட்டிக்குள் கஞ்சியை ஊற்றி இரண்டு பிலாவிலைத் தொன்னைகளையும் எடுத்துக் கொண்டு உட்கார்ந்தாள்.

சற்று கடுகடுப்பான தினைக்கஞ்சியைப் பூதி உறிஞ்சிக் குடித்தாள்.

மச்சாள் வீட்டு வாடிக்கைக்குப் போய் வந்த அவளின் வாய்க்கு கடுகடுப்பான அந்தத் தினைக்கஞ்சி இதமாக இருந்திருக்க வேண்டும்! ''நல்லாயிருக்குப் பெட்டை; தாலு றாலும் போட்டிருந்தா இன்னும் நல்லாயிருந்திருக் கும்!'' என்று அவள் தன் பாராட்டுதலையும், 'றால் இல்லை' என்ற ஏக்கத்தையும் தெரிவித்துக் கொண்டாள்.

அரைச் சட்டிக் கஞ்சிவரையில் முடிந்துகொண்டிருதந் போது—

''என்னை பெட்டை! நாளைக்குக் காலமை வாத்தியார் வரப்போறார்; அவருக்கு என்ன மறுமொழி சொல்லப் போறாய்? போறதெண்டா சீலை சட்டை அடுக்குப் பண்ணிப் போட்டியே? எங்கடை தம்பண்ணையின்ரை மூத்தவள் சங்கிலி ஒண்டு வைச்சிருக்கிறாள். விடியப்புறமாப் போய் நான் அதை வாங்கிக் கொண்டு வரட்டே?'' என்று கதையைத் தொடங்கினாள் பூதி.

செல்லி பேசவில்லை.

''பெட்டை வாத்தியார் மற்ற வடுகரைப்போலை இல்லை! சொன்னாச் சொன்னதுதான். தலைபோனாலும் உன்னைக் கைவிட மாட்டார்; நீ ஒண்டுக்கும் பயப்பிடாதை! பிச்சை எடுத்தெண்டாலும் உன்னைப் பாப்பார்...!''

பூதியின் அடுத்த பேச்சுக்கும் செல்லி ஒன்றும் பதில் சொல்லவில்லை.

''கலியாணத்தை எழுதிப் போட்டுக் கொஞ்ச நாளைக்கு இரகசியமாக வைச்சிருக்க வேணுங்கண்டியோ! வைப்பாடிச்சியெட்டை வந்து போறதைப் போலை வாத்தியார் வந்து போகட்டுக்கு! ஊருக்கை வில்லங்கங்களும் வராது! ஏன் நான் இளையதம்பியனின்ரை வைப்பாடிச்சி எண்டது எல்லோருக்குந் தெரிஞ்ச விஷயந்தானை! ஒருத்தரும் இத்தறிதியிலை ஒண்டுங் கதைக்கேல்லை. ஏன், மூலைக் கிணத்தடிக் கொழுந்தர் நயினார் உரும்பிராயிக்கை வெளி வெளியாய் வைப்பாடிச்சியை வைச்சிருக்கிறார்; ஒருத்தரும் மூச்சு விடேல்லை. என்ரை இளையதம்பியன் மருதப்பன்ரை கனகம்மா நாச்சியாரை வைப்பாடிச்சியாய் வைச்சிருந்தது அவருக்கே தெரியும்; மூச்சுமில்லைப் பேச்சுமில்லை...''

பூதிக்கு இது சம்பந்தமாக மேலே பேசுவதற்கு வழி தெரியவில்லை.



''அக்கை, வாத்தியார் என்னைக் கலியாண எழுத்து எழுதினா அவரைக் கொண்டு போடுவாங்கள்! நான் மாட்டன்; அதுக்குச் சம்மதிக்க மாட்டன்! வாத்தியார் நாளைக்கு வரட்டுக்கு; நான் அவருக்குச் சொல்லுறன். அக்கையாணைச் சொல்லுறன்; என்னை வைப்பாடிச்சியாக வைச்சிருக்க அவர் விருப்பப்பட்டா நான் மாறில்லை; ஆனல் கலியாணங்கட்ட மாட்டன்; அக்கையாணைக் கட்ட மாட்டன்.''

செல்லி சொல்லி முடித்தாள்.

மேற்கே, வெகு தொலைவில் றெயில் கூவிய ஓசை கேட்டது.

அந்த றெயில் சுன்னாகத்திலிருந்து சரியாகப் பதினொரு மணிக்குத்தான் குரல் வைக்கும்.

அடிவானத்தில் நிலாப் பாதி தெரிந்தது.

பங்களா வாகனங்களின் இரைச்சல் வாத்தியார் வீட்டுப் பக்கமாகக் கேட்டது; கரைந்தது.

## 59

குர்மையிளின் ஆதிக்கம் மேலோங்கி நின்ற இரவின் வரவிற்குப் பின்பு நீண்ட நேரமாக கிட்டினண்ணர், முருகையன் திருப்பதியன் குணசிங்கன், லோகேஸ்வரன் ஆகியோருடன் நின்றுவிட்டு வாத்தியார் வீட்டுக்கு வந்திருந்தார்.

நிலாப்பாதி கீழ் வானக் கோடியிலிருந்து உலகத்தை எட்டிப் பார்க்கும் மெது மெதுப்பான வெளுப்பு!

மேற்கே தொலைவில் றெயிலின் குரல்!

அது இப்போதுதான் சுன்னாகத்திலிருந்து தனு வைத்துக் கொண்டு புறப்படுகிறது.

வழமைப்படி அந்தத் தனு வரும் நேரம் மணி பதி னொன்றுதான்.

பகல்பொழுது கருகியபோது முருகையன் வந்து வாத்தியாரை அழைத்துச் சென்றான்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு வாத்தியார் இன்றுதான் வீட்டைவிட்டுப் போகிறார்.

''முருகையன்; சுசமில்லாதவர்; சுணக்காமல் அனுப்பி விடு!'' என்று தங்கை சீதை வாத்தியார் வெளிக் கிளம்பிய போது முருகையனிடம் இப்படிச் சொல்லி அனுப்பினாள்.

''வாத்தியார், புத்தூர் ஆக்களை இண்டைக்கு இஞ்சை கூப்பிட்டுக் கதைக்கிறம்; அங்கை ஒரு இடத்திலையும் கூடிக் கதைக்கேலாது; ஒருத்தர் ரெண்டு பேராய் இஞ்சை வாறம் எண்டவை! அங்கை எங்கடை வீட்டிலை கிட்டி ணண்ணனும், இருக்கிறார்; உங்களையும் கூட்டிக் கொண்டு வரச் சொல்லி அனுப்பினவர்!'' என்று வழியில் வைத்து வாத்தியாருக்கு விஷயத்தை விளங்க வைத்தான் முருகையன்.

புத்தூர் நிலாவரை றோட்டுக்கு உள்ளே உள்ள சலட்டுக்குள் சுமார் இருபதுக்கு மேற்பட்ட குடும்பங்கள் கொட்டில்களும் குடிசைகளும் போட்டுக்கொண்டு ஐம்பது வருடங்களுக்கு மேல் வாழ்ந்து வந்தார்கள்.

'மளுவராயர்' என்று ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்த பெரும் கமக்காரனின் நிலம் அது. அதற்கு வழிவழி உருத்துக்காரராக இப்போது வந்தவர் நடராசத்தம்பி என்பவர்.

இந்த ஐம்பது ஆண்டு காலத்தில் இந்த நிலத்துக் குத் தகைக்கென அந்தக் குடியிருப்பாளர்கள் ஒரு சல்லிக் காசு கூடக் கொடுத்ததில்லை. பதிலுக்கு மளுவராயர் குடும்ப மும் அதன் வழிவந்தவர்களும் இந்தக் குடியிருப்பாளர் களுக்குப் பணித்த பணிப்பு ''எங்களுக்கும் எங்களைச் சார்ந்த குடும்பத்தவர்களுக்கும் அப்போதைக்கப்போது அடிமை குடிமை பார்க்க வேண்டும்'' என்பதுதான்.



வாரிசு முறையில் உரிமை பெற்ற நடராசத்தம்பி மிகவும் புத்திசாலி; அவர் பக்குவமாக பொன்னம்பலம் என்பவருக்கு அந்தக்கலட்டுத் துண்டினை விற்றுவிட்டார்.

பொன்னம்பலம் கட்டுவன் இளையதம்பியருக்குச் சொந்தக்காரன். அதனால் இளையதம்பியரின் உதவி கொண்டு அந்தக் குடியிருப்பாளர்களை எழுப்புவதற்குச் சகலவிதமான காரியங்களையும் செய்து வருகிறார்.

இவ்வளவும் வாத்தியாருக்குத் தெரிந்த விஷயங்க ளாகும்.

தான் சுகயீனமாக இருந்த காலத்தில் கிட்டினண்ணன் அந்தப் பகுதியின் காரியங்களில் இறங்கிஇருந்தது—வாத்தி யாருக்குத் தெரிந்திருக்கவில்லை.

வாத்தியாரும் முருகையனும் இளையதம்பியர் வீட்டை அணிமித்தபோது ஊருக்குப் புதிதான இரண்டு கார்கள் புறப்பட்டுச் சென்றதை அவதானித்த முருகையன் ''காருகள் வெளியூர்க் காரர்கள் போலை கிடக்கு வாத்தி யார்; இளையதம்பியரும், சுருளியனும் வேறை ஆக்களும் காருக்கை போறது போலை கிடக்கு!'' என்று கூறும் போதுதான் வாத்தியார் அந்தக்கார்கள் பற்றி யோசிக்கத் தொடங்கினார்.

காரின் பின்பக்கமாகச் சற்றுத் தூரத்தில் இவர்கள் நின்றதனால் இவர்களை யாரும் கவனித்திருக்க முடியாது.

வாத்தியாரும் முருகையனும் வந்து சேர்ந்தபோது முருகையன் வீட்டு முற்றத்தில் பலர் கூடியிருந்தனர்.

அவர்களில் பலர் வாத்தியாருக்குப் புதியவர்களாகவே இருந்தனர்.

முற்றத்தில் கைவிளக்கு எரிந்து கொண்டிருந்தது.

வாத்தியாரும் உட்கார்ந்து கொண்டார்.

நாலைந்து பனைஓலைப் பாய்கள் போடப்பட்டிருந்தன.

ஒருவர் இருவராகப் பலர் வந்து கொண்டிருந்தனர்.

முற்றம் நிறைந்து விட்டது.

ஏறக்குறைய முப்பது பேர்கள் வரை!

கடைசியாக குணசிங்கனும் திருப்பதியனும் லோகேஸ்வரனும் வந்து சேர்ந்தனர்.

அவர்கள் வரும்போது ஒரு புதினத்தைக் கொண்டு வந்தனர்.

அன்று மத்தியானத்திலிருந்து சுருளியனும் வேறு ஐந்தாறு பேர்களும் இளையதம்பியரின் கிறேசருக்குள் இருந்து, வந்தும், போயும் கொண்டிருந்தார்களாம்; ஏழு மணிபோல வெளியூர்க்கார்கள் ரெண்டுபேர் வந்து சந்திப்பில் இளையதம்பியரின் வீட்டை விசாரித்துக் கொண்டு சென்றார்களாம்!

தாங்கள் வரும்போது இளையதம்பியர் கிறேசர் வளவிலிருந்து இரண்டு கார்கள் புறப்பட்டுச் சென்றதையும் வாத்தியார் கூறினார்.

இவைகளை வைத்துக் கொண்டு கிட்டினண்ணன் பல விஷயங்களை யோசித்தார்.

"அப்ப கூட்டத்தைத் தொடங்குவம்" என்று முருகையன் சொல்லவே கூட்டம் ஆரம்பித்தது.

இருந்த இரையிலேயே வந்திருந்தவர்களில் பலர் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைச் சொல்லிக் கொண்டே போயினர்.

"எங்கடை பொடியளிலையும் ரெண்டொண்டு, உந்தப் பொடியளோடை திரியிறவங்கள். அவங்களெட்டை எங்கடை பொடியள் சொல்லிப் பார்த்தவர்கள் "உதுகள் உள்ளூர் விஷயங்கள் உதுகளை இப்போதைக்கு



தாங்கள் தலைப்போடமாட்டம்" எண்டு பொடியள் சொல்லிப் போட்டாங்களாம்."

இப்படி ஒரு நரைத்த குடுமிக்காரர் சொன்னார்.

"இந்த நேரத்திலை சாதிச் சண்டையளை உண்டாக்கிப்போடாதையுங்கோ, அது உங்களுக்குத்தான் நட்டமாக இருக்கும் எண்டு வேறை ஒரு பகுதி இயக்கத்துப் பொடியள் வந்து என்னெட்டைச் சொல்லிப்போட்டுப் போனவங்கள்."

இப்படி சற்று வயதில் குறைந்த ஒருவன் சொன்னான்.

"ஒவ்வொருநாளும் புத்தூர்ச் சந்தியிலை எங்கடை ஆக்கள் போனா நிண்டு நிண்டு வெருட்டுருங்கள்"

இப்படி வேறொருவன் சொன்னான்.

"வளவுகளுக்கை இனிமேல் கள்ளுச் சீவ விடமாட்டம் எண்டு சொல்லுறாங்கள்"

"பயந்து பயந்து எத்தினை நாளைக்கெண்டு இந்த நாளைய சீலப்படுகிறது, நீங்கள் என்ன சொன்னாலுஞ்சரி எல்லாருந் துணிஞ்சு கையிலை ஆப்பிடுகிறத்தாலை சங்கிருந்திசெய்தாத்தான் எல்லாஞ் சரிவரும் எண்டுதான் நான் சொல்லுறன்."

"விதானை உடையானெட்டைச் சொல்லிப் பாத்தம்! ஒருத்தனும் ஒண்டும் செய்யேல்லை. எங்களை றோட்டு வழிய வெருட்டிறாங்கள். பொம்பிளையளைக் கேளாத கேள்வி கேக்கிறாங்கள் எண்டு சுன்னாகம் பொலிசிலை முறைப்பாடும் குடுத்துப் பாத்தம். அவங்களும் கவனிக்கேல்லை. அவங்கள் எல்லாரும் ஒரு ஆக்கள்! ஏன் கனக்க வேண்டாம், இதெல்லாம் செய்து கொண்டு பொன்னம்பலத்தான் எங்களை ஒழுப்ப வழக்கு வைக்க, மூண்டு மாதத்திலை ஒழுப்பச் சொல்லித் தீத்துவிட்டிருக்கிறான்! கோடு கச்சேரியும் அவங்கடை கையுக்கை! அப்புக்காத்துப்

பிரக்கிராசி அவங்கடை கையுக்கை. நீதவான் தந்த தவணையும் முடிஞ்சுது!''

''முந்தானாள் பிசுக்காலைக் கொண்டு வந்து அவங்கள் பிடிங்கி எறிஞ்ச கொட்டிலுகளை நேத்தும் இண்டைக்கும் வேலை வெட்டிக்குப் போகாமல் நிண்டு கிடந்த இடங்கள்ளை கட்டி முடிச்சுப் போட்டு வாறம். இண்டைக்கு நாளைக்கு என்ன செய்யிறாங்களோ?''

இவர்களின் இந்தப் பேச்சுக்களை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த வாத்தியாருக்கு கண்களில் நீர் மல்கியது.

எல்லோரினதும் கருத்துப் பரிமாறல் முடிய நீண்ட நேரம் ஆகியது.

கிட்டிணண்ணன் எல்லோர் மனதையும் திடப்படுத்தும் வகையில் பேசி முடித்துவிட்டு மேல் கொண்டு செய்ய வேண்டியவைகளை விளக்கிக் கொண்டிருந்தார். இறுதியில், நான்கைந்து நாட்களுக்கு இங்கிருந்து குடிசைகளை அவர்கள் ஏதும் செய்யாமல் தடுப்பதற்கு இரவுக் காவலுக்கு ஆட்களை முறைவைத்து அனுப்புவது என்ற முடிவு எடுக்கப்பட்டது.

இன்றைக்கு கிட்டிணண்ணனும் லோகேஸ்வரனும், முருகையனும், குணசிங்கனும், திருப்பதியனும் என்று முடிவாயிற்று.

''ஏன் கிட்டிணு என்னைக் கையை விட்டிட்டீர் போலை கிடக்கு? நானும் வரப்பிடாதோ?'' என்று சற்று உரிமையோடு கேட்டார், வாத்தியார்.

''வாத்தியார் இண்டைக்கு நீங்கள் வீட்டை போங்கோ, தங்கச்சிக்காறியும் என்னெட்டைச் சொல்லி விட்டவ!'' என்றான் முருகையன்.



வாத்தியார் எவ்வளவோ கேட்டும் வாத்தியாரை அழைத்துச் செல்ல மற்றவர்கள் இணங்கவில்லை. அவரின் உடல் நலத்தையும் எல்லோரும் சுட்டிக்காட்டினர்.

வாத்தியாருக்கு மனம் சோர்ந்து விட்டது.

எல்லோரும் புறப்படத் தயாரானார்கள்.

வாத்தியாருக்குக் கிட்டிணுவிடம் ஏதோ பேச வேண்டும் போல இருந்தது.

''கிட்டிணு ஒரு கதை இப்பிடி வாரும்'' என்று அவர் கிட்டினண்ணனை அழைத்துக் கொண்டு சற்று அப்பால் போனார்.

''கிட்டினு, உம்மெட்டை ஒரு விஷயம் சொல்லப் போறன். போகேக்கை பொடியளுக்கும் சொல்லி நேரமிருந்தா நாளைக்குக் காலமை பத்து மணியளவிலை ஒருக்காக் கச்சேரிக்கு வாரும், எனக்கும் செல்லிக்கும் கச்சேரியிலை நாளைக்குக் கலியாணப் பதிவு!''

எந்தவிதச் சுற்றிவளைப்புமின்றி வாத்தியார் இதைச் சொல்லி விட்டார்.

கிட்டினண்ணன் எதுவும் பேசவில்லை.

''நீந்திறத்துக்கெண்டு வெளிக்கிட்டாத் தண்ணியிக்கை இறங்கத்தான் வேணும் வாத்தியார்; உதிலை ஒரு பிழையுமில்லை!''

சற்றுப்பொறுத்து கிட்டினண்ணன் இதைத்தான் கூறினார்.

புத்தூரை நோக்கிப் பயணம் தொடங்கிவிட்டது.

அவர்கள் புறப்பட்டதும், அங்கிருந்து நேராக வாத்தியார் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தார்.

பொருத்தமான இடத்தில் பொருத்தமான கதையைச் சொல்லி விட்டுப்போன கிட்டினண்ணனை அவர் மனத்துக்குள் பல தடவைகள் நினைத்துக் கொண்டார்.

''வாத்தியார்! செயல்தான் வாத்தியார் முந்தியது! செயலின்றிச் சிந்தனை தோன்றி இருக்க முடியாது!''

''வர்க்கங்களுக்கிடையிலே இருக்கிற முரண்பாடுதான் வாத்தியார் பிரதான முரண்பாடு! சாதி, சமயம், இனம், மொழி, வழமை ஆகியவைகளுக்கு முட்டுக்குடுத்து. இந்தப் பிரதானமான முரண்பாட்டைத் திசை திருப்புற வேலை வாத்தியார் மற்றவை பாக்கினம்!''

''உள்ளவனையும் இல்லாதவனையும், ஒண்டாச் சேத்து ஒரு வர்க்கப் போரை நடத்திறதெண்டது வெறும் பொய் வாத்தியார்!''

''குடிக்கக் கஞ்சிக்கும், உடுக்கத் துண்டுக்கும், குந்தக் குடிலுக்கும் வழி இல்லாத சனங்கள் சேராத எந்தப் போரும் வெற்றி பெறாது வாத்தியார்!''

''வாத்தியார் சரியான கொள்கையும்; சரியான நடைமுறையும் சேராட்டி ஒண்டுஞ் சரிவராது கண்டியளோ!''

கிட்டினண்ணனால் அப்போதைக்கப்போது கூறப்பட்ட இவைகள் இப்போது வாத்தியாரின் நினைவுக்கு வந்து போயின.

இப்போது வாத்தியாரின் சோர்வு போய்விட்டது.

தகரப்படலையைத் தள்ளிக்கொண்டு அவர் உள்ளே வந்தார்.



தலைவாயிலின் நடுவே சிமிலி விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

வாத்தியாரின் கட்டிலுக்குப் பக்கமாக தங்கை சீதை சிறு பாய்த் துண்டொன்றில் வாத்தியாருக்காக விழித்த நிலையிலேயே சுருண்டு கிடந்தாள்.

வாத்தியார் வந்த ஓசை கேட்டதும் அவள் எழுந்திருந்தாள்.

எந்தவிதப் பேச்சுமின்றிக் குடத்தடிக்குச் சென்று வாய் கொப்பிளித்துவிட்டு வாத்தியார் சிமிலி விளக்கை எடுத்துக் கொண்டு குசினிக்குள் சென்றார்.

சீதையும் அவருக்குப் பின்னால் சென்று மௌனமாகவே கரப்பினால் மூடப்பட்டிருந்த இடியப்பத்திற்கு, பால் சொதியையும், ஊற்றி, பச்சை மிளகாய்ச் சம்பலையும் வைத்து அண்ணன்காரனுக்குப் பரிமாறினாள்.

வீட்டுக்குள் கந்தையர் இருமியது கேட்டது.

''அண்ணை கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கோ, நீங்க வெள்ளணச் சொன்ன மாதிரி நடந்திட்டா ஊரிலை இருக்கிறவை சபை சந்தியிலை இருந்து எங்களைக் கிழிச்சுப் போடுவினம்! நானும் பிள்ளை குட்டியளை வைச்சிருக்கிறனான். நாளைச்சுக் கூவெண்ட கூக்குரலுக்கு அயலுக்கை இருக்கிற ஒரு குஞ்சும் வராது! றோட்டிலை வழியிலை போகேலாமை வந்திடும்! எக்கணம் காணி பூமியளை வில்லாத விலைக்கு வித்துப் போட்டு அன்ன பரதேசம் போயிடவேணும்! அண்ணை கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கோவன்!''

இந்த வேண்டுகோளை அண்ணனுக்கு விட்டுவிட்டு சீதை பேசாமல் இருந்தாள்.

வாத்தியாரும் ஒன்றும் பேசவில்லை. தலை கவிழ்ந்தபடியே உணவருந்திக் கொண்டிருந்தார்.

"அண்ணை என்னண்ணை பேசிறியள் இல்லை? சொல்லுங்கோவன் அண்ணை? நான் உங்கடை தங்கச்சி; கேக்கக்கூடாததைக் கேக்கிறன்! எங்கடை செல்லாச்சி மாமி மூண்டு குமரையும் வைச்சுக் கொண்டிருக்கிறா! ஓமெண்டு நீங்கள் சொல்லுங்கோ; நாளைக்கு குமர்ப் பொம்பிளை கொண்டு வந்து தாறன்!!'

வாத்தியாரின் தலை நிமிரவில்லை.

"தங்கச்சி! எல்லாம் நான் சரியாய் கனநாளா யோசிச்சுத்தான் முடிவெடுத்தனான். உனக்கெண்டாலும் ஒரு எட்டுக் காணியும் தோட்டக் காணியுமிருக்கு. எனக்கு இந்த உலகத்திலை ஒரு துண்டுக்காணியும் இல்லை. செல்லிக்கும் ஒரு துண்டுக்காணியுமில்லை. நானும் செல்லியும் ஒரு வர்க்கத்து ஆக்கள் எண்டு கணக்குப் போட்டுக் கொண்டுதான் நான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறன். உதிலை இருந்து நான் மாறமாட்டன் தங்கச்சி! இனிமேல் என்னை இஞ்சை வரவேண்டாமெண்டு நீ சொன்னாலும் நான் மன வருத்தப்படமாட்டன்."

வாத்தியார் பேசி முடித்துவிட்டார்.

உணவருத்தியும் முடித்துவிட்டார்.

சீதை அழுதாள்.

கை அலம்பிக் கொள்ளாமலே வாத்தியார் இருந்த இடத்திலேயே இருந்தார்.



சிமிலி விளக்கில் எண்ணெய் தீர்ந்துவிட்டதால் அது சிணுங்கி வடிந்து கொண்டிருந்தது.

சீதை அழுதபடியே எழுந்து சென்று கால்விளக்கை எடுத்து ஏற்றி வைத்துவிட்டு, சிமிலி விளக்கை நூர்ந்து விட்டாள்.

வாத்தியார் வெளியே வந்து கை அலம்பினார்.

நிலாப்பாதி இப்போது அடிவானத்தை விட்டுத் தலையை மேலே உயர்த்திக் கொண்டிருந்தது.

வெகுதூரத்திற்கப்பால் மேற்கே றெயிலின் நெடுங் குரல் கேட்டது.

அது இப்போதுதான் சுன்னாகத்திலிருந்து களை ஆறிப் புறப்படுகிறது.

இப்போது சரியாகப் பதினொரு மணியாக இருக்க வேண்டும்.

வழமை அப்படி.

வெளியே வாகன இரைச்சல்கள் கேட்டன.

அவை சமீபித்துச் சமீபித்து வந்தன.

கடைசியில் தகரப்படலைக்கு நேராக வந்து நின்றன.

தகரப்படலை அடிபட்டது.

பல ஒளிகள் வீட்டையும் முற்றத்தையும் வளவையும் மேய்ந்தன.

வாத்தியார் முற்றத்திலேயே நின்றார்.

சீதை குசினிக்குள்ளிருந்து முற்றத்துக்கு ஓடி வந்தாள்.

கந்தையர் வீட்டுக்குள் இருந்து முற்றத்திற்கு வந்து விட்டார்.

இராணுவ வீரர்கள் வெளிச்சங்களுடனும், நீட்டிப் பிடித்த துப்பாக்கிகளுடனும், வீட்டுக்குள்ளே புகுந்தனர்.

உள்ளே நித்திரையிலிருந்த சிறுவர்கள் கண்விழித்து ஏங்கிக் கதறும் ஓசை கேட்டது.

நாலுபேர் வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்தனர்.

அவர்கள் முற்றத்தில் நின்ற மேல் அதிகாரியிடம் ஓடி வந்தனர்.

அவர்கள் கையில் ஒரு சாக்குப் பை இருந்தது.

அதிகாரி அதைப் பிரித்தான்.

ஒரு கைத்துப்பாக்கி, எட்டுப் பத்துக் குண்டுகள்!

"டேய்! இது ஆரின்ரை பையடா?"

இப்படி அதிகாரியின் குரல் வாத்தியாரை நோக்கி எழுந்தது.

"அது என்ரதான்!"

வாத்தியார் சற்றும் தாமதியாது பதில் கூறி விட்டார்.

அதற்குப் பின் பேச்சில்லை.

இராணுவத்தினர் வாத்தியாரைச் சுற்றிப் பிடித்தனர்.



அடித்தனர்; இடித்தனர்; குத்தினர்; நிலத்தில் போட்டு உருட்டி உழக்கினர்; இறுதியில் அவரைக் காலில் பிடித்து இழுத்துச் சென்று வெளியே நின்ற வாகனத்துள் வீசி எறிந்தனர்.

வாகனத்துள் அவர் வீழ்ந்த ஓசை வெகுதூரம்வரை கேட்டது.

சீதையால் வாய் திறந்து கத்த முடியவில்லை.

அவள் குரல் திக்கித்து நின்றாள்.

"மாமா, மாமா!" என்று குழந்தைகள் மட்டும் கத்தின.

கந்தையருக்கு என்ன செய்வது? என்ன சொல்வது? என்றே தெரியவில்லை.

தகரப்படலை வரை அவர் ஓடினார்.

அதற்குள் வாகனங்கள் போய்விட்டன.

## 60

பொழுது விடிந்ததும் விடியாததும் தெளிவாகத் தெரியவில்லை.

வானமெங்கும் கருமேக மூட்டம்.

இடிமுழக்கத்தோடு பெருமழை!

கார்காலம் சரியாகப் பிறப்பெடுத்து விட்டது.

"புத்தூர் கலட்டிக் கொட்டிலுகளை ஆரோ எரிச்சுச் சாம்பலாக்கிப் போட்டாங்களாம்! ஆக்கள் வெட்டுப் பட்டு ஐஞ்சாறு பேருக்கு உயிர் ஆபத்தாம்!"

''நிலாவரைச் சந்திக்குப் பக்கத்து முகப்பிலை பள் மார்க்கண்டனின்ர சவமும், மில் இராசரெத்தினத்தின்ர மோன் சந்திரனின்ர சவமும் கிடக்காம்!''

''சுப்பையா வாத்தியார் குண்டுகளும் துவக்கும் வைச்சிருந்தவெண்டு ஆமிக்காறர் சாமம்போலை புடிச்சுக் கொண்டு போட்டாங்களாம்!''

என்ற பேச்சுக்கள் இடிமுழக்கம், மழையையும் மிஞ்சிக் கொண்டு ஊரெங்கும் பரவி விட்டது.

''பேத்தை வைத்தியனின் மூத்த மகள் செல்வி வாத்தியாரின் வரவுக்காகக் காத்திருக்கிறாள்'' என்ற செய்தியை யாரும் சொல்லவில்லை.

பூதியைத் தவிர இது யாருக்குமே தெரியாது!

□ □ □

கேடுகெட்ட, சீரழிந்த முதலாளித்துவ சமூக அமைப்புக்கு மாறாக தொழிலாளிய — விவசாய வர்க்கங்கள் ஒன்றிணைந்து, தனக்குப் பின்னால் ஏனைய பின்தள்ளப்பட்ட வர்க்கங்களையும் இணைத்துக் கொண்டு செய்யும் போரினைத்தான் புரட்சி எனக் கொள்ளலாம். இந்தப்புரட்சியை வருவிப்பதற்கு ஒவ்வொரு இலக்கியக்காரனும் தனது பங்கினைச் செய்ய எழுதுவதுதான் புரட்சிக்கான இலக்கியமுமாகும். இதைவிடுத்து, வெறும் அதிதீவிர வாதத்திற்கும், தனிநபர்-குழுவினர் வாதத்திற்கும் பரிந்து எழுதுவதென்பது புரட்சிக்கே துரோகம் செய்யும் எழுத்து வரிசைக்கே அவனைத் தள்ளிவிடும். இதில் நான் மிகவும் அவதானமானவனாகவே இருந்தேன்: இருக்கிறேன்; இருப்பேன்.

— இந்நூல் பக்கம் 8 கே. டானியல்